SRI BHAGAVAD GITA

9 - NOV 1925

BY

Sister R. S. SUBBALAKSHMI AMMAL, B.A., L.T.

Published by

The Sri Sarada Ladies' Union

TRIPLICANE.

[...ed] [Rs. 2-4-0.

R65,6
N28
58732

9 - NOV 1928

பக்தி மாலா மலர் 1.

789
4-1928

ஸ்ரீமத் பகவத் கீதை.

சகோதரி சுபலக்ஷ்மி அம்மாளால்

எழுதப்பட்டு,

ஸ்ரீ சாரதா ஐக்கிய சங்கத்தாரால்,

பிரசுரிக்கப்பட்டது.

1928

சென்னை திருவல்லிக்கேணி

ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

58732

முகவுரை.

ஸ்ரீ பகவத் கீதையில் ஏராளமான புத்தகங்கள் இருக்கும் போது இப்புத்தகம் ஒன்று வெளியிடுவது ஏன் எனில் தமிழ் நாட்டுப் பெண்மக்களாம் எனது சகோதரிகள் ஒவ்வொருவரும், கிறிஸ்தவர்கள் பிரதிதினமும் பைபிள் படிப்பதுபோல், இப்புத்தகத்தைப் படித்து கீதையின் ஸாரத்தை யறிந்து அவ்வானந்தத்தில் ஈடுபட்டுத் தம்தமது குழந்தைகளுக்கும் இதைப் படிக்கும் பழக்கத்தைச் செய்யவேண்டுமென்னும் பேரவாவினாலேயே. தற்காலத்தில் ஸம்ஸ்க்ருத பாஷையும் ஆங்கில பாஷையும் தெரியாதவர் அநேகர் இருக்கின்றனர். பகவத் கீதைகள் இப்போது இருப்பவை பெரும்பான்மை ஆங்கிலத்திலேயே பதவுரை முதலியவற்றுடன் இருக்கின்றன. கோயமுத்தூர் ஸ்ரீமான் குப்புசாமி அய்யாவர்களது கீதையில் தமிழில் பதவுரை யிருப்பினும் ஸம்ஸ்க்ருதம் தெரிந்தவர்களுக்கு (கிரந்தம் தெரியாமல்) உபயோகமில்லாததுடன் ரூ. 9 கொடுத்து அதை வாங்கிப் படிப்பதற்கு அநேகருக்கு இயலாததாயிருக்கிறது—பள்ளி மாணவர்கள் அநேகரது வேண்டுகோளின்பேரில் இது வெளியிடப்பட்டது. வேதங்கள், உபநிஷத்துக்கள் இவற்றின் சாராம்சங்கள் எல்லாம் அடங்கினது கீதை—ஹிந்து மதத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் கீதையைத் தினமும் பாராயணம் செய்யவேண்டியது அவசியம்.

தற்காலக் கல்வியில் ஒரு பெருங்குறை மத போதனையும் நீதி மார்க்க போதனையும் இல்லாமை. கிறிஸ்தவர் பள்ளிக்கூடங்களில் இவற்றைக் கட்டாயப் படிப்பாய் ஏற்படுத்தி யிருக்கின்றனர்—கவர்மெண்ட் பள்ளிக்கூடங்களில் அது இல்லாமையால் அந்தக் குறையை நீக்கும்பொருட்டு மத விஷயமும் சன்மார்க்க விஷயமும் வீட்டில் பெற்றோர்களால் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். இந்தக் குறையினால் ஏற்படும் விபரீதமான பலன்களை நன் காலோசித்து குழந்தைகளை பக்தியுடன் கூடிய சன்மார்க்கத்தில் நடக்கும்படி செய்வதற்கு ஒவ்வொரு தாய் தகப்பனும் வீட்டில் பிரதிதினமும் பகவத்கீதை, தாயுமானவர் முதலான

அரிய நூல்களைக் குழந்தைகளுக்குக் கட்டாயமாகக் கற்பிப்பாராக. இவ்வித ஊக்கமுள்ள பெற்றோருக்கு இப்புத்தகம் பயன்படுமென நம்புகிறேன்.

ஸ்ரீமத் கீதைக்குப் பலர் பாஷ்யம் எழுதியிருக்கின்றனர். இச் சிறு புத்தகம் பள்ளிச் சிறுவர்களுக்கேயாதலின் சுலோகங்களின் கருத்துத் தெரியுமாறு அவற்றின் பதவுரை மாத்திரம் எழுதி ஒவ்வொரு அத்தியாயத்தின் விஷயத்தையும் சுருக்கி எழுதியிருக்கிறேன். கீதையைப் பலமுறை படித்தபோது அதனுடைய உட்கருத்து எவ்விதமாக இருக்கக்கூடும் என்று என் சிற்றறிவிற்கு எட்டிற்றோ அதை எழுதியிருக்கிறேன். ஒரு நூலைப்படிக்கும்போது அவரவர்களது மனோபரிபக்குவத்துக்குத் தகுந்தபடி அதை கிரகிப்பார்கள். என் அற்ப அறிவினால் நான் கிரகித்ததை எழுதியுள்ளேன். அது மற்றவர்கள் முற்றிலும் ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்ள முடியாமலிருக்கலாம். அபிப்பிராய பேதங்களிருப்பதே ஒரு மதத்தின் அபிவிருத்திக்குச் சாதனம் என்பர் பெரியோர். ஆதலின் அறிஞர் இச் சிறு புத்தகத்தில் உள்ள பல பிழைகளையும் மன்னித்து குற்றத்தைத் தள்ளி குணத்தைக் கொள்ளுமாறு வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

என் முன்னறி தெய்வமாம்
அன்னை பிதாவுக்கு
இச் சிறு புத்தகத்தை
அர்ப்பணம் செய்கிறேன்.

ஸ்ரீ பகவத்கீதையின் சாரம்.

நமது புராணாதிகள் பலவற்றுக்கும் இருவிதக் கருத்து உண்டு. பஹிர் அர்த்தம் என்றும் இரஹஸ்யார்த்தம் என்றும் இரண்டு. இவ்விதமாய் இருவிதக் கருத்தமைத்து எழுதுவது ஏன் எனில் அது மனோபரிபக்குவத்தில் பல படிகளிலிருக்கும் பலருக்கும் உபயோகப்படவேண்டுமென்றே. ஹிந்து மதத்தில் மத சம்பந்தமான உயர்ந்த உண்மை விஷயங்களை அப்படியே எழுதினால் அவற்றின் ஆழ்ந்த கருத்து பலருக்கும் விளங்காது, ஆதலின் அதே விஷயத்தைக் கதாரூபமாய் எல்லாருக்கும் ரஸிக்கும்படி எழுதினால் முதலில் அதன் பஹிர் அர்த்தமாகிய கதையைப் படித்து ஆநந்தித்துப் பிறகு மனோ பரிபக்குவம் சிறிது சிறிதாய் விருத்தியாகும்போது அதன் ரஹஸ்ய அர்த்தத்தை கிரகித்து அதன் உண்மையை அறிய முயற்சி செய்வார்கள்.

நமக்குக் கடவுளால் அளிக்கப்பட்டிருக்கும் இத்தேகம் ஓரு க்ஷேத்ரம் அல்லது புரி அல்லது பட்டணம். இதில் கடவுளது அம்சமாய் வந்து தங்கியிருக்கும் ஆத்மாவே க்ஷேத்ரஜ்ஞன் அதாவது இந்தப்பட்டணத்தின் அரசன். இவ்வரசன் தனது சௌக்கியத்துக்கு வேண்டியதைச் செய்து கொள்ளுவதற்கும் அறிவை விருத்தி செய்து கொள்ளுவதற்கும் பலவித ஸாதனங்கள் இந்த க்ஷேத்ரத்தில் அமைந்திருக்கின்றன. அன்றன்று கர்மங்களைச் செய்யவும் இடம் விட்டு இடம் செல்லவும், ஆகாரத்தை யுண்ணவும் பொதுவாய் இந்த க்ஷேத்ரத்தை சுத்தமாய், சுகமாய் வியாதியின்றி வைத்துக் கொள்ளுவதற்குமாக கர்ம இந்திரியங்களாகிய கை, கால், வாய் முதலானவை கொடுக்கப்பட்டிருக்கிறது. இவை மிருகங்களுக்கும் மனிதனுக்கும் ஒன்றே. உண்பது, உறங்குவது முதலான க்ஷேத்ரத்தை காப்பதற்கு வேண்டிய தொழில்கள் எல்லாம் மிருகம், மனிதன் முதலான எல்லாப் பிராணிகளுக்கும் பொதுவானதே.

ஹிந்து மதக்கொள்கையின்படி இந்த ஒரு தோற்றம் (ஜன்மம்) மாத்திரம் முடிவானதல்ல, பலஜன்மங்களை நாம்

எடுக்கிறோம். இந்த தேகம் (ஸ்தூல தேகம்—நமது கண்ணுக்குப் புலப்படுகிற இந்த வெளி தேகம்) அநேகம் நூற்றுக் கணக்கான தனிப்பொருட்கள் (elements) சேர்த்து கட்டப்பட்ட ஒரு கலப்புப் பொருள் (Compound) சிசு கர்பத்தில் உண்டாகும் போது முதலில் மிக நுட்பமான கண்ணுக்குப் புலப்படக்கூடாத (ஜீவ அணு) பொருளாயிருந்து பிறகு தாய் உண்ணும் அன்ன பானாதிகளின் உதவியால் சிறிது சிறிதாய் வளர ஆரம்பிக்கிறது. கை, கால் மற்றும் பல உறுப்புகளெல்லாம் அமைந்து குழந்தை வெளி வருகிறது. பிறகு அது உண்ணும் ஆகாரத்தினால் அது வளர்ந்து பெரிய மனிதனாகிறது. அதாவது நாமுண்ணும் ஆகார பதார்த்தம் நம் தேகத்தில் சென்று பல தனிப் பொருட்களாக மாறி அவை யொன்றோடொன்று வேறுவித அளவில் சேர்ந்து மாம்சம், கொழுப்பு, ரத்தக்குழாய், நரம்பு முதலான கலப்புப் பொருட்களாய் மாறி நமது தேகத்தை வளரச் செய்கிறது.

இவ்விதம் வளர்ந்து சிசுப்பருவம் தாண்டி, பால்யம், கௌமாரம் (குமரன்—அழகிய சிறு வயது, சுமார் 25 வயது வரைக்கும்), யௌவநம் முதலான தன்மைகளை யடைந்து 60, 70 வயதுக்குப் பிறகு இந்த தேகமாகிய யந்திரம் மேன்மேலும் இன்னும் வளரும் சக்தியற்று சிறிது சிறிதாய் க்ஷீணிக்க ஆரம்பித்து ஜரை, மூப்பு இவற்றை யடைந்து சக்தியற்று ஒடுங்கி கடைசியில் அது உயிருடனிருப்பதற்கு வேண்டிய சக்தியைக் (Energy) கொடுக்கும் சத்துப் போய்விடுகிறது. (செத்துப்போகிறது). அப்படி சத்துப் போன தேகத்தை புதைத்தோ, எறித்தோ விடுகின்றனர். அப்போது அது ரூபமற்று அதன் பல கலப்புப் பொருள்கள் தனிப் பொருட்களாக மாறி பூமியிலும் ஆகாயத்திலுமுள்ள அந்தந்த வஸ்துக்களுடன் கலந்து விடுகிறது. வாயுக்கள் வாயுக்களுடனும், பூமியுடன் சேரவேண்டியவை பூமியுடனும் சேர்ந்துபோகின்றன (Decomposition).

தேகம் (க்ஷேத்ரம்) பல மாறுதல்களை யடையும் போதெல்லாம் (பால்யம், யௌவனம், கௌமாரம் முதலானவை) இந்தத் தேகத்திலுள்ள க்ஷேத்ரஜ்ஞனாகிய 'நான்' என்னும் பொருள் மாறுதல் அடையவில்லை. குழந்தையாயிருக்கும்போதும் வயதான போதும் நான் நான் என்னும் உணர்ச்சி ஒரேவிதமாய்த்தானிருக்கிறது. இந்த 'நான்' என்னும் க்ஷேத்ரஜ்ஞன் (Ego), நமது வெளிக்கண்களுக்குப் புலப்படும் இந்த ஸ்தூல தேகத்தைத் தவிர இன்னும் நான்கு ஸூக்ஷ்ம தேகத்தினால் சூழப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தூல தேகம் நாம் உட்கொள்ளும் அன்னத்தினால் வளருவதால் அதற்கு **அன்னமய கோசம்** என்று பெயர். அதாவது அன்னத்தினால் கட்டப்பட்ட மேல் உரை அல்லது கவசம்.

நாம் ஸ்வாஸிக்காமலிருக்கவே முடியாது. 5 நிமிஷத்துக்கு ஸ்வாஸிப்பதற்கு வேண்டிய பிராணவாயு இல்லாவிட்டால் நாம் இறந்தே போகிறோம். நாம் ஜீவித்திருப்பதற்கு இந்தப் பிராணவாயு அதிமுக்கியமானது. ஆதலால் இந்தப் பிராணவாயு முதலிய ஸூக்ஷ்ம வாயுக்களால் கட்டப்பட்டு ஸ்தூல தேகத்துக்கு அடுத்த உள் உரை அல்லது கோசமாக இருப்பது **பிராணமய கோசம்**.

சரிவர ஆகாரம் சாப்பிட்டுக்கொண்டு, ஸ்வாஸித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும்போது நாம் சும்மா இருப்பதில்லை. நமக்குள் மனது என்று ஒன்றிருக்கிறது. அது நிம்மதி யென்பதேயின்றி எப்போதும் சலித்துக்கொண்டேயிருப்பது. ஸ்தூல சரீரமாகிய அன்னமய கோசத்திலிருக்கும் ஐந்து சாளரங்களின் வழியாக (கண், காது, மூக்கு, நாக்கு, மேல் தோல்) வெளியுலகில் நடக்கும் விஷயங்களை யெல்லாம் கிரகித்து அவற்றை யனுபவிக்கவும், அடையவும், நீக்கவும் வேண்டிய ஆசை, கோபம், எண்ணங்கள் இவற்றுக்கெல்லாம் இருப்பிடமாயிருக்கிறது. சங்கல்பம், காமம், வெகுளி, மோஹம், லோபம்முதலானவற்றால் கட்டப்பட்ட மனது தான் **மனோமய கோசம்**. இவ்வுலகிலிருக்கும் காலத்தில் நாம் பலவித அனுபவங்களை, அறிவை, ஞானத்தை யடைகிறோம். மனோமய கோசத்தின் வழியாய் பலவித வெளி விஷயங்களை அனுபவிக்கிறோம். அதனால் நமக்குப் பலவித சுகதுக்கங்கள், லாப நஷ்டங்கள், கஷ்டநிஷ்டூரங்கள் ஏற்படுகின்றன. சுகமே யனுபவிக்கும்போது நம்மை மறந்து மமதையுடன் இருக்கிறோம். அதற்கு விரோதமாய் மனதிற்குக் கசப்பாய் ஏதேனும் கஷ்டம்,

துக்கம் வரும்போது வெளி விஷயங்களில் சற்று வைராக்கியம் (வி+ராகம்=ஆசையின்மை) ஏற்பட்டு வெளியிலேயே வேடிக்கை பார்ப்பதை விட்டு நம் உள்ளுக்குள்ளேயே அறிவாகிய கண்ணை உள்நோக்கிப் பார்த்து அல்ப சந்தோஷத்தையே கொடுத்து துக்கத்துடன் கலந்துமிருக்கும் இந்த உலக சுகங்களைக்காட்டிலும் உயர்ந்த வஸ்து அல்லது உத்தமமான சுகம் ஒன்று இருக்கிறதா என்று ஆராய ஆரம்பிக்கிறோம் (உபநிஷத்—சிறந்த கனிகளையுடைய ஒரு விருக்ஷத்தில் இரண்டு பக்ஷிகளிருக்கின்றன. மேல் கிளையில் ஒன்று, அது ஒன்றுமே செய்யாமல் மௌனமாய நிம்மதியாயிருக்கிறது. அதன் சாயையாகவே யிருக்கும் கீழுள்ள பக்ஷி கிளைக்குக்கிளை தாவி கனிகளை இங்கு கொஞ்சம் அங்கு கொஞ்சமாக உண்டு களிக்கின்றது. மற்ற விஷயங்களொன்றும் அதற்கு ஞாபகமேயின்றி கனியை யுண்ணும் களியாட்டிலேயே தன்னை மறந்திருக்கிறது. அப்போது இதுவரையும் இது சாப்பிட்ட கனிகளின் ருசிக்கு மாறாக ஒரு கனி கசக்கின்றது. உடனே இந்த பக்ஷி வெறுப்புற்று கனி யுண்பதைச் சற்று நிறுத்தி சுற்று முற்றும் பார்த்து மேல் கிளையில் உள்ள பக்ஷியைப்பார்த்து அதைப் போல் தானும் நிம்மதியாயிருக்க எண்ணி மேல்நோக்கிப் பறந்து ஒரு கிளை உயரப்போகிறது. அதற்குள் அந்தக் கிளையில் ஒரு சிறந்த பழுத்த கனியைக்கண்டு அதை அனுபவிக்க ஆரம்பித்து தான் மேலேபோக வேண்டுமென்று ஆரம்பித்த முயற்சியை மறந்து போகிறது.) இப்படியேதான் நமது வாழ்க்கையும். நமக்குள் ஏதோ ஒன்று உயரப்போகவேண்டும் என்று அடிக்கடி விரும்புகிறது. ஆனால் உலகவிஷயங்களை அனுபவிக்கும் மயக்கத்தில் அந்த விருப்பம் நீடித்திருப்பதில்லை. இந்த அனுபவத்தால் நமக்கு சிறிது சிறிதாய் ஏற்படும் "மேலே போகவேண்டும், நீடித்ததான பேரின்பத்தைக் கண்டறியவேண்டும்" என்னும் உயர்ந்த எண்ணங்களுடன்கூடிய உரைக்கு விஜ்ஞானமய கோசம் என்று பெயர். அதாவது, மனோமய கோசம் என்பது உலக விஷயங்களையே பற்றியது. விஜ்ஞானமய கோசம் என்பது உலக விஷய அனுபவங்களினால் (Experience) ஏற்பட்ட அனுபவ அறிவின் மயமாய் நாம் கீழ்ப்படிகளிலிருந்து மேற்படிகளுக்குச் செல்லவும்,

உயர்ந்த அறிவையும் உயர்ந்த ஞானத்தையும் (Ideal Wisdom) ஜீவாத்ம பரமாத்ம தத்துவங்களை (Truth) அறிய வேண்டிய முயற்சியையும் கொடுப்பதாயுமிருக்கிறது.

இவ்விதமான உயர்ந்த ஞானத்தை யடைவதற்கு சில வருஷங்களேயான ஒரு ஜன்மம் போதாது. அவ்வுயர்ந்த படியை எட்டுவதற்குள் இந்த ஸ்தூல தேகம் (அன்னமய கோசம்) கிழப்பட்டு உபயோகமற்றுப் போகிறது. உபயோகமில்லாத சக்தியற்ற இந்தக் கோசத்திலிருந்துகொண்டு மேற் செல்ல முடியாமலிருப்பதால், நான் (Ego) என்னும் க்ஷேத்ரஜ்ஞனாகிய ஜீவாத்மா கிழிந்து போன பழைய வஸ்திரங்களை எறிந்து புதிய வஸ்திரங்களைத் தரிப்பது போல், கிழப்பட்டுப் பழையதாகப் போய்விட்ட இந்த ஸ்தூல சரீரத்தை விட்டு விட்டு ஞானமார்க்கத்தில் மேற்செல்லுவதற்கு ஸாதனமான மற்றொரு தேகத்தை எடுத்துக்கொள்ளுகிறது. அப்படிப் போகும்போது முதல் தேகத்தில் இருந்த காலத்தில் தானடைந்த விஜ்ஞானமய கோசத்துடன் போகிறது. ஆதலால் இந்த நமது ஜன்மத்தில், இதற்குமுன் நாமடைந்த பல ஜன்மங்களின் அனுபவ அறிவின் தொகுதி, நமக்குள் இருக்கிறது. கனமான இந்த ஸ்தூல தேக ஸம்பந்தத்தால் அவற்றில் சிலவற்றை மறந்திருக்கிறோம். ஆயினும் அவைகளை ஞாபகத்துக்குக் கொண்டு வரவேண்டிய ஸாதனங்கள் ஏற்படும்போது அவை நமது நினைவுக்கு வருகின்றன.

பலவித அனுபவங்களுக்குப் பிறகு உயர்ந்த ஆனந்தமாகிய பேரின்பத்தையடைய நாம் செய்யும் முயற்சியால் அவ்வானந்தத்தை சிற்சில ஸமயம் அடைகிறோம். அந்த ஆனந்தத்தின் தொகுதியே ஆனந்தமய கோசம் என்பது. இது ஆத்மாவைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. அதற்கு வெளியில் விஜ்ஞானமய கோசம்; அதைச் சுற்றி மனோமய கோசம்; அதைச் சூழ ப்ராணமய கோசம்; அதற்கும் வெளியில் நமது கட்புலனுக்கு கோசரமாகும் ஸ்தூலமான அன்னமய கோசம். இவ்விதமாய் ஐந்து கோசங்கள், உரைகள், கவசங்கள் அல்லது மூடிகள் ஜீவாத்மாவாகிய நான் என்னும் வஸ்துவை மூடிக்கொண்டிருக்கிறது.

பல ஜன்மங்கள் எடுக்கிறோம். அந்த ஒவ்வொரு ஜன்மத்தி

லும் நமது அறிவும் ஞானமும் விருத்தியாக ஆக வெளிக் கோசங்களை யெல்லாம் ஒவ்வொன்றாய் கழற்றிவிட்டு கடைசியான ஆனந்தமய கோசத்தை யடைய முயற்சிக்கிறோம். இப்படியாக படிப்படியாய் மேற்செல்வதை பரிணாமம் அல்லது பரிபக்குவம் (Evolution) என்று சொல்லுவோம். இப் பரிபக்குவத்தின் கீழ்ப் படிகளிலிருப்பவன் தனக்கு ஒரு ஆத்மா உண்டு என்பதையும், அறிவு ஞானம் இவற்றின் விஷயமெதையுமே அறியாதவனாய் அன்னமய கோசத்திலேயே ஈடுபட்டு தேகத்தை வளர்ப்பதற்கு வேண்டிய எண்ணங்களுடன் அதற்கு வேண்டிய முயற்சிகளைமாத்திரமே செய்கிறான். மேற்படிகளில் செல்லச் செல்ல தேகத்தை மறந்து அறிவு வளருவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்கிறான். பிறகு வெளி விஷயங்களிலும் உலக இன்ப விஷயங்களிலுமுள்ள அறிவு மாத்திரம் போதாது என்பதை உணர்ந்து நீடித்ததல்லாத அழிந்து போகக்கூடிய இவ்வுலக விஷயங்களைத் தவிர மேலான வஸ்து ஒன்று, மேலான அறிவு ஒன்று, மேலான ஆனந்தம் ஒன்று உண்டா என்று ஆராய்ச்சி செய்ய ஆரம்பிக்கிறான். பல ஜன்ம பரிபக்குவத்துக்குப் பிறகு அவ்வுயர்ந்த தன்மையையும் (ஸத்), உயர்ந்த ஞானத்தையும் (சித்), உயர்ந்த பேரின்பமாகிய ஆனந்தத்தையும் (ஆனந்தம்) அடைந்த ஞானிகள், விவேகிகள், ஜீவன் முக்தர்கள், யோகிகள் சிலர் இருக்கின்றார்கள். இவர்கள் பல ஜன்ம பரிபக்குவத்துக்குப் பிறகு வேறு ஜன்மமின்றி பரமாத்மாவுடன் ஐக்கிய மடைகின்றனர்.

இந்த க்ஷேத்ரமாகிய புரியில் மனோமய கோசத்தில் இருவித கக்ஷிகள் இருக்கின்றன. ஒரு கக்ஷியார் கீழ் நோக்கியே செல்பவர் அன்னமய, ப்ராணமய கோசத்தின் ஸமீபத்தில் இருந்து அவற்றின் சுகக்ஷேமத்துக்கு வேண்டியவற்றையே தேடுபவர். இவர்களுள் காமம, குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம், டம்பம், தர்ப்பம், ஈர்ஷை, அஸூயை முதலான பதின்மர் முக்கியமானவர்கள் (Vices). விஜ்ஞானமய, ஆனந்தமய கோசத்துக்கு ஸமீபத்தில் மற்றொரு கக்ஷியார் இருக்கின்றனர். அவர்கள் எப்போதும் அறிவு விருத்திக்கும் ஞான மார்க்கத்தில் செல்வதற்கும் பாடுபடுபவர்கள். அவர்களுள் முக்கியமானவர்கள், விவேகம், முயற்சி, நன்மை, பணிவு, அடக்கம், தயை, கருணை முதலான

உத்தம குணங்கள் (Virtues). இவ்விரு கக்ஷியாருக்கும் எப்போதும் இந்த க்ஷேத்ரமாகிய பட்டணத்தில் உட்கலகமும், போரும் நடந்துகொண்டேயிருக்கும். க்ஷேத்ரஜ்ஞனாகிய அரசன் ஸாக்ஷியாக இருந்துகொண்டு இந்த யுத்தத்தைப் பார்த்துக்கொண்டு இருக்கிறது. பிறரைக் கெடுத்து அவர்கள் செல்வத்தை யபகரித்து மெத்தைவீடு கட்டிக்கொண்டு அன்னமய, பிராணமயமாகிய இந்த ஸ்தூல தேகத்தை சுகமாக பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கச் செய்யவேண்டுமென்பது கீழ்க்கக்ஷியாருடைய போராட்டம். மேல் கக்ஷியாரோ இதற்கு ஒத்துக்கொள்ளுவதில்லை. இந்த தேகமே அநித்யம் எந்த நிமிஷத்திலோ இறந்துபோய்விடும்—இந்த உலக ஸுகங்களெல்லாம் நீடித்ததல்ல. ஆதலால் இந்தக் கீழான ஆசையை விட்டு மேலான ஆசையை, ஞான மார்க்கத்தை யடைவதிலுள்ள ஆசையை, நிறைவேற்ற ஊக்கமுடையவர்கள் ஆவோம், என்பது மேல் கக்ஷியாருடைய வாதம்.

இவ்விதமாக நமது தேகத்தில் ஸதாஸர்வகாலமும் இவ்விரு கக்ஷியாருக்கும் போராட்டம் நடந்துகொண்டேயிருக்கிறது. பல ஜன்ம பரிபக்குவ மேற்படும்போது கீழ்கக்ஷியார் தோல்வியடைந்து மேல்கக்ஷியாரே ஜயத்தை யடைகின்றனர். நமது புராணக்கதைகள் பலவும் இந்த உட்கருத்தையே உடையன. உதாரணமாக :—

(a) ராமாயணம்—ராமர் பரமாத்மா. ஸீதை அவரது அம்சமாய் இந்த க்ஷேத்ரமாகிய புரியில் வசிக்கும் ஜீவாத்மா. பத்துத் தலை ராவணன் என்பது கீழ்கக்ஷியாராகிய காமக்ரோதாதிகள். ஜீவாத்மாவாகிய ஸீதை காமக்ரோதாதிகளாகிய ராவணன் வசப்பட்டு பரமாத்மாவாகிய ராமரைச்சேர முடியாமல் தவிக்கும்போது அறிவாகிய ஹனுமார் தோன்றி ஜீவாத்மாவாகிய ஸீதைக்கு ஞான உபதேசம் செய்து அதனால் அந்த ஜீவாத்மாவை பரமாத்மாவுடன் ஐக்கியம் செய்கிறார்.

நவராத்திரி, தஶராத்திரி அல்லது மஹிஷாஸுர மர்த்தனம். மஹிஷம் என்றால் எருமை. அதாவது ஞானமின்மை. நமக்குள் இந்த அவிவேகம், அஜ்ஞானம் அல்லது அஸுரத்தன்மையாகிய கீழ்மையான குணங்கள் கணக்கில்லாமல் வேண்டியவை இருக்கின்றன. இதுதான் மஹிஷமாகிய அஸுரன். முதல் மூன்றிரவு

துர்க்கையின் ஆதீனமான நாட்கள்—அதாவது மனிதன் சிறிதேனும் பரிபக்குவமின்றி பகுத்தறிவின்றி முறட்டுத்தனமாய் தேக பலத்தை மாத்திரமே கொண்டு பிற ஜீவன்களைக் கொல்லுவதிலும் அடிப்பதிலும் ஜயிப்பதிலும் ஒரு மேலான ஸந்துஷ்டியை யடைந்து நாகரீகமற்ற காட்டு முறண்டித்தனமாயிருக்கும் முதற்படிகள். இரண்டாவது மூன்றிரவு ஸ்ரீ லக்ஷ்மிக்குரிய தினங்கள். மனிதன் முறட்டுத்தனத்தை விட்டுச் சிறிது நாகரீகம் அடையும்போது குடும்பம், பட்டணம், ஜனஸமூகமென்பதை யெல்லாம் ஏற்படுத்திக் கொண்டு அஷ்ட லக்ஷ்மிகளின் வரப்ரஸாதமாய் கிடைக்கும் வித்தை (உலகவிஷய அறிவு) செல்வம், தான்யம், புத்ரன், வீர்யம், தைரியம் முதலியவற்றை யடைந்து கூடியமட்டும் ஒருவருக்கொருவர் பரோபகாரஞ் செய்துகொண்டு உலக ஸுகங்களை யனுபவிக்கும் இரண்டாவதான படிகள். மூன்றாவது மூன்றிரவு ஞானதேவதையாம் ஸரஸ்வதிக்கு உரித்தானவை. உலக ஸுகங்களை யெல்லாம் நன்கு அனுபவித்த மனிதன் அவற்றின் நிலையின்மையைத் தெரிந்துகொண்டு நிலையுள்ள நீடித்த விஷயங்களில் ஆசையுடையவனாய் அதற்கு வேண்டிய வித்தை (ஆத்மஞான வித்தை)யை வாக்தேவியின் அருளால் அடைந்து தன்னுள்ளிருக்கும் அறிவீனமாகிய பரம்பொருளைக் காணவிடாமல் மறைத்துக்கொண்டிருக்கும் அஜ்ஞானமாகிய மஹிஷ அஸுரனை வென்று பரமாத்மாவுடன் ஐக்கியமாவதற்கு முயற்சி செய்யும் மூன்றாவது படிகள். பத்தாவது தினம் மஹிஷ அஸுரனை மர்த்தனம் செய்வதற்கு அனுக்கிரகஞ் செய்த தேவியினது கிருபையால் விஜயத்தை யடைந்த விஜயதசமி.

இவ்விதமாகவே நமது ஒவ்வொரு புராணக் கதைகளுக்கும் வழக்க பழக்கங்களுக்கும் உட்கருத்து இருக்கிறது. அவற்றை ஆராய்ந்தறிந்து ஞானமார்க்கத்தைப் பின்பற்றுவதற்கு வேண்டிய பரிபவமும் உயர்ந்த உண்மையான அறிவும் ஞானமும் வேண்டாமோ? அது கீழ்ப்படிகளிலிருப்பவர்களுக்குக் கிடைக்குமோ—கிடைக்காது. ஆயினும் ஒவ்வொரு மனிதனும் கூடியமட்டும் மேல் நோக்கிச் செல்வதற்கும் உத்தம ஞானத்தை அடைவதற்குமே ஊக்கமுடையவனாதல் வேண்டும்.

ஸ்ரீ பகவத் கீதையின் உட்கருத்து அல்லது ரஹஸ்யார்த்தம் என்ன என்பதை ஆராய்வோம்.

கீதையானது பகவான் கிருஷ்ணபரமாத்மா அர்ஜுனனுக்கு யுத்தத்தின் இடையில் உபதேசம் செய்தார். கிருஷ்ண பரமாத்மா—கிருஷ்ணம் என்றால் மேகநிறம். இங்கு வெளிப் பார்வைக்கு மேகநிறமல்ல. மேகத்தின் தன்மையை யுடையவர். அதாவது சூல்கொண்ட ஒரு மேகமானது எப்படி குளிர்ச்சியான மழையை வருஷித்து உலகத்தில் உஷ்ணத்தினால் தவிக்கும் பிராணிகளுக்கும் பயிர்களுக்கும் சந்துஷ்டியை யுண்டாக்கி மேலும் பிராணிகள் ஜீவித்திருப்பதற்கே வேண்டிய பயிர்களையும் உண்டாக்கி உலகம் ஸுபிக்ஷமாயிருக்கச் செய்கிறதோ அவ்விதமே பரமாத்மாவாகிய கிருஷ்ணபகவான் தன் கருணையாகிய மழையை தாபத்ரயாதி அக்கினியினால் வருந்தும், ஜனனமரண ஸம்ஸார பந்தத்தில் அகப்பட்டுத் தவிக்கும், காமக்ரோதாதி உட்பகைவர்களால் கஷ்டமுறும், இந்திரிய விஷயங்களில் ஈடுபட்டு அவைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளும் மார்க்கமறியாமல் மயங்கும் தன் பக்தகோடிகளாகிய ஜீவாத்மாக்களுக்கு வருஷித்து அதனால் அவர்கள் வருத்தம் நீங்கி குளிர்ச்சி (மனம்) யடைந்து மேல் நோக்கிச் சென்று நல்வழியில் பிழைத்துப்போகும் மார்க்கத்தை உபதேசிப்பவர்.

அர்ஜுனன்—அர்ஜுனம் என்றால் வெண்மைநிறம். கிருஷ்ணனது உபதேசத்தைப் பெற்றுக்கொண்டு அதை யுணர்ந்து, பகுத்தறிந்து ஞானமார்க்கத்தில் செல்லுவதற்கு வேண்டிய பரிபவமும் வெண்மைநிறமாகிய ஸத்துவகுணமும் பூர்த்தியாயுள்ள ஒரு உத்தமமான பக்தன் அல்லது சிஷ்யன். யுத்தத்தினிடையில் உபதேசம்—அன்னமய பிராணமய கோசத்தில் தங்கி, இந்திரிய விஷயங்களை நுகர்வதிலேயே திருப்தியுற்று வேறு அதற்குமேல் உயர்ந்த தன்மை யென்பது ஒன்று உண்டு என்பதையே அறியாமல் மனிதனிருக்கும் வரைக்கும் அந்தக் கீழான நிலைமையில் சண்டையே கிடையாது. சிறிது நாகரீகமடைந்து மனிதன் மேற்படிகளுக்கு ஏற ஆரம்பிக்கும்போதுதான் அவனுக்குள் இருக்கும் கீழ் கக்ஷியாகிய உட்பகைவர்களுக்கும் மேற்கக்ஷியாரான உயர்குணங்களுக்கும் சண்டை யாரம்பிக்கிறது. அர்ஜுனன்

அந்த நிலைமையிலிருப்பவன். அவனே ஜீவாத்மா. பரிபக்குவமடைந்து விவேகத்தையும் ஞானத்தையும் அடைவதற்கு யோக்கியனான ஜீவாத்மா. கீதையின் உபதேசம் என்னவென்றால் மேற்செல்ல மிகுந்த ஆவலுடன் முயற்சி செய்யும் ஜீவாத்மா எவ்விதமாய் உயர்ந்த படியை யடைவது என்பதே. இது ஒரேபடியாய் ஏறிவிட முடியாது. பல படிகளையுடைய (ஸோபானம்) அந்த ஞானமார்க்கத்தை கீதையில் விரித்துக் கூறுகிறார். அவற்றை ஒவ்வொன்றாய் எடுத்துக்கொள்வோம்.

கர்மம்—பலனில் அபேக்ஷையுடன் செய்யும் கருமம் அல்லது தொழில். சாதாரண மனிதனுக்கு போகத்தை யனுபவிப்பதில் தான் மிகுந்த இஷ்டம், புத்திரமித்திர களத்திராதியர் மேலும் மிகுந்த பற்று, மண் பெண் பொன் இவற்றில் அஸாத்தியமான ஆசை. லக்ஷத்துக்கு ஒருவர் குறைவாக மற்றெல்லாரும் இந்தப்படியிலிருப்பவர்களே—தன் லாபத்தையும் தன் நலத்தையுமே கருதி அதன் பொருட்டே எப்போதும் தொழில் செய்யும் இந்தப்படியில் (கர்மப்படி) இருப்பவர்களை நன்மையான கர்மங்கள், பிறருக்குபகாரமான தொழில்கள், ஜீவஹிம்ஸையில்லாத வேலைகளைச் செய்விப்பது எப்படி? "இந்த தானம் செய், அந்த தர்மம் செய், இந்த புண்ணிய நதியில் நீராடு, உனக்கு இதன் பலன் மோக்ஷத்தில் கிடைக்கும். நீ இறந்தபிறகு புண்ணிய லோகங்களுக்குச்சென்று நீ செய்த புண்ணியங்களுக்குத் தகுந்த பலனை யனுபவிப்பாய்" என்று இவ்விதம் தூண்டும்போது நல்ல போகங்களை மேலுலகங்களில் அனுபவிக்கப் போகிறோம் என்னும் நம்பிக்கையுடன் மனிதன் நன்மைகளைச் செய்கிறான். மேலும் பாபம் செய்தால் நீ நரகத்தில் சென்று பாபத்தின் பலனையனுபவித்துத் துன்பமுறுவாய் என்று சொல்வதால் கூடியமட்டும் பாபம் செய்யக்கூடாது என்று பயப்படுகிறான். பகவத்கீதையில் முதல் யோகம் அர்ஜுன விஷாத யோகம்—கர்ம மார்க்கத்திலிருந்துகொண்டு கர்மங்களின் புண்ணிய பாபங்களை யனுபவித்துக் கொண்டு உலக விஷயங்களில் பற்றுடன் 'என் பந்துக்கள்', 'என் பாட்டனார்', 'என் குரு' என்னும் அபிமானம் அல்லது மோகத்துடன் 'என்ன செய்வது' என்று தெரியாமல் மயக்கம் அல்லது சோகமுறும் சந்தர்ப்பத்தில்

அர்ஜுனனுடைய மயக்கத்தைப்போக்கி ஞான உபதேசம் செய்ய அல்லது அவனது மோகம், சோகம் இவற்றைப் போக்க கிருஷ்ண பரமாத்மா முன் வருகிறார்.

2. இவ்வத்தியாயம் கீதையின் மொத்த ஸாரமெனக் கருதலாம். மற்ற 16 அத்தியாயங்களிலுமுள்ள விஷயமும் இதில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (a) தேகம் அநித்யம் அதைக் குறித்து வருந்துதல் வேண்டா. (b) ஜீவாத்ம பரமாத்மாவின் தன்மைகள், ஆத்மஞான விஷயம். (c) ஸ்வதர்மம், அவரவர் கர்மத்தைச் செய்யவேண்டியது (d) ஆயின் கர்மயோகியா யிருக்கவேண்டும் அதாவது கர்மபலனில் ஆசையின்றி ஈஸ்வர அர்ப்பணமாய் பரோபகார நிமித்தம் கர்மம் செய்யவேண்டியது. (e) கர்மம் செய்யாமலிருக்கவே கூடாது. இந்த தேகத்தைப் போஷிப்பதன் நிமித்தமாவது ஒவ்வொருவனும் கர்மம் செய்யவேண்டியது அவசியம். (f) கர்மமென்னும் படிகளையே தாண்டி அறிவு விருத்தியாகி பகுத்தறிவு சிறந்து ஞானமார்க்கத்தில் பிரவேசித்து ஸமாதியடைந்து உறுதியான, நிலைத்த சஞ்சலமில்லாத ஞானத்தையடைந்த ஜீவன் முக்தன் கர்மம் செய்யவேண்டியதில்லை. (g) ஸ்திதப்ரஜ்ஞனது விவரம், அவன் எவ்விதமிருப்பான், எவ்விதம் நடந்துகொள்ளுவான் என்பதான விஷயம்.

3. கர்ம யோகம்—இது பலனை யபேக்ஷித்து கர்மம் செய்வதற்கு மேலுள்ள படிகள். உலகிலுள்ள எல்லாப் பிராணிகளும் முக்குணங்களில் வசப்பட்டு ஸ்வாதீனமின்றி கர்மம் செய்கின்றன. சிறந்த உத்தமமான ஞானத்தை யடைந்து கடவுளிடத்தில் ஈடுபட்டு வெளிவிஷயங்களில் சிறிதளவேனும் பற்று இன்றி பக்தியில் ஆழ்ந்திருக்கும் மகாபரிபக்குவமடைந்த ஞானிகள் மாத்திரமேதான் கர்மத்தையே விட்டுவிடலாம். மற்று, ஸாதாரணமானவர்கள், உயர்ந்த ஞான பரிபக்குவமில்லாதவர்கள் கர்மம் செய்யவேண்டும். அவர்கள் செய்யும் கருமம் சுயநலத்தின் பொருட்டும் தன் சுகத்தின் பொருட்டும் இருக்கக்கூடாது. மோக்ஷ அபேக்ஷையுடனும் பலனில் இச்சையுடனும் கர்மம் செய்தல் கூடாது. "பரோபகாரார்த்தம் இதம் சரீரம்", கடவுளால் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இச்சரீரம் பிறருக்கு உபகாரம் செய்வதற்காக, என்னும்

எண்ணத்துடன், தான் செய்யும் ஒவ்வொரு தொழிலையும் கடவுளுக்கு அர்ப்பித்து பிறருடைய க்ஷேமத்தின் பொருட்டே கர்மம் செய்யவேண்டும். இதுதான் கர்மயோகம், யஜ்ஞார்த்தமான கர்மம். ரஜோகுணத்திலிருந்து உண்டான ஆசை அல்லது காமத்தின் வசப்பட்டு உலகவிஷயங்களை தான்தானே அனுபவிக்கவேண்டும் என்னும் பேராசையுடன் ஸ்வய நலப்பிரியனாய் இருக்கும் படியிலிருக்கும் ஒருமனிதனானவன் சிறிது சிறிதாய் இவ்வாசையை அடக்கி காமத்தை வென்று தனக்கென்று கர்மம் செய்யாமல் பிறர் நன்மையின் பொருட்டுத்தொழில் செய்யும் பரிபக்குவம் ஏற்படும்போது அவன் அப்போதே கர்மயோகி எனப்படுவான். “தனக்கென வாழான் பிறர்க்குரியாளன்” என்னும் புத்தபகவான், ஜனகர் முதலான பெரியோர் உத்தமமான கர்ம யோகிகள்.

4. ஞானயோகம்.—கர்ம யோகத்துக்கடுத்த படி இது. உண்மைப்பொருளாகிய பரமாத்மாவைப்பற்றி விவேகம் ஏற்பட்டு அப்பரம்பொருளை யடையவேண்டும் என்னும் விருப்பமும் அதற்கு வேண்டிய அறிவுடன் கூடிய முயற்சியும்.

5. ஸந்யாஸயோகம்.—மோக்ஷமார்க்கத்தை (மோக்ஷம்—விடுதலை) யடைய விரும்புபவன் அதற்கு ஸாதனமல்லாதவும் அதற்கு இடையூராகவுமுள்ள வேண்டாத கர்மங்களை யெல்லாம் விட்டுவிட்டு (ஸந்யாஸம்) பகவானை அடைவதற்கு வேண்டிய உத்தமமான கர்மங்களை மாத்திரம் பலாபேக்ஷையின்றியும் ஈஸ்வரார்பணமாகவும் செய்துகொண்டு தாமரையிலைத் தண்ணீர்போல் ஆத்மஞானமாகிய ஸூரியனால் அஜ்ஞானமாகிய இருள்நீங்கி, ஞானபானுவின் பிரகாசத்தால் கடவுளை அறிந்து எல்லாப்பிராணிகளையும் சமமாகக்கருதி, ஸர்வ வியாபகரான அந்த பரம்பொருளிடமே தன் அறிவை லயப்படுத்தி உயர்ந்த சாந்த பதவியை அதாவது மன அமைதியையடையவேண்டும்.

6. இந்த மன அமைதியை யடைவதற்கு ஸாதனமான ஒருபடி தியானம். இந்திரியங்களை ஜயித்துக் கட்டுப்படுத்தி சீதோஷ்ண, சுகதுக்க, லாபநஷ்ட, மானாபமானங்களில் ஒரு நிலையாய், பசு, நாய், புலையன், மண்கட்டி, தங்கம், எதுவாயிருந்தாலும்

அவற்றையெல்லாம் ஸமதிருஷ்டியுடன் நோக்கி மித்திரன் சத்துரு என்னும் பேதமின்றி மனதை ஒரேமுகமாய் ஸ்திரமாய் கடவுளிடத்திலேயே செலுத்தி ஆரம்பத்தில் ஏகாந்தமான இடத்தில் ஸ்திரமான ஆசனத்திலிருந்துகொண்டு, மித ஆகாரம், நித்திரையுடையவனாய் ஈஸ்வரத்யானம் செய்துகொண்டே யிருப்பவன், துக்கம், கஷ்டம், பந்தங்களிலிருந்தெல்லாம் விடுபட்டு பலஜன்மங்களிலும் ஏற்படும் அப்பியாஸத்தினால் பரிபவ மடைந்து யோகியாகிறான்.

7. விஜ்ஞான யோகம்— ஞானமார்க்கத்தில் மேற் செல்லுவதற்கு இதுவே அடுத்தபடிகளாகும்—ப்ரக்ருதி, பஞ்சபூதாதிகள், அவற்றிலெல்லாம் வியாபித்திருக்கும், அவற்றின் ஸாரமாயிருக்கும் பரமாத்மா, இவைகள் ஒன்றுக்கொன்றுள்ள ஸம்பந்தம், ப்ரக்ருதியின் 3 குணங்கள், பர அபரமாயைகள், இவற்றையெல்லாம் அனுபவத்தில் ஆராய்ந்து, அறிந்து, பலதேவதைகளைப் பூஜித்து அவர்களால் அடையக்கூடிய பலனெல்லாம் நீடித்ததல்ல என்பதையும் அனுபவத்தில் அறிந்து பிறகு ஒரேகடவுளாகிய, குணரஹிதராகிய, ரூபமற்ற ஸாஸ்வதப்பொருளாகிய பரமாத்மாவை அறிகிறான்.

8. அப்யாஸ யோகம்— மனத்தை எத்தனை விதங்களில் கட்டுப்படுத்தினாலும் அது மறுபடி மறுபடி விஷயங்களை நாடுகிறது. எத்தனை விதத்தில் ஈஸ்வரத்தியானத்தில் கட்டுப்படுத்தி நிறுத்தினாலும் அக்கட்டுக் கடங்காமல் மீறிக்கொண்டு இதர விஷயங்களில் தாவிச் செல்லுகிறது. இது நமது அனுபவத்தில் நாமறிந்தவிஷயம். 5 நிமிஷ நேரமேனும் பகவானது ஏதேனும் ஒரு ரூபத்தில் மனதை நிலைநிறுத்தி (Concentration) தியானிக்க ஆரம்பித்தால் அதிசீக்கிரத்திலேயே இதர எண்ணங்களும் ஞாபகங்களும் வந்து சூழ்ந்துகொண்டு தியானத்தைக் கலைத்துவிடுகிறது. ஆதலால் பகவானிடத்தில் மனதை நிலைநிறுத்துவது அசாத்தியமானது. அதற்கு அப்பியாசமே அடுத்த படிகள், அதியஜ்ஞம், அதிபூதம், அதியாத்மா, க்ஷேத்ரம். க்ஷேத்ரஜ்ஞன் இவற்றை யெல்லாம் நன்கறிந்து இதர விஷயங்களில் மனதைச் செலுத்தாமல் கடவுளிடத்திலேயே ஸ்திரமாகக்கட்டி ரூபமற்று

"ஓம்" என்னும் சப்தமாத்திரமாயுள்ள அந்த அக்ஷரப்பொருளை எப்போதும் இடைவிடாது தியானிப்பதற்கு அப்பியாஸம் அல்லது பழக்கம் செய்துகொள்ளுகிறான். ப்ரம்மாதி உலகம் யாவும் அக்ஷரமல்ல அதாவது ஸ்திரமானதல்ல என்பதை உணர்ந்து மேலான பதவியையடைகிறான்.

9. ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்—இவ்விதம் ஞானத்தினாலும் தியானத்தினாலும் அப்யாஸத்தினாலும் கர்ம யோகத்தினாலும் வித்தைகளுக்குள் உயர்ந்த ராஜவித்தையானதும் அதிரஹஸ்யமாய் எல்லோராலுமே அறியமுடியாததுமான "ஆத்ம வித்தை"யை யடைந்து முக்தியடைகிறான். பரமாத்மாவே நிலையுள்ளது, மற்ற சராசரங்களெல்லாம் சிருஷ்டி காலத்தில் வியாபித்து ப்ரளய காலத்தில் ஸர்வேஸ்வரனிடத்தில் ஒடுங்கி லயித்துப் போகிறது (Evolution & Involution) என்னும் ஆத்ம வித்தையின் ஒரு பகுதியை அறிகிறான். எல்லாம் கடவுளே, எல்லாம் ப்ரம்மமயம், நாம் காணும் வஸ்துக்களெல்லாம் அவரதுசாயையே என்பதை யுணர்ந்து ஈஸ்வர அர்ப்பணமாய் தொழில் செய்துகொண்டு தர்மபுத்தியுடன் உறுதியான அறிவுடன் கடவுளையே யடைகிறான்.

10. விபூதி யோகம்—இது உத்தமமான ஆத்ம வித்தை. அதாவது பரம்பொருளாகிய ஸர்வேஸ்வரன் நாம் காணும் ஒவ்வொன்றினுடைய ஸாரமாயும் நாம் காணும் எல்லா ப்ரபஞ்சாதிகளிலும் வியாபித்திருக்கிறார் என்னும் தத்துவத்தை (உண்மையை) அறிவது. தான்வேறு, கடவுள்வேறு, உலகத்தில் நாம் காணும் பொருள்களெல்லாம் வெவ்வேறு என்னும் பேத புத்தியின்றி பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள அப்பரம்பொருளின் பல்வேறு உருவங்களான இப்பிரபஞ்சத்தில் கடவுளின் எகத்வத்தைக் காண்பதே உயர்ந்த ஞானம்.

11. இத்தனை நேரம் பரமாத்மாவாகிய கிருஷ்ண பகவானது சிறந்த உபதேசத்தைக் கேட்டுக்கொண்டிருந்த அர்ஜுனனுக்கு தன்னை யறியாமலே மனதில் ஒருவித பரிபக்குவமும் ஞானமும் உண்டாகி தனது ஞானக் கண்ணினால் ஸர்வ வ்யாபகராகிய பகவானை ஸர்வத்திலும் காண்கிறான். அவன் மனதில் பக்தி

யாகிய பரவசம் ஏற்பட்டு பரம்பொருளாகிய ஜகத்ஜோதியை எந்தத்திக்கிலும் எல்லா வஸ்துக்களிடத்தும் இருப்பதாக உணருகிறான். கடவுள் கிருபையால், கிருஷ்ண பரமாத்மாவின் கருணையால் இவ்வுணர்ச்சி அர்ஜுனனுக்குச் சிறிது நேரத்துக்கு மாத்திரமே யுண்டாகிறது.

அப்போது விஸ்வரூபியான, விஸ்வம் முழுவதும் வியாபித்துள்ள பரம்பொருளை, பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரிபூரண ஆனந்த வஸ்துவை, தேஜோமயமான பரமேஸ்வரனை எங்கிலுமிருப்பதாகக் கண்டு, நிறைந்த பூர்ண பக்தி விநயத்துடன் அஞ்சலிசெய்து அர்ஜுனன் அடைக்கலமடைகிறான் என்பது விஸ்வரூப யோகம்.

12. மறுபடி கிருஷ்ணபரமாத்மா உபதேசிக்க ஆரம்பித்து சாதாரணஜனங்களுக்கு சகுண உபாசனையே சிறந்தது என்பதை விவரித்து மிகுந்த பக்தியில் ஈடுபட்டிருப்பவனுடைய குணங்களையும் தன்மைகளையும் எடுத்துக்கூறி பக்தியின் மேன்மையை அர்ஜுனனுக்கு விளக்குகிறார்.

13-17. க்ஷேத்ர க்ஷேத்ராஜ்ஞன்.—சரீரம், ஆத்மா முதலானவற்றின் பிரிவினைகளையும், ஐக்கியத்தையும், ஒன்றுக்கொன்று உள்ள சம்பந்தத்தையும், ஸத்துவ ரஜோ தமோ குணம் என்னும் மூன்று குணங்களின் விவரத்தையும், பரமேஸ்வரனாகிய புருஷோத்தமனை யடையும் மார்க்கத்தையும் அதற்கு இடையூறாக இருக்கும் விஷயங்களையும், தெய்வத்தன்மையுடன் கூடிய பரிபவமடைந்தவர், அஸுரத்தன்மையுடன் கூடி பரிபக்குவமடையாதவர் இவர்களின் தன்மைகளையும், 3 வித முயற்சி அல்லது கடவுளை யடைவதற்கு சாதனமான 3 வித சிரத்தை இவற்றைப் பற்றியும் விவரித்துக் கூறுகிறார்.

18. 3 வித தியாகம், கர்மத்தின் விவரம், மும்மூன்று விதமான ஞானம், கர்மம், கர்த்தா, புத்தி, தைர்யம், சுகம், சதுர்வர்ணத்தவாது குணகர்மங்கள் இவற்றின் விவரம்.

இவற்றை யெல்லாம் அறிந்து சிறந்த விவேகத்துடன் தன் கர்மங்களை ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்யும் ப்ரம்ம ஞானியின் தன்மையும் கடவுளிடத்திலேயே அவன் லயமாகும் விதமும் கூறப்படுகிறது.

கடைசியாக கிருஷ்ணபரமாத்மா அர்ஜுனனுக்குச் சொல்லும் புத்திமதி.—"உன் கர்ம பலனிலுள்ள இச்சையை விட்டு, நீ செய்யும் கர்மங்களை யெல்லாம் எனக்கே அர்ப்பணம் செய்து என்னையே சரணமடைந்து என்னிடம் முழுநம்பிக்கையுடன் என் மேல் பாரத்தை வைத்து உன் கர்மத்தைச் செய். உனக்கு ஒரு விதப் பாபமும் ஏற்படாது. அதை எல்லாம் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்."—

இதுவே கீதையின் ஸாரமாகும். நமக்குள் இருக்கும் நன்மைகளை எல்லாம் அப்பியாசத்தினாலும் முயற்சியினாலும் மேன்மேலும் விருத்தியாகி வளரச்செய்து, ஆசை கோபம் முதலியவற்றை அடக்கி, இந்திரியங்களை வசப்படுத்தி, உயர்ந்த மேன்மையான ஞானத்தை யடைந்து, அதனால் மனது பரிசுத்தமான அமைதியுடன் கடவுளிடத்தில் பூர்ணமான பக்தியும் நம்பிக்கையும் கொண்டு, நமக்கேற்பட்டுள்ள கர்மத்தை பற்றின்றி பலாபேக்ஷையின்றி நான் எனது என்னும் கர்வமின்றி ஈச்சுவர அர்ப்பணமாய்ச் செய்துகொண்டு, எல்லோரையும் சமமாகக் கருதி, பரோபகார சிந்தையுடன் இருப்பதற்கு நமது மனஉறுதியால் முயற்சி செய்து சிறிது சிறிதாய், படிப்படியாய் நன்மார்க்கத்தில் மேல் செல்லுதற்கு எப்போதும் முயற்சி செய்துகொண்டேயிருக்கவேண்டும். தப்பிதம் செய்யும்போதெல்லாம் நம்மை நாமே திருத்திக்கொண்டு, நம்மை நாமே கண்டித்துக்கொண்டு மறுபடி தப்பிதம் செய்யாமலிருப்பதற்கு வேண்டிய அறிவையும் முயற்சியையும் விருத்தி செய்துகொள்ளவேண்டும். இவ்விதமாய் மனிதன் நன்னெறியில் மேல் செல்லும்போது அவனது அறிவும் ஞானமும் பக்தியும் விருத்தியாகி மனதை கடவுளிடத்திலேயே ஒரு நிலைப்படுத்தி பரப்பிரம்மத்துடன் லயமாவதற்குப் பக்குவமாகிறான்.

முக்கியமான சில பதவாக்கியங்களின் கருத்து.

கிருஷ்ணன்—1. க்ருஷ் - பூமி, ந-சுகம், அதாவது பூமி ரூபமும் சுகரூபமாயு மிருப்பவர்.

2. நீருண்ட மேகம்போல் கறுத்தமேனியை யுடையவர். அதாவது நீருண்ட மேகம் எப்படி மழையை வருஷித்து, பூமியைக்

குளிரச்செய்து, பயிர்களை யுண்டாக்கி, பசிப்பிணியைப் போக்குகிறதோ, அப்படியே பக்தர்களது அபீஷ்டங்களைக் கொடுத்து அவர்களது மனதை குளிரச் செய்பவர்.

3. தைத்தியர்களை சம்ஹரிப்பவர்.

4. பக்தர்களது சோகத்தை கிருஷிப்பவர் (நாசம் செய்பவர்).

மாதவ:—1. உபநிஷத்தில் 'மதுவித்தை' என்னும் பாகத்தால் துதிக்கப் பட்டவர்.

2. மா - லக்ஷ்மி, தவ - பதி = லக்ஷ்மியின் பதி.

3. மௌனம், தியானம், யோகம் இவைகளை யுடையவர்.

ஹ்ருஷீகேஶ:—1. ஹ்ருஷீக-இந்திரியங்களுக்கு, ஈஶ:-ஸாக்ஷியானவர். அதாவது க்ஷேத்ரஜ்ஞன்.

2. ஹ்ருஷி-சந்தோஷத்தை யுண்டுபண்ணுபவர் + கேஶ:-சசி ஸூர்யர்களது கிரணக்கத்தைகளால் (மயிர்போன்ற கிரணங்களால்) அதாவது சந்திரஸூரியரூபமாயிருந்துகொண்டு அவற்றின் கிரணங்களால் பிராணிகளை மகிழ்விப்பவர்.

அச்யுத—1. நாசமற்றவர், தேசம், காலம், வஸ்து இவைகளில் விகாரமற்றவர்.

2. தன் நிலைமையிலிருந்து சலிக்காதவர்.

கேஶவ—1. அழகிய மயிர்களை யுடையவர்.

2. கேஶி என்னும் அஸுரனைக் கொன்றவர்.

3. க:-பிரம்மா
அ:-விஷ்ணு
ஈஶ:-ருத்திரன் } இம்மூவரையும்

வ:—ஸ்வாதீனத்தில் வைத்திருப்பவர் அல்லது இவர்களை சிருஷ்டியாதித் தொழிலில் ஏவுபவர்.

4. கிலேசத்தை நாசம் செய்பவர்-(கேஶவ: க்லேஶநாஶாய)

கோவிந்த—1. கோ - பூமியை + விந்த-அடைந்தவர். (வராக அவதாரம்).

2. மாம் - வேதத்தை + விந்ததி - அடைந்தவர்.

3. மா - பசுக்களை + விந்ததி-அடைந்தவர். (பசு-ஜீவர்கள்)

மதுஸூதனன்—1. மது என்னும் அஸுரனைக் கொன்றவர்.

ஜநார்தநன்—1. துஷ்டநிக்கிரகம் செய்பவர்.

2. இக பர சௌக்கியத்தின்பொருட்டு ஜனங்களால் யாசிக்கப்படுபவர் அல்லது வேண்டப்படுபவர்.

3. அவரவர்கள் பாபத்துக்குத் தகுந்தபடி தண்டிப்பவர்.

4. ஜநம் - ஜனனம். ஜனனத்தையும் அதன் காரணமான அஜ்ஞானத்தையும் தன் அனுக்கிரகத்தினால் போக்கடிக்கிறவர்.

5. செல்லுதல் என்னும் கருத்தையுடைய 'அர்த்' என்னும் வினைப் பகுதியினடியாய்ப் பிறந்தது. அசுரர்களை நரகங்களில் செலுத்துவதால் ஜநார்த்தனன்.

வார்ஷ்ணேயர்—வசுதேவர் குலமாகிய விருஷ்ணி வம்சத்தில் பிறந்தவர்.

அரிஸூதனன்—1. அரி - பகைவர். பக்தர்களது காமக்குரோதாதி உட்பகைவர்களை ஜயித்துப் போக்கடிப்பவர்.

2. பகைவர்களை ஜயிப்பவர்.

கோபாலன்—கோ - பசு (ஜீவாத்மா). பக்தர்களை பரிபாலிப்பவர். (இதை கோ பாலன் என்று உச்சரிக்கக்கூடாது. பால் - மயிர். பசுவின் மயிர் என்று அர்த்தமாகும்).

கேசிநிஷூதனன்—கேசி என்னும் அஸுரனைக் கொன்றவர்.

பகவான்—(பகவான்) 1. "பக" என்பது அணிமாதி சக்தி, மற்று வேறு விதங்களான அஷ்ட ஐஸ்வர்யம், வீர்யம், கீர்த்தி, ஸம்பத்து, வைராக்கியம், மோக்ஷஸாதனமான ஞானம் இந்த ஆறின் பெயர். இவை எக்காலத்திலும் குறையாமல் கடவுளிடத்தில் இருப்பதால் அவர் பகவான் எனப்படுகிறார்.

2. பூதங்களின் உற்பத்திக் காரணம், பிரளயகாரணம், இனி வரப்போகும் ஸம்பத்து, விபத்து, வித்தை, அவித்தை இவைகளை நன்கு அறிந்தவர் பகவான்.

அர்ஜுநன்—1. வெளுத்த நிறத்தை யுடையவன்.

2. வெளிர்நிறம் - சத்துவகுணம். அதாவது சத்துவ குணம் மேலிட்டு கிருஷ்ண பரமாத்மாவின் உபதேசத்துக்குத் தகுதியானவன்.

பரந்தபன்-(பரர்-எதிரிகள்) சத்துருவை தவிக்கச் செய்பவன்.

தநஞ்சயன்—1. தனத்தை மிகுதியாக சம்பாதிப்பவன்.

2. தனத்தில் அதாவது செல்வத்திலுள்ள ஆசையை ஜயித்தவன்.

குடாகேசன்—1. குடாகாம் - நித்திரை + ஈசஃ ஆள்பவன் அதாவது நித்திரை அல்லது சோம்பலை வென்றவன்.

2. அடர்த்தியான மயிரையுடையவன்.

பார்த்தன்—ப்ருதா - குந்திதேவி, பிருதாவின் புதல்வன்- பார்த்தன்.

கௌந்தேயன்—குந்தியின் புத்திரன் கௌந்தேயன்.

ஸவ்யஸாசின்—இடது கையால் அம்பு எய்பவன்.

கிரீடி—கிரீடத்தை யுடையவன். (இந்திர சபையில் இந்திரனால் கிரீடமளிக்கப்பட்டவன்).

பரதஸத்தமன்—பரதகுலத்தில் மிகச் சிறந்தவன்.

ஸஞ்ஜயன்—ராகத்துவேஷாதிகளை ஜயித்தவன்.

துர்யோதநன்—யுத்தத்தில் ஜயிக்கப்படமுடியாதவன்.

யுயுதாநன் (ஸாத்தியகி) ஆச்சர்யமாய் பிறர் பிரமிக்கும்படி யுத்தம் செய்பவன்.

விராடன்—யுத்தத்தில் மிகவும் பரிகாசம் செய்பவன்.

த்ருபதன்—விருக்ஷத்தைத் தன் கொடியிலுடையவன்.

பீஷ்மன்—பயங்கரமான (ப்ரம்மசர்ய) விருதத்தை யுடையவன்.

கர்ணன்—கர்ண குண்டலத்துடன் பிறந்தவன்.

க்ருபன்—கிருபையை யுடையவன்.

அஸ்வத்தாமன்—பிறந்தவுடன் குதிரைபோலிருந்தவன்.

த்ரோணன்—துரோணம் - கமண்டலம். அதிலிருந்து உண்டானவர்.

ஆததாயிந:—ஆததாயிகள் 6 விதம். வீட்டுக்கு நெருப்பு வைத்தவன், போஜனத்தில் விஷங்கலந்தவன், தன்னைக் கொல்ல வந்தவன், தன் பொருளை யபகரித்தவன், தன் மனைவியை யபகரித்தவன், தன் பூமியை யபகரித்தவன்.

ஆதித்யர் 12—தாதா, அர்யமா, மித்ர:, வருண:, இந்த்ர:, விவஸ்வாந், பூஷா, பர்ஜந்ய:, அம்ஶு:, பக:, த்வஷ்டா, விஷ்ணு:, ஒவ்வொரு மாதத்துக்கு ஒவ்வொரு சூரியன்.

மருத்துக்கள் 7—ஆவஹ:, ப்ரவஹ:, விவஹ:, பராவஹ:, உத்வஹ:, ஸம்வஹ:, பரிவஹ.

ருத்திரர் 11—அஜந், ஏகபாதந், அஹிர்புத்ந்யந், த்வஷ்டா, ருத்ரந், ஹரந், ஶம்பு, த்ரயம்பகந், அபராஜிதந், ஈஶாநந், த்ரிபுவநந் (சில இடங்களில் விரூபாக்ஷந், ஸுரேஶ்வரந், ஜயந்தந், பஹுரூபந், ஸாவித்ரந் என்னும் பெயர்கள் வந்து இங்குள்ள சில பெயர்கள் விடப்பட்டிருக்கும்.

ஐராவதம்—இராவதியின் குழந்தை ஐராவதம்.

கார்ப்பண்யம்—1. வேதாந்த விசாரமின்மை.

2. லோபம் அதாவது ராஜ்யத்தை யடைய வேண்டுமென்னும் ஆசை.

வ்யவஸாயபுத்தீ—தீர்மான திடபுத்தி (will power).

த்வந்த்வம்—இருமை-இரட்டையாக வருபவைகள். உ-ம். இருள், வெளிச்சம், சுகதுக்கம், மோக்ஷநரகம், லாபநஷ்டம், ஜயாபஜயம், நன்மைதீமை, சீதோஷ்ணம் முதலானவை.

யோகக்ஷேமம்—யோகம்-நம்மிடம் ஏற்கெனவே இல்லாததை சம்பாதித்தல், க்ஷேமம் - அப்படி சம்பாதித்தவைகளைக் காப்பாற்றுதல்.

த்ரைகுண்யம்—த்ரிகுணம் 3 குணம் ஸத்வகுணம், ரஜோ குணம் தமோ குணம் (இவற்றின் விவரம் குணத்ரய யோகத்தில் காண்க).

அஹங்காரம்—அஹம் - நான். நான் நான் என்னும் தற்பெருமை, தற்புகழ்ச்சி முதலியன. தன்னாலேயே எல்லாம் நடக்கிறது, தனக்கே எல்லாம் கிடைக்கிறது என்னும் எண்ணம்.

மமகாரம்—மம-எனது. தனக்கே எல்லாம் இருக்கிறது என்று எண்ணி அவற்றின் மீது பற்றும் ஆசையுமிருப்பது மமகாரம்.

இந்திரியம் 12.—ஞானேந்திரியம் 5. கண், செவி, மூக்கு, நாக்கு, மேல்தோல்; கர்மேந்திரியம் 5. வாய், கை, கால், பாயு, உபஸ்தம்; மனது, புத்தி—2.

ஸங்கரம்—கலப்பு (ஜாதிக்கலப்பு முதலியன).

ஶங்கரம்—ஶம் - சுபம். சுகத்தை யுண்டாக்குவது. அதை உண்டாக்குபவர் ஶங்கரர்.

ஞாநம்—நூல்களைக் கற்பதால் ஏற்படும் அறிவு.

விஜ்ஞாநம்—அனுபவத்தில் உண்டாகும் அறிவு.

அஜ்ஞானம்—ஞாநம் இல்லாமை.

கர்மம்—தொழில் செய்தல்.

அகர்மம்—தொழில் ஒன்றும் செய்யாதிருத்தல்.

விகர்மம்—'செய்யக் கூடாது' என்று விலக்கப்பட்டுள்ள கர்மங்களைச் செய்தல்.

கர்மத்தில் அகர்மத்தையும் அகர்மத்தில் கர்மத்தையும் பார்த்தல்.

1. கர்மத்தில் அகர்மத்தைப் பார்த்தல்—ரயிலில் போகும்போது இருபக்கமுமுள்ள மரங்கள் ஓடுவதுபோலிருக்கிறது. ரயில் நிற்பதுபோலிருக்கிறது. ஓடும் தொழில் அல்லது கர்மம் ரயிலினுடையது. தேகாதிகள் செய்யும் கர்மத்தை ஒன்றுமே கர்மமே செய்யாமலிருக்கும் ஆத்மா செய்வதாக (நான் செய்கிறேன் என்று) எண்ணுவது தவறு. தேகாதிகள் செய்யும் கர்மத்தில் ஆத்மாவின் அகர்மத்தைப் பார்ப்பதே விவேகம்.

2. அகர்மத்தில் கர்மத்தைப் பார்த்தல்— தேகம், மனம், இந்திரியம் என்பவைகளின் தொழில் ஓய்ந்திருக்கும்போது அவற்றின் அகர்மத்தை "நான் ஒன்றும் செய்யாமல் மௌனமாய் இருக்கிறேன்" என்று அகங்காரத்தினால் ஆத்மாவினிடத்தில் ஆத்மாவின் செய்கைபோல எவன் ஏற்றுகிறானோ, அவன் ஆத்மாவின் செய்கை யல்லாத ஒரு விஷயத்தில் ஆத்மாவின் செய்கைபோல் ஒன்றை எண்ணுகிறான்.

ஆர்த:—துஷ்டர்கள், துஷ்ட மிருகங்கள், வியாதிகள் இவற்றினால் துன்ப மடைபவன்.

ஜிஜ்ஞாஸு:—கடவுளை யறிய ஆவலுள்ளவன்.

அர்த்தார்த்தி-பொருளை யடைந்து செல்வவானாயிருக்க அபேக்ஷிப்பவன்.

அதிபூதம்—பஞ்சபூதங்களும், தனிப்பொருள்களும் (Elements) அவற்றின் பல கலப்புப் பொருட்களும் (Compounds). இவை அழிந்து போகக் கூடியவை.

அத்யாத்மம்—ஈஶ்வரனது அம்சமாய் உலகிலுள்ள ஒவ்வொரு வஸ்துவிலுமுள்ள ஜீவாத்மா.

அதியஜ்ஞம்—எங்கும் வியாபித்துள்ள பரமாத்மாவாகிய ஈஶ்வரன்.

ப்ரஹ்மம்—குணரஹிதரான (நிர்குணம்) அவ்யக்தமான (காணமுடியாத) பரப்ரம்மம்.

ஸத், சித், ஆநந்தம்—ஸத்- உயர்ந்த இருப்பு (Highest Existence). அதாவது எல்லாம் அழிந்துபோன பிறகு மீதியாக, சேஷமாக இருக்கும் பரம்பொருள். சேஷி (எப்போதும் அழியாமல் ஆதியந்த மில்லாமல் நிலையாயிருப்பது. சேஷசாயி என்பதன் பொதுக்கருத்து மிதுவே). ஒரு பெரியமலை, அது தன் ரூபத்தை யிழந்து பெருங்கற்களாகி பிறகு சிறு சிறு கற்களாகிப் பிறகு பொடியாகித் தூளாகிப் புழுதியாகிக் கண்ணுக்குப் புலப்படாமற் போனபோதிலும் அதில் அழியாமல், மணி சரத்தின் நூல் போல் இருக்கும் ஈஶ்வர அம்சமாய் ஒரு ஸத்துப் பொருளிருக்கிறது. "ஸயன்ஸ்" பிரகாரம் உலகிலுள்ளவஸ்துக்கள் அல்லது பதார்த்தங்கள் (Matters) வேறு வேறு உருவங்களாக மாறிக்கொண்டிருந்தபோதிலும் அவற்றின் எடை, பண்டம் இவைகளின் மொத்தம் (Sum total energy and matter) மாறுபடுவதில்லை. அதாவது அவற்றிலுள்ள ஸத்துப் பதார்த்தம் குறைவது மில்லை அதிகமாவது மில்லை. அழியாத்தன்மையதான இச்சத்துப் பொருளின் மொத்தமே கடவுளின் அம்சமான ஸத்.

சித்-உயர்ந்த அறிவு (Highest knowledge). பகுத்தறியும் சக்தி வாய்ந்த அறிவு. நன்மை தீமை, புண்ணிய பாபம், உள்ளது இல்லாதது முதலான இருமைகளைப் பகுத்து அறிந்து, அதனால் சிறந்த தெய்வீகமான ஞானத்தையும் விவேகத்தையும் அடைந்து, லாபா லாப சுக துக்காதிகளால் மயக்க மடையாமல், தத் ஏகத்தியானமாய் (தத் = அக்கடவுள் + ஏகம் = ஒன்று + த்யானம் = எண்ணம்) அதாவது கடவுளைப் பற்றிய ஒரே தியான மன்றி வேறு எண்ணமொன்று மில்லாமல், கடவுள் ஒருவரே, ஜகத்தெல்லாம் அவர் மயமே, அவரே அந்தர்யாமியாய் சர்வத்திலும் வியாபித்துள்ளார், அன்பு மயமானவர், சச்சிதானந்த (சத் சித் ஆனந்த) ரூபி என்னும் உண்மைகளை யுணர்ந்து இருப்பது சித்.

ஆநந்தம்—உயர்ந்த அறிவு அல்லது சித்தினால் மனதுக்கு ஏற்படும் உயர்ந்த பேரின்பம் (Highest bliss). உலக விஷய சுகங்களால் ஏற்படும் சிற்றின்பம் (சிறு இன்பம்) அல்ல.

அக்ஷரம்—1. ஸம்ஸ்க்ருத பாஷையில் முதல் எழுத்து அ, கடைசி எழுத்து க்ஷ. அ முதல் க்ஷ வரைக்கும் உள்ள எழுத்துக்கள் அக்ஷரம்.

2. க்ஷரம் - அழிவு. அக்ஷரம் - அழிவில்லாதது. அதாவது அக்ஷரம் என்றால் ஸத்துப் பொருளாகிய பரப்ரம்மம்.

அஶ்வத்தம்-நிலையில்லாதது. அடுத்த நிமிஷம் இருக்காதது (அ = அல்ல + ஶ்வ: = நாளைக்கு + ஸ்தம் = இருக்கிறது). நாளைக்கு இருக்கிறது அல்ல. வருஷத்தில் ஒரு முறை அரச மரப் பிரதக்ஷணம் செய்வது, சம்சார விருக்ஷம் ஸ்திரமானதல்ல' மரத்தைச் சுற்றிச் சுற்றி வருவதுபோல் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி சக்கரமும் திரும்பித் திரும்பி வந்து கடைசியில் ஒன்று மில்லாமற் போவது, ஆதலின் அழிவுள்ள, ஸ்திரமற்ற ஸம்ஸாரத்திலேயே உழன்றுகொண்டிராமல் இதனின்றும் விடுபட்டு முக்தி யடைவதற்கு வேண்டிய ஸாதனமாகிய ஈஶ்வர பக்தி வேண்டும் என்பதை ஞாபகப்படுத்தும் பொருட்டு, "இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்று எண்ணவோ இடமில்லையே"

என்றார் தாயுமானவர். "நின்றான் இருந்தான் கிடந்தான் தன் கேள் அலறச் சென்றான்" என்னும் நாலடி வாக்கியத்துக் கேற்ப புல் நுனி மேல் நீர் போன்ற, நீர் மேல் குமிழி போன்ற நிலையில்லாத இவ்வாழ்க்கை அநித்தம்.

துன்பங்கள் 3 விதம்.

ஆதியாத்மிகம்—தன்னைப் பற்றிவரும் துன்பம். தலைவலி, ஜ்வரம்.

ஆதிபௌதிகம்—பிற உயிர்களைப் பற்றிவருவது. தேள் பாம்பு முதலியவற்றால்.

ஆதிதைவிகம்—தெய்வத்தைப்பற்றி வருவது. இடி, மழையின்மை இவற்றால்.

யோகம்—வழி, உபாயம், மார்க்கம், ஸாதனம்.

யோகி—கடவுளை யடையும் மார்க்கத்தை அல்லது உபாயத்தை யறிந்தவன்.

நிஷ்டை—உறுதியாக நிற்பது.

ஸாங்க்யம்—விசாரம், மெய்ப்பொருள் ஆராய்ச்சி, ஸாதன சதுஷ்டயத்துடன் சிரவண மனனாதிகளால் உண்மையை விசாரித்தல் அல்லது ஆராய்தல்.

கர்மயோகம, கர்ம நிஷ்டை - பலனில் இச்சையின்றி பற்றற்று ஈஶ்வரார்ப்பணமாய் தொழில் செய்வது.

தியான யோகம்—தியான நிஷ்டை; சித்த விருத்தியை யடக்கி கடவுளிடத்திலேயே மனதை நிலைநிறுத்தி தியானிப்பது.

ஞானயோகம்—ஞானநிஷ்டை. உயர்ந்த ஞானத்தை, ஜீவாத்ம பரமாத்ம ஞானத்தை அடைவதற்கு முயற்சி.

புத்தியோகம்—விவேகம் (பகுத்தறிவு), விஜ்ஞானம் (உண்மை உணர்ச்சி) மனதிலேயே கடவுளை உணர்வது இவைகள் புத்தியோகம்.

பக்தியோகம்.—கடவுளை யறிதல்வேண்டும் என்னும் அநுராகம், அதற்கு வேண்டிய சிரத்தை, அதற்கு அநுகூலமான

மனோதைரியம் இவைகளை விருத்திசெய்து கடவுளது பக்தியில் ஈடுபடுவது.

ராஜயோகம்.—மனது, புத்தி, அந்தக்கரணம் இவற்றின் தன்மைகளை ஆராய்ந்து அறிந்து அவைகளை நீங்கியான பக்தியான மார்க்கத்தில் பழக்குதல்.

தர்மயோகம்.—பிறருக்கு ஸேவைசெய்வது, பிரதி உபகாரம் கருதாது தானம் செய்வது, தன்சுகத்தைக் கருதாமல் பரோபகாரம் செய்வது, தன் மனது இந்திரியங்களைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய தபசைச் செய்தல் முதலான தர்மமார்க்கத்தில் செல்லும் அப்பியாசம்.

ஸந்யாஸம்.—1. விடுதல்; கர்மங்களையே விட்டுவிடுதல்.

2. கர்மபலன்களை விட்டு ஸத்கர்மங்களை மாத்திரம் கைக்கொள்ளுதல்.

3. விவிதிஷா ஸந்நியாஸம்—மெய்யறிவை யடையும்பொருட்டு ஸாங்கிய யோகத்துக்குச் சாதனமாய் மேற்கொள்ளும் துறவு.

4. வித்வத் ஸந்நியாசம்—ஜீவன்முக்தி சுகத்தை அடைதல் நிமித்தம் ஒரு ஞானி அடையும் துறவு.

அவா.—இன்னும் அடையாத பொருட்களின்மேல் ஆசை.

பற்று.—அடைந்த பொருட்களின் மேலுள்ள அபிமானம்.

அஸூயை—குணமுள்ளவற்றின் நலத்தைப் பொறுது அதனிடத்தில் ஏதாவது ஒருவிதத்தில் குற்றத்தைச் கூறுவது.

கர்மம் 4.—நித்யகர்மம்: அன்றன்று செய்யவேண்டிய கர்மம், 2. நைமித்திக கர்மம்: யாதாயினும் ஒரு நிமித்தத்தால் செய்வது: கிரகணகாலத்தில் ஸ்நானம் செய்தல் முதலியன, 3. காம்யம்: பலனை உத்தேசித்துச்செய்யும் கர்மம், 4. பிரதிஷித்தம்: விலக்கப்பட்ட கர்மம்.

ப்ரம்மவித்தை—ப்ரம்ம ஞானம், ஸம்யக்தர்ஶனம், ஸம்யக் ஞானம், ப்ரஹ்மாத்மைக்ய ஸாக்ஷாத்காரம், பரமார்த்த ஞானம், பரமார்த்த தர்ஶனம் இவையெல்லாம் ஒரு பொருட்பன்மொழி,

பரமாத்மாவும் நம்முள்ளிருக்கும் ஜீவாத்மாவும் ஒன்றே என்பதை அனுபவத்தால் காண்பது.

. 1. தத் த்வம் அஸி—த்வம்-நீ, தத்-அதாகவே (பரப்ரம்மமாகவே), அஸி-இருக்கிறாய்.

2. அஹம் ப்ரம்மா அஸ்மி.—அஹம்—நான், ப்ரம்மா—பரப்ரம்மமாகவே, அஸி–இருக்கிறேன்.

3. ப்ரஜ்ஞாநம் ப்ரம்மம்.—அறிவே ப்ரம்மம்.

4. ஏகமேவாத்விதீயம்.—ஏகம் ஏவ - ஒன்றேயன்றி (பரமாத்மா ஒருவர்மாத்திரமே உண்மைப்பொருள் அல்லது ஸத்துப்பொருள்), அத்விதீயம்—இரண்டாவது வஸ்து கிடையாது (மற்றவையெல்லாம் மித்தை, அழிந்துபோகக்கூடியது. இந்நான்கு வாக்கியங்களும் உபநிஷத்துக்களில் ப்ரம்மவித்தைக்கு மூல வாக்கியங்கள்.

தர்க்கம் செய்பவர் 3 விதமாய் தர்க்கிப்பர்:—

வாதம்-வாதி பிரதிவாதி இருவரும் விருப்பு வெறுப்பின்றி உண்மையை நிர்ணயிக்கவேண்டும் என்னும் ஒரே எண்ணத்துடன் பிரமாணங்களுடன் பேசுவது.

ஜல்பம்—தாம்தாமே வெற்றிபெறவெண்டும் என்னும் விருப்பத்துடன் பிறர் கொள்கையை மறுத்து, தம் கொள்கையை நிலைநிறுத்த முயலுவது.

விதண்டை—தாமே வெற்றிபெறவேண்டுமென்னும் இச்சையுடன் தன் கொள்கையை நிலைநிறுத்தாமல் பிறர் கொள்கையை பிரமாணங்களாலும் போலியுத்தரம் முதலியவற்றால் மறுத்தல்.

அத்தியாயங்களின் சுருக்கம்.

அத்தியாயம் 1.

அர்ஜுன விஷாத யோகம்.

அர்ஜுனனது சோகத்தைக்கூறும் அத்தியாயம். கீதை பகவானால் அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. ஞானக்கண் கொடுக்கப்பட்ட ஸஞ்சயன் ஊனக்கண் குறைந்த திருதராஷ்டிர

மன்னனுக்கு யுத்தகளத்தில் நடந்த விஷயங்களை அவ்வப்பொழுது சொல்லிக்கொண்டு வரும்போது ஆரம்பத்தில் உபதேசிக்கப்பட்ட கீதையையும் அவ்வரசனுக்கு கண்ணன் பார்த்தனுக்குச் சொன்ன விதமாய் சொல்லுகிறான்.

புத்திரவாத்ஸல்யத்தால் கவலையுற்ற திருதராஷ்டிரன் யுத்தகளத்தில் போர்புரிய ஏற்பட்ட சேனைகளைப்பற்றிக் கேட்க அதற்கு ஸஞ்ஜயன் சொல்ல ஆரம்பித்தான்: துர்யோதனன் தன் குருவை ஸமீபித்து இருசேனையிலுமுள்ள சிறந்த போர் வீரர்களைக் குறிப்பிட்டு, தனது சேனாதிபதியான பீஷ்மரை யாவரும் கவனமாய்க் காக்கும்படி கட்டளையிட்டான். பிறகு பீஷ்மர் முதலான எல்லா வீரர்களும் தங்கள் தங்கள் சங்கங்களை நாதம் செய்கின்றனர். அப்போது அர்ஜுனன் தன் தேரை இருசேனைக்கு மிடையில் நிறுத்தச்செய்து எல்லையின்றி வியாபித்துள்ள சேனாஸமுத்திரத்தையும், தன் நெருங்கிய பந்து மித்திர வர்க்கத்தினரையும் பார்த்து உடனே ஒரு ராஜ்யத்தின் பொருட்டு இத்தனைபேரையும் கொன்று தாங்கள் அடையப்போகும் லாபமும் சுகமும் சந்தோஷமும் யாது என்பதை எண்ண, அவனுக்கு ராஜ்யத்தில் ஒரு வெறுப்பும், பந்துக்கள் முதலானவர்களைக் கொல்லுவது கூடாது என்னும் எண்ணமும் உண்டாகி அதனால் சோகத்தையும் மோகத்தையும் அடைந்து கிருஷ்ணபகவானைப்பார்த்து குலநாசத்தையும் மித்திரத்துரோகத்தையும் செய்வது கூடாது என்றும் அதனால் பாபமேற்படுமென்றும் விவரித்து, யுத்தஞ் செய்யவும் வேண்டாம், ராஜ்ய சுகமும் தங்களுக்கு வேண்டியதில்லை யென்று சொல்லி மிகுந்த மனக்கிலேசத்துடன் செய்வதறியாமல் சோர்ந்துபோய் உட்காருகிறான்.

அத்தியாயம் 2.

ஸாங்க்ய யோகம்.

1-3. கிருஷ்ணன்—அர்ஜுனா! இந்த மனச்சோர்வு இவ்வகாலத்தில் உனக்கு எப்படி யுண்டாயிற்று ?

4-10. அர்ஜுனன்—பூஜிக்கத்தகுந்த பீஷ்ம துரோணாதியரை எப்படிக் கொல்வேன்! அதைவிட பிச்சையெடுத்துண்ணலாம். மேலும் இந்த யுத்தத்தின் முடிவு எப்படியோ! பந்துக்களையெல்லாம் கொன்று உயிர்வாழ விருப்பமில்லை. நான் செய்யவேண்டியது என்ன என்பது தெரியவில்லை, இப்பொழுது ஏற்பட்டுள்ள வியஸனம் எப்படித்தீரும் கிருஷ்ணா, எது உத்தமமோ அந்த புத்திமதியை எனக்குக் கூறுவாயாக.

11-38. கிருஷ்ணன்—சோகிக்கவேண்டாதவர்களைக் குறித்து சோகிக்கின்றாய் ஆயினும் சிறந்த ஞானியைப்போல் பேசுகிறாய். உண்மையான ஞானிகள் இறந்தவர்களைக் குறித்தும் இருப்பவர்களைக் குறித்தும் வருந்தார். ஏனெனில் "நாம்" என்று சொல்லப்படும் நமது ஆத்மா ஒருபோதும் இறப்பதுமில்லை பிறப்பதுமில்லை. இந்த ஸ்தூல தேகம் எப்படி பால்யம், யௌவனம், கௌமாரம் என்பதை யடைகிறதோ அப்படியே இந்த தேகத்தை யடைந்துள்ள ஆத்மா மறுதேகத்தை யடைகிறது. மரணம் என்பது ஒரு நிலைமையிலிருந்து மற்றொரு நிலைமைக்குப் போவதேயன்றி ஒன்றுமே யில்லாமல் போவதல்ல. இந்திரியங்களுக்கும் வெளிவிஷயங்களுக்குமுள்ள சம்பந்தத்தினால் சீதம், உஷ்ணம், சுகம், துக்கம் எல்லாம் ஏற்படுகிறது. இவையெல்லாம் நீடித்ததல்ல. இவைகள் அஸத்துக்கள், ஸத்தான ஆத்மாவே உண்மை வஸ்து, நீடித்தது, அதுவே பரப்ரம்மம், அது நித்தியமானது, நாசமற்றது, அத்தாக்ஷிக்க முடியாதது. இந்த ஆத்மா குடிபுகுந்துள்ள தேகங்கள் முடிவை யுடையன. ஆதலால் இந்த ஆத்மாவைக்கொல்லுவதாயும் கொல்லப்படுவதாயும் எண்ணுபவன் உண்மையை யறியவில்லை. கந்தல் வஸ்திரத்தைக் களைந்தெரிந்து புதிய வஸ்திரத்தை உடுத்திக்கொள்ளுவதுபோல் கிழப்பட்டு உபயோகமற்றுப்போன தேகத்தை விட்டு ஆத்மாவானது மற்றொரு புதிய தேகத்தை எடுத்துக் கொள்ளுகிறது. இந்த ஆத்மாவை ஆயுதங்கள் வெட்டாது, நெருப்பு எரிக்காது, ஜலம் நனைக்காது, வாயு உலர்த்தாது, இவ்வாத்மா காணவும் சிந்திக்கவும் முடியாதது, விகாரமற்றது ஆதலின் இதைக்குறித்து நீ துக்கித்தல் வேண்டாம்.

ஆத்மா பிறப்பிறப்பு உள்ளதாக நீ நினைத்தாலுங்கூட துக்கித்தல் வேண்டியதில்லையே. ஏனெனில் பிறந்தவன் இறத்தல் திண்ணம், இறந்தவன் பிறத்தல் திண்ணம்; நாம் இப்போது காணப்படும் நிலைமையிலிருக்கிறோம், பிறப்புக்கு முன்பும் இறந்த பின்பும் நாம் அவ்யக்தமாய் (காணமுடியாதவர்களாய்) இருக்கிறோம். இது ஆச்சர்யமல்லவா? எங்கிருந்து வருகிறோம் எங்கு போகிறோம் இதைப்பற்றி ஒவ்வொருவனும் ஆச்சர்யத்துடன் ஆராய்ந்து கேட்டும் பார்த்தும் சொல்லியும் முடிவில் ஒருவராவது ஆத்மாவைப்பற்றின உண்மையை அறிந்தவரில்லை. ஆயின் ஒன்று நிச்சயம்; இந்த தேகம் கொல்லப்படும்போது ஆத்மா கொல்லப்படவில்லை, ஆதலின் "இந்தப் பெரியோர் முதலானவர்களைக் கொல்லவேண்டுமே" என்று வருந்த வேண்டாம்.

மேலும், உன் ஸ்வதர்மம் யாது? ஒரு உத்தம க்ஷத்திரியனுக்கு எதிர்பாராமல் நேரும் வீரஸ்வர்க்கத்துக்கு ஸாதனமான தர்மயுத்தத்தைவிட சிறந்தது வேறு என்ன இருக்கிறது? நீ பின்னடைந்தால் பயத்தால் பின்வாங்கினதாக உனக்குச் சமதையான வீரர்களும் பகைவர்களும் உன்னைப்பற்றி இழிவாகப் பேசுவார்களே. அப்படி உன் கீர்த்தியை இழப்பதைவிட மரணம் மேலானதல்லவா? அர்ஜுனா! என்ன ப்ரமாதம்! இறந்தால் வீரஸ்வர்க்கம்; இருந்தால் ராஜ்ய லாபம், ஆதலால் மனதைத் திடப்படுத்திக்கொண்டு யுத்தஞ்செய்ய எழுந்திரு. லாபாலாபம், ஜயாபஜயம் எது வந்தாலும் அவற்றை ஸமமாகக் கருதி யுத்தம் செய்தாயானால் பந்துக்களைக் கொல்லும் பாபம் உன்னையடையாது.

39-71. இதுவரை ஆத்மாவைப்பற்றிய உண்மை (ஸாங்கிய தத்வம்) யை உனக்குச் சொன்னேன். இனி கர்மயோகத்தைப் பற்றிக் கூறுகிறேன். இந்தக் கர்மயோகமார்க்கத்தில் பிரவேசிப்பவாகளது முயற்சி வீணாகாது. உலகவிஷயங்களில் பற்றுடன் பலாபேக்ஷையுடன் காம்ய கர்மங்களைச் செய்துகொண்டு, போக ஐஶ்வர்யங்களில் மயங்கி யிருப்பவர்களுக்கு ஸாங்கிய விஷயமும் யோக விஷயமும் உபயோகமில்லை. அவர்களுக்கு உண்மை

விஷயங்களை உறுதியாகப் பின் பற்றும் நிச்சயபுத்தி கிடையாது. ஆனால் நீ முக்குணங்களின் வசப்படாமல் சுகதுக்க லாபநஷ்டங்களைச் சமமாகக் கருதி ஆத்மஞானத்தையடைய முயற்சி செய்ய வேண்டும். அந்த மேலான ஆத்ம ஞானத்தை யடைந்துவிட்டால் வேதம் முதலான சிறிய நூல்களில் உள்ள விஷயங்களெல்லாம் அதில் அடங்கியதே. பிறகு அவற்றைக்கற்று அறிய வேண்டியது ஒன்றுமில்லை. கர்மம் செய், அவற்றின் பலனில் ஆசை வேண்டா. கர்மஞ் செய்யாமலிருக்கவும் கூடாது. பலாபலனைச் சமமாகக்கருதி கர்மஞ்செய். பலனை யிச்சித்துத் தொழில் செய்வது மிகவும் இழிவு. கர்மபலனைச் சமமாகக்கருதி கர்மம் செய்பவன் பிறவித்துன்பத்திலிருந்து நீங்கி முக்தியடைகிறான். ஆதலால் ஹே அர்ஜுனா! ஸாங்கியபுத்தி, கர்மபோகம் இவ்விரண்டினாலும் உன் அவிவேகம் நீங்கி மன அமைதி உண்டாகி ஈஶ்வரனிடத்தில் உன்புத்தி ஸ்திரமாய் நிற்கும்போது நீ ஞானமார்க்கத்தில் சென்று ஞான யோகியாவாய்.

அர்ஜுனன்—அவ்வுயர்ந்த உத்தமமான ஞான நிலையை யடைந்தவன் குணம் யாது? எப்படி பேசுவான்? இருப்பான்? நடப்பான்?.

கிருஷ்ணன்—ஞானியின் தன்மை. உலக விஷயம் எதிலும் பற்றின்றி, விருப்பம், பயம், கோபம் இவைகளை விட்டு, சுகதுக்கங்களைச் சமமாகக் கருதி பஞ்சேந்திரியங்களையும் வெளி விஷயங்களில் செல்லவிடாமல் அடக்கி (ஆமையைப்போல்), மனதிலுங்கூட இச்சையின்றி பகவத் தியானம் செய்துகொண்டிருப்பவனே நிலைத்த ஞானி. விஷயங்களைச் சிந்தித்துக்கொண்டே யிருந்தால் அவற்றில் பற்றும், அதிலிருந்து ஆசையும், அது கிடைக்காவிட்டால் கோபமும், அதிலிருந்து மோகமும், அதனால் நினைவின்மையும், பிறகு புத்திக்கேடும் உண்டாகி, மனிதன் கெட்டுப் போகிறான். ஆதலால் விஷயங்களைச் சிந்திப்பதற்கு இடங்கொடாமல் மனதை வசப்படுத்தி, அமைதி யுண்டாக்கி அதை ஒரு நிலைப்படுத்த வேண்டும். அப்போது ஆத்மத்தியானம் உண்டாகிறது. மனது ஸ்திரப்பட்டவன் உலகத்தவர் உண்மையாக (பகல்)க் கருதும் அஸத்துக்களை உண்மையில் நிலையற்றதாயும் (இரவு) அவர்களுக்கு விளங்காமல் இருளாயிருக்கும் உண்மைப்பொருளை (ஈஸ்வரனை) ஞானமாகிய பிரகாசத்தினால் அறிந்தவனாயு மிருக்கிறான். சமுத்திரத்தை நதிகள் சென்றடைந்தும் அந்த சமுத்திரம் நிலை மாறாமலிருப்பதுபோல் ஆசை முதலியவை ஞானியினது ஞான ஸமுத்திரத்தை யடைந்து அதில் அடங்கிவிடுகிறது. ப்ரம்ம ஞானியானவன் அகங்கார மமகாரமற்று ஆசையின்றி ப்ரம்மஞான நிஷ்டையிலேயே யிருந்து இறந்தபிறகு ப்ரம்மத்துடன் லயமாகி விடுகிறான்.

அத்தியாயம் 3.

கர்ம யோகம்.

1-2. அர்ஜுனன்—நிஷ்காம கர்மத்தைவிட ஞானம்மேலானது என்றால், ஜீவஹிம்ஸைக்குக் காரணமான கர்மத்தை நான் செய்யும்படி ஏன் என்னை அனுமதிக்கின்றீர்கள்? இரண்டுவிதம் சொல்லி என் புத்தியைக் கலக்கிவிட்டீர்கள். எதனால் மேன்மையை யடைவேனோ அதைமாத்திரம் சொல்லவேண்டும்.

3 35. கிருஷ்ணன்—பிறக்கும்போதே பரிபக்குவமடைந்து ஞானத்தை உடனே யடையத்தகுதியுள்ள ஸாங்கியர்களுக்கு (உண்மையை யறியும் சக்திவாய்ந்தவர்கள்) ஞானயோகமும், உலக விஷயங்களில் சிறிதளவு பற்றுள்ளவர்களுக்கு கர்மயோகமும் என்னால் விதிக்கப்பட்டது. பலஜன்மங்களில் முதற் படிகளில் கர்மங்களைச்செய்து பிறகே கர்மமே செய்யாமலிருக்கும் நிலையை யடையவேண்டும். ஞானமில்லாமல் கர்மத்தை மாத்திரம் விட்டுவிடுவதால் ஒருவன் மோக்ஷமடையமாட்டான். மேலும் உலகத்தில் பிறந்த ஒவ்வொரு பிராணியும் முக்குணங்களின் வசப்பட்டிருப்பதால் கருமமே செய்யாமல் ஒருபோதும் இருக்கமுடியாது. தொழில் செய்யும் இந்திரியங்களைமாத்திரம் அடக்கி மனதினால் விஷய சுகங்களை நினைத்துக்கொண்டேயிருக்கும் அஜ்ஞானி அடையும் லாபம் ஒன்றுமில்லை. அதைவிட பலாபேக்ஷையின்றி கேவலம் இந்திரியங்களினால் கர்மம் செய்துகொண்டு மனதை யடக்குபவன் மேலாவான். உன் நித்திய கர்மத்தைச்செய். தேகபோஷணைக்காக கர்மம் செய்யத்தான் வேண்டும். மேலும் கர்மம் ஒன்றுமே செய்யாமலிருப்பதைவிட

(சத்) கர்மம் செய்வது மேல். ஆனால் எப்படிப்பட்ட கர்மம் செய்யவேண்டும்? யஜ்ஞார்த்தமான கர்மம், அதாவது உன்னை பிறருக்கும் கடவுளுக்கும் அர்ப்பணம் செய்யும் கர்மம், பலாபேக்ஷையற்ற கர்மம், தேவர்களை ஆராதித்து அதனால் உலகத்துக்கெல்லாம் க்ஷேமத்தை யுண்டாக்கும் கர்மம். அப்படிப்பட்ட உத்கிருஷ்டமான பரோபகார நிமித்தமான கர்மத்தை, பெரியோர்களால், கடவுட் தன்மையுடன்கூடின ரிஷிகளால், வேதங்களின்மூலமாய் சொல்லப்பட்ட கர்மத்தை, தான்தான் என்னும் அகங்கார புத்தியுடன் தன் சுகத்துக்காகவும், தன்லாபத்துக்காகவு மின்றி பிறர் சௌக்கியத்திற்காகவும், இதர பிராணிகள் சர்வகோடிகளின் க்ஷேமார்த்தமாக வேண்டிய கர்மத்தைச் செய்வது தான் யஜ்ஞார்த்தமான கர்மம். அப்படிப்பட்ட கர்மத்தை செய்தால் "நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்பதுபோல், யஜ்ஞார்த்தமான கர்மத்தையே செய்யும் கடவுட் தன்மை வாய்ந்த ஞானிகள் செய்யும் கர்மத்தினால் திருப்தியடைந்த தேவதைகள் (வாயு, இந்திரன், வருணன், சூரியன் முதலானவர்கள் மழையை சரியானபடி வர்ஷிக்கச் செய்கின்றனர். இதனால் நெல் முதலான பயிர்கள் (காவரவர்க்கம்) உலகத்தில் சுபிக்ஷமாக வளர்ந்து அதனால் பிராணிகள் எல்லாம் உண்டாகின்றன. ஆதலால் இந்த பிரவிருத்தி சக்கரத்தை யனுஸரித்தே நடக்கவேண்டும். உத்தமமான ஞானிக்கு கர்மம் வேண்டியதில்லை. ஆனால் நீ பலாபேக்ஷையின்றி உன் ஸ்வதர்மமாகிய கர்மத்தைச் செய். ஜனகர் முதலானவர்களைப்போல் பொது ஜன நன்மையைக்கருதி நிஷ்காம கர்மம் செய். ஏனெனில் முக்கியமான தலைவர்களையே பொது ஜனங்கள் பின்பற்றுவார்கள். நான் கர்மம் செய்யவேண்டியதில்லை. ஆயினும் அப்படி நானிருந்தால் ஜனங்கள் என்னைப் பின்பற்றி என்னை ஒரு உதாரணமாக மதித்து அவர்களும் கர்மம் செய்யாமலிருந்துவிடுவார்கள். ஜனங்களின் பொதுநன்மையின் பொருட்டு நான் கர்மம் செய்கிறேன். ஆதலின் ஞானியானவன் பற்றின்றி பலாபேக்ஷையின்றி உலக நன்மைக்காக தொழில்செய்து ஜனங்களையும் அவரவர்களது தொழிலை செய்விக்கவேண்டும்.

நீயும் உன் கர்மங்களை என்னிடத்தில் அர்ப்பித்து யுத்தஞ்செய். இப்படிச் செய்பவர்கள் கர்மத்திலிருந்து விடுபடுகிறார்கள்.

அவனவன் பூர்வ கர்ம பரிபவத்துக்குத் தகுந்தபடி கர்மங்கள் ஏற்படுகின்றன. அவனவனுக்கு ஏற்பட்ட ஸ்வதர்மத்தைச் செவ்வையாய் செய்ய முயலவேண்டும். அதில் குறைவு ஏற்பட்டாலும் பயமில்லை, அது சிறந்ததல்லாவிட்டாலும் அதையே செய்யவேண்டும். சிறந்தது என்று தன் அறிவுக்கெட்டாத தொழிலைச் செய்ய ஆரம்பிக்கக்கூடாது.

36. அர்ஜுனன்—யாருமே பாபம் செய்ய இஷ்டப்படார். அப்படி யிருந்தும் பலவந்தமாய் ஏவப்பட்டவனைப்போல் பாபம் செய்யும்படி தூண்டுவது எது?

37. கிருஷ்ணன்—வெளி விஷயங்களின் மேலுள்ள ஆசை அல்லது காமம், அவைகள் கிடைக்கப் பெறாமையாலுண்டாகும் கோபம், இவ்விரண்டும் ரஜோ குணத்திலிருந்துண்டாகி எத்தனை கிடைத்தாலும் மனிதனை திருப்தி யடையச்செய்யாமல் பாபம் செய்யும்படி தூண்டும் வைரிகள். புகை நெருப்பையும், அழுக்கு கண்ணாடியையும் கருப்பை கர்பத்தையும் மூடிக்கொண்டிருப்பது போல், திருப்தியற்ற ஆசாரூபமான இந்த காமத்தால் நமது ஞானம் மூடப்பட்டு இருக்கிறது. இவ்வாசைக்கு இருப்பிடம் இந்திரியம், மனது, புத்தி; ஆதலால் இவற்றையெல்லாம் அடக்கி காமத்தை வென்று இவற்றுக்கெல்லாம் மேலான பரம்பொருளை அடைவாயாக.

அத்தியாயம் 4.

ஞான யோகம்.

1-3. கிருஷ்ணன்—இந்தயோகம் சூரியனுக்கு ஆதியில் நான் உபதேசித்து பாம்பரையாக வந்து அநேககாலமானதால் அழிந்துபோயிற்று. அதை இப்போது உனக்குச் சொன்னேன்.

4. அர்ஜுனன்—தமக்குமுன்பே பிறந்துள்ள சூரியனுக்கு தாங்கள் எப்படி உபதேசித்தல் கூடும்?

5-23. உனக்கும் எனக்கும் அநேகம் ஜன்மங்கள் ஆயின. நீ மறந்துபோனாய், நான் அவற்றை அறிவேன். தர்மக்குறைவும்

அதர்மவிருத்தியும் உலகத்தில் ஏற்படும்போது துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்துக்கும் தர்மத்தை நிலைநாட்டவும் வேண்டி என் மாயையை வசப்படுத்தி என்மாயா சக்தியினால் ஆங்காங்கு வந்து அவதரிக்கிறேன். இந்த உண்மையை யறிந்தவர்கள் ஞானிகளே. அவர்கள் என்னை உபாஸித்து முக்தியடைந்தனர்.

அவரவர் மனோபரிபவத்துக் கேற்ப என்னைப் பலர் பலவிதம் உபாஸிக்கின்றனர். கர்மபலனை விரும்புபவர் இந்திராதி தேவதைகளை வணங்குகின்றனர். அவரவர்களது குணத்துக்கும் கர்மத்துக்கும் தகுந்தபடி நான்கு வர்ணங்களை சிருஷ்டித்தேன். [அவனவனது குணத்துக்கும் கர்மத்துக்கும் தகுந்தபடி அவன் வர்ணமேயன்றி பிறப்பினாலல்ல. ஒருவன் மிருகத்தன்மை மிகுந்து பிறரைத் துன்புறுத்துவதில் சந்துஷ்டியடைந்து தன் சுகத்தின் பொருட்டும் லாபத்தின்பொருட்டும் தொழில் செய்தால் அவன் பிராம்மண வம்சத்தில் பிறந்திருந்தாலும் அவன் பிராம்மணனல்ல. பிராம்மணனுக்கு விதிக்கப்பட்டுள்ள குணங்களையும் கர்மத்தையுமுடையவனே பிராம்மணன் ஆவான். நந்தன் பஞ்சம வர்ணத்தில் (பஞ்சவர்ணமே கிடையாது. கிருஷ்ண பரமாத்மாவும் சதுர்வர்ணம் மாத்திரம் குறிப்பிட்டிருப்பதைக் கவனிக்க. சதுர்வர்ணமே தான் சிருஷ்டித்ததாய் கிருஷ்ணபகவான் சொல்லுகிறார். ஐந்தாவது வர்ணத்தை சிருஷ்டித்த ப்ரம்மா யாரோ தெரியவில்லை!!)–பிறந்தவனானாலும் பிராம்மணருக்குறிய குணமும் கர்மமும் இருந்ததால் அவன் ஞானமாகிய அக்கினியில் குளித்து மனோபரிசுத்தமடைந்த ஒரு ப்ரம்மஞானி] அந்த சிருஷ்டித் தொழிலை நான் செய்தவன் ஆனாலும் அதில் பற்றின்மையால் அவை என்னை பந்திக்காது. நான் அவற்றின் கர்த்தா அல்ல. இவ்விதம் பற்றின்றி கர்மம் செய்பவன் மோக்ஷமடைகிறான்.

கர்மம், அகர்மம், விகர்மம் இவற்றை நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். கர்மத்தில் அகர்மத்தையும் அகர்மத்தில் கர்மத்தையும் பார்ப்பவனே யோகி. ஆத்மா ஒரு கர்மத்தையும் செய்யவில்லை. ஆனால் அவிவேகியானவன் தன் இந்திரியாதிகள் செய்யும் கர்மங்களை ஆத்மா செய்வதாக எண்ணி ஆத்மாவின் அகர்மத்தில் கர்மத்தைக் காண்கிறான். ஆதலால் பற்றின்றி

கர்மம் செய்பவனே ஞானி. கிடைத்தமட்டில் திருப்தியுடன் இந்திரியாதிகளை வசப்படுத்தி தேகம் நிலைத்திருப்பதற்கு வேண்டிய சத்கருமங்களைமாத்திரம் செய்துகொண்டு, ஞானமார்க்கத்திலேயே ப்ரவ்ருத்தித்து, சுகதுக்காதி த்வந்த்வங்களை சமத்வ புத்தியுடன் பார்ப்பவனது கர்மம் காலக்கிரமத்தில் கரைந்துபோகிறது. இவ்விதம் ஞானத்தையடைந்து சமத்துவ புத்தியுண்டாகி கர்மம் கரைந்துபோவதற்கு சாதனம் யாது? அது யஜ்ஞகர்மம். யஜ்ஞம்என்றால் தன்னையும் தான் செய்யும் தொழிலையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்து பிறர் நன்மையின்பொருட்டு மாத்திரமே கர்மம் செய்வது. (யாகத்தில் பசுவைக் கோல்லுதல் யஜ்ஞம் அல்லது யாகம் என்பது தன்னையே பிறர்பொருட்டாக்குவது (self-sacrifice) பசு என்பது ஆத்மா. பசுவாகிய தன்னை மறந்து (கொன்று) பிறருக்கே தன்னை அர்ப்பணம் செய்தல்.)

24–33. யஜ்ஞகர்மம்—தான் செய்யும் எல்லாவற்றிலும் ப்ரம்மத்தையே காண்பவன்; ப்ராணாயாமம் முதலான அப்பியாஸங்களால் இந்திரியாதிகளை வசப்படுத்தி தன் அறிவை மேன்மேலும் விருத்தி செய்வதாகிய யஜ்ஞத்தைச் செய்து உயர்ந்த ஞானத்தையடைந்து பகவானிடத்திலேயே தன்னை யர்ப்பணம் செய்யும் யஜ்ஞகர்மம் செய்பவன்; உபாதியுடன்கூடிய ஆத்மாவை உபாதியற்ற பரப்ரம்மத்தினிடத்தில் ஐக்கியப்படுத்துவதாகிய யஜ்ஞம்; இந்திரியாதிகளையும் பிராணன்களையும் ஒன்றுக்குள் ஒன்றாக அடக்கும் யஜ்ஞம்; ஆகாரநித்திரைகளை மிதப்படுத்தி அவைகளுக்கு வசப்படாமல், ஞானத்தையும் அறிவையும் மேன்மேலும் வளரச்செய்தலாகிய யஜ்ஞம் இவைகளையே செய்யும் ஞானிகள் கர்மத்திலிருந்து விடுபடுவார்கள். (திரவ்ய யஜ்ஞம் சிறந்ததல்ல).

34. இப்படிப்பட்ட சிறந்த ஞானத்தை, பாபத்தைக் கடக்கச்செய்யும் ஞானத்தை, ஈஶ்வரனை எல்லா விடங்களிலும் காணும் சமத்ருஷ்டி அறிவைக்கொடுக்கும் ஞானத்தை, சிறந்த அறிவுடையஞான நிஷ்டர்களைக் கிட்டி அவர்களுக்குப் பணிவிடைசெய்து அப்பெரியார்களின் உபதேசத்தினால் அடைவாயாக. ஆதலால் அர்ஜுன! கர்மயோகம் செய்து பிறகு உன் சந்தேகங்களை யெல்

லாம் ஞானமாகிய கத்தியினால் அறுத்து மேற்செல்வாயாக, தற்சமயம் கர்மயோக புத்தியுடன் யுத்தஞ் செய்.

அத்தியாயம் 5.

ஸங்யாஸ யோகம்.

1. அர்ஜுனன்—கிருஷ்ணா! ‘கர்மத்தை விட்டு ஞானத்தையடை’ என்கிறாய் மறுபடி கர்மயோகத்தில் ஏவுகிறாய்; எது சிரேஷ்டமோ அந்த ஒன்றை மாத்திரம் சொல்லாயோ?

2-6. கிருஷ்ணன்-கர்ம ஸங்யாசம் (கர்மத்தை விடுதல்), கர்ம யோகம் (பலாபேக்ஷையின்றி கர்மம் செய்தல்) இவ்விரண்டும் பிறவியிலிருந்து விடுதலையை (மோக்ஷம்) கொடுக்கும். ஆயின் இவ்விரண்டில் (உன்னைப்போன்ற ஸாதாரண ஜனங்களுக்கு) கர்ம யோகமே சிறந்தது. விருப்பு வெறுப்பு சுக துக்காதி த்வந்த்வங்கள் அற்று கர்மம் செய்பவன் கர்ம பந்தத்திலிருந்து எளிதில் நீங்குகிறான். ஸாங்கியம் (ஆத்மஞானம்) யோகம் (கர்ம யோகம்) இவை வெவ்வேறென்று நினைப்பவர்கள் அவிவேகிகளே. இரண்டிலொன்றைச் செவ்வையாக அனுஷ்டித்தவன் முக்தியடைகிறான் (இரண்டுக்கும் பலன் இது ஒன்றே). இதையறிந்தவனே விவேகி. ஸந்நியாஸத்தையடைவதற்கு கர்ம யோகமே ஸாதனமானபடி. ஆதலால் கர்ம யோகமே சிறந்தது.

7-16. கர்மயோகியின் தன்மை. மனது பரிசுத்தமாய் இந்திரியங்களை வசப்படுத்தி கடவுளின் ஸ்ர்வ வியாபகத்தன்மையையறிந்து எந்த வேலை செய்துகொண்டிருந்தாலும் அது தான் செய்யவில்லை, இந்திரியங்கள் இந்திரிய விஷயங்களில் செல்லுகின்றன என்பதையறிந்து, தன் கர்மங்களை ஈஶ்வர அர்ப்பணம் செய்து தாமரையிலைத் தண்ணீர்போல் பாப புண்ணியங்களால் பந்திக்கப்படாமல் பலாபேக்ஷையற்று சித்த சுத்திக்காக கர்மம் செய்கின்றான்.

கடவுள் உலகத்தில் கர்மம், கர்த்ருத்வம், கர்ம பலன்களின் அனுபவம் இவற்றையெல்லாம் சிருஷ்டிக்கவில்லை. ஒருவருடைய பாப புண்யத்துக்கும் அவர் காரணமல்ல. அவர் அவைகளை வாங்கி யனுபவிப்பதுமில்லை. இவையெல்லாம் ப்ரக்ருதி சம்

பந்தத்தாலுண்டானவை. பாப புண்ணியாதிகள் அஜ்ஞானத்தாலுண்டாவது. ஈஶ்வர ஞானமாகிய சூரிய வெளிச்சத்தால் இந்த அஜ்ஞான இருள் நீங்கப்பெற்றவர்கள் கடவுளை அறிகிறார்கள்.

17-29. ஞானியின் தன்மை. இவ்விதம் ஞான ஒளியடைந்தவர்கள், ஞானத்தினால் பாபம் நீங்கி, பரமாத்மாவையே தஞ்சம் என அடைந்தவர்கள். பிராம்மணன் முதல் சண்டாளன் வரை எல்லாரையும் சமமாகக் கருதி எல்லாவற்றிலும் ப்ரம்மத்தை ஸமமாக இருப்பதாக அறிவதால் அவர்கள் பிறவிக் கடலைத் தாண்டி ப்ரம்மத்தில் லயித்திருப்பவர்கள். மோஹமற்று, கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் சந்தோஷமும் வருத்தமுமின்றி ஆதி அந்தமுள்ள உலக விஷயங்களில் பற்றின்றி, ப்ரம்ம சுகத்திலேயே ஈடுபட்டு, காமக்குரோதாதிகளை அடக்கி, சகலப் பிராணிகளின் ஹிதத்தையே கோரி, மனதை யடக்கி, கிரமமாக ப்ராணாயாமம் செய்து, ஆசை, பயம், கோபம் அற்று எப்போதும் ஈஶ்வரத்யானம் செய்துகொண்டு மன அமைதியுடன் இருப்பவன் மோக்ஷத்தை யடைகிறான்.

அத்தியாயம் 6.

தியான யோகம்.

கிருஷ்ணன்—செய்யவேண்டிய கடமைகளை பலாபேக்ஷையற்றுச் செய்பவனே யோகி, அவனே ஸங்யாஸி. ஸங்யாஸம், யோகம் இரண்டும் ஒன்றே. சங்கல்பம் அல்லது எண்ணங்களை விட்டொழித்தால் (ஸங்யாஸித்தால்) அவன் தான் கர்மயோகியாவதற்கும் தகுதியானவன்.

தியானயோகத்தை யடைவதற்கு கர்மயோகமே ஸாதனம். தியானயோகத்திலமர்ந்தவனுக்கு கர்மத்திலிருந்து ஒழிவு ஏற்பட்டுவிடுகிறது. இந்திரிய விஷயங்களிலும் கர்மங்களிலும் பற்றின்றி சகல சங்கல்பங்களையும் விட்டவனே யோகமாகிய படிகளில் ஏறுகின்றான். இவ்விதம் மேலேறிச் செல்வதற்கு வேறு எவரும் சகாயம் செய்ய முடியாது. நமக்கு நாமேதான் உதவி. தனக்குத்தானே சத்துரு, தனக்குத் தானே பந்து, ஆத

லால் மன உறுதியுடன், அறிவுடன் தேகேந்திரியாதிகளை ஜயித்து மனம் தெளிவடைய வேண்டும்.

தியானயோகியின் தன்மை.—த்வந்த்வங்களில் (மான அவமான, சீதோஷ்ணம் முதலிய இருமைகள்) மனம் ஒரு நிலைப்பட்டு, தன் ஆத்மாவிடம் திருப்தியுடன் சலனமின்றி, மனோ உறுதியுடன், மண்கட்டி, கல், தங்கம் இவைகளைச் சமமாகக் கருதி; நேசன், பகைவன், உறவினன், ஸாது, பாபி எல்லோரிடமும் சமபுத்தி யுடையவன் ஆகிறான்.

ஏகாந்தமான இடத்தில் தனியாய் ஸ்திரமான ஆசனத்தில் வீற்றிருந்து, தேகம் மனதை வசப்படுத்தி, ஆசை முதலானவை யற்று, ப்ரம்மசர்யவிருதத்தில் ஸ்திரமாயிருந்துகொண்டு மிதமான ஆகாரம், நித்திரையுடையவனாய் மனதை ஒரே நிலையாய் பகவானிடத்திலேயே நிலைநிறுத்தி, காற்றில்லாத இடத்திலுள்ள தீபத்தைப்போல் மனதைச் சலிக்காமல் வைத்துக்கொண்டு தியானம் செய்பவனது சித்தம் அடங்கி, மனது பரிசுத்தமாகி, தேகேந்திரியாதிகளைக் கடந்து நிற்கும் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாத பரமாத்மாவைப்பார்த்து அனுபவித்து அப்பரமானந்த சுகத்தை யனுபவித்து யோகசித்தியை யடைகிறான்.

யோகத்தை யடைவதற்கு ஸாதனம்.—மனோநிச்சயம் அல்லது உறுதி வேண்டும், காமாதிகளை விடவேண்டும், இந்திரியக் கூட்டங்களைத் தைரியமான மனோதிடத்தினால் அடக்கவேண்டும். மனதை பரமாத்மாவினிடத்தில் நிறுத்தி வேறொன்றையும் சிந்தித்தல் கூடாது. மனது ஸ்திரமின்றி அலையும்போதெல்லாம் திருப்பித்திரும்பி அதை மற்ற எண்ணங்களிலிருந்து இழுத்து ஆத்பாவினிடத்தில் வைக்கவேண்டும், மனச்சாந்தியை யடைய வேண்டும். 'தான்' என்னும் ரஜோகுணத்தை அடக்கி ஆளவேண்டும். அப்படிப்பட்டவன் பாபம் நீங்கி யோகத்தில் ஸித்தி பெற்று ப்ரம்மானந்தத்தை எளிதில் அடைகிறான்.

யோகத்தை யடைந்தவன் குணம்.—எல்லாவற்றிலும் ஈஶ்வரனை ஸமமாய்க் காண்கிறான், எல்லா சராசரங்களும் ஈஶ்வரனிடத்திலிருப்பதாக அறிகிறான், கடவுளினுடையவும் ப்ராணிகளினுடையவும் ஏகத்வத்தை உணருகிறான், தன்னைப்போல்

பிறரைக் கருதி அவர்களது சுகதுக்கங்களைத் தனதுபோல் உணருகிறான்.

அர்ஜுனன்—என் மனோ சஞ்சலத்தினால் தாங்கள் உபதேசிக்கும் ஸமத்வபுத்தி யென்னும் விஷயம் சரியாய் விளங்கவில்லை. காற்றை யடக்குவதைப்போல் மிகவும் சலனமுள்ள மனதை யடக்குவது மிகவும் கஷ்டம் அல்லவா ?

கிருஷ்ணன்—ஆம், மனது சஞ்சலமுள்ளதே, அடக்குவது மிகவும் பிரயாசையானதே ; ஆயினும் பழக்கத்தாலும் ஆசையின்மையாலும் அடக்கவேண்டும். மனதை முதலில் அடக்கிப் பிறகுதான் எந்த யோகத்தையும் அடையமுடியும்.

அர்ஜுனன்—முதலில் முயற்சி எடுத்துக்கொண்டு மரணாந்த காலத்தில் யோகத்திலிருந்து தவறினவன் கதி யாது ? சிதறின மேகம்போல் அவன் அழிந்து விடுகிறானா?

கிருஷ்ணன்—என் அப்பா அர்ஜுனா ! முயற்சியுடையவன் இகழ்ச்சியை ஒருபோதும் அடையான். ஸத்கர்மம் செய்து கொண்டிருந்து யோகத்திலிருந்து நழுவினவன் புண்ணிய லோகங்களில் அநேக காலம் பலனை யனுபவித்துப் பிறகு ஸம்பத்து (பரிசுத்தமான ஞானஸம்பத்து) உடையவர்கள் குடும்பங்களில் அல்லது ஞானத்தினால் யோகத்தையே யடைந்த யோகிகளது குடும்பத்தில் ஜனித்து, பூர்வ ஜன்மத்தில் செய்துகொண்டிருந்த யோகத்தை மறுபடி ஆரம்பித்து மேற்படிகளில் முயற்சியுடன் சென்று உத்தமமான நற்கதியை யடைகிறான். தியான யோகி, தபஸ், ஞானம், கர்மம் இவற்றையுடையவர்களையும் விட மேலானவன் ஆதலால் அர்ஜுனா, நீ அப்படிப்பட்ட தியான யோகி ஆவாயாக ; அப்போது எனக்கு நீ சிரேஷ்டனாவாய்.

அத்தியாயம் 7.

விஜ்ஞான யோகம்.

கிருஷ்ணன்—ஐயந்திரிபற என்னையறிந்து என்னிடத்திலேயே மனதைச் செலுத்தி யோகத்தையடையும் மார்க்கத்தைக் கூறுகின்றேன் கேள். அநேக ஆயிரத்திலொருவனே ஞானத்தை

யடைய முயற்சி செய்கிறான். அதில் சிலரே உண்மையை யறிகின்றனர்.

ப்ரக்ருதி (மாயை)யானது நிலம், நீர், நெருப்பு, வாயு, விசும்பு, மனம், புத்தி, அகங்காரம் என எட்டாகப் பிரிந்திருக்கிறது. இதுவே என் அபர மாயை, அசேதனப்ரக்ருதி அல்லது ஜடப்ரக்ருதி அல்லது க்ஷேத்ரம்; இதைத் தரித்துக்கொண்டிருப்பது எனது மற்றொரு மாயை பரப்ரக்ருதி - சேதனப்ரக்ருதி, க்ஷேத்ரக்ஞனாயிருப்பது - அதாவது இப்பிரபஞ்சம் முழுவதும் இரண்டு சேர்ந்தது; அழிந்துபோகக்கூடிய, ஆதியந்தமுள்ள, தனிப்பொருள், கலப்புப் பொருட்களால் கட்டப்பட்ட பாகம் ஒன்று. அவற்றுக்குள், பூவில் மணம்போலும், எள்ளில் எண்ணெய்போலும், பாலில் வெண்ணெய்போலும் பிரித்து வேறுபடுத்த முடியாமல், அவற்றுக்கு உயிர் கொடுக்கும், அவற்றுக்கு ஸத்தைக்கொடுக்கும் அழிவற்ற நீடித்த, எப்போதுமுள்ள ஈஶ்வரத்தன்மையானது மற்றொன்று. இவற்றிற்கெல்லாம் மூலகாரணம் நானே. எப்படி ஒரு மணிமாலையில் பல தனித்தனியான மணிகளின் வழியாக ஒரே நூல் ஊடுருவிச்சென்று வியாபித்திருக்கிறதோ அவ்விதமே இப்பிரபஞ்ச முழுவதிலும் காணப்படும், தனித்தனியாகத் தோன்றும் எல்லா சராசரப் பொருட்களின் உள்ளே (மணிசரத்தின் நூல்போல்) அந்தர்யாமியாக இருந்து ஜலத்திலுள்ள ருசியாயும், சசி ஸூர்யரது ஒளியாயும் வேதத்தின் ஓங்காரமாயும், ஆகாயத்தின் சப்தமாயும், சகல பிராணிகளின் ஜீவனாயும், அஸத்துப்பாகம் அழிந்துபோகும்போது மீதி அழியாமல் செல்லும் ஸத்துப்பாகமாயும் புத்திமான்களின் அறிவாயும் இருக்கிறேன். சத்வ ரஜஸ் தமோ குணங்களிலிருந்துண்டானவைகள் எல்லாம் என்னிடத்திலடங்கியுள்ளன. ஆயின் நான் அவைகள் வசத்திலில்லை. குணத்தில் வசப்பட்ட ஸாமான்ய ஜனங்கள் இதை அறியவில்லை. மாயா வசப்பட்டவர்கள் மாயையைக் கடப்பது கடினம். என்னைச் சரணடைந்து மாயையைக் கடக்கலாம். மாயா வசப்பட்டவர் என்னை அறியார்.

நான்குவித பக்தர்கள். 1. துஷ்டமனிதர், துஷ்டமிருகம். வியாதி இவைகளால் துன்பப்படுகின்றவர்கள். 2. பரமார்த்த

ஞானத்தை இச்சிப்பவர்கள், 3. பொருளை இச்சிக்கின்றவர்கள், 4. ஞானிகள்; இவர்களுள் ஞானியே சிறந்தவன். அவனே ஒரு நிலைப்பட்ட மனதுடன் "ஸர்வம் விஷ்ணுமயம்" என்னும் உண்மையை உணர்ந்துள்ளவன், முயற்சிசெய்து உண்மையை அறியும் ஆயிரக்கணக்கில் ஒருவன் இவனே. அஜ்ஞானிகள் ஆசையினால் அபகரிக்கப்பட்டு பலதேவதைகளைப் பூஜிக்கின்றனர். எவன் எவன் எந்த எந்த ரூபத்தை வணங்குகின்றானோ அதில் அவனது பக்தியை உறுதிப்படுத்தி அதற்கு வேண்டிய பலனை அளிக்கிறேன். அந்தப்பலன் நீடித்ததல்ல. இந்த ஞானக்குறைவுள்ளவர்கள், கடவுளின் ஏகத்வத்தையும் மேன்மையையும் அறியார், அவதார புருஷர்களில் ஒருவரான எனது உண்மையையும் அறியவில்லை. த்வந்த்வ மோஹங்களால் மயக்கமடைந்துள்ளவர்கள் என்னையறியார். நல்வினைகளைச்செய்து பாபம் நசித்து திடமனதுடன் என்னையடைய முயற்சியுடையவர், ப்ரம்மத்தையும் அத்தியாத்மம் அதிபூத அதிதைவ அதியஜ்ஞத்தையும் அறிந்து நற்கதியை யடைகின்றனர்.

அத்தியாயம் 8.

அப்பியாஸ யோகம் அல்லது அக்ஷரப்ரம்ம யோகம்.

அர்ஜுனன்—ஹே கிருஷ்ணா! தாங்கள் இதுவரையும் சொல்லி வந்த

1. ப்ரம்மம் என்பது என்ன?
2. கர்மம் என்பது என்ன?
3. அத்தியாத்மம் அல்லது ஆத்மஞானம் }
4. அதிபூதம் அல்லது பூதஞானம் } இவைகள்
5. அதிதெய்வம் அல்லது தேவஞானம் } யாவை?
6. அதியஜ்ஞம் அல்லது யாகஞானம் }
7. மனதை யடக்கினவர்கள் தங்களை எவ்விதமாய் அறிகிறார்கள்?

கிருஷ்ணன் விடை—

1. ப்ரம்மம் என்பது அக்ஷரமாய், அழிவற்ற மேலான நிர்க்குண ப்ரம்மம்.

2. அத்தியாத்மம்—அப்பரம்பொருளின் அம்சமாய் விபக்தமாய் தேகந்தோறும் இருக்கும் ஜீவாத்மா.

3. கர்மம்—பிராணி முதலியவற்றின் உற்பத்தியை யுண்டாக்கும் யாகம், தானம், ஹோமம் முதலிய தியாகமே கர்மம்.

4. அதிபூதம்—ப்ரக்ருதி அல்லது மாயா சம்பந்தமாய் ப்ரபஞ்சத்தில் உண்டாகி எப்போதும் நீடித்திராமல் அழிந்து போகக்கூடியவைகள் எல்லாம் அதிபூதம். பஞ்சபூதம் முதலிய கலப்புத்தனிப் பொருட்கள், தேகாதிகள் முதலியன.

5. அதிதைவம்—எல்லாவற்றுக்கும் தலைவனாய், எல்லாவற்றையும் ஆள்பவனாய், முத்தொழில் வல்லோனாய் இருக்கும் சகுணப்ரம்மம்.

6. அதியஜ்ஞம்—நமக்குள் கடவுள் இருக்கிறார் என்பதை உணர்ந்து நாம் செய்யும் எல்லாத் தொழில்களையும் ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்து, பிறர் நன்மையின் பொருட்டே யஜ்ஞம் முதலான தொழில் செய்வது; இந்த அறிவுக்கு மூலகாரணமாய் நமக்குள் இருக்கும் கடவுளே அதியஜ்ஞம் (self-sacrificing spirit).

7. மரணகாலத்தில் கடவுளையே தியானித்துக்கொண்டு பிராணனை விடுபவன் கடவுளின் இயல்பை அடைகிறான்.

மரணகாலத்தில் எந்தப்பொருளைச் சிந்தித்துக்கொண்டே யிருக்கிறானோ அதையே அடைகிறான். என்னையே தியானித்துக் கொண்டிருக்கும் அப்பியாசம் உடையவன் என்னையே யடைவான். ஆதலின் நீ எப்போதும் என் நினைவாய் யுத்தம் செய். என்னையே யடைவாய். நிர்க்குணப்ரம்ம மாகிய அப்பரம் பொருளை எவன் மிகுந்த பக்தியுடனும் யோக பலத்துடனும் தியானித்துக்கொண்டே யிருக்கிறானோ அவன் அப்பரம்பொருளாகிய கடவுளையே யடைகிறான்.

அப்பியாச யோகியின் தன்மையும் அவனடையும் பதவியின் உயர்வும்—பிரம்மசர்யத்தை யனுஷ்டித்து ஆசைநீங்கி, இந்திரியங்களை யடக்கி, ஓம் என்னும் அக்ஷரத்தினால் ப்ரம்மத்தை இடைவிடாமல் தியானித்துக்கொண்டு, வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தாமல் ஒரு நிலைப்படுத்தி யிருப்பவன் பரம்பொருளையே யடைகிறான். அப்படி அடைந்தவன் திரும்பிப் பிறப்பதில்லை. ப்ரம்மலோக முதல் எல்லாவற்றிற்கும் தோற்றமும் ஒடுக்கமும் திரும்பித் திரும்பியுண்டு—கடவுளை யடைந்தவனுக்கோ மறுபடி ஜனனம் கிடையாது.

தோற்றம் ஒடுக்கம் அல்லது பிரபஞ்சத்தின் பரிணாமமும் லயமும்—ப்ரம்மாவுக்கு 1000 யுகம் ஒரு பகல், 1000 யுகம் ஒரு இரவு. அவ்யக்தம் அதாவது காண முடியாத கடவுளிடத்திலிருந்து சராசரப்பொருள்களெல்லாம் தோன்றுகின்றன (Evolution). இரவு வரும்போது இவைகளெல்லாம் அவ்யக்தமாகிய கடவுளிடம் ஒடுங்கிவிடுகின்றன (involution). இப்படியே பூதத்தொகுதிகள் (Matter) தோன்றித் தோன்றி ஒடுங்கி மறைகின்றன. தோன்றிமறையும் இவ்வஸ்துக்களுக்கெல்லாம் மேலானது அழிவற்ற கடவுளின் பரமபதமென்பது—எல்லாப் பிரபஞ்சத்திலும் வியாபித்துக் கொண்டு எல்லாப்பிராணிகளுக்குள்ளும் அந்தர்யாமியாயிருக்கும் அப்பரம்பொருளை உத்தமமான சலிக்காத பக்தியினால் அடைந்தவர்கள் பிறவியையடைவதில்லை.

யோகிகள் மீளா நிலையையும், மீளும் நிலையையும் அடையும் காலம்—அக்னி, ஒளி, பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம் இவற்றில் இறக்கும் ஞானிகள் ப்ரம்மத்தையடைந்து மீளாப்பதம் பெறுகிறார்கள். புகை, இரவு, கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயனம் இவற்றில் இறக்கும் கர்மிகள் மறுபடி மீண்டுவந்து பிறக்கின்றார்கள் (அக்னி, ஒளி, பகல்போல் மனது தெளிந்து பரிபக்குவமடைந்தவர்; புகை, இரவுபோல் புத்தி தெளியாமல் இன்னும் அறிவீனமாகிய இருள் நிறைந்திருப்பவர்). இவ்வழிகளின் விஷயத்தையும் உண்மையையும் அறிந்தவர் மயக்கமுறுவதில்லை. இவற்றை யறிந்தவன் வேதம், தபம், தானம் இவற்றின் சிறிய

பலன்களையெல்லாம் கடந்து தூய்மையடைந்து மீளாப்பதவியாம் மோக்ஷபதவியை எய்துகிறான்.

அத்தியாயம் 9.

ராஜ வித்யா ராஜ குஹ்ய (ரகஸ்ய) யோகம்.

கிருஷ்ணபகவான்.—பாபத்திலிருந்து உன்னை விடுவிக்கும் படியான அதிரகஸ்யமான ப்ரம்ம ஞானத்தைச் சொல்லுகிறேன். இது எல்லாவற்றுக்கும் மேலான, தூய்மை தரக்கூடிய, தர்மத்துக்குச் சார்பான, செய்வதற்கும் எளிதான அழிவற்ற ஞானம். இதை நம்பாதவர்கள் மீண்டு மீண்டு பிறப்பை யடைகின்றனர்.

அவ்யக்த ரூபத்துடன் கூடின என்னால் ப்ரபஞ்சமெல்லாம் வியாபிக்கப்பட்டிருக்கிறது. என்னிடம் சகல பூதங்களு மிருக்கின்றன; ஆயின் அவைகளில் நானில்லை. வெட்ட வெளியான ஆகாயத்தில் வாயு எப்படி ஒட்டாமல் வியாபித்திருக்கிறதோ அவ்விதமே சகல பூதங்களும் என்னிடமிருக்கின்றன. பிரளய காலத்தில் என் மாயையில் ஒடுங்கி சிருஷ்டிகாலத்தில் வெளித் தோன்றுகின்றன. இந்த சிருஷ்டியாதி தொழில்கள் அல்லது கர்மங்கள் அபிமான மற்ற என்னை பந்தப்படுத்தாது. என் மாயை (சக்தி, ப்ரக்ருதி அல்லது இயற்கை—nature, the material part of the Universe) யால் பிரபஞ்சம் தோன்றி ஒடுங்கிச் சுழல்கின்றது. மாயாவயப்பட்ட மூடர் என்னை யறியார். ஞானிகளான மகாத்மாக்களை என் உண்மையை யறிந்து தர்மவழியில் பக்தியுடன் என்னை உபாசிக்கின்றனர். பலர் என்னைப் பலவிதமாய்ப் பூஜிக்கின்றனர், அவரவர்களது மனோபரிபக்குவத்துக் கேற்ப.

நானே உலகிலுள்ள எல்லாப் பொருள்களின் சத்துப் பாகம். நானே கர்மம், யஜ்ஞம், 'ஸ்வதா' என்னும் வாழ்த்துரை, நானே ஒளஷதம், மந்திரம், அக்கினி, ஹோமகர்மா; இப்பிரபஞ்சத்துக்கு அன்னை, பிதா, பாட்டன் நான்; அறிபடு பொருளும் ஓங்காரமும் வேதமும் நானே. அடையப்படும் புகலிடம், இறைவன், சாக்ஷி, சரணடையத்தகுந்தவன், சிருஷ்டி

ஸ்திதி லய ஸ்தானம் எல்லாம் நானே; வெப்பம் மழையை யுண்டாக்கி பிறப்பு இறப்புக்குக் காரணமாய் சத்து அசத்துமாயிருப்பவன் நானே.

பக்தர்கள் சோமபானமுண்டு, பாபமகன்று, வேதமறிந்து பலனையிச்சித்து என்னை ஆராதிப்பவர் புண்ணிய லோகங்களில் புண்ணிய பலனை யனுபவித்து அது தீர்ந்தவுடன் திரும்பி உலகில் பிறகின்றனர். வேறு நினைவின்றி என்னையே நம்பி ஆராதிப்பவரின் பாப புண்ணியங்களை நானே ஏற்றுக்கொள்ளுகிறேன்.

தேவவிரதிகள் தேவரை யடைவர்; பிதுர்க்களை நோற்பவர் பிதுர்க்களை அடைவர்; பூதங்களை ஆராதிப்பவர் பூதங்களை யடைவர்; என்னைப் பணிபவர் என்னையே அடைவார்; அன்னிய தேவதைகளைத் தொழுபவரும்கூட என்னையே யடைகின்றனர்.

இலை, பூ, கனி, ஜலம் இவற்றை எதுவானாலும் அன்புடன் முயற்சியுடன் எனக்களித்தால் அதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆதலின் ஹே அர்ஜுனா, நீ எதைச் செய்தாலும், எதை உண்டாலும், எதைக்கொடுத்தாலும், எத்தவத்தை ஹோமத்தைச் செய்தாலும் "கடவுளுக்கு அர்ப்பணம்" ஆகச் செய். அப்படிச் செய்தால் அவற்றின் பலாபலன் உன்னை ஒட்டாது; அப்போது உலக பந்தத்திலிருந்தும் பிறப்பிறப்பாகிய தளையினின்றும் விடுபட்டு என்னை யடைவாய்.

நான் எல்லாப் பிராணிகளிடத்தும் சமமானவன். எனக்குப் பகைவன் நண்பன் கிடையாது. ஆயின் என்னை அன்புடன் ஆராதிப்பவர் என்னிடம் உளர், அவரிடம் நான் உள்ளேன். கொடியோனாயினும் என்னை வழிபடும் முயற்சி உள்ளோன் நல்லவனே, இம்முயற்சியால் அவன் தர்மவானாகி நித்ய சாந்தியை யடைவான். பாவிகளாயினும் எப்பாலாரும் எவ்வருணத்தாரும் என்னைப் பணிபவர் என்னை யடைவர். ஆதலின் அர்ஜுனா, நீ மனதை என்னிடம் நிலைநிறுத்தி பக்தியுடன் என்னைத் தொழுது என்னையே மேலாகக்கருதி என்னை யடைவாயாக.

அத்தியாயம் 10.

விபூதி யோகம்.

பின்னும் ஓர் முறை உன் நன்மையைக் கருதி என் பிரியனான உனக்குச் சொல்லப்போவதைக் கேள். என் மகிமையை யாரும் உணரார். தேவர் முனிவர் ரிஷிகளுக்கெல்லாம் ஆதி நானே. ஆதியந்தமில்லாத முதல்வனான என்னை யறிந்தோன் பாபத்தினின்றும் விடுபடுவான். புத்தியும் ஞானமும் மோஹமின்மையும் பொறுமையும் உண்மையும் அடக்கமும் அமைதியும் சுகமும் துக்கமும் தோற்றமும் ஒடுக்கமும் பயமும் பயமின்மையும் இம்சை செய்யாமையும் நடுநிலை திருப்தியும் தபஸும் தானமும் இகழ்ச்சியும் புகழ்ச்சியும் இவ்விதப் பலவகைத் தன்மைகளையெல்லாம் உயிர்கள் என்னிடத்திலிருந்தே அடைகின்றன. என் தன்மையை யடைந்த 4 மனுக்கள் 7 மகரிஷிகளிடமிருந்தே மக்களெல்லாம் தோன்றினர். இவ்விதம் என் மேன்மையை யுள்ளபடி உணர்ந்தவனே யோகி.

யோகிகளின் மேன்மை—யோகிகள் நானே எல்லாவற்றிற்கும் காரணம் என்பதை யறிந்து என்னையே தியானிப்பர். என்னிடம் சித்தத்தை வைத்து பிராணனை யெனக்கர்ப்பித்து என்னைக் குறித்தே போதித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் சந்துஷ்டியடைவார். அவர்களுக்குச் சிறந்த புத்தியோகத்தை அளிக்கின்றேன், ஞான விளக்கினால் அவரது அஜ்ஞான இருளை நீக்குகிறேன்.

அர்ஜுனன்—தாங்களே பரப்ரம்மம், பரிசுத்தமும் ப்ரகாசமுமான பொருள். சிறந்த வசிஷ்டாதி ரிஷிகள் தங்களையே முதற்கடவுள், சர்வவியாபி என்று சொல்லுகின்றனர்; தமது உற்பத்தியை தேவாசுரர் யாரும் அறியார்; தம்மைத்தாமே அறிவீர். ஹே புருஷோத்தம, தேவதேவா, ஜகத்பதே, எந்த மகிமைகளால், எந்த விபூதிகளால் இப்பிரபஞ்சத்தை வியாபித்துக் கொண்டிருக்கின்றீரோ அவற்றை அறிய விரும்புகிறேன். ஹே யோகி, எப்போதும் உம்மையே சிந்திப்பது எங்ஙனம்? ஹே பகவான், எவ்வெப்படிகளில் நின்னை யான் கருதல் வேண்டும்? ஹே ஜனார்தனா, நின் யோகத்தையும் மேன்மையையும்

பற்றிய உன் அமிர்தச் சொற்கள் எனக்குத் தெவிட்டவில்லை மற்றும் ஒரு முறை சொல்வாயாக.

கிருஷ்ணன்—என் விபூதிகளுக்கு முடிவில்லாமையால் அவற்றுள் சில முக்கியமானவற்றை மாத்திரம் சொல்லுகிறேன். எல்லாப் பிராணிகளின் ஹ்ருதயத்திலும் இருக்கும் பரமாத்மா நானே. எல்லாவற்றுக்கும் ஆதி மத்தியாந்தமும் நானே. ஆதித்தியருள் விஷ்ணு என்னும் ஆதித்தியனும், ஒளிகளுள் சூரியனும், காற்றுக்குள் மரீசியும், நக்ஷத்திரங்களுக்குள் சந்திரனும் நானே. வேதங்களுள் ஸாமவேதம், தேவரில் இந்திரன், இந்திரியங்களில் மனம், பிராணிகளில் உணர்ச்சி, ருத்திரருள் சங்கரன், இயக்கர் அரக்கருள் குபேரன், வசுக்களுள் அக்கினி, மலைகளுள் மேரு, புரோகிதர்களுள் பிரகஸ்பதி, படைத்தலைவரில் முருகன், நீர் நிலைகளுள் நான் சமுத்திரம், ரிஷிகளில் பிருகு, பதங்களுள் ஓங்காரம், யக்ஞங்களில் நான் ஜபமாகிய யக்ஞம், தாவரங்களுள் ஹிமாலயம், விருக்ஷங்களில் அரசமரம், தேவரிஷிகளுள் நாரதர், கந்தர்வருள் சித்ராதன், ஸித்தர்களில் கபிலர், அஸ்வங்களில் உச்சைசிரவம், யானைகளில் ஐராவதம், மனிதருள் அரசன் நான், ஆயுதங்களுள் வஜ்ரம், பசுக்களுள் காமதேனு, பிறப்பிப்பவருள் மன்மதன், ஸர்ப்பங்களுள் வாசுகி, நாகங்களுள் அநந்தன், ஜல தேவதைகளுள் வருணன், பிதுர்க்களுள் அர்யமா, தண்டிப்பவருள் யமன், தைத்தியர்களுள் பிரஹ்லாதன், கணிப்பவருள் காலம், மிருகங்களுள் சிங்கம், பக்ஷிகளுள் கருடன், பரிசுத்தம் செய்யும் வஸ்துக்களுள் வாயு, சூரர்களுள் ராமன், மீன்களுள் மகரம், நதிகளுள் கங்கை இவையெல்லாம் நானே. சிருஷ்டிகளுக்கு [illegible]மத்தியம் அந்தம் நான். வித்தைகளுள் ஆத்ம [illegible]தை. [illegible]வர்களில் வாதம் நான். எழுத்துக்களில் அ[illegible], புணர்ச்சிகளி[illegible] த்வந்த்வம் என்னும் இரைட்டைப்புணர்ப்பு இவைக[illegible]னே. ஓயாதகாலம் நான், எங்கிலும் இருந்துகொண்டு க[illegible]லனை யளிக்கும் தாதா நான். எல்லாவற்றுக்கும் மூல[illegible]ான். பெண்மக்களிடத்தில் நான் கீர்த்தி, திரு (ம[illegible]ரம்), சொல்வன்மை, நினைவு, அறி[illegible], தைர்யம், பொறுமை, [illegible]ாமங்

களில் ப்ருஹத்ஸாமம், சந்தங்களில் காயத்ரி, மாதங்களுள் மார்கழி, பருவங்களுள் வஸந்தம் நான், வஞ்சகரின் சூது நான், ஒளியுடையோரின் ஒளி நான், நானே வெற்றி, நானே முயற்சி, சாத்துவிகர்களின் உண்மை நானே. விருஷ்ணிகுல வாஸுதேவன், பாண்டவரில் தனஞ்ஜயன், முனிவருள் வியாஸன், கவிகளில் சுக்ரன் நான். ஆள்வோரிடத்தில் தண்டனை, வெற்றியை விரும்புவோரிடத்து நீதி, ரகஸ்யங்களுள் மௌனம், ஞானிகளின் ஞானம் நான். எல்லாப் பூதங்களின் மூலமாகிய விதை நான். அர்ஜுன! என்னையன்றி எதுவுமில்லை. என் மகிமைகளுக்கு முடிவில்லை. சிறிதளவு மாத்திரமே உனக்குச் சொன்னேன். உலகத்தில் எதெது பெருமை, உண்மை, அழகு, வலிமை யிவற்றையுடையதோ அவையெல்லாம் என் தேஜஸின் ஒரு அம்சத்திலிருந்து உண்டானதாக அறிவாயாக. இந்த சகல ப்ரபஞ்சத்தையும் என் ஒரு கலையினால் நிலைநிறுத்தித் தாங்கிக் கொண்டிருக்கிறேன்.

அத்தியாயம் 11.

விஶ்வரூபதர்ஶனம்.

அர்ஜுனன்—ஹே, கிருஷ்ண! உமது வாக்கியங்களால் நான் மயக்கம் நீங்கப்பெற்றேன். பிராணிகளின் தோற்ற ஒடுக்கமும் உமது மஹிமையும் தெரிந்துகொண்டேன். உமது ஈஶ்வரரூபமாகிய விஶ்வ (எங்கும் நிறைந்த) ரூபத்தைப்பார்க்க விரும்புகிறேன்.

பகவான்—பலநிறம் உருவங்களையும் கணக்கற்றதுமான என் உருவங்களைப்பார். என்னில் அடங்கியுள்ள பல சூர்யர்கள் வஸுக்கள் ருத்திரர் முதலானவர்களைப்பார். என் சரீரத்தின் ஒருபாகத்தில் மாத்திரம் அடங்கியிருக்கிறது இப்பிரபஞ்ச முழுவதும். இப்போதுள்ள உன் ஊனக்கண்ணால் பார்க்கமுடியாது; உனக்குத் தெய்வத்தன்மையான ஞானக் கண்களைக்கொடுக்கிறேன் (என்று சொல்லி விஶ்வரூபம் எடுத்தார்).

விஶ்வரூபம்—அநேக முகங்கள் கண்களுடன் திவ்ய ஆடை, ஆபரணம் ஆயுதங்கள் கந்தங்களுடன், மிகுந்த அத்புதமாய் ஆச்சர்யமாய் ஜ்வலிப்பதாய், 1000 சூரியர்களின் பிரகாச முடையதாயிருந்தது. பலவாறாகப் பிரிந்துள்ள பிரபஞ்சமெல்லா வற்றையும் விஶ்வரூபத்தின் ஒரு அம்சத்திலிருப்பதாக அர்ஜுனன் பார்த்து ஆச்சர்யத்துடன் பகவானை வணங்கிக் கூறலுற்றான்.

அர்ஜுனன்—ஹே தேவ, தமது ரூபத்தில் தேவர் பூதக் கூட்டம் ப்ரம்மா ரிஷிகள் யாவரையும் பார்க்கிறேன். அநேகம் கண்கள் முகங்கள் முதலியவற்றுடன் அநேக ரூபங்களுடைய உம்மை எங்கிலும் பார்க்கிறேன். கிரீடம் கதை சக்ரம் தரித்து சூரிய சந்திரனது ஒளியுடன் எங்கும் காந்தியுடையவரான உம்மை எங்கும் பார்க்கிறேன். அறியவேண்டிய அழிவற்ற ப்ரபஞ்ச ஆதாரமான தர்ம ரக்ஷகரான ஸநாதன பரமபுருஷர் தாங்கள். ஆதிமத்யாந்தமற்று அபரிமித பராக்கிரமமுற்று, சூரியசந்திரரைக் கண்களாயும் அக்கினியை முகமாயும் தமது காந்தியினால் பிரபஞ்சத்தை எரிக்கின்றவராயிருக்கிறீர். ஆகாயம் பூமி இடைவெளி மற்றெல்லாத் திக்குக்களும் தம்மாலேயே வியாபிக்கப்பட்டிருக்கிறது. சிலர் பயப்படுகிறார்கள். தேவர்கள் உம்மைப் பிரவேசித்து வணங்குகின்றனர். ரிஷிகள் சித்தர்கள் மங்களவாழ்த்துக்கூறித் துதிக்கின்றனர். ருத்திர ஆதித்ய கந்தர்வாதிகள் யாவரும் ஆச்சரியத்துடன் உம்மையே பார்த்துக் கொண்டிருக்கின்றனர். உமது திறந்தவாய், கோரப்பற்கள், ஜ்வலிக்கும் கண்களையும் பார்க்கும்போது நடுக்கமுண்டாகிறது. தமது முகம் பிரளயகால அக்கினிக்கு சமானமாயிருக்கிறது. துரியோதனாதி அரசர் பீஷ்மத்ரோணகர்ணாதிகள் யாவரும் உமது வாயில் பிரவேசித்து பற்களினிடையில் நொறுங்கிப்போவதாகக் காணப்படுகின்றனர். மிகுந்த வேகத்தையுடைய நதிகள் விசையுடன் ஓடி சமுத்திரத்தையடைவது போலும் விட்டிற் பூச்சிகள் எரிகின்ற விளக்கின் அக்கினியில் சென்று அழிவது போலும் இவ்வீரர்களும் மற்றும் ஜனங்களும் உமது வாயில் பிரவேசிக்கின்றனர். நீர் ப்ரபஞ்சங்களை யெல்லாம் விழுங்குவது போலிருக்கிறது. ஹே தேவ, இந்த பயங்கர ரூபமுடைய தாங்கள் யார்? அனுக்கிரகம் செய்யவேண்டும்.

கிருஷ்ணன்—துஷ்டநிக்கிரகத்தின்பொருட்டு நான் காலனாய்ப் ப்ரவிருத்தித்து இருக்கிறேன். இங்குள்ள துஷ்டர்களெல்லாரும் அழியப்போகின்றனர். ஏற்கெனவே என்னால் முடிவடைந்திருக்கும் இந்த சத்துருக்களை ஜயித்து ராஜ்யத்தை அனுபவி.

அர்ஜுனன்—(நடுக்கத்துடன் கைகூப்பி) உமது மஹிமையைச்சொல்லி (நல்லோர்) சந்துஷ்டி யடைகின்றனர், அசுரர் பயந்து ஓடுகின்றனர். பரம்பொருளான உம்மை ப்ரம்மா முதலான யாவரும் நமஸ்கரிகின்றனர். தாங்களே ஆதி கடவுள், ப்ரபஞ்சமெல்லாம் தங்குமிடம், அறிபவர், அறியப்படுபொருள், ப்ராஜாபதி, வாயு, யமன், அக்கினி எல்லாம் தாங்களே. ஆயிரம் முறை மேன்மேலும் நமஸ்கரிக்கின்றேன். உமது மகிமையை யறியாமல் தோழன் என்னும் உரிமையில் நான் ஏதேனும் தப்பிதம் செய்திருந்தால் அதையெல்லாம் க்ஷமிப்பீராக. இவ்வுலகத்துக்குத் தகப்பனும் குருவாயும் ஈஸ்வரனும் பூஜிக்கத்தகுந்தவனுமுள்ள உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன், என்னை மன்னிக்கும்படியாக. விஸ்வரூபத்தைக்கண்டு சந்துஷ்டியையும் பயத்தையும் அடைந்துளேன். ஆயினும் உமது பழைய ஸௌம்யமான அந்த அழகிய, ரூபத்தையே பார்க்க விரும்புகிறேன்.

கிருஷ்ணன்—என் யோக மகிமையால் உனக்குக் காண்பித்த இந்த விஸ்வரூபம் இதற்குமுன் யாரும் பார்த்ததில்லை. இம்மனித உலகில் வேத யஜ்ஞ தானாதிகளாலும் யாரும் இதைப்பார்க்க முடியாது. நீ பயம் நீங்கி எனது பழைய உருவத்தைப் பார்.

அர்ஜுனன்—உமது இந்த ப்ரஸந்நமான அழகிய மனித உருவத்தைக்கண்டு மனந்தெளிந்து எனது ஸ்வபாவ நிலைமையை யடைந்துள்ளேன்.

கிருஷ்ணன்—எனது விஸ்வரூபம் தேவாதிகளாலும் பார்க்க சாத்தியமில்லை; வேத யஜ்ஞ தானாதிகளால் பார்க்கமுடியாது. உயர்ந்த பக்தியினால் மாத்திரமே காணத்தகுந்தது. தான் செய்யும் கர்மங்களை எனக்கர்ப்பித்து, என்னையே மேலாகக் கருதி, பற்றின்றி, எல்லாப் பிராணிகளையும் சமமாகக் கருதி, ஹிதத்தைக் கோருபவன் என்னை வந்தடைகிறான்.

அத்தியாயம் 12.

பக்தி யோகம்.

அர்ஜுனன்—ஸகுணப் பிரம்மமாகிய உம்மை உபாஸிப்பவர், நிர்க்குணப் பிரம்மமான காணமுடியாத பரம்பொருளை உபாஸிப்பவர், இவ்விருவருள் யார் சிறந்தவர்? யார் யோகத்தை அறிந்தவர்?

கிருஷ்ணன்—என்னிடம் மனதைச் செலுத்தி நம்பிக்கையுடன் உபாஸிப்பவர்களே மேலான யோகிகள். மற்று அவ்யக்தமான, சர்வ வியாபியான, சிந்திக்கமுடியாத, நித்யமான, நிர்க்குண ப்ரம்மத்தை ஸமபுத்தியுடன் இந்திரியங்களையடக்கி உபாஸிப்பவர்களும் என்னையே யடைகின்றனர் (அதாவது இவ்விருவரும் அடையும் முடிவான பயன் ஒன்றே). ஆயின் நிர்குண ப்ரம்ம உபாஸனை மிகவும் கடினமானது. அதைக்காட்டிலும் ஸகுண ப்ரம்மமாகிய என்னை, பக்தி யோகத்தினால் தியானிப்பவர்களை ஸம்ஸாரக்கடலினின்று அதிசீக்கிரத்தில் கரையேற்றுகிறேன். என்னிடத்திலேயே மனது புத்தியை நிறுத்தினால் என் நிலைமையை அடைவாய்; இது கஷ்டமானால் அப்பியாசம் செய்ய வேண்டும். அதுவுமுடியாவிட்டால் என் பொருட்டு கர்மம் செய்—பகவத் கைங்கர்யம். இதற்கும் சக்தியின்றேல் நீ செய்யும் கர்மம் எதுவானாலும் அவற்றின் பலனில் இஷ்டம் வைக்காதே. கர்மபலனை விடுதல், த்யானம், ஞானம், அப்யாஸம் இவை ஒன்றைவிட ஒன்று விசேஷம். கர்மபலனை விடுவதால் உடனே மன அமைதியும் ஒழிவும் சாந்தியும் உண்டாகிறது.

எனக்குப் பிரியமான பக்தர்கள்.—எல்லாப் பிராணிகளுக்கும் துன்பம் செய்யாத மித்திரனாய், தயை பொருமையுடன் அஹங்கார மமகாரமின்றி, சுகதுக்கத்தை ஸமமாகக் கருதி, எப்போதும் சந்தோஷமாய், யோகியாய் மனோபுத்தியை என்னிடம் செலுத்தி யிருப்பர். உலகத்தாருடன் பரஸ்பரம் பயமின்றி, சந்தோஷம் பயம் கோபம் மனக்கலக்கமின்றி, அபேக்ஷையின்றி, பரிசுத்தமாய் சகல பிரயத்தனங்களையும் விட்டு, துவேஷமும் வருத்தமுமின்றி, புண்ணிய பாபங்களை விட்டு

பக்தியுடனிருப்பர். சத்ரு மித்திரன். மான அவமானம், சீதோஷ்ணம், சுகதுக்கம், நிந்தை ஸ்துதி இவற்றில் சமான புத்தியுடன் பற்றின்றி, மௌனியாய் கிடைத்தமட்டில் திருப்தியுடன், வாசஸ்தானமின்றி என்னிடம் மனம் நிலைத்த பக்தியுள்ளவர் இவ்வித மிருப்பவர்களே எனக்கு மிகவும் பிரியமானவர்கள்.

அத்தியாயம் 13.

க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாக யோகம்.

அர்ஜுனன்—ப்ரக்ருதி, புருஷன், க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன், ஞானம் இந்த 5 விஷயங்களைப்பற்றியும் அறிய விரும்புகிறேன்.

கிருஷ்ணன்—க்ஷேத்ரம் என்பது இந்த சரீரம். க்ஷேத்ரஜ்ஞன் - இந்த க்ஷேத்ரத்தை அறிபவன்; அது நானே. இதை அறிவதே ஞானம் (அதாவது தேக தத்துவம், ஆத்ம தத்துவத்தை அறிவது). க்ஷேத்ரம் எந்தத் தன்மை யுடையது எதிலிருந்து உண்டானது எவ்வித மாறுபாடுகளை யுடையது என்பதையும் க்ஷேத்ரஜ்ஞன் யார் எப்படிப்பட்ட மகிமை யுடையவர் என்பதையும் சுருக்கமாகச் சொல்லுகிறேன். இது விஷயம் பல ருஷிகளாலும் வேதங்களில் பலவிதமாயும் பாடப்பெற்று வருணிக்கப்பட்டுள்ளது:— க்ஷேத்ரம்—

ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்	5 மகா பூதங்கள்.
அஹங்காரம் புத்தி அவ்யக்தம்	3
ஞானேந்திரியம் 5 கர்மேந்திரியம் 5	10
மனது	1
சப்தாதி விஷயங்கள்	5
	24 தத்துவங்கள்.

இந்திரியங்களுடன் விஷய சம்பந்தத்தினால் ஏற்படும் விருப்பு வெறுப்பு, இன்பதுன்பம், ஞான ஆத்ம அந்தக்கரண

விருத்தி, தைரியம் இவைகளெல்லாம் க்ஷேத்ரத்தின் சம்பந்தமானவை.

ஞானம்—எந்த குணங்களுடன், எந்தத் தன்மைகளுடன் கூடினவனானால் சரீர ஆத்ம தத்துவத்தை (உண்மையை) ஒருவன் அறிந்து ஞானத்தை அடையத் தகுதியுடையவன் ஆவானோ அந்த ஒழுக்கங்கள், பணிவு முதலான உத்தம குணங்கள், இவைகளே ஞானம். அவையாவன—தற்புகழ்ச்சி டம்பமின்றி, பிறஹிம்ஸை செய்யாமல், பொறுமை நேர்மையுடன் பெரியோரை வழிபட்டு, சரீரம் மனது சுத்தமாய், மோக்ஷமார்க்கத்தில் உறுதியுடன் அடக்கமாய், ஆசையற்று, அகங்காரமின்றி, பிறப்பிறப்பு பிணிதுக்கம் இவற்றின் தோஷத்தை யறிந்து, மக்கள், மனைவி, வீடு இவற்றில் பற்றின்றி, ஏகாந்தத்தையே நாடி சலிக்காத பக்தியுடனிருப்பதே ஞானம். மற்ற எல்லாம் அஜ்ஞானம்.

க்ஷேத்ரஜ்ஞன்—எல்லா வஸ்துக்களிடத்தும் வியாபித்திருக்கும் பரப்ரம்மத்தை யறியவேண்டும். பகவான் ஆதியந்தமற்ற, சத்துமல்லாத அசத்துமல்லாத ஸர்வ வியாபியானவர். இந்திரியங்களற்றவர். ஒன்றிலும் ஒட்டாமல், ஆயின் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டிருப்பவர். பூதங்களின் உள்ளும் வெளியுமிருப்பவர். ஸ்தாவர ஜங்கமமான எல்லா வஸ்துவும் அவரே. சூக்ஷ்மமானவர், அறிய முடியாதவர், தூரத்திலுமிருப்பவர், சமீபத்திலுமிருப்பவர், ஒன்றாக இருக்கும் அப்பரமாத்மா பிராணிகளுக்குள் வெவ்வேறாயிருப்பதுபோல் காணப்படுகிறார். பூதங்களையெல்லாம் உண்டாக்கி, காப்பாற்றிப் பிறகு தன்னிடம் லயப்படுத்திக்கொள்பவர். ஒளிகளுக்கு ஒளியானவர். அறிவு அறியவேண்டியது அறிபடுபொருள் மூன்றுமாகி எல்லார் ஹிருதயத்திலுமிருப்பவர்.

இவ்விதம் க்ஷேத்ரம், க்ஷேத்ரக்ஞன் (ஜ்ஞேயம்), ஞானம் இவற்றை சுருக்கமாகச்சொன்னேன்—இவற்றை அறிந்த என் பக்தன் முக்தியடைகிறான்.

ப்ரக்ருதி புருஷன்.—இவ்விரண்டும் ஆதியற்றவை. மாறுபாடுகளும் (விகாரம்) குணங்களும் ப்ரக்ருதியிலிருந்து உண்டாகின்றன.

காரியமாகிய தேகத்தையும் கருவிகளாகிய இந்திரியங்களையும் உண்டுபண்ணுவதற்குக் காரணம் ப்ரக்ருதி அல்லது மாயை.

சுகதுக்காதிகளை அனுபவிப்பது ப்ரக்ருதிகாரணமாய் ஏற்பட்ட சரீரத்தில் தங்கியிருக்கும் ஜீவாத்மாவாகிய புருஷன்.

புருஷன் ப்ரக்ருதியுடன் ஸம்பந்தப்பட்டிருப்பதால் ப்ரக்ருதியிலிருந்துண்டான குணங்களை யனுபவித்து அந்தப்பற்றினால் பலஜன்மங்கள் ஏற்படுகிறது.

தேகத்திலுள்ள புருஷனது உண்மையானமேலான தன்மை ஈஸ்வரத்தன்மை—தேகத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதால் அத்தன்மை மறைந்திருக்கிறது. இவ்விதம் புருஷனையும் ப்ரக்ருதியையும் குணங்களையும் உள்ளபடி அறிபவர் மறுபிறப்படைவதில்லை.

ஞானத்தையடையும் மார்க்கங்கள் அல்லது சாதனங்கள்.

சிலர் தியானத்தினாலும், சிலர் ஸாங்கிய யோகத்தினாலும், மற்றும்சிலர் கர்மயோகத்தினாலும், கடவுளை அறிகின்றனர்; தானாகவே உணரும்பரிபவமில்லாதவர் பிறரைக்கேட்டுத்தெரிந்துகொண்டு முக்தியடைகின்றார்கள். உலகில் சிருஷ்டிக்கப்படும் யாவும் க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞனது. (இவற்றின் மூலமாகிய மாயை + கடவுள்) ஸம்பந்தத்தால் உண்டாகின்றன. எல்லாவற்றிலும் அழிவற்ற பரமேஸ்வரனை எவன் காண்கின்றானோ, அவன் உண்மையறிந்து தன்னை ஹிம்ஸித்துக்கொள்ளாமல், கர்மங்களெல்லாம் ப்ரக்ருதி சம்பந்தத்தால் ஏற்பட்டவையேயன்றி அவற்றிற்கு ஆத்மா கர்த்தாவல்ல என்பதை யுணர்ந்து, தனித்தனியாக காணப்படும் ப்ரபஞ்சவஸ்துக்களெல்லாம் ஏகமாகிய பரமாத்மாவிலிருப்பதாயும் அதிலிருந்தே விரிவதாயும் அறிந்துமுக்தியடைகிறான். பரமாத்மா அநாதி, நிர்குணர், அழிவற்றவர் ஆகலின் இந்த சரீரத்தில் இருந்தாலும் கர்மங்களினால் பற்றப்படுவதில்லை. சூக்ஷ்மமான ஆகாயம் எல்லா வஸ்துவிலுமிருந்தாலும் அவைகளில் ஒட்டுவதில்லை. அப்படியே ஒரே சூரியர் எல்லாவற்றையும் பிரகாசிப்பிக்கச்செய்வதுபோல் க்ஷேத்ரஜ்ஞனை பரமேஸ்வரனும் சகல சரீரங்களையும் பிரகாசிப்பிக்கின்றார். இவற்றையெல்லாம்

ஞானமாகிய கண்களினால் அறிந்தவர் அப்பரம்பொருளுடன் ஒன்றாக ஐக்கியமாகின்றனர்.

அத்தியாயம் 14.

குணத்ரய விபாகயோகம்.

குணங்களின் 3 பிரிவைக் கூறும் பாகம்.

கிருஷ்ணன்.—ஞானங்களுள் சிறந்த ஞானத்தை மறுபடி சொல்லுகிறேன். இந்த ஞானத்தை யடைந்து என்னை யடைந்தவர் பிறப்பிறப்பைத்தாண்டினவர். மஹத்ப்ரம்மம் அல்லது ப்ரக்ருதி என்பது எனது கருப்பை. சகல ஜீவராசிகளும் உண்டாவதற்கு வேண்டிய மூலப்பொருள் என்னிடமிருந்து இக்கருப்பையில் வைக்கப்படுகிறது.

ப்ரக்ருதியிலிருந்து சத்துவகுணம் ரஜோகுணம் தமோகுணம் இம்மூன்று குணங்கள் உண்டாகி தேஹியை தேகத்துடன் பிணிப்பதற்குக்காரணமாகின்றன.

ஸத்துவகுணம்—அழுக்கற்று, பிரகாசமாய், துன்பத்தை யுண்டாக்காமல், ஆத்மாவை சுகப்பற்றினாலும் ஞானப்பற்றினாலும் கட்டுகிறது.

ரஜோகுணம்.—ஆசைக்கும் பற்றுக்கும் காரணமாய் கர்மசம்பந்தத்தினால் தேஹியைக்கட்டுகிறது.

தமோகுணம்.—அஜ்ஞானத்திலிருந்து உண்டாகி, அஜாக்கிரதை, சோம்பல், தூக்கம் இவற்றினால் தேஹியை மயக்கமடையச் செய்கிறது.

சத்துவம்—சுகத்தை யடையச் செய்கிறது.

ரஜஸ்—கர்மத்தில் ஏவுகிறது.

தமஸ்—ஞானத்தை மறைத்து அஜாக்கிரதையை உண்டுபண்ணுகிறது.

சத்துவம்.—உத்தமமான பரிபக்குவமடைந்தவரிடம் ரஜோகுண தமோகுணத்தை அடக்கி, தான் விருத்தியடைகிறது.

ரஜோகுணம்—மத்திமரிடம், சத்துவ தமோகுணங்களை யடக்கித்தான் மேலாய் நிற்கிறது.

தமோகுணம்—அதமர்களிடம் சத்துவ ரஜோ குணங்களைக் கீழ்ப்படுத்தித்தான் விருத்தியடைகிறது.

சத்துவகுணம்—விஷயங்களின் உண்மையை அறிந்து, அறிவும் ஞானமுமாகிய பிரகாசம் இந்திரியாதிகளில் உண்டாகும்போது சத்துவகுணம் மேலிட்டிருப்பதற்கு அடையாளம்.

ரஜோகுணம்.—மேலிட்டதற்கு அடையாளம், லோபம், கர்மங்களில் ப்ரவிருத்தி, ஓய்வின்மை, ஆசை இவைகள் மிகுதியாயிருப்பது.

தமோகுணம்.—விருத்தியடைந்தால் பகுத்தறிவின்மை, கர்மத்தில் முயற்சியின்மை, அஜாக்கிரதை, சோம்பல், மயக்கம் இவை உண்டாகின்றன.

சத்துவகுணம்.—விருத்தியடைந்திருக்கும்போது மரணமடைந்தவன் பரிசுத்த உலகங்களை யடைகிறான்.

ரஜோகுணம்.—விருத்தியில் இறந்தவன் கர்மத்தில் பற்றும் விருப்பமுமுள்ள மனிதவர்க்கத்தில் பிறக்கிறான்.

தமோகுணம்.—விருத்தியில் இறந்தவன் மிருகவர்க்கத்தில் பிறக்கிறான்.

சாத்துவிக கர்மபலன்—பரிசுத்தமான சுகம்.

ரஜோகுண கர்மபலன்.—துக்கம்.

தமோகுண கர்மபலன்—மூடத்தன்மை.

சத்துவகுணத்திலிருந்து ஞானம் உண்டாகிறது.

ரஜோகுணத்திலிருந்து எத்தனை கிடைத்தாலும் திருப்தியில்லாத ஆசை உண்டாகிறது.

தமோகுணத்திலிருந்து அஜாக்கிரதை, விபரீத (திரிபான) ஞானம், அறிவின்மை இவைகள் உண்டாகின்றன.

சத்துவகுணத்திலுள்ளவர்—மேற்செல்லுகின்றார்கள்—உத்தமர்.

ரஜோகுணத்திலுள்ளவர்—நடுவிலிருக்கும் மத்திமர்.

தமோகுணத்தவர்—கீழ் நோக்கிச்செல்லும் அதமர்.

விவேகியானவன்—குணங்களே கர்த்தா, ஆத்மா கர்த்தா அல்ல என்பதை அறிந்து தேகாதிகளுக்குக் காரணமான முக்குணங்களையும் கடந்து பிறப்பிறப்பு மூப்பு துக்கத்தினின்று விடுபட்டு ப்ரம்மத்தை யடைகிறான்.

அர்ஜுனன்—இம்முக்குணங்களைக் கடந்தவனது லக்ஷணம் யாது? கடப்பது எப்படி?

கிருஷ்ணன்—குணாதீதன் ப்ரக்ருதியிலிருந்து உண்டான ப்ரகாசம் (சத்துவம்), ப்ரவ்ருத்தி (ரஜஸ்), மோகம் (தமஸ்) இவற்றை த்வேஷிக்காமலும், அபேக்ஷிக்காமலும், குணசம்பந்தத்தாலுண்டான சுகாதிகளினால் சலிக்காமல், குணங்களே கர்த்தா என்பதையறிந்து துக்க சுகம், மண்கட்டி, கல்பொன், இஷ்ட அநிஷ்டம், மான அவமானம், மித்திரன் சத்துரு எல்லாவற்றையும் சமமாகக்கருதி கடவுள் பக்தியுடன் இருப்பான். பக்தியுடன் என்னை உபாஸிப்பவன் முக்குணங்களையும் தாண்டி ப்ரம்மத்துடன் லயமாகின்றான்.

அத்தியாயம் 15.

புருஷோத்தம ப்ராப்தி யோகம்.

சம்சாரமாகிய அஸ்வத்த (நிலையற்ற) விருக்ஷம்—பகவானை மூலமாயும் கீழே கிளைகளையுமுடையது. அழிவற்றது. வேதங்கள் அதன் இலைகள். அதன் கிளைகள் கீழ்மேலுலகங்களில் பரவியுள்ளது. சத்துவாதி குணங்களால் நன்றாய் வளர்ந்துள்ளது. சப்தாதிவிஷயங்கள் அதன் துளிர்கள். உலகத்தில் கர்மத்தை யுண்டாக்கி தொடர்ச்சியாய் பரவியுள்ளது. ஆதி அந்தம் நடுவும் தெரியாமல் அத்தனை விஸ்தாரமாய் வளர்ந்துள்ளது. திடமான பற்றின்மை யென்னும் கோடாரியினால் இந்த விருக்ஷத்தை வெட்டி இதன்மூலமாகிய கடவுளை யடைய முயற்சி செய்ய வேண்டும்.

அதை அடைபவர்—அகங்காரம், மோகம் நீங்கி, பற்றின்றி, ஒழிவடைந்து, த்வந்த்வங்களால் விடப்பட்டு பக்தியுடன் கூடிய ஞானிகள், அந்த அழிவில்லாத பதவியை யடைகின்றனர்.

உயர்ந்தபதவி—சூர்யன், சந்திரன், அக்கினி அந்த இடத்தைப் பிரகாசிக்கச் செய்வதில்லை (ஸ்வப்ரகாசமுள்ளது).

இழற்குத்தடை—(எனது அம்சமாய் அனாதியாயினும்) ப்ரகிருதி சம்பந்தப்பட்ட ஜீவன், இந்திரியங்களை உலகவிஷயங்களில் இழுத்து, ஒருதேகத்தைவிட்டு வேறொருதேகத்துக்குப் போகும்போதும் புஷ்ப வாஸனையைக் காற்றுக் கொண்டு போவதுபோல் இந்திரியங்களையும் உடன்கொண்டு செல்லுகின்றான். ஜீவன் இந்திரியங்களின் மூலமாய் விஷயங்களை யனுபவிக்கிறான். இந்த ஜீவனை அஜ்ஞானிகள் அறியார்; ஞானக்கண்ணுள்ளவர்கள் பார்க்கிறார்கள்.

புருஷோத்தமரது தன்மை. சூரிய சந்திராதிகளின் ப்ரகாசம் என்னுடைய பிரகாசமே. நானே பூமியிலிருந்து பிராணிகளைத் தாங்குகிறேன். பயிர்களை போஷிக்கின்றேன். பிராணிகளின் சரீரத்தில் அக்கினியாயும் வாயுவாயுமிருந்து அவர்கள் உண்ட அன்னத்தை ஜீரணிக்கிறேன். எல்லாரிடமும் அந்தர்யாமியா யிருக்கிறேன். நினைவு, அறிவு, மறதி எல்லாம் என்னாலேயே. வேதங்களைச் செய்தவன் வேதங்களினால் அறியத் தகுந்தவன் நான்.

க்ஷரம் அக்ஷரம்—அழியும் வஸ்துக்களெல்லாம் க்ஷரம். அவற்றுள் அழிடாமல் சத்தாயிருப்பது அக்ஷரம். இவ்விரண்டுக்கும் மேலாய் ப்ரபஞ்சத்தைத்தாங்கும் மேலானவஸ்துவே பரமாத்மா. இவற்றுக்கெல்லாம் மேலானவனாதலின் நான் புருஷோத்தமன் எனப்படுகிறேன். என்னை இவ்விதமாயறிந்தவன் முழுமனதுடன் ஆராதிக்கின்றான். நான் சொன்ன இந்த அதிரகசியமான விஷயத்தை நீ யறிந்து ஞானமடைவாயாக.

அத்தியாயம் 16

ஸம்பத்விபாக யோகம்.

தெய்வசம்பத் அசுரசம்பத் என இருவிதம்.

தெய்வ சம்பத்துடையவன் அடைவது—பயமின்மை, பரிசுத்தம், ஞானம், யோகத்தில் உறுதி, தானம், தமம், சமம், யஜ்ஞம், அத்யயநம், தபஸ், நேர்மை, அஹிம்ஸை, உண்மை, கோபமின்மை; பரித்தியாகம், சாந்தி, கோட்சொல்லாமை, தயவு, அவாவின்மை, கருணை, தகாதகாரியஞ் செய்வதில் நாணம், சபலமின்மை, பெருந்தன்மை, பொறுமை, தைரியம், துரோகஞ்செய்யாமை, கர்வமின்மை இவைகள்.

அசுரசம்பத்துள்ளவன்—டம்பம், செருக்கு, தான் என்னும் மதிப்பு, கோபம், கொடூரத்தன்மை, அஜ்ஞானம் இவற்றுடன் ஜனித்தவன். தெய்வ சம்பத்து பந்தநிவ்ருத்தியையும் அசுரசம்பத்து சம்சார பந்தத்தையும் உண்டாக்குகிறது. சிருஷ்டிகள் தைவசிருஷ்டி அசுரசிருஷ்டி யென இருவிதம். அசுர சுபாவமுள்ளவன் தர்மமார்க்கத்தையும் அதர்ம நிவ்ருத்தியையும் அறியான். அவனிடம் சுத்தம், ஆசாரம், சத்தியம் இவை கிடையாது. வேதாதிகள், தர்மாதர்மம், ஈஸ்வரன், இவற்றில் நம்பிக்கையின்றி, ஸ்திரீ புருஷ சம்பந்தத்தினாலேயே உலகம் பிரவிருத்திக்கின்றதென்றும் இதற்குக் கடவுள் ஒருவர் இருக்கவேண்டிய அவசியமில்லையென்றும் சொல்லுகிறான். இந்தக்கொள்கையையுள்ள அற்ப அறிவும், குரூரகர்மமும் உள்ள அசுரசம்பத்துள்ளவர்கள் உலகத்தை கெடுப்பதற்கு அநேகர் இருக்கிறார்கள். இவர்கள் திருப்தியற்ற ஆசையும், டம்பம், கர்வம், மதமும் உடையவர்கள். எப்போதும் கவலையும் உலகவிஷயமே மேலான புருஷார்த்தமென்னும் எண்ணமும் கொண்டு ஆசையாகிய பாசத்தினால் கட்டப்பட்டு அதை அடையும்பொருட்டு அநியாயமாகப் பணம் சேர்ப்பவர்கள். இது எனது, இன்னும் எனக்குப் பொருள்வரும், இந்த சத்துரு என்னால் கொல்லப்பட்டான், மற்றவர்களையும் நான் கொல்லுவேன், நானே ஆள்பவன், அனுபவிப்பவன், அமையப் பெற்றவன், பலம், சுகம், சம்பத்து, உயர்குலம் இவற்றையுடை

யேன், எனக்கு சமானம் வேறு யாருமில்லை. என்றால் எல்லாம் முடியும் என்றிவ்வாறு பிரமைபடைந்து மோஹமடைந்து விஷய போகங்களில் அழுந்தி அசுத்தமான நரகத்தில் விழுகின்றனர். தம்மைத்தாமே மதித்து, வணக்கமின்றி டம்பம் கர்வம் மதத்துடன் உண்மையான பக்தியின்றி, பெயருக்கு மாத்திரமேயான யஜ்ஞாதிகள் செய்து, அகங்காரம், இறுமாப்பு, ஆசை, கோபம் இவற்றையுடையவர்களாய், தெய்வநிந்தனை செய்யும் இவர்களை மறுபடி மறுபடி அசுரஜந்மமே உண்டாகும்படி செய்கிறேன்.

காமம், குரோதம், லோபம் இம்மூன்றுமே அசுரஜன்மத்துக்கு முக்கிய காரணம். ஆதலின் அவற்றைவிட்டு சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டதைச் செய்து விலக்கப்பட்டதை விட்டு நன்மையைச் செய்துகொண்டு மோக்ஷத்தை நாடவேண்டும்.

அத்தியாயம் 17.

ஶ்ரத்தாத்ரய விபாக யோகம்.

3 வித ஶ்ரத்தைகள்.

அர்ஜுனன்—ஶாஸ்திரங்களையெல்லாம் விட்டு, சிரத்தையுடன் கடவுளிடம் பக்தியுள்ளவர்கள் நிலைமை யாது?

கிருஷ்ணன் விடை—

ஶ்ரத்தை மூன்றுவிதம்—ஸாத்துவிக சிரத்தையுடையவர் தேவதைகளையும், ராஜஸ சிரத்தையினர் யக்ஷ ராக்ஷதர்களையும், தாமஸ சிரத்தையினர் பூதப்பிரேதங்களையும் பூஜிக்கின்றனர். சாஸ்திரவிதியை விட்டவர்களுடைய பக்தி, தாமஸ சிரத்தையுடையதாய் கீழான பக்தியாயிருக்கும்.

ஆகாரம் மூன்றுவிதம்—சாத்துவிக ஆகாரம்—ஆயுள், தைரியம், பலம், ஆரோக்கியம், சுகம், சந்தோஷம் இவற்றை விருத்தி செய்வதாய், ரசம் பசையுள்ளதாய், மனதுக்கு இன்பத்தை யுண்டாக்கும்.

ராஜஸ ஆகாரம்—அதிக கசப்பு, புளிப்பு, உப்பு, சூடு, காரம், வறட்சி இவற்றை யுண்டுபண்ணி, துக்கம், சோகம், வியாதி இவற்றைக் கொடுக்கும் உணவுகள்.

தாமஸ ஆகாரம்—பக்குவமாகாத, சாரமற்ற, துர்வாசனையுள்ள, பழையதான, மீதியான, அசுத்தமான ஆகாரம். இம்மூன்றுவித ஆகாரமும் சத்துவ, ரஜோ, தமோகுண, முடையவர்களால் முறையே விரும்பப்படுவது.

யஜ்ஞம் மூன்றுவிதம்—சாத்துவிக யஜ்ஞம்—பலனை விரும்பாமல் 'செய்யவேண்டும்' என்னும் உறுதியுடன் செய்யும் யஜ்ஞம். ராஜஸ யஜ்ஞம்—பலனை யிச்சித்து டம்பத்துக்காகச் செய்யும் யஜ்ஞம். தாமஸ யஜ்ஞம்—முறைப்படியின்றி, அன்னதானம், மந்திரம், தக்ஷிணை, சிரத்தை இவைகளின்றிச் செய்யும் யஜ்ஞம்.

தபஸ் மூன்றுவிதம்—

(1) சாத்துவிக தபஸ்—பலனை வேண்டாமல் செய்யப்படும். இது மூன்றுவிதம்.

சரீரத்தினால் செய்யும் தபஸ்—பெரியோர்களை வணக்கத்துடன் பூஜிப்பது, பரிசுத்தம், நேர்மை (நன்னடத்தை), பிரம்மசர்யம், பிறருக்கு எவ்விதத்திலும் துன்பம் செய்யாமை.

வாக்கினால் செய்யும் தபஸ்—பிறர் மனம் நோகச் செய்யாமல், உண்மையான, ஹிதமான வார்த்தைகளையே சொல்லுவது, வேதம் (அறிவை விருத்தி செய்யக்கூடிய வித்தைகளை) சொல்லிக்கொண்டு பிறருக்கும் உபதேசித்தல்.

மனதினால் செய்யும் தபஸ்—தெளிந்த அறிவு, நல்ல ஹ்ருதயம், மௌனமாய் கடவுளைத் தியானம் செய்வது, அடக்கம் முதலியன.

(2) ராஜஸ தபஸ்—பிறரால் மதிக்கப்படுவதற்காகவும் புகழ்ச்சிக்காகவும் டம்பத்துடன் செய்யும் தபஸ். இது சஞ்சலமானது, ஸ்திரமில்லாதது, பரலோக ஸாதனமற்றது.

(3) தாமஸ தபஸ்—தன் சரீரத்தை கிலேசித்துக்கொண்டு, பிறர் நாசத்தின்பொருட்டு செய்யப்படுவது.

தானம் மூன்றுவிதம்—சாத்துவிக தானம்—பிறருக்குக் கொடுக்கவேண்டியது தன் கடமை என்று உணர்ந்து புண்ணியமான இடங்களில், புண்ணியமான காலங்களில், சத்தான பாத்திரங்களுக்கு, பிரதியுபகாரத்தைக் கருதாமல் செய்யப்படும் தானம்.

ராஜஸ தானம்—பிரதி யுபகாரத்தை எதிர்பார்த்தும் பலனை விரும்பியும், வருத்தத்துடனும் கொடுக்கப்படும் தானம்.

தாமஸ தானம்—அசுத்தமான இடம் காலத்தில் அயோக்கியர்களுக்கு, பூஜை முதலியது இன்றி, அவமரியாதையுடன் கொடுக்கப்படுவது.

பரப்ரம்மத்தின் 3 பெயர்—ஓம் தத் ஸத். யஜ்ஞம், தானம், தபஸ் முதலிய கிரியைகள் ஓம் என்பதை சொல்லியும், தத் என்பதை உச்சரித்தும், மங்களகரமான காரியங்கள் எல்லாம் ஸத் என்பதை உச்சரித்தும் ஆரம்பிக்கப்படுகின்றன. இவைகளெல்லாம் சிரத்தையுடன் செய்யப்படுவது. சிரத்தையின்றி செய்யப்படுவதெல்லாம் அஸத் எனப்படும். அவை இகத்துக்கும் பரத்துக்கும் பிரயோஜனம் இல்லை.

அத்தியாயம் 18.

அர்ஜுனன்.—ஸந்நியாஸம், தியாகம் இவ்விரண்டையும் விவரித்துச் சொல்லவேண்டும்.

கிருஷ்ணன்.—காமிய கர்மங்களை விடுவது ஸந்நியாஸம், சகல கர்மங்களின் பலனை விடுதல் தியாகம், கர்மத்தையே விட்டுவிடவேண்டுமென்று சிலரும், யஜ்ஞம், தானம், தபஸ் முதலானசத் கர்மங்களை மாத்திரம் விடக்கூடாது என மற்றவர்களும் சொல்லுகிறார்கள்.

தியாகம் 3 விதம்.—யஜ்ஞம், தானம், தபஸ் முதலான கர்மங்கள் சித்தத்தை பரிசுத்தப்படுத்துவதால் விடத்தகுந்ததல்ல. பற்றின்றி, தான் கருத்தா என்னும் அபிமானமின்றி, இந்த கருமங்களை செய்யவேண்டும். தாமத தியாகம்— அவிவேகத்தினால் நித்திய கர்மத்தையும் விட்டுவிடுவது. ராஜஸ தியாகம். சரீரப்பிரயாசைக்குப் பயந்து கர்மத்தை விடுவது. ஸாத்துவிக தியாகம்—நமது கடமை என்று கருதி செய்யவேண்டியதை அபிமானமும் பற்றுமின்றி பலனில் விருப்பமின்றிச் செய்வது. ஸாத்துவிகத் தியாகி ஸ்திரபுத்தியுடன் எதிலும் விருப்பு வெறுப்பின்றி கர்ம பலனை விரும்பாமல் கர்மம் செய்வான்.

தேகத்துடன்கூடி யிருக்கும்வரைக்கும் கர்மத்தையே முழுவதும் விடுவது முடியாது. கர்மபலனை விடுபவனே தியாகி எனப்படுவான்.

கர்மபலன் 3 விதம்—இஷ்டமானது ஸ்வர்க்காதி அனுபவம், துக்கமானது—நரகாதி பிராப்தி, கலப்பானது அல்லது மிஸ்ரம். சுகதுக்கமிரண்டும் கலந்த மனிதஜன்மம். இவை பலனை உத்தேசித்து கர்மம் செய்பவர்களுக்கு. பலனை இச்சிக்காதவருக்கு, இவை ஒன்றுமில்லை.

கர்மத்துக்கு காரணம் 5.—சரீரம், ஆத்மா, இந்திரியம், அவற்றின் செய்கைகள், ஸர்வவியாபியான கடவுள். இவ்வுண்மையை யறிந்து 'நான் கர்த்தா,' என்னும் எண்ணம் இன்றி தொழில் செய்பவன் பலாபலனினால் கட்டுப்படுவதில்லை.

கர்மம் செய்யும்படி ஏவுவது 3.—அறிவு, அறியப்படும் பொருள், அறிபவன்.

கர்மத்துக்கு இருப்பிடம் 3.—இந்திரியங்கள், செய்யப்படும் கர்மம், செய்பவன்.

ஞானம் 3 விதம்.—குணங்களுக்குத் தகுந்தபடி. சாத்துவிக ஞானம்—கடவுள் ஒருவரே; ப்ரபஞ்சத்தில் தனித்தனியாக காணப்படும் எல்லாவஸ்துக்களிலும் கடவுள் ஒரே தொடர்ச்சியாக வியாபித்திருக்கிறார் என்னும் உணர்ச்சி அல்லது அறிவு. ராஜஸ ஞானம்.—ஒரே கடவுள் எல்லாவற்றிலும் அந்தர்யாமியாயிருக்கிறார் என்பதை உணராமல் ஒவ்வொன்றிலுமுள்ள ஜீவனை தனித்தனியானது என்று நினைக்கும் அறிவு.

தாமஸ ஞானம்.—ஜீவேஸ்வரர்களது ஸர்வவியாபகத்தன்மையையும் உண்மையையும் உணராமல் குறுகின எண்ணத்துடன் அற்பவிஷயங்களையும் அற்பபலனையுமே பூர்த்தியாகக் கருதும் ஞானம்.

கர்மம் 3 விதம்.–பலாபேக்ஷையின்றி, கர்த்தா என்னும் அபிமானமின்றி, விருப்பு வெறுப்பின்றி, செய்யப்படுவது சாத்துவிக கர்மம். பலனிலிச்சையுடன். கர்த்தா என்னும் அகங்காரத்துடன், சிரமத்துடன், செய்யப்படுவது ராஜஸ கர்மம் முன்.

யோசனையின்றி, பலன், பொருள் விரயம், தன் சக்தி இவற்றையெல்லாம் கவனிக்காமல் அவிவேகத்தினால் செய்யப்படுவது தாமஸ கர்மம்.

கர்த்தா 3 விதம்—ஸாத்துவிக கர்த்தா "நான் கர்த்தா" என்னாமல் பலாபேக்ஷையின்றி, தைரியம் முயற்சியுடன், காரிய முடிவில் ஏற்படும் ஜயாபஜயத்தில் விருப்பு வெறுப்பின்றி, கர்மம் செய்பவன். ராஜஸ கர்த்தா—பலனில் விருப்பத்துடன், பிறர் பொருளில் இச்சையுடன், பர ஹிம்சை செய்து, ஜயாபஜயத்தில் சந்தோஷமும் வியஸனமும் அடைபவன். தாமஸ கர்த்தா—மன அமைதி, விவேகம், வணக்கம் அற்று, சோம்பல், வருத்தம், பிறர் மேல் பகை இவைகளை யுடையவனாய் காலதாமதம் செய்பவன்.

புத்தி 3 விதம்.—ஸாத்துவிக புத்தி–உலகத்தின் தோற்ற ஒடுக்கம், செய்யத்தகுந்தது செய்யத்தகாதது, எதற்குப் பயப்படவேண்டும் எதற்குப் பயப்படவேண்டாம், பந்தப்படுத்துவது எது, விடுதலை யடைவது எவ்விதம் என்னும் இவ்விஷயங்களை யாராய்ச்சி செய்யும் புத்தி. ராஜஸ புத்தி—தர்ம அதர்மம், செய்யத்தகுந்தது தகாதது முதலானவற்றை நிச்சயமாக உள்ளபடி உணரும் சக்தியும் அறிவுமின்றி சந்தேகமாகத் தெரிந்துகொள்ளும் புத்தி. தாமஸ புத்தி –தர்மாதர்ம விஷயங்களை விபரீதமாக அல்லது திரிபாக ஒன்றை மற்றொன்றாக அறியும் புத்தி.

தைரியம் 3 விதம்.–சாத்துவிக தைரியம் வெளி விஷயங்களில் செல்லாமல் மனது இந்திரியங்களை ஒரே நிலையில் நிறுத்தி சலிக்காமலிருப்பதற்கு வேண்டிய தைரியம். ராஜஸ தைரியம்–தர்மார்த்த காமாதிகளில் பற்றுடன் பலனை அபேக்ஷித்து அதற்கு அனுகூலமாய் கர்மத்தை செய்வதற்கு வேண்டிய தைரியம். தாமஸ தைரியம்–இது அசட்டு தைரியம், விவேகமில்லாத தைரியம். நித்திரை, பயம், துக்கம், சோர்வு, மதம் இவற்றை விடாமலிருக்கும் மூட தைரியம்.

சுகம் 3 விதம்.—துக்கத்தைத் தவிர்த்து உண்மையான சந்தோஷத்தை யடைவதே சுகம் எனப்படும். சாத்துவிக சுகம்–மன அமைதியினாலும் தெளிந்த அறிவினாலு முண்டாவது. இது ஆரம்பத்தில் விஷம்போன்றும் முடிவில் அம்ருதம் போன்று

மிருப்பது. ராஜஸ சுகம்—விஷய இந்திரிய சம்பந்தத்தினாலுண்டாகி, ஆரம்பத்தில் அம்ருதம் போன்றும், முடிவில் விஷம் போன்று மிருப்பது. தாமத சுகம்—தூக்கம், மயக்கம், சோம்பல், அசட்டை இவற்றினாலுண்டாகும் சுகம்.

தேவர், மனிதர் முதலிய யாவரும் முக்குணங்களின் வசப்பட்டவரே.

நான்கு வருணத்தவரும் அவரவரது சத்துவாதி குணங்களுக்கேற்பட்ட கர்மங்களை யுடையவர்.

ப்ராம்மணரின் கர்மமும் குணமும்—மனதையும் இந்திரியங்களையும் அடக்கி, மனோவாக்குக் காயங்களால் பிறருக்குபகாரமான தபஸைச் செய்துகொண்டு, மனதும் சரீரமும் சுத்தமாய், பொறுமையுடன், நன்னெறியில் நடந்துகொண்டு, சாஸ்திர ஞானம் அனுபவ அறிவுடன், கடவுள் ஒருவர் உண்டு என்னும் நம்பிக்கையுடனும் பக்தியுடனும் இருக்கவேண்டும்.

க்ஷத்திரியர்களது குணமும் கர்மமும்.—பராக்கிரமம், கீர்த்தி, தைரியம், புத்திக்கூர்மை, சாமர்த்தியம், போரில் புறங்கொடாமை, கொடை, பிரஜைகளை அடக்கி அன்புடன் ஆளும் சக்தி முதலானவை.

வைஸ்யர்களது குணகர்மம்.பயிரிடுதல், ஆடுமாடுகளைக் காத்தல், வியாபாரம் செய்தல்.

ஸூத்திரர்களது குணகர்மம்.–மற்ற மூன்று வருணத்தாருக்கும் ஊழியம் செய்வது.

அவனவன் தனக்கு விதித்துள்ள கர்மம் சிரேஷ்டமில்லாவிட்டாலும் அதை கிரமமாகச் செய்துகொண்டு ஸர்வ வியாபியான கடவுளை பக்தியுடன் பூஜித்துக்கொண்டிருந்தால் அவன் பாபத்தை அடையமாட்டான். எவனும் தன் கர்மத்தை விடக்கூடாது. எந்தவிதக் கர்மமும் புகையினால் சூழப்பட்ட அக்கினி போல் தோஷத்தை யுடையதே. ஆனால் பற்றின்றி, பலாபேக்ஷையின்றி, ஆசையற்று தன் கருமத்தை செய்பவன், கர்மம் நீங்கின நிலைமையை அடைகிறான்.

பரப்பிரம்மத்தை அடைவதற்கு வேண்டிய ஞானமும் சாதனமும்.—தெளிந்த அறிவுடன், தைரியத்தினால் இந்திரியாதிகளை அடக்கி, விருப்பு வெறுப்பற்று, ஏகாந்தத்தை விரும்பி, ஆகாராதிகளில் மிதமாய், மனோவாக்குக் காயங்களை அடக்கி, ப்ரம்மத்தியானத்திலேயே எப்போதும் லயித்து, ஆசை, கோபம், அபிமானம், மமதை இவற்றைவிட்டு, ஒழிவை யடைந்தவனே முக்திக்கு அர்ஹன். இவன் சாந்த மனதுடன் விருப்பு, வெறுப்பு, சுகம், துக்கம் முதலிய த்வந்த்வ மின்றி, எல்லாரிடத்திலும் சமமாயிருந்துகொண்டு, கடவுளது தன்மையை ஐயந்திறிபு இன்றி உள்ளபடி உணர்ந்து, எந்தக்கர்மம் செய்தாலும் அதை ஈஸ்வரார்ப்பணமாகச் செய்து, கடவுளிடத்தில் சிரேஷ்டமான நம்பிக்கையுடனும் பக்தியுடனு மிருந்து, முடிவில் உலகபந்தத்திலிருந்து விடுபட்டு மோக்ஷத்தை யடைகிறான்.

ஹே அர்ஜுன, என்னிடத்திலேயே உன் மனதை வைத்து உன் கர்மத்தைச் செய். யுத்தம் செய்யமாட்டேன் என்று உன் ரஜோகுண புத்தியினால் எண்ணுவது வீண். உன் செயலன்றியே இந்த யுத்தத்தை நீ செய்பப்போகிறாய். உன்னிலுள்ள ஈஸ்வரனது மாயையால் நீ ஆட்டுவிக்கப்படுகிறாய். ஆதலால் எல்லாம் வல்ல கடவுளையே சரணமடைந்து, மன நிம்மதி அல்லது ஒழிவை யடைந்து, நித்தியமான பதவியை அடைவாயாக. அதிரகஸ்யமான, யாவருக்குமே எளிதில் விளங்கக்கூடாத இந்த கீதா சாஸ்திரம் உனக்கு இதுவரை உபதேசிக்கப்பட்டது. என் பிரியமான மித்திரன் நீ ஆதலால் உனக்கு ஹிதமானதைச் சொல்லுகிறேன். என்னிடத்திலேயே மனதை நிறுத்தி என்னிடத்திலேயே பக்தி பூண்டு ஆராதிப்பாயாக, என்னையே வணங்கி என்னையே நம்பி அடைவாயாக. உன் ஸகல தர்மங்களின் பலனைவிட்டு என்னையே சரணமடைந்தால் உன் பாபங்களினின்றும் உன்னை விடுவிப்பேன். வருந்தாதே. எல்லாவிதத்திலும் பரிபக்குவமுடையவனுக்கே கீதை உபதேசிக்கப்படவேண்டும். என்னிடம் பக்தியுடன் கீதையைக் கற்று அறிந்து பிறருக்கும் உபதேசிப்பவன் எனக்கு பிரியமானவன். அவனே என்னை ஞானமாகிய யஜ்ஞத்தினால் பூஜிக்கின்றான்.
துக்கேஷு - துக்கம் நேர்ந்தால், அநுத்விக்நமநாஃ - துடிக்காத மனதையுடையவனும், ஸுகேஷு - சுகம் நேர்ந்தால், விகதஸ்ப்ருஹஃ - (அதில்) பற்று இல்லாதவனும், வீதராக பயக்ரோதஃ - ஆசை, பயம், கோபம் இவைகளில்லாமலிருக்கிற, முநிஃ - (மௌந நிலையை யடைந்த) யோகி, ஸ்திததீஃ ப்ரம்ம ஞானியென்று, உச்யதே - சொல்லப்படுகிறான்.

यः सर्वत्रानभिस्नेहस्तत्तत्प्राप्य शुभाशुभम् ।
नाभिनन्दति न द्वेष्टि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५७ ॥

57. ய꞉ ஸர்வத்ர அநபி⁴ஸ்நேஹ꞉ தத் தத் ப்ராப்ய ஶுபா⁴ஶுப⁴ம்
ந அபி⁴நந்த³தி ந த்³வேஷ்டி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டி²தா.

யஃ - எவன், ஸர்வத்ர - எல்லாவற்றிலும், அநபிஸ்நேஹஃ - அபிமானமற்றவனோ, தத் தத் ஶுபா ஶுபம் ப்ராப்ய - அந்தந்த இஷ்ட அநிஷ்டங்களை அடையும்போது, ந அபிநந்ததி ந த்வேஷ்டி - விருப்பு வெறுப்பை யடைவதில்லையோ, தஸ்ய ப்ரஜ்ஞா - அவனது ஞானம், ப்ரதிஷ்டிதா - நிலைத்தது.

यदा संहरते चायं कूर्मोऽङ्गानीव सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५८ ॥

58. யதா³ ஸம்ஹரதே ச அயம் கூர்ம꞉ அங்கா³நி இவ ஸர்வஶ꞉
இந்த்³ரியாணி இந்த்³ரியார்தே²ப்⁴ய꞉ தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டி²தா.

அயம் - இவ்வாத்மஞானி, கூர்மஃ - ஆமையானது, அங்காநி இவ - தலை நான்கு கால் இவ்வைந்தையும் உள்ளுக்குள் இழுத்துக் கொள்வது போல், ஸர்வஶஃ - ஸகலமான, இந்திரியார்த்தேப்யஃ -

இந்திரிய விஷயங்களிலிருந்தும், இந்திரியாணி - 5 இந்திரியங்களையும், யதா - எப்போது, ஸம்ஹரதே - இழுத்து அடக்கிக் கொள்கிறானோ (அப்போது), தஸ்ய ப்ராஜ்ஞா ப்ரதிஷ்டிதா - அவனுடைய ஞானம் நிலைத்தது.

विषया विनिवर्तन्ते निराहारस्य देहिनः ।
रसवर्जं रसोऽप्यस्य परं दृष्ट्वा निवर्तते ॥ ५९ ॥

59. விஷயா: விநிவர்தந்தே நிராஹாரஸ்ய தே³ஹிந:
ரஸவர்ஜம் ரஸ: அபி அஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்ததே.

நிராஹாரஸ்ய தே³ஹிந: - (விஷயத்தை அனுபவித்தலாகிய) ஆகாரம் இல்லாமலிருக்கும் ஆத்மாவுக்கு, ரஸவர்ஜம் - இச்சையைத் தவிர, விஷயா: - விஷய அனுபவங்கள், விநிவர்தந்தே - நிவர்த்தியாய்விடும், அஸ்ய - இந்த ஞானிக்கு, ரஸோபி - (விஷய) இச்சை கூட, பரம் த்ருஷ்ட்வா - பரப்ரமத்தை பார்த்து (அறிந்து), நிவர்த்ததே - நிவ்ருத்தி யாகிறது.

यततो ह्यपि कौन्तेय पुरुषस्य विपश्चितः ।
इन्द्रियाणि प्रमाथीनि हरन्ति प्रसभं मनः ॥ ६० ॥

60. யதத: ஹி அபி கௌந்தேய புருஷஸ்ய விபஶ்சித:
இந்த்³ரியாணி ப்ரமாதீ²நி ஹரந்தி ப்ரஸப⁴ம் மந:.

ஹே கௌந்தேய!, ஹி - ஏனெனில், யதத: - (முக்தி யடைவதற்கு) முயற்சி செய்யும், விபஶ்சித: - விவேகியான், புருஷஸ்ய மனோபி - புருஷனுடைய மனதைக் கூட, ப்ரமாதீநி இந்திரியாணி - கலங்கச் செய்யும் இந்திரியங்கள், ப்ரஸப⁴ம் - வலுவாக, ஹரந்தி - இழுத்துச் செல்கின்றன.

तानि सर्वाणि संयम्य युक्त आसीत मत्परः ।
वशे हि यस्येन्द्रियाणि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६१ ॥

61. தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த: ஆஸீத மத்பர:
வஶே ஹி யஸ்ய இந்த்³ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா.

ஹி - ஆதலால், தாநி ஸர்வாணி ஸம்யம்ய - அவைகளை (இந்திரியங்களை) எல்லாம் நன்றாய் அடக்கி, யுக்த: - மனம் ஒரு நிலைப்பட்டு, மத்பர: - என்னையே மேலாகக்கொண்டு, ஆஸீத - இருப்பாயாக. யஸ்ய வஶே - எவனது வசத்தில், இந்திரியாணி - இந்திரியங்கள் (இருக்கின்றனவோ), தஸ்ய ப்ராஜ்ஞா ப்ரதிஷ்டிதா - அவனது ஞானம் நிலைத்தது.

ध्यायतो विषयान्पुंसः सङ्गस्तेषूपजायते ।
सङ्गात्सञ्जायते कामः कामात्क्रोधोऽभिजायते ॥ ६२ ॥

62. த்⁴யாயத: விஷயாந் பும்ஸ: ஸங்க³: தேஷு உபஜாயதே
ஸங்கா³த் ஸஞ்ஜாயதே காம: காமாத் க்ரோத⁴: அபி⁴ஜாயதே.

क्रोधाद्भवति सम्मोहः सम्मोहात्स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद्बुद्धिनाशो बुद्धिनाशात्प्रणश्यति ॥ ६३ ॥

63. க்ரோதா⁴த் ப⁴வதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்ம்ருதிவிப்⁴ரம:
ஸ்ம்ருதி ப்⁴ரம்ஶாத் பு³த்³தி⁴நாஶ: பு³த்³தி⁴நாஶாத் ப்ரணஶ்யதி.

விஷயாந் - விஷயங்களை, த்யாயத: பும்ஸ: - நினைத்துக்கொண்டிருக்கும் புருஷனுக்கு, தேஷு - அவைகளில், ஸங்க³: - பற்று அல்லது பிரியம், உபஜாயதே - உண்டாகிறது. ஸங்கா³த் - பற்றுதலிலிருந்து, காம: - (அவைகளை அடையவேண்டும் என்னும்) ஆசையானது, ஸஞ்ஜாயதே - உண்டாகிறது, காமாத் - ஆசையிலிருந்து, க்ரோத: (கிடைக்கப் பெறாமையால்) கோபம், அபிஜாயதே - உண்டாகிறது, க்ரோதாத் - கோபத்திலிருந்து, ஸம்மோஹ: ப⁴வதி - மோஹம் (விவேகமின்மை) உண்டாகிறது. ஸம்மோஹாத் மோஹத்திலிருந்து, ஸ்ம்ருதிவிப்ரம: - ஞாபகமின்மை (உண்டாகிறது), ஸ்ம்ருதி ப்ரம்ஶாத் - நினைவின்மையிலிருந்து, புத்திநாஶ: - புத்திக் கேடு (ஏற்படுகிறது), புத்தி நாஶாத் - புத்தி நாசத்தினால், ப்ரணஶ்யதி - (ஒருவன்) நசித்துப்போகிறான்.

रागद्वेषवियुक्तैस्तु विषयानिन्द्रियैश्चरन् ।
आत्मवश्यैर्विधेयात्मा प्रसादमधिगच्छति ॥ ६४ ॥

64. ராகத்வேஷ வியுக்தைஃ து விஷயாந் இந்த்ரியைஃ சரந்,
ஆத்மவஸ்யைஃ விதேயாத்மா ப்ரஸாதம் அதிகச்சதி.

விதேயாத்மா து - தன் வசப்படுத்தின மனதை யுடையவன், ராகத்வேஷவியுக்தைஃ-விருப்பு வெறுப்பின்றி, ஆத்மவஸ்யைஃ இந்த்ரியைஃ - தன் வசமான இந்திரியங்களால், விஷயாந் சரந் - விஷயங்களை அனுபவித்துக்கொண்டு, ப்ரஸாதம் - மனச்சாந்தியை அதிகச்சதி - அடைகிறான்.

प्रसादे सर्वदुःखानां हानिरस्योपजायते ।
प्रसन्नचेतसो ह्याशु बुद्धिः पर्यवतिष्ठते ॥ ६५ ॥

65. ப்ரஸாதே ஸர்வதுஃகாநாம் ஹாநி அஸ்ய உபஜாயதே
ப்ரஸந்நசேதஸஃ ஹி ஆஸு புத்திஃ பர்யவதிஷ்டதி.

ப்ரஸாதே - மனச்சாந்தியடைந்த, அஸ்ய - இவனுக்கு, ஸர்வ துக்காநாம் ஹாநிஃ- ஸர்வ துக்க நாசம், உபஜாயதே- உண்டாகிறது ஹி - ஏனெனில், ப்ரஸந்ந சேதஸஃ - அமைதியான மனதை யுடையவனுக்கு, ஆஸு - சீக்கிரத்தில், புத்திஃ - புத்தியானது, பர்யவதிஷ்டதி - ஸ்திரமான தன்மையை யடையும்.

नास्ति बुद्धिरयुक्तस्य न चा युक्तस्य भावना ।
न चा भावयतः शान्तिरशान्तस्य कुतः सुखम् ॥६६॥

66. ந அஸ்தி புத்திஃ அயுக்தஸ்ய ந ச அயுக்தஸ்ய பாவநா
ந ச அபாவயதஃ ஸாந்திஃ அஸாந்தஸ்ய குதஃ ஸுகம்.

அயுக்தஸ்ய - (மனது ஸ்திரமாக) ஒரு நிலைப்படாதவனுக்கு, புத்திஃ ந அஸ்தி - ஆத்ம, ப்ரம்ம ஞானம் இல்லை. அயுக்தஸ்ய - மனம் ஸ்திரப்படாதவனுக்கு, பாவநா ச ந-ஆத்ம ஞான ஆராய்ச்சி இல்லை. அபாவயதஃ- ஆராய்ச்சி ஞானம் இல்லாதவனுக்கு, ஸாந்தி ந ச - மனச் சமாதானமுமில்லை. அஸாந்தஸ்ய - மனச்சமாதான மில்லாதவனுக்கு, ஸுகம் குதஃ - சுகம் எப்படி யுண்டாகும்.

इन्द्रियाणां हि चरतां यन्मनोऽनुविधीयते ।
तदस्य हरति प्रज्ञां वायुर्नावमिवाम्भसि ॥ ६७ ॥

67. இந்த்ரியாணாம் ஹி சரதாம் யத் மநஃ அநுவிதீயதே
தத் அஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுஃ நாவம் இவ அம்பஸி.

ஹி - ஏனெனில், சரதாம் இந்த்ரியாணாம் - விஷயங்களில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் இந்திரியங்களை, யத் மநஃ - எந்த மனதானது, அநுவிதீயதே - (அடக்கும் திறமின்றி) அனுசரித்துச் செல்லுகின்றதோ, தத் - அம்மனதானது, அஸ்ய ப்ரஜ்ஞாம் - இவனது விவேகத்தை, அம்பஸி நாவம்-ஜலத்தில் (போகும்) கப்பலை, வாயுரிவ - காற்று (இழுத்துப் போவது) போல், ஹரதி - (அவன் வசமின்றி) இழுத்துப்போகிறது.

तस्माद्यस्य महाबाहो निगृहीतानि सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६८ ॥

68. தஸ்மாத் யஸ்ய மஹாபாஹோ நிக்ருஹீதாநி ஸர்வஸஃ
இந்த்ரியாணி இந்த்ரியார்த்தேப்யஃ தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா.

ஹே மஹா பாஹோ! தஸ்மாத் - ஆதலால், யஸ்ய இந்திரியாணி - எவனது இந்திரியங்கள், ஸர்வஸஃ இந்த்ரியார்த்தேப்யஃ - ஸகலமான விஷயங்களிலிருந்து, 'நிக்ருஹீதாநி - அடக்கப்படுகின்றனவோ, தஸ்ய ப்ராஜ்ஞா ப்ரதிஷ்டிதா - அவனது ஞானமே நிலைத்தது.

या निशा सर्वभूतानां तस्यां जागर्ति संयमी ।
यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः ॥६९॥

69. யா நிஸா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ
யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிஸா பஸ்யதஃ முநேஃ.

ஸர்வபூதாநாம் - ஸகலப்ராணிகளுக்கும், யா - எந்த (ஈஸ்வர ஞான உண்மை), நிஸா - இரவுபோலிருக்கிறதோ, தஸ்யாம் -

அதில், ஸம்யமீ-(இந்திரியங்களையும் மனதையும்) அடக்கிய யோகி, ஜாகர்தி-விழித்திருக்கிறான் (ஞானமுடையவனாய் அறிந்தவனாய்) இருக்கிறான். யஸ்யாம் - எதில் (உலகத்தோற்றமாகிய நிலையற்ற அஜ்ஞான விஷயங்களில்), பூதாநி - ப்ராணிகள், ஜாக்ரதி - விழித்திருக்கின்றனவோ, ஸா - அது, பஶ்யத: - (உண்மையை) கண்டறிந்துள்ள, முநே: - முனிக்கு, நிஶா - இரவுபோலிருக்கிறது.

आपूर्यमाणमचलप्रतिष्ठं
समुद्रमापः प्रविशन्ति यद्वत् ।
तद्वत्कामा यं प्रविशन्ति सर्वे
स शान्तिमाप्नोति न कामकामी ॥ ७० ॥

70. ஆபூர்யமாணம் அசலப்ரதிஷ்டம்
ஸமுத்ராம் ஆப: ப்ரவிஶந்தி யத்வத்
தத்வத் காமா: யம் ப்ரவிஶந்தி ஸர்வே
ஸ: ஶாந்திம் ஆப்னோதி ந காமகாமீ.

ஆபூர்யமாணம் - ஜல ஸம்ருத்தியானதும், அசலப்ரதிஷ்டம் - தன் நிலை மாறாததுமான, ஸமுத்ராம் - ஸமுத்ரத்தை, ஆப: (மற்ற நதி முதலான) ஜலங்கள், யத்வத் ப்ரவிஶந்தி - எவ்விதம் சென்று அடைகின்றனவோ, தத்வத் - அவ்விதமே, ஸர்வே காமா: - ஸகல விதமான ஆசைகளும், யம் ப்ரவிஶந்தி - எந்த யோகியை (யிடம்) உள்ளடங்கி விடுகின்றனவோ, ஸ: ஶாந்திம் ஆப்நோதி - அவன் சாந்த பதவியை அடைகிறான், காமகாமீ ந- விஷயங்களில் இச்சை யுள்ளவன் (அடைவது) இல்லை.

विहाय कामान्यः सर्वान्पुमांश्चरति निःस्पृहः ।
निर्ममो निरहंकारः स शान्तिमधिगच्छति ॥ ७१ ॥

71. விஹாய காமாந் ய: ஸர்வாந் புமாந் சரதி நிஸ்ப்ருஹ:
நிர்மம: நிரஹங்கார: ஸ: ஶாந்திம் அதிகச்சதி.

ய: புமாந் - எந்த (ஞானியான) புருஷன், ஸர்வாந் காமாந் விஹாய - எல்லா விஷய ஆசைகளையும் விட்டு, நிஸ்ப்ருஹ: - பற்றற்றவனாய், நிர்மம: - மமதையின்றி, நிரஹங்கார: - அஹங்காரமின்றி, சரதி - சஞ்சரிக்கின்றானோ, ஸ: - அவன், ஶாந்திம் - ஶாந்த பதவியான மோக்ஷத்தை, அதிகச்சதி - அடைகிறான்.

एषा ब्राह्मी स्थितिः पार्थ नैनां प्राप्य विमुह्यति ।
स्थित्वाऽस्यामन्तकालेऽपि ब्रह्म निर्वाणमृच्छति ॥७२॥

72. ஏஷா ப்ராஹ்மீ ஸ்திதி: பார்த ந ஏநாம் ப்ராப்ய-விமுஹ்யதி
ஸ்தித்வா அஸ்யாம் அந்தகாலே அபி ப்ரஹ்மநிர்வாணம்
[ருச்சதி.

ஹே பார்த்த!, ப்ராஹ்மீ ஸ்திதி: - ப்ரம்ம ஞான நிஷ்டையானது, ஏஷா - இம்மட்டும் சொல்லப்பட்டது. ஏநாம் ப்ராப்ய - இதையடைந்து, ந விமுஹ்யதி- (உலக விஷயங்களில்) மோஹத்தை யடைவதில்லை. அஸ்யாம் - இந்த நிஷ்டையில், அந்தகாலே ஸ்தித்வாபி - மரணகாலத்திலிருந்தபோதிலும், ப்ரம்ம நிர்வாணம்-ப்ரம்ம பதவியை (ப்ரம்மத்துடன் இரண்டறக் கலந்து போவதை), ருச்சதி - அடைகிறான்.

इति श्रीमद्भगवद्गीता सूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्री कृष्णार्जुनसंवादे सांख्ययोगो नाम द्वितीयोऽध्यायः ॥

அத்யாயம் 3.   ச்லோகம் 43.

கர்ம யோகம்.

अर्जुन उवाच—

ज्यायसी चेत्कर्मणस्ते मता बुद्धिर्जनार्दन ।
तत्किं कर्मणि घोरे मां नियोजयसि केशव ॥१॥

1. ஜ்யாயஸீ சேத் கர்மணஃ தே மதா புத்திஃ ஜநார்தந
தத் கிம் கர்மணி கோரே மாம் நியோஜயஸி கேஶவ.

அர்ஜுனன் வினா—

ஹே ஜநார்தந!, புத்திஃ- ஞானமானது, கர்மணஃ- நிஷ்காம கர்மத்தைப்பார்க்கிலும், ஜ்யாயஸீ - மேலானது என்பது, தே மதா சேத் - உமது எண்ணம் அல்லது கொள்கையானல், ஹே கேஶவ, தத் - அப்போது, கோரே கர்மணி - ஜீவஹிம்ஸைக்குக் காரணமான கர்மத்தில், மாம் - என்னை, கிம் - ஏன், நியோஜயஸி - ப்ரவ்ருத்திக்கச் செய்கிறீர்.

व्यामिश्रेणेव वाक्येन बुद्धिं मोहयसीव मे ।
तदेकं वद निश्चित्य येन श्रेयोऽहमाप्नुयाम् ॥२॥

2. வ்யாமிஶ்ரேண இவ வாக்யேந புத்திம் மோஹயஸீ இவ மே
தத் ஏகம் வத நிஶ்சித்ய யேந ஶ்ரேயஃ அஹம் ஆப்நுயாம்.

வ்யாமிஶ்ரேணேவ வாக்யேந - ஸந்தேகத்தை யுண்டுபண்ணுவது போன்ற வாக்கியங்களினுல், மே புத்திம் மோஹயஸீவ - என் புத்தியை மயக்கமடையச் செய்கிறீர். அஹம்- நான், யேந- எதனல், ஶ்ரேயஃ ஆப்நுயாம்- மேன்மையை யடைவேனே, தத் ஏகம்- அந்த ஒன்றையே, நிஶ்சித்ய வத - உறுதிப்படுத்தி சொல்லுவீராக.

श्रीभगवानुवाच—

लोकेऽस्मिन्द्विविधा निष्ठा पुरा प्रोक्ता मयाऽनघ ।
ज्ञानयोगेन साङ्ख्यानां कर्मयोगेन योगिनाम् ॥ ३ ॥

3. லோகே அஸ்மின் த்விவிதா நிஷ்டா புரா ப்ரோக்தா மயா அநக
ஜ்ஞாந யோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம்.

கிருஷ்ண பகவான் விடை—

ஹே அநக - பாபமற்றவனே!, அஸ்மின் லோகே - இவ்வுலகில், ஸாங்க்யானும் ஞானயோகேந - ஸாங்க்யர்களுக்கு ஞானயோகத்தாலும், யோகிநாம் கர்மயோகேந - யோகிகளுக்கு நிஷ்காம கர்மயோகத்தினலும், த்விவிதா நிஷ்டா - இருவித நிஷ்டைகள், புரா - பூர்வத்தில், மயா ப்ரோக்தா - என்னல் சொல்லப்பட்டது.

न कर्मणामनारम्भान्नैष्कर्म्यं पुरुषोऽश्नुते ।
न च सन्यसनादेव सिद्धिं समधिगच्छति ॥ ४ ॥

4. ந கர்மணும் அநாரம்பாத் நைஷ்கர்ம்யம் புருஷஃ அஶ்நுதே
ந ச ஸந்யஸநாத் ஏவ ஸித்திம் ஸமதிகச்சதி.

புருஷஃ - புருஷன் ஒருவன், கர்மணும் அநாரம்பாத் - கர்மத்தை அனுஷ்டிக்காமலிருப்பதால் (மாத்திரமே), நைஷ்கர்ம்யம் - கர்மம் நீங்கிய (ஞான) நிலைமையை, நாஶ்நுதே - அடையமாட்டான். ஸந்யஸநாதேவ - ஞானமின்றி கர்மத்தைமாத்திரம் செய்யாமல் விட்டுவிடுவதால், ஸித்திம் ச ந ஸமதிகச்சதி - ஸித்தியை (ஒருவன்) அடைகிறதில்லை.

न हि कश्चित्क्षणमपि जातु तिष्ठत्यकर्मकृत् ।
कार्यते ह्यवशः कर्म सर्वः प्रकृतिजैर्गुणैः ॥ ५ ॥

5. ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டதி அகர்மக்ருத்
கார்யதே ஹி அவஶஃ கர்ம ஸர்வஃ ப்ரக்ருதிஜைஃ குணைஃ.

கஶ்சித் - ஒருவனுவது, ஜாது - ஒருகாலத்திலாவது, க்ஷணமபி- ஒரு க்ஷணப்போதாவது, அகர்மக்ருத் - கர்மம் செய்யாதவனுய்,

நஹி திஷ்டதி - இருப்பதில்லை, ஹி - ஏனென்றால், ஸர்வ: - எல்லா பிராணிகளும், ப்ரக்ருதிஜை: குணை: - இயற்கையிலிருந்துண்டான ஸத்வ ரஜஸ் தமோகுணச்சேர்க்கையால், அவச: - வசமின்றி, கர்ம - கர்மத்தை, கார்யதே - செய்விக்கப்படுகிறது.

कर्मेन्द्रियाणि संयम्य य आस्ते मनसा स्मरन् ।
इन्द्रियार्थान्विमूढात्मा मिथ्याचारः स उच्यते ॥ ६ ॥

6. கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய: ஆஸ்தே மநஸா ஸ்மரந்,
இந்த்ரியார்த்தாந் விமூடாத்மா மித்யாசார: ஸ: உச்யதே.

ய: விமூடாத்மா - எந்த அவிவேகியானவன், கர்மேந்திரியாணி ஸம்யம்ய - கர்மேந்திரியங்களை அடக்கி, இந்திரியார்த்தான் - இந்திரிய விஷயங்களை, மநஸா ஸ்மரன் ஆஸ்தே - (மனதிலுள்ள ஆசையை அடக்க முடியாமல்) மனதினால் நினைத்துக்கொண்டிருக்கிறானோ, ஸ: - அவன், மித்யாசார: உச்யதே - பொய்யான ஆசாரமுடையவனாக சொல்லப்படுகிறான்.

यस्त्विन्द्रियाणि मनसा नियम्यारभतेऽर्जुन ।
कर्मेन्द्रियैः कर्मयोगमसक्तः स विशिष्यते ॥ ७ ॥

7. ய: து இந்த்ரியாணி மநஸா நியம்ய ஆரபதே அர்ஜுந
கர்மேந்த்ரியை: கர்மயோகம் அஸக்த: ஸ: விசிஷ்யதே.

ஹே அர்ஜுந !, யஸ்து - மற்று எவன், இந்திரியாணி மநஸா நியம்ய - இந்திரியங்களை மனதினால் கட்டுப்படுத்தி, அஸக்த: - பலனில் இச்சையின்றி, கர்மேந்திரியை: - கர்ம இந்திரியங்களினால், கர்மயோகம் - கர்மயோகத்தை, ஆரபதே - ஆரம்பிக்கின்றானோ, ஸ: விசிஷ்யதே - அவன் மேலானவன்.

नियतं कुरु कर्म त्वं कर्म ज्यायो ह्यकर्मणः ।
शरीरयात्राऽपि च ते न प्रसिध्येदकर्मणः ॥ ८ ॥

8. நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாய: ஹி அகர்மண:
சரீரயாத்ரா அபி ச தே ந ப்ரஸித்யேத் அகர்மண:.

த்வம் - நீ, நியதம் கர்ம - (உன்) நித்யகர்மத்தை, குரு - செய்வாயாக. ஹி - ஏனெனில், கர்ம - கர்மம் செய்வது, அகர்மண: - கர்மம் செய்யாமலிருப்பதைக் காட்டிலும், ஜ்யாய: - மேன்மையானது. அகர்மண: - (மேலும்) கர்மம் செய்யாவிட்டால், சரீரயாத்ரா அபிச - சரீரத்தை ரக்ஷிப்பதுகூட, தே - உனக்கு, ந ப்ரஸித்யேத் - முடியாமல்போகும்.

यज्ञार्थात्कर्मणोऽन्यत्र लोकोऽयं कर्मबन्धनः ।
तदर्थं कर्म कौन्तेय मुक्तसङ्गः समाचर ॥ ९ ॥

9. யஜ்ஞார்த்தாத் கர்மண: அந்யத்ர லோக: அயம் கர்மபந்தந:
தத்அர்த்தம் கர்ம கௌந்தேய முக்தஸங்க: ஸமாசர.

யஜ்ஞார்த்தாத் கர்மண: - பிறர் நன்மையின்பொருட்டு ஈச்வர அர்ப்பணமாகச் செய்யப்படும் கர்மங்களையன்றி, அந்யத்ர - மற்ற கர்மங்களினால் (ஸ்வய நலம், லாபம் முதலியவற்றுக்காக செய்யப்படும் கர்மம்), அயம்லோக: - இவ்வுலகம், கர்மபந்தன: - கர்மபந்தத்தை யடைகிறது. ஹே குந்திபுத்ர !, ததர்த்தம் கர்ம - அந்த யஜ்ஞார்த்தமான கர்மத்தை (மாத்திரம்), முக்தஸங்க: - பல அபேக்ஷையின்றி, ஸம் ஆசர - நன்றாகச் செய்.

सहयज्ञाः प्रजाः सृष्ट्वा पुरोवाच प्रजापतिः ।
अनेन प्रसविष्यध्वमेष वोऽस्त्विष्टकामधुक् ॥ १० ॥

10. ஸஹயஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா புரா உவாச ப்ரஜாபதி:
அநேந ப்ரஸவிஷ்யத்வம் ஏஷ: வ: அஸ்து இஷ்டகாமதுக்.

ப்ரஜாபதி: - ப்ரஜாபதியானவர், புரா - ஆதிகாலத்தில், ப்ரஜா: - ஜனங்களை, ஸஹயஜ்ஞா: - யஜ்ஞத்துடன்கூட, ஸ்ருஷ்ட்வா - சிருஷ்டித்து, அநேந ப்ரஸவிஷ்யத்வம் - இந்த யஜ்ஞத்தினாலே வ்ருத்தியடையுங்கள், ஏஷ: - இந்த யஜ்ஞம், வ: - உங்களுக்கு, இஷ்டகாமதுக் - இஷ்டமான போகங்களைக் கொடுப்பதாக, அஸ்து - இருக்கட்டும் (என்று), உவாச - சொன்னார்.

देवान्भावयतानेन ते देवा भावयन्तु वः ।
परस्परं भावयन्तः श्रेयः परमवाप्स्यथ ॥ ११ ॥

11. தேவாந் பாவயத அநேந தே தேவா: பாவயந்து வ:
பரஸ்பரம் பாவயந்த: ஶ்ரேய: பரம் அவாப்ஸ்யத.

அநேந - இந்த யஜ்ஞத்தினால், தேவாந் பாவயத - தேவதைகளை ஆராதியுங்கள், தே தேவா - அந்த தேவதைகள், வ: பாவயந்து - உங்களை (வேண்டியவற்றைக் கொடுத்து காற்று, மழை, உஷ்ணம் முதலியவை) ரக்ஷிக்கட்டும். பரஸ்பரம் பாவயந்த: - (இவ்விதம்) ஒருவரை யொருவர் அபிவிருத்தி செய்துகொண்டு, பரம் ஶ்ரேய: - மேலான உத்தமத்தன்மையை, அவாப்ஸ்யத - அடைவீர்கள்.

इष्टान्भोगान्हि वो देवा दास्यन्ते यज्ञभाविताः ।
तैर्दत्तानप्रदायैभ्यो यो भुङ्क्ते स्तेन एव सः ॥ १२ ॥

12. இஷ்டாந் போகாந் ஹி வ: தேவா: தாஸ்யந்தே யஜ்ஞபாவிதா:
தை: தத்தாந் அப்ரதாய ஏப்ய: ய: புங்க்தே ஸ்தேந: ஏவ ஸ:.

யஜ்ஞபாவிதா: தேவா: - யஜ்ஞங்களால் பூஜிக்கப்பட்ட தேவதைகள், வ: - உங்களுக்கு, இஷ்டாந் போகாந்-இஷ்டமான போகங்களை, தாஸ்யந்தே ஹி-கொடுப்பார்களன்றோ, தை: தத்தாந் - அவர்களால் கொடுக்கப்படும் அன்னம் முதலானவற்றை, ஏப்ய: - இந்த தேவதைகளின்பொருட்டு, அப்ரதாய - அர்ப்பணம் செய்யாமல், ய: - எவன், புங்க்தே - அனுபவிக்கிறானோ, ஸ: - அவன், ஸ்தேந ஏவ - திருடனே (ஆவான்).

यज्ञशिष्टाशिनः सन्तो मुच्यन्ते सर्वकिल्बिषैः ।
भुञ्जते ते त्वघं पापा ये पचन्त्यात्मकारणात् ॥ १३ ॥

13. யஜ்ஞஶிஷ்டாஶிந: ஸந்த: முச்யந்தே ஸர்வகில்பிஷை:
தே து அகம் புஞ்ஜதே பாபா: யே பசந்தி ஆத்மகாரணாத்.

யஜ்ஞஶிஷ்டாஶிநஸ்ஸந்த: - யஜ்ஞங்களால் தேவதைகளுக்கு அர்ப்பணம் செய்த அன்னத்தைப் புசிக்கும் உத்தம புருஷர்கள்

ஸர்வகில்பிஷை: - சகல பாபங்களிலிருந்தும், முச்யந்தே - விடுபடுகிறார்கள். யே து-மற்று எவர்கள், ஆத்மகாரணாத்-தங்கள் பொருட்டு, பசந்தி-(அன்னம் முதலியவற்றை) பாகம் செய்து உண்கிறார்களோ தே பாபா: - அந்த பாபிகள், அகம் து - பாபத்தையே, புஞ்ஜதே - புசிக்கிறார்கள்.

अन्नाद्भवन्ति भूतानि पर्जन्यादन्नसम्भवः ।
यज्ञाद्भवति पर्जन्यो यज्ञः कर्मसमुद्भवः ॥ १४ ॥

14. அந்நாத் பவந்தி பூதாநி பர்ஜந்யாத் அந்நஸம்பவ:
யஜ்ஞாத் பவதி பர்ஜந்ய: யஜ்ஞ: கர்மஸமுத்பவ:.

कर्म ब्रह्मोद्भवं विद्धि ब्रह्माऽक्षरसमुद्भवम् ।
तस्मात्सर्वगतं ब्रह्म नित्यं यज्ञे प्रतिष्ठितम् ॥ १५ ॥

15. கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி ப்ரஹ்ம அக்ஷரஸமுத்பவம்
தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டிதம்.

அந்நாத் பூதாநி பவந்தி - அன்னத்திலிருந்து பிராணிகள் உண்டாகின்றன, பர்ஜந்யாத் அந்நஸம்பவ: - மேகத் (மழை) திலிருந்து அன்னம் உண்டாகிறது, யஜ்ஞாத் பர்ஜந்ய: பவதி - யஜ்ஞத்திலிருந்து மேகம் உண்டாகிறது, யஜ்ஞ: கர்மஸமுத்பவ: - யஜ்ஞம்கர்மத்திலிருந்துண்டாகிறது. கர்மப்ரஹ்மோத்பவம்-கர்மம் ப்ரஹ்மத்திலிருந்து (முத்தோழில் வல்லோரான சகுணப்ரஹ்மம்) உண்டானதாயும், ப்ரஹ்ம - அந்த சகுணப்ரம்மம், அக்ஷர ஸமுத்பவம் - அழிவில்லாப் பொருளாகிய நிர்க்குணப்ரம்மத்திலிருந்து உண்டானதாயும், வித்தி - அறிவாயாக, தஸ்மாத் - ஆதலால், ஸர்வகதம் ப்ரஹ்ம- எல்லாவற்றையும் உண்டாக்கும் ஈஶ்வரன், நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டிதம் - எப்போதும் யஜ்ஞத்தில் நிலைத்திருக்கிறார்.

एवं प्रवर्तितं चक्रं नानुवर्तयतीह यः ।
अघायुरिन्द्रियारामो मोघं पार्थ स जीवति ॥ १६ ॥

16. ஏவம் ப்ரவர்திதம் சக்ரம் ந அநுவர்தயதி இஹ ய:
அகாயு: இந்த்ரியாராம: மோகம் பார்த ஸ: ஜீவதி.

ஹே பார்த்த !, ஏவம் ப்ரவர்திதம் சக்ரம்-இவ்விதம் ப்ரவர்த்தித்துள்ள (ஜகத்) சக்ரத்தை, ய: - எவன், இஹ - இவ்வுலகில், ந அநுவர்தயதி - பின்பற்றுவதில்லையோ, ஸ: - அவன், அகாயு:-பாப வாழ்க்கை யுள்ளவனாய், இந்த்ரியாராம: - இந்திரிய விஷயங்களில் ரமித்துக்கொண்டு, மோகம் ஜீவதி - வீணாகக் காலங்கழிக்கிறான்.

यस्त्वात्मरतिरेव स्यादात्मतृप्तश्च मानवः ।
आत्मन्येव च सन्तुष्टस्तस्य कार्यं न विद्यते ॥ १७ ॥

17. ய: து ஆத்மரதி: ஏவ ஸ்யாத் ஆத்மத்ருப்த: ச மாநவ:
ஆத்மநி ஏவ ச ஸந்துஷ்ட: தஸ்ய கார்யம் ந வித்யதே.

யஸ்து மாநவ - மற்று எந்த மனிதன், ஆத்மரதிரேவ - பரமாத்மாவினிடமே மகிழ்ச்சி உடையவனாய், ஆத்மத்ருப்தஸ்ச - பரமாத்மாவினிடமே திருப்தியடைந்து, ஆத்மந்யேவ ச ஸந்துஷ்ட- பரமாத்மாவினிடமே சந்தோஷத்தை யடைந்தவனாய், ஸ்யாத் - இருக்கிறானோ, தஸ்ய கார்யம் ந வித்யதே - அவனுக்கு செய்ய வேண்டியது ஒன்றுமில்லை.

नैव तस्य कृतेनार्थो नाकृतेनेह कश्चन ।
न चास्य सर्वभूतेषु कश्चिदर्थव्यपाश्रयः ॥ १८ ॥

18. ந ஏவ தஸ்ய க்ருதேந அர்த: ந க்ருதேந இஹ கஸ்சந
ந ச அஸ்ய ஸர்வபூதேஷு கஸ்சித் அர்தவ்யபாஸ்ரய:.

தஸ்ய - (இப்படிப்பட்ட) ஆத்மஞானிக்கு, இஹ - இவ்வுலகில், க்ருதேந - கர்மம் செய்வதால், கஸ்சந அர்த: ந ஏவ - ஒருவித ப்ரயோஜனமும் இல்லவே இல்லை. அக்ருதேந - கர்மம் செய்யாமலிருப்பதால், கஸ்சந - ஒருவித (பாபமும்), ந - இல்லை. அஸ்ய - இவனுக்கு, ஸர்வபூதேஷு - சகலபிராணிகளிடத்திலும், கஸ்சித் அர்தவ்யபாஸ்ரய: ந ச - தன் உபயோகத்துக்காக (உதவிக்காக) ஆஸ்ரயிக்கவேண்டியது ஒன்றுமில்லை.

तस्मादसक्तः सततं कार्यं कर्मसमाचर ।
असक्तो ह्याचरन्कर्म परमाप्नोति पूरुषः ॥ १९ ॥

19. தஸ்மாத் அஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர
அஸக்த: ஹி ஆசரந் கர்ம பரம் ஆப்நோதி பூருஷ:.

தஸ்மாத் - ஆதலின், ஸததம் - எப்போதும், அஸக்த: - பலாபேக்ஷையின்றி, கார்யம் கர்ம - உனக்கேற்பட்டுள்ள நித்திய கர்மத்தை, ஸமாசர-செவ்வையாகச் செய், ஹி-ஏனெனில், அஸக்த:- பலாபேக்ஷையின்றி, கர்ம ஆசரன் - கர்மத்தைச் செய்யும், பூருஷ: - புருஷன், பரம் ஆப்நோதி - மேலான நிலைமையை யடைகிறான்.

कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः ।
लोकसङ्ग्रहमेवापि सम्पश्यन्कर्तुमर्हसि ॥ २० ॥

20. கர்மணைவ ஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா: ஜநகாதய:
லோகஸங்க்ரஹம் ஏவ அபி ஸம்பஸ்யந் கர்தும் அர்ஹஸி.

ஹி - ஏனென்றால், ஜநகாதய: - ஜனகன் முதலான பெரியோர், கர்மணைவ - நிஷ்காம கர்மம் செய்வதனாலேயே, ஸம்ஸித்திம்-முக்தி யடைவதற்கு, ஆஸ்திதா:-முயற்சி செய்தார்கள். த்வம்-நீ (யும்), லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பஸ்யந் - உலகத்தவரை நல்வழியில் நடக்கும்படி செய்வதை உத்தேசித்தாவது, கர்தும்-(உன் கர்மத்தை) செய்வதற்கு, அர்ஹஸி - தகுந்தவனாகிறாய்.

यद्यदाचरति श्रेष्ठस्तत्तदेवेतरो जनः ।
स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते ॥ २१ ॥

21. யத்யத் ஆசரதி ஸ்ரேஷ்ட: தத்தத் ஏவ இதர: ஜந:
ஸ: யத் ப்ரமாணம் குருதே லோக: தத் அநுவர்ததே.

ஸ்ரேஷ்ட: - தலைவனாயுள்ள ஒரு பிரதான்மான மனிதன், யத் யத் ஆசரதி - எதெதைச் செய்கின்றானோ, தத்தத் - அதையே, இதர: ஜந: - மற்ற (சாமான்ய) ஜனங்கள் (செய்கிறார்கள்), ஸ: - அவன், யத் ப்ரமாணம் குருதே - எதை ப்ரமாணமாக்,

கொள்கின்றனரோ, தத் - அதை, லோகः அநுவர்ததே - ஜனங்கள் பின்பற்றி அனுசரிக்கிறார்கள்.

न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किञ्चन ।
नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि ॥ २२ ॥

22. ந மே பார்த அஸ்தி கர்தவ்யம் த்ருஷு லோகேஷு கிம்சந
ந அநவாப்தம் அவாப்தவ்யம் வர்த ஏவ ச கர்மணி.

ஹே பார்த்த!, மே - எனக்கு, த்ருஷு லோகேஷு - மூவுலகங்களிலும், கர்தவ்யம் ந அஸ்தி - செய்யவேண்டியது ஒன்றும் இல்லை. அநவாப்தம்-(இப்பொழுது நான்) அடையாததாய், அவாப்தவ்யம்-(இனி) அடையவேண்டியது, கிம்சந ந அஸ்தி - யாதொன்றும் இல்லை. அஹம் - (ஆயினும்) நான், கர்மணி வர்த ஏவ - கர்மத்தில் இருந்து கொண்டேயிருக்கிறேன்.

यदि ह्यहं न वर्तेयं जातु कर्मण्यतन्द्रितः ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥ २३ ॥

23. யதி ஹி அஹம் ந வர்தேயம் ஜாதுகர்மணி அதந்த்ரிதः
மம வர்த்ம அநுவர்தந்தே மநுஷ்யாः பார்த ஸர்வஶः.

ஹே பார்த்த!, ஹி - ஏனெனில், அஹம் - நான், ஜாது - எப்போதாவது, அதந்த்ரிதः - சோம்பலின்றி, கர்மணி - கர்மத்தில், ந வர்தேயம் யதி - ப்ரவ்ருத்திக்காமலிருந்தால், மநுஷ்யாः - ஜனங்கள், ஸர்வஶः - எல்லாவிஷயத்திலும், மம வர்த்ம - எனது மார்க்கத்தையே, அநுவர்தந்தே - பின்பற்றுவார்கள்.

उत्सीदेयुरिमे लोका न कुर्यां कर्म चेदहम् ।
सङ्करस्य च कर्ता स्यामुपहन्यामिमाः प्रजाः ॥ २४ ॥

24. உத்ஸீதேயுः இமே லோகாः ந குர்யாம் கர்ம சேத் அஹம்
ஸங்கரஸ்ய ச கர்தா ஸ்யாம் உபஹந்யாம் இமாः ப்ரஜாः.

அஹம் - நான், கர்ம நகுர்யாம்சேத்-கர்மம் செய்யாவிட்டால், இமேலோகாः - இவ்வுலகங்கள், உத்ஸீதேயுः - (கர்மம் இல்லாமை

யால்) அழிந்துபோகும். ஸங்கரஸ்ய ச-ஜாதிக்கலப்புக்கும், கர்தாஸ்யாம் - (நான்) கர்த்தா ஆவேன். இமாः ப்ரஜாः - இந்த ஜனங்களை, உபஹந்யாம் - கெடுத்தவனாவேன்.

सक्ताः कर्मण्यविद्वांसो यथा कुर्वन्ति भारत ।
कुर्याद्विद्वांस्तथाऽसक्तश्चिकीर्षुर्लोकसङ्ग्रहम् ॥ २५ ॥

25. ஸக்தாः கர்மணி அவித்வாம்ஸः யதா குர்வந்தி பாரத
குர்யாத் வித்வாந் ததா அஸக்தः சிகீர்ஷுः லோகஸங்க்ரஹம்.

ஹே பாரத!, அவித்வாம்ஸः-அஜ்ஞானிகள், கர்மணி ஸக்தः-கர்மத்தில் பற்றுடன் (பலனை விரும்பி), யதா குர்வந்தி - எப்படி செய்கிறார்களோ, ததா - அப்படியே, வித்வாந் - ஆத்மஞானியானவன், அஸக்தः - பற்றில்லாமல், லோகஸங்க்ரகம் - உலக நன்மையின்பொருட்டு, சிகீர்ஷுः - கர்மம் செய்யும் விருப்பத்துடன், குர்யாத் - செய்யவேண்டும்.

न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसङ्गिनाम् ।
जोषयेत्सर्वकर्माणि विद्वान्युक्तः समाचरन् ॥ २६ ॥

26. ந புத்திபேதம் ஜநயேத் அஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம்
ஜோஷயேத் ஸர்வகர்மாணி வித்வாந் யுக்தः ஸமாசரந்.

வித்வாந் - ஞானியானவன், கர்மஸங்கிநாம் அஜ்ஞாநாம் - கர்மத்தில் பற்றுள்ள அஜ்ஞானிகளுக்கு, புத்திபேதம் ந ஜநயேத் - புத்திக் கலக்கத்தை உண்டாக்கக்கூடாது, யுக்தः - யோக யுக்தனாயிருந்துகொண்டு, ஸர்வகர்மாணி ஸமாசரந் - சகல கர்மங்களையும் செவ்வையாகச் செய்துகொண்டு, ஜோஷயேத் - பிறரையும் செய்யும்படி செய்யவேண்டும்.

प्रकृतेः क्रियमाणानि गुणैः कर्माणि सर्वशः ।
अहंकारविमूढात्मा कर्ताऽहमिति मन्यते ॥ २७ ॥

27. ப்ரக்ருதேः க்ரியமாணாநி குணைः கர்மாணி ஸர்வஶः
அஹங்கார விமூடாத்மா கர்தா அஹம் இதி மந்யதே.

ப்ரக்ருதே: குணை: - இயற்கையின் முக் குணங்களால், ஸர்வஶ: - எல்லா விதத்திலும், க்ரியமாணானி கர்மாணி - செய்யப்படுகின்ற கர்மங்களை, அஹங்கார விமூடாத்மா - அகங்காரத்துடன் கூடிய அவிவேகி, அஹம்கர்தா இதி - நான்தான் செய்கிறவன் என்று, மந்யதே - எண்ணுகிறான்.

तत्त्ववित्तु महाबाहो गुणकर्मविभागयोः ।
गुणा गुणेषु वर्तन्त इति मत्वा न सज्जते ॥ २८ ॥

28. தத்வவித் து மஹாபாஹோ குணகர்மவிபாகயோ:
குணா: குணேஷு வர்தந்தே இதி மத்வா ந ஸஜ்ஜதே.

ஹே மஹாபாஹோ!, குணகர்மவிபாகயோ: - குணம் கர்மம் இவற்றின் பிரிவுகளின், தத்வவித் து - உண்மையை யறிந்தவனோ, குணா: - இந்திரியங்களாகிய குணங்கள், குணேஷு - விஷயங்களாகிய குணங்களில், வர்தந்தே இதி - ப்ரவ்ருத்திக்கின்றன என்று, மத்வா - அறிந்துகொண்டு, ந ஸஜ்ஜதே - (எதிலும் நான் கர்த்தா என்று) பற்று வைப்பதில்லை.

प्रकृतेर्गुणसम्मूढाः सज्जन्ते गुणकर्मसु ।
तानकृत्स्नविदो मन्दान्कृत्स्नविन्न विचालयेत् ॥ २९ ॥

29. ப்ரக்ருதே: குணஸம்மூடா: ஸஜ்ஜந்தே குணகர்மஸு
தாந் அக்ருத்ஸ்நவித: மந்தாந் க்ருத்ஸ்நவித் ந விசாலயேத்.

ப்ரக்ருதே: குணஸம்மூடா: - ப்ரக்ருதி குணங்களால் மயக்கமடைந்த அஜ்ஞானிகளாய், குணகர்மஸு ஸஜ்ஜந்தே - குண சம்பந்தமான கர்மங்களில் பற்று வைத்துள்ள, தாந் - அந்த, அக்ருத்ஸ்நவித: மந்தாந் - முற்றும் அறியாத மந்தபுத்தி யுடையவர்களை, க்ருத்ஸ்நவித் - எல்லாம் அறிந்த ஞானி, ந விசாலயேத் - கலங்கும்படி செய்யக்கூடாது.

मयि सर्वाणि कर्माणि संन्यस्याध्यात्मचेतसा ।
निराशीर्निर्ममो भूत्वा युध्यस्व विगतज्वरः ॥ ३० ॥

30. மயி ஸர்வாணி கர்மாணி ஸந்ந்யஸ்ய அத்யாத்மசேதஸா
நிராஶீ: நிர்மம: பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வர:.

அத்யாத்ம சேதஸா - பரமாத்மாவைப் பற்றுக் கோடாகக் கொண்ட மனதுடன், ஸர்வாணி கர்மாணி - (நீ செய்யும்) சகல கர்மங்களையும், மயி ஸந்யஸ்ய - என்னிடம் அர்ப்பித்து, நிராஶீ: - ஆசையற்றவனாய், நிர்மம: - மமதையின்றி, விகதஜ்வர: பூத்வா - விசனத்தை விட்டவனாயிருந்துகொண்டு, யுத்யஸ்வ - யுத்தஞ் செய்வாயாக.

ये मे मतमिदं नित्यमनुतिष्ठन्ति मानवाः ।
श्रद्धावन्तोऽनसूयन्तो मुच्यन्ते तेऽपि कर्मभिः ॥ ३१ ॥

31. யே மே மதம் இதம் நித்யம் அநுதிஷ்டந்தி மாநவா:
ஶ்ரத்தாவந்த: அநஸூயந்த: முச்யந்தே தே அபி கர்மபி:.

யே மாநவா: - எந்த மனிதர்கள், மே இதம் மதம் - எனது இந்தக் கொள்கையை, ஶ்ரத்தாவந்த: அநஸூயந்த: - சிரத்தையுடனும் அஸூயையின்றியும், நித்யம் அநுதிஷ்டந்தி - எப்போதும் பின்பற்றி நடக்கிறார்களோ, தே அபி - அவர்களுங்கூட, கர்மபி: முச்யந்தே - கர்மக்கட்டிலிருந்து விடுபடுகிறார்கள்.

ये त्वेतदभ्यसूयन्तो नानुतिष्ठन्ति मे मतम् ।
सर्वज्ञानविमूढांस्तान्विद्धि नष्टानचेतसः ॥ ३२ ॥

32. யே து ஏதத் அப்யஸூயந்த: ந அநுதிஷ்டந்தி மே மதம்
ஸர்வஜ்ஞானவிமூடா: தாந் வித்தி நஷ்டாந் அசேதஸ:.

யே து - மற்று எவர்கள், ஏதத் மே மதம் - மேற் சொன்ன எனது கொள்கையை, அப்யஸூயந்த: - வெறுக்கிறவர்களாய், ந அநுதிஷ்டந்தி - பின்பற்றுவதில்லையோ (அப்படிப்பட்ட), அசேதஸ: - விவேகமில்லாதவர்களும், ஸர்வஜ்ஞாந விமூடாந் தாந் - ஒருவிதத்திலும் ஞானமில்லாத மூடர்களுமான அவர்களை, நஷ்டாந்-கெட்டுப்போனவர்களாக, வித்தி - அறிவாயாக.

सदृशं चेष्टते स्वस्याः प्रकृतेर्ज्ञानवानपि ।
प्रकृतिं यान्ति भूतानि निग्रहः किं करिष्यति ॥३३॥

33. ஸத்3ருஶம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதே: ஜ்ஞாநவாந் அபி
ப்ரக்ருதிம் யாந்தி பூ4தாநி நிக்3ரஹ: கிம் கரிஷ்யதி.

ஜ்ஞாநவாநபி - ஞானிகூட, ஸ்வஸ்யா: ப்ரக்ருதே: ஸத்3ருஶம் - தனது ப்ரக்ருதிக்கு (ஸ்வபாவம்) த்தகுந்தபடி, சேஷ்டதே - நடக்கிறான். பூதாநி ப்ரக்ருதிம் யாந்தி - ப்ராணிகள் (அததன்) ஸ்வபாவத்தை (யே) அநுஸரிக்கின்றன. நிக்ரஹ: கிம் கரிஷ்யதி - (அதை) தடுப்பது என்ன பிரயோஜனம் செய்யும்.

इन्द्रियस्येन्द्रियस्यार्थे रागद्वेषौ व्यवस्थितौ ।
तयोर्न वशमागच्छेत्तौ ह्यस्य परिपन्थिनौ ॥ ३४ ॥

34. இந்த்3ரியஸ்ய இந்த்3ரியஸ்ய அர்தே2 ராக3த்3வேஷௌ வ்யவஸ்தி2தௌ
தயோ: வஶம் ந ஆக3ச்சேத் தௌ ஹி அஸ்ய பரிபந்தி2நௌ.

இந்திரியஸ்ய இந்திரியஸ்ய அர்தே - அந்தந்த இந்திரியத்தின் விஷயத்தில், ராகத்வேஷௌ - விருப்பு வெறுப்பு எல்லாம், வ்யவஸ்திதௌ - அமைந்திருக்கின்றன, தயோ: வஶம் - அவற்றின் வசத்தில், ந ஆகச்சேத் - அடையக்கூடாது. ஹி - ஏனெனில், தௌ - அவைகள், அஸ்ய - இவனுக்கு, பரிபந்திநௌ - சத்துருக்கள்.

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥ ३५ ॥

35. ஶ்ரேயாந் ஸ்வத4ர்ம: விகு3ண: பரத4ர்மாத் ஸ்வநுஷ்டி2தாத்
ஸ்வத4ர்மே நித4நம் ஶ்ரேய: பரத4ர்ம: ப4யாவஹ:.

ஸ்வநுஷ்டிதாத் பரதர்மாத் - மிக நன்றாக செய்யப்படும் பிறருடைய தர்மத்தைக்காட்டிலும், விகுண: ஸ்வதர்ம: - குணமில்லாத தன் சொந்த தர்மமானது, ஶ்ரேயாந் - உத்தமமானது, ஸ்வ

தர்மே - ஸ்வதர்மத்தைச் செய்யும்போது, நிதநம் - மரணம் (ஏற்பட்டாலும்), ஶ்ரேய: - (அது) ஶ்ரேஷ்டமானது. பரதர்ம: - பிறருடைய தர்மத்தை அனுஷ்டிப்பது, பயாவஹ: - (பாபம் அல்லது நரக) பயத்தை யுண்டாக்கும்.

अर्जुन उवाच—

अथ केन प्रयुक्तोऽयं पापं चरति पूरुषः ।
अनिच्छन्नपि वार्ष्णेय बलादिव नियोजितः ॥ ३६ ॥

36. அத2 கேந ப்ரயுக்த: அயம் பாபம் சரதி பூருஷ:
அநிச்சந் அபி வார்ஷ்ணேய ப3லாத் இவ நியோஜித:.

அர்ஜுனன் வினா—

ஹே வார்ஷ்ணேய!, அத - ஆயின், அயம் பூருஷ: - இந்த மனிதனானவன், அநிச்சந்நபி - பாபம் செய்ய விருப்ப மில்லாமலிருந்தாலும், பலாத் நியோஜித இவ - பலவந்தமாய் தூண்டப்பட்டவனைப்போல், கேந ப்ரயுக்த: - எதனால் உந்தப்பட்டு, பாபம் சரதி - பாபத்தை செய்கிறான்.

श्रीभगवानुवाच—

काम एष क्रोध एष रजोगुणसमुद्भवः ।
महाशनो महापाप्मा विद्ध्येनमिह वैरिणम् ॥ ३७ ॥

37. காம: ஏஷ: க்ரோத4: ஏஷ: ரஜோகு3ண ஸமுத்3ப4வ:
மஹாஶந: மஹாபாப்மா வித்3தி4 ஏநம் இஹ வைரிணம்.

கிருஷ்ணபகவான் விடை—

ஏஷ: காம: - (நீ கேட்ட காரணமாகிய) இது காமம், ஏஷ: க்ரோதம் - இதுவே கோபம், ரஜோகுண ஸமுத்பவ: - இதுவே ரஜோகுணத்திலிருந்து பிறந்தது. மஹாஶந: - பெருந்தீனியையுடையது (எத்தனை கிடைத்தாலும் அடங்காதது ஆசை), மஹா பாப்மா - மஹா பாபமானது (பாபத்துக்குக் காரணம்), ஏநம் - இதை (காமம் கோபம்), இஹ - இவ்வுலகில், வைரிணம் - (நமக்கு) சத்துருவாக, வித்தி - அறிந்துகொள்.

धूमेनाऽऽव्रियते वह्निर्यथाऽऽदर्शो मलेन च ।
यथोल्बेनावृतो गर्भस्तथा तेनेदमावृतम् ॥ ३८ ॥

38. தூமேந ஆவ்ரியதே வஹ்நி: யதா ஆதர்ஶ: மலேந ச
யதா உல்பேந ஆவ்ருத: கர்ப: ததா தேந இதம் ஆவ்ருதம்.

வஹ்நி: தூமேந - நெருப்பு புகையினலும், ஆதர்ஶ: மலேந ச - கண்ணடி அழுக்கினலும், யதா ஆவ்ரியதே - எப்படி மூடப்பட்டிருக்கிறதோ, கர்ப: - கர்பமானது, உல்பேந - கருப்பையினுல், யதா ஆவ்ருத: - எப்படி மூடப்பட்டிருக்கிறதோ, ததா - அப்படியே, இதம் - இந்த ஞானமானது, தேந - அதனுல் (ஆசை), ஆவ்ருதம் - மூடப்பட்டிருக்கிறது.

आवृतं ज्ञानमेतेन ज्ञानिनो नित्यवैरिणा ।
कामरूपेण कौन्तेय दुष्पूरेणानलेन च ॥ ३९ ॥

39. ஆவ்ருதம் ஜ்ஞாநம் ஏதேந ஜ்ஞாநிந: நித்யவைரிணு
காமரூபேண கௌந்தேய துஷ்பூரேண அநலேந ச.

ஹே கௌந்தேய !, ஜ்ஞாநிந: நித்யவைரிணு - ஞானிக்கு எப்போதும் சத்துருவானதும், காமரூபேண - இச்சாரூபமானதும், துஷ்பூரேண - நிரம்பாததும், அநலேந ச - திருப்தி யற்றதுமான, ஏதேந - இந்த காமத்தினலே, ஜ்ஞாநம் - அறிவானது, ஆவ்ருதம் - மூடப்பட்டிருக்கிறது.

इन्द्रियाणि मनो बुद्धिरस्याधिष्ठानमुच्यते ।
एतैर्विमोहयत्येष ज्ञानमावृत्य देहिनम् ॥ ४० ॥

40. இந்த்ரியாணி மந: புத்தி: அஸ்ய அதிஷ்டாநம் உச்யதே
ஏதை: விமோஹயதி ஏஷ: ஜ்ஞாநம் ஆவ்ருத்ய தேஹிநம்.

இந்திரியாணி மந: புத்தி: - இந்திரியங்கள் மனது புத்தி (இவைகள்), அஸ்ய - இந்த ஆசைக்கு, அதிஷ்டாநம் - இருப்பிடமாக, உச்யதே - சொல்லப்படுகிறது. ஏஷ (இந்த) ஆசையானது,

ஏதை: - இவைகளினுல் (இந்திரியம் மனம் புத்தி), ஜ்ஞாநம் - பரமாத்ம ஞானத்தை, ஆவ்ருத்ய - மறைத்து, தேஹிநம் விமோஹயதி - தேஹியை (ஆத்மாவை) கலக்கி மயக்குகிறது.

तस्मात्त्वमिन्द्रियाण्यादौ नियम्य भरतर्षभ ।
पाप्मानं प्रजहि ह्येनं ज्ञानविज्ञाननाशनम् ॥ ४१ ॥

41. தஸ்மாத் த்வம் இந்த்ரியாணி ஆதௌ நியம்ய பரதர்ஷப
பாப்மாநம் ப்ரஜஹிஹி ஏநம் ஜ்ஞாநவிஜ்ஞாந நாஶநம்.

ஹே பரதவம்ச சிரேஷ்ட !, தஸ்மாத் - ஆதலால், த்வம் - நீ, ஆதௌ - முதலாவது, இந்த்ரியாணி நியம்ய - இந்திரியங்களை நன்ருக கட்டுப்படுத்தி, ஜ்ஞாநவிஜ்ஞாந நாஶநம் - சாஸ்திர அனுபவ அறிவை அழிக்கும், பாப்மாநம் ஏநம் - பாபரூபமான இந்த காமத்தை, ப்ரஜஹிஹி - ஒழித்துவிடு.

इन्द्रियाणि पराण्याहुरिन्द्रियेभ्यः परं मनः ।
मनसस्तु परा बुद्धिर्यो बुद्धेः परतस्तु सः ॥ ४२ ॥

42. இந்த்ரியாணி பராணி ஆஹு: இந்த்ரியேப்ய: பரம் மந:
மநஸ: து பரா புத்தி: ய: புத்தே: பரத: து ஸ:.

இந்திரியாணி பராணி ஆஹு: - (ஸ்தூல தேகத்தைக்காட்டிலும்) இந்திரியங்கள் மேலானது (என்று) சொல்லுகிருர்கள். இந்திரியேப்ய:- இந்திரியங்களைவிட, மந: பரம் - மனது மேலானது. மநஸஸ்து புத்தி: பரா - மனதைக்காட்டிலும் புத்தியே பெரிது. புத்தே: பரத: யஸ்து - புத்தியைக்காட்டிலும் ஶ்ரேஷ்டமானவன் எவனே, ஸ:- அவனே (அந்தப் பரமாத்மா அல்லது தேஹி).

एवं बुद्धेः परं बुद्ध्वा संस्तभ्यात्मानमात्मना ।
जहि शत्रुं महाबाहो कामरूपं दुरासदम् ॥ ४३ ॥

43. ஏவம் புத்தே: பரம் புத்த்வா ஸம்ஸ்தப்ய ஆத்மாநம் ஆத்மநா
ஜஹி ஶத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம். [மஹா

ஹே மஹாபாஹோ !, ஏவம் - இவ்விதமாய், புத்தே: பரம் - புத்தியைக்காட்டிலும் மேலான (ஆத்மாவை), புத்வா - அறிந்து, ஆத்மநா ஆத்மாநம் ஸம்ஸ்தப்ய - (தன் உறுதிபுத்தியினாலேயே) ஆத்மாவினாலேயே (தன் கீழான தன்மைகளை) ஆத்மாவை யடக்கி, துராஸதம் - ஜயிப்பதற்கு அருமையான, காமரூபம் ஶத்ரும் - ஆசையாகிய சத்துருவை, ஜஹி - நசிக்கச் செய்வாயாக.

इति श्रीमद्भगवद्गीता सूप० " कर्मयोगो " नाम तृतीयोऽध्यायः ।

ஞானயோகம்.

श्रीभगवानुवाच—

इमं विवस्वते योगं प्रोक्तवानहमव्ययम् ।
विवस्वान्मनवे प्राह मनुरिक्ष्वाकवेऽब्रवीत् ॥ १ ॥

1. இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவாந் அஹம் அவ்யயம்
விவஸ்வாந் மநவே ப்ராஹ மநு: இக்ஷ்வாகவே அப்ரவீத்.

கிருஷ்ண பரமாத்மா வாக்யம்—

அவ்யயம் இமம் யோகம் - அழிவில்லா (ப்பலனையுடைய) இந்த யோகத்தை, அஹம் - நான், விவஸ்வதே ப்ரோக்தவான் - (ஆதிகாலத்தில்) சூரியனுக்குச் சொன்னேன். விவஸ்வாந் மநவே ப்ராஹ - சூரியன் மனுவுக்குச் சொன்னார். மநு: இக்ஷ்வாகவே அப்ரவீத் - மனுவானவர் இக்ஷ்வாகுவுக்குச் சொன்னார்.

एवं परम्पराप्राप्तमिमं राजर्षयो विदुः ।
स कालेनेह महता योगो नष्टः परन्तप ॥ २ ॥

2. ஏவம் பரம்பராப்ராப்தம் இமம் ராஜர்ஷய: விஃ
ஸ: காலேந இஹ மஹதா யோக: நஷ்ட: பரந்தப.

ஏவம் - இவ்விதமாய், பரம்பராப்ராப்தம் - பரம்பரையாய் வந்த, இமம் - இந்த யோகத்தை, ராஜர்ஷய: விது: - ராஜரிஷிகள் அறிந்திருந்தார்கள். மஹதாகாலேந - அநேக காலம் ஆகிவிட்டமையால், ஸ: யோக: - அந்த யோகமானது, இஹ நஷ்ட: - இப்போது நஷ்டமாகிவிட்டது (தெரியாமல் மறைந்துபோயிற்று).

स एवाऽयं मया तेऽद्य योगः प्रोक्तः पुरातनः ।
भक्तोऽसि मे सखा चेति रहस्यं ह्येतदुत्तमम् ॥ ३ ॥

3. ஸ: ஏவ அயம் மயா தே அத்ய யோக: ப்ரோக்த: புராதந:
பக்த: அஸி மே ஸகா ச இதி ரஹஸ்யம் ஹி ஏதத் உத்தமம்.

(த்வம்-நீ), மே பக்த:- என் பக்தனும், சகா ச-தோழனும், அஸி- இருக்கிறாய் (ஆதலால்), அயம் புராதந: ஸ ஏவ யோக:- இந்தப் பழமையான அதே யோகமானது, அத்ய - இப்போது, மயா தே ப்ரோக்த: - என்னால் உனக்கு சொல்லப்பட்டது. ஹி - ஏனெனில், ஏதத் உத்தமம் ரஹஸ்யம்-இது சிரேஷ்டமான பரம ரகசியம்.

अर्जुन उवाच—

अपरं भवतो जन्म परं जन्म विवस्वतः ।
कथमेतद्विजानीयां त्वमादौ प्रोक्तवानिति ॥ ४ ॥

4. அபரம் பவத: ஜந்ம பரம் ஜந்ம விவஸ்வத:
கதம் ஏதத் விஜாநீயாம் த்வம் ஆதௌ ப்ரோக்தவாந் இதி.

அர்ஜுனன் வினா—

பவத: ஜந்ம அபரம் - தங்களுடைய பிறவி பிந்தினது, விவஸ்வத: ஜந்ம பரம் - சூரியனுடைய பிறப்பு முந்தினது. ஆதௌ த்வம் ப்ரோக்தவாந் இதி - ஆதிகாலத்தில் தாங்கள் (சூரியனுக்கு) சொன்னீர்கள் (என்னும்) இதை, கதம் விஜாநீயாம் - எப்படி அறிவேன்.

श्रीभगवानुवाच—

बहूनि मे व्यतीतानि जन्मानि तव चार्जुन ।
तान्यहं वेद सर्वाणि न त्वं वेत्थ परन्तप ॥ ५ ॥

5. பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ ச அர்ஜுந
தாநி வேத அஹம் ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப.

கிருஷ்ணபகவான் விடை—

ஹே அர்ஜுந!, மே தவ ச - என்னுடையவும் உன்னுடையவும், பஹூநி ஜந்மாநி - அநேகம் ஜன்மங்கள், வ்யதீதாநி -சென்று

போயின. அஹம் - நான், தாநி ஸர்வாணி வேத - அவற்றை யெல்லாம் அறிவேன். ஹே பரந்தப!, த்வம் ந வேத்த - நீ அவற்றை அறியாய் (மறந்து போனாய்).

अजोऽपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपि सन् ।
प्रकृतिं स्वामधिष्ठाय सम्भवाम्यात्ममायया ॥ ६ ॥

6. அஜ: அபி ஸந் அவ்யயாத்மா பூதாநாம் ஈஶ்வர: அபி ஸந்
ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி ஆத்ம மாயயா.

அஹம் - நான், அஜோபிஸந் - பிறப்பற்றவனானாலும், அவ்யயாத்மா - நாசமற்ற ஞான சக்தியுடையவன் (ஆனாலும்), பூதாநாம் ஈஶ்வரோபி ஸந் - ப்ராணிகளுக்கெல்லாம் ஈஶ்வரனாயிருந்தாலும், ஸ்வாம் ப்ரக்ருதிம் அதிஷ்டாய - என் வசத்துக்குட்பட்ட சொந்த மாயையை அடக்கி, ஆத்மமாயயா - என் மாயா சக்தியினால், ஸம்பவாமி - அவதரிக்கிறேன்.

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदाऽऽत्मानं सृजाम्यहम् ॥ ७ ॥

7. யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநி: பவதி பாரத
அப்யுத்தாநம் அதர்மஸ்ய ததா ஆத்மாநம் ஸ்ருஜாமி அஹம்.

ஹே பாரத!, யதா யதா - எவ்வெப்பொழுது, தர்மஸ்ய க்லாநி: - தர்மத்துக்குக் குறைவும், அதர்மஸ்ய அப்யுத்தாநம் - அதர்மத்தின் அபிவ்ருத்தியும், பவதி - உண்டாகிறதோ, ததா ஹி - அப்போதே, அஹம் - நான், ஆத்மாநம் ஸ்ருஜாமி - என்னை சிருஷ்டித்துக்கொள்ளுகிறேன் (அவதரிக்கிறேன்).

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय सम्भवामि युगे युगे ॥ ८ ॥

8. பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.

ஸாதூநாம் பரித்ராணாய - சாதுக்களை ரக்ஷிக்கவும், துஷ்க்ருதாம் விநாஶாய ச - துஷ்டர்களை நாசஞ்செய்யவும், தர்மஸம்ஸ்தாபநார்த்தாய - தர்மத்தை நிலைநிறுத்தவும் வேண்டி, யுகே யுகே- யுகந்தோறும், ஸம்பவாமி - உண்டாகிறேன் (அவதரிக்கிறேன்).

जन्म कर्म च मे दिव्यमेवं यो वेत्ति तत्त्वतः ।
त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन ॥ ९ ॥

9. ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் ய: வேத்தி தத்வத:
த்யக்த்வா தேஹம் புந: ஜந்ம ந ஏதி மாம் ஏதி ஸ: அர்ஜுந.

ஹே அர்ஜுந!, மே திவ்யம் ஜந்ம கர்ம ச-எனது திவ்வியமான அவதாரத்தையும் செய்கையையும், ய: - எவன், ஏவம் தத்வத: வேத்தி - இவ்விதமாய் உண்மையாக அறிகிறானோ, ஸ: - அவன், தேஹம் த்யக்த்வா - தேகத்தைவிட்டு, புந: ஜந்ம நைதி - மறு பிறப்பை அடைகிறதில்லை. மாம் ஏதி - என்னை வந்து அடைகிறான்.

वीतरागभयक्रोधा मन्मया मामुपाश्रिताः ।
बहवो ज्ञानतपसा पूता मद्भावमागताः ॥ १० ॥

10. வீதராகபயக்ரோதா: மந்மயா: மாம் உபாஶ்ரிதா:
பஹவ: ஜ்ஞாநதபஸா பூதா: மத்பாவம் ஆகதா:.

வீதராகபயக்ரோதா: - ஆசை, பயம், கோபம், இவைகளை விட்டவர்களாய், மந்மயா - என் மயமாகி, மாம் உபாஶ்ரிதா: - என்னை நம்பினவர்களாய், பஹவ: - அநேகர், ஜ்ஞானதபஸா - ஞானமாகிய தபஸினால், பூதா: - பரிசுத்தமடைந்து, மத் பாவம் - என் ஸாயுஜ்யத்தை, ஆகதா: - அடைந்துள்ளார்கள்.

ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहम् ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥ ११ ॥

11. யே யதா மாம் ப்ரபத்யந்தே தாந் ததா ஏவ பஜாமி அஹம்
மம வர்த்ம அநுவர்தந்தே மநுஷ்யா: பார்த ஸர்வஶ:.

ஹே பார்த்த!, யே - எவர்கள், யதா - எவ்விதமாய், மாம் ப்ரபத்யந்தே - என்னை வணங்குகிறார்களோ, தாந் - அவர்களை, ததா ஏவ - அவ்விதமாகவே, அஹம் பஜாமி - நான் அனுக்கிரக்கிறேன். மநுஷ்யா: - மனிதர்கள், ஸர்வஶ: - எல்லா விதத்திலும், மம வர்த்ம - என் மார்க்கத்தையே, அநுவர்தந்தே - பின்பற்றுகின்றார்கள்.

काङ्क्षन्तः कर्मणां सिद्धिं यजन्त इह देवताः ।
क्षिप्रं हि मानुषे लोके सिद्धिर्भवति कर्मजा ॥ १२ ॥

12. காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்திம் யஜந்தே இஹ தேவதா:
க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்தி: பவதி கர்மஜா.

இஹ - இவ்வுலகில், கர்மணாம் ஸித்திம் - கர்மங்களின் பலனை, காங்க்ஷந்த: - விரும்புகிறவர்கள், தேவதா: யஜந்தே - தேவதைகளை பூஜிக்கின்றார்கள். ஹி - ஏனெனில், கர்மஜா ஸித்தி: - கர்மத்தினால் உண்டான பலன், மாநுஷே லோகே - மநுஷ்ய உலகத்திலேயே, க்ஷிப்ரம் - சீக்கிரத்தில், பவதி - உண்டாகிறது.

चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः ।
तस्य कर्तारमपि मां विद्ध्यकर्तारमव्ययम् ॥ १३ ॥

13. சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகஶ:
தஸ்ய கர்தாரம் அபி மாம் வித்தி அகர்தாரம் அவ்யயம்.

சாதுர்வர்ண்யம் - நான்கு வர்ணங்களும், குணகர்ம விபாகஶ- (அவரவர்கள்) குணத்துக்கும் கர்மத்துக்கும் தகுந்தபடி, மயா ஸ்ருஷ்டம் - என்னால் சிருஷ்டிக்கப்பட்டன. தஸ்ய கர்தாரமபி - அதற்கு (நான்) கர்த்தாவானபோதிலும், மாம் - என்னை, அகர்தாரம் - கர்தா அல்லவென்றும், அவ்யயம் - வேறுபாடு இல்லாதவராயும், வித்தி - அறிவாயாக.

न मां कर्माणि लिम्पन्ति न मे कर्मफले स्पृहा ।
इति मां योऽभिजानाति कर्मभिर्न स बध्यते ॥ १४ ॥

14 ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மஃபலே ஸ்ப்ருஹா
இதி மாம் ய: அபிஜாநாதி கர்மபி: ந ஸ: பத்யதே.

மாம்-என்னை, கர்மாணி ந லிம்பந்தி-கர்மங்கள் ஒட்டுவதில்லை. மே-எனக்கு, கர்மபலேஸ்ப்ருஹா ந - கர்மபலனில் ஆசை இல்லை. இதி- இவ்விதமாய், மாம் - என்னை, ய:- எவன், அபிஜாநாதி-அறிந்துள்ளானோ, ஸ: - அவன், கர்மபி: ந பத்யதே - கர்மங்களினால் கட்டப்படான்.

एवं ज्ञात्वा कृतं कर्म पूर्वैरपि मुमुक्षुभिः ।
कुरु कर्मैव तस्मात्त्वं पूर्वैः पूर्वतरं कृतम् ॥ १५ ॥

15. ஏவம் ஜ்ஞாத்வா க்ருதம் கர்ம பூர்வை: அபி முமுக்ஷுபி:
குரு கர்ம ஏவ தஸ்மாத் த்வம் பூர்வை: பூர்வதரம் க்ருதம்.

ஏவம் ஜ்ஞாத்வா - இவ்விதம் அறிந்து, முமுக்ஷுபி: பூர்வை: அபி - மோக்ஷ இச்சையுள்ள முன்னோர்களாலுங்கூட, கர்மக்ருதம்- கர்மம் செய்யப்பட்டது. தஸ்மாத் - ஆதலால், த்வம் - நீ, பூர்வை: க்ருதம் - முன்னோர்களால் செய்யப்பட்டதும், பூர்வதரம் - பழமையானதுமான, கர்ம ஏவ குரு - கர்மத்தையே செய்வாயாக.

किं कर्म किमकर्मेति कवयोऽप्यत्र मोहिताः ।
तत्ते कर्म प्रवक्ष्यामि यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ॥१६॥

16. கிம் கர்ம கிம் அகர்ம இதி கவய: அபி அத்ர மோஹிதா: [பாத்.
தத் தே கர்ம ப்ரவக்ஷ்யாமி யத் ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸே அசு-

கர்ம கிம்-கர்மம் என்றால் என்ன, அகர்ம கிம்-அகர்மம் என்பது என்ன, இதி அத்ர-என்னும் இவ்விஷயத்தில், கவய: அபி - படித்தவர்களுங்கூட, மோஹிதா:- மயக்கமடைந்திருக்கின்றனர். யத் ஜ்ஞாத்வா - எதை அறிந்தால், அசுபாத் -ஸம்ஸார பந்தத்திலிருந்து, மோக்ஷ்யஸே-விடுபடுவாயோ, தத் கர்ம அந்த கர்ம விஷயத்தை, தே - உனக்கு, ப்ரவக்ஷ்யாமி - சொல்லப்போகிறேன்.

कर्मणो ह्यपि बोद्धव्यं बोद्धव्यं च विकर्मणः ।
अकर्मणश्च बोद्धव्यं गहना कर्मणो गतिः ॥ १७ ॥

17. கர்மண: ஹி அபி போத்தவ்யம் போத்தவ்யம் ச விகர்மண:
அகர்மண: ச போத்தவ்யம் கஹனா கர்மண: கதி:.

ஹி - ஏனெனில், கர்மண: அபி போத்தவ்யம் - கர்மத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டும், விகர்மண: ச போத்தவ்யம்-செய்யத்தகாத நிஷித்த கர்மத்தைப்பற்றியும் அறிந்துகொள்ள வேண்டும். அகர்மணஸ்ச போத்தவ்யம் - கர்மமே செய்யாமலிருப்பதைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டும். கர்மண: கதி: கஹனா - கர்ம விகர்ம அகர்மங்களின் போக்கானது அறிவதற்கு மிகவும் கஷ்டமானது.

कर्मण्यकर्म यः पश्येदकर्मणि च कर्म यः ।
स बुद्धिमान्मनुष्येषु स युक्तः कृत्स्नकर्मकृत् ॥ १८ ॥

18. கர்மணி அகர்ம ய: பச்யேத் அகர்மணி ச கர்ம ய:
ஸ: புத்திமாந் மநுஷ்யேஷு ஸ: யுக்த: க்ருத்ஸ்ந கர்மக்ருத்.

ய:-எவன், கர்மணி அகர்ம பச்யேத்-கர்மத்தில் அகர்மத்தை பார்க்கிறானோ, ய:- (மற்று) எவன், அகர்மணி ச கர்ம-அகர்மத்தில் கர்மத்தை (பார்க்கிறானோ), ஸ: - அவன், மநுஷ்யேஷு - மனிதர்களுக்குள், புத்திமான்- புத்தியுள்ளவன், ஸ: யுக்த:-அவன் (யோக) யுக்தன், க்ருத்ஸ்ந கர்மக்ருத் - சகல கர்மங்களையும் செய்தவன்.

यस्य सर्वे समारम्भाः कामसङ्कल्पवर्जिताः ।
ज्ञानाग्निदग्धकर्माणं तमाहुः पण्डितं बुधाः ॥ १९ ॥

19. யஸ்ய ஸர்வே ஸமாரம்பா: காமஸங்கல்ப வர்ஜிதா:
ஜ்ஞாநாக்நி தக்த கர்மாணம் தம் ஆஹு: பண்டிதம் புதா:.

யஸ்ய ஸர்வே ஸமாரம்பா:- எவனது சகல கர்மங்களும், காம ஸங்கல்பவர்ஜிதா: - ஆசை, சங்கல்பம் இவைகளற்றிருக்குமோ,

ஜ்ஞாநாக்நி தக்த கர்மாணம் - ஞானமாகிற அக்கினியால் தஹிக்கப்பட்ட கர்மத்தையுடைய, தம் - அவனை, புதா: - ஞானிகள், பண்டிதம் ஆஹு: - விவேகி யென்று சொல்லுகிறார்கள்.

त्यक्त्वा कर्मफलासङ्गं नित्यतृप्तो निराश्रयः ।
कर्मण्यभिप्रवृत्तोऽपि नैव किञ्चित्करोति सः ॥ २० ॥

20. த்யக்த்வா கர்மஃபலாஸங்கம் நித்யத்ருப்த: நிராஶ்ரய:
கர்மணி அபிப்ரவ்ருத்த: அபி ந ஏவ கிஞ்சித் கரோதி ஸ:.

கர்ம பலா ஸங்கம் த்யக்த்வா- கர்மபலனில் ஆசையை விட்டு, நித்யத்ருப்த:- எப்போதும் த்ருப்தியுள்ளவனாய், நிராஶ்ரய:-ஆஶ்ரயமில்லாதவனாய் (இருக்கும்), ஸ:- அவன், கர்மணி- கர்மத்தில், அபிப்ரவ்ருத்தோபி - ப்ரவ்ருத்தித்திருந்தபோதிலும், கிஞ்சித் ந கரோதி ஏவ - ஒரு கர்மத்தையும் செய்யவேயில்லை.

निराशीर्यतचित्तात्मा त्यक्तसर्वपरिग्रहः ।
शारीरं केवलं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ॥ २१ ॥

21. நிராஶீ: யதசித்தாத்மா த்யக்த ஸர்வ பரிக்ரஹ:
ஶாரீரம் கேவலம் கர்ம குர்வந் ந ஆப்நோதி கில்பிஷம்.

நிராஶீ: - ஆசையற்றவனாய், யதசித்தாத்மா - மனது இந்திரியாதிகளை வசப்படுத்தினவனாய், த்யக்த ஸர்வ பரிக்ரஹ:- தனது என்றுள்ள எல்லாவற்றையும் விட்டவனாய், சாரீரம் கேவலம் கர்ம- சரீர போஷணத்துக்கு வேண்டிய கர்மத்தைமட்டும், குர்வந் - செய்கிறவன், கில்பிஷம் ந ஆப்நோதி - பாபத்தை யடைவதில்லை.

यदृच्छालाभसंतुष्टो द्वन्द्वातीतो विमत्सरः ।
समः सिद्धावसिद्धौ च कृत्वाऽपि न निबध्यते ॥२२॥

22. யத்ருச்சா லாப ஸந்துஷ்ட: த்வந்த்வாதீத: விமத் ஸர:
ஸம: ஸித்தௌ அஸித்தௌ ச க்ருத்வா அபி ந நிபத்யதே.

யத்ருச்சா லாப ஸந்துஷ்ட:-எதிர்பாராமல் கிடைத்த லாபத்தினால் திருப்தியடைந்தவனாய், த்வந்த்வாதீத:-சுகதுக்க, சீதோஷ்ண முதலான இருமைகளைத் தாண்டினவனாய், விமத்ஸர: - பொறாமையற்றவனாய், ஸித்தௌ அஸித்தௌ ச ஸம: - எது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அவற்றில் சமபுத்தியுடையவனா யிருப்பவன், க்ருத்வாபி-கர்மஞ்செய்தாலுங்கூட, ந நிபத்யதே - அதனால் அவன் கட்டுப்படுவதில்லை.

गतसङ्गस्य मुक्तस्य ज्ञानावस्थितचेतसः ।
यज्ञायाचरतः कर्म समग्रं प्रविलीयते ॥ २३ ॥

23. கதஸங்கஸ்ய முக்தஸ்ய ஜ்ஞாநாவஸ்தித சேதஸ:
யஜ்ஞாய ஆசரத: கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே.

கதஸங்கஸ்ய - பற்று அற்றவனாய், முக்தஸ்ய - (உலகவிஷயங்களிலிருந்து) விடுபட்டவனாய், ஜ்ஞாநாவஸ்தித சேதஸ: - ஞானத்தினால் திடமடைந்த மனதையுடையவனாய், யஜ்ஞாய ஆசரத: - பிறர் நன்மையின்பொருட்டு பகவத்ப்ரீதிக்காக கர்மம் செய்பவனது, ஸமக்ரம் கர்ம - எல்லா கர்மமும், ப்ரவிலீயதே - கரைந்து போகிறது.

ब्रह्मार्पणं ब्रह्महविर्ब्रह्माग्नौ ब्रह्मणा हुतम् ।
ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्मसमाधिना ॥ २४ ॥

24. ப்ரஹ்மா அர்பணம் ப்ரஹ்ம ஹவி: ப்ரஹ்மாக்நௌ ப்ரஹ்மணா [ஹுதம்.
ப்ரஹ்ம ஏவ தேந கந்தவ்யம் ப்ரஹ்மகர்ம ஸமாதிநா.

அர்பணம் - (யஜ்ஞ) கருவி, ப்ரஹ்மைவ - ப்ரஹ்மமே, ஹவி: ப்ரஹ்மைவ - (அன்னம், நெய் முதலான), ஹவிஸும் ப்ரஹ்மமே ப்ரஹ்மாக்நௌ - ப்ரம்மரூபமான அக்கினியில், ப்ரஹ்மணா - (யஜ்ஞ கர்த்தாவான) ப்ரஹ்மத்தினாலே, ஹுதம் - செய்யப்படும் ஹோமமும் (ப்ரம்மமே). ப்ரம்ம கர்ம ஸமாதிநா - ப்ரம்மமாகிற இந்த யஜ்ஞகர்மத்தில் ஸ்திரமான மனதையுடைய, தேந - அவனால், கந்தவ்யம் - அடையப்படுவதும், ப்ரஹ்மைவ - ப்ரம்மமே.

दैवमेवापरे यज्ञं योगिनः पर्युपासते ।
ब्रह्माग्नावपरे यज्ञं यज्ञेनैवोपजुह्वति ॥ २५ ॥

25. தைவம் ஏவ அபரே யஜ்ஞம் யோகிந: பர்யுபாஸதே
ப்ரஹ்மாக்நௌ அபரே யஜ்ஞம் யஜ்ஞேந ஏவ உபஜுஹ்வதி.

அபரே யோகிந: - சில கர்மயோகிகள், தைவமேவ யஜ்ஞம் - தேவதைகளைக் குறித்த யஜ்ஞத்தையே, பர்யுபாஸதே - செய்கிறார்கள். அபரே - மற்றவர்கள், ப்ரஹ்மாக்நௌ - ப்ரம்மமாகிய அக்னியில், யஜ்ஞேநைவ யஜ்ஞம் - ஆத்மாவினாலேயே ஆத்மாவையே, உபஜுஹ்வதி - ஹோமம் செய்கிறார்கள் (அதாவது பரப்ரம்மத்தினிடமே தன் ஆத்மாவை நிலைநிறுத்தி தனது என்னும் எல்லாவற்றையும் அவருக்கே அர்ப்பணம் செய்கிறார்கள். வேறு வெளி யஜ்ஞம் அவர்களுக்கு கிடையாது. ஞான மார்க்கத்தில் செல்லும் இதுவே ஞான யஜ்ஞம்).

श्रोत्रादीनीन्द्रियाण्यन्ये संयमाग्निषु जुह्वति ।
शब्दादीन्विषयानन्य इन्द्रियाग्निषु जुह्वति ॥ २६ ॥

26. ஶ்ரோத்ராதீநி இந்த்ரியாணி அந்யே ஸம்யமாக்நிஷு ஜுஹ்வதி
ஶப்தாதீந் விஷயாந் அந்யே இந்த்ரியாக்நிஷு ஜுஹ்வதி.

அந்யே - மற்றுஞ்சிலர், ஶ்ரோத்ராதீநி இந்திரியாணி - செவி முதலிய இந்திரியங்களை, ஸம்யமாக்நிஷு ஜுஹ்வதி - அடக்குதல் என்னும் அக்கினியில் ஹோமம் செய்கிறார்கள். அந்யே - வேறு சிலர், ஶப்தாதீந் விஷயாந் - சப்தம் முதலிய விஷயங்களை, இந்திரியாக்நிஷு ஜுஹ்வதி - இந்திரியங்கள் என்னும் அக்கினியில் ஹோமம் செய்கிறார்கள்.

सर्वाणीन्द्रियकर्माणि प्राणकर्माणि चापरे ।
आत्मसंयमयोगाग्नौ जुह्वति ज्ञानदीपिते ॥ २७ ॥

27. ஸர்வாணி இந்த்ரியகர்மாணி ப்ராணகர்மாணி ச அபரே
ஆத்மஸம்யம யோகாக்நௌ ஜுஹ்வதி ஜ்ஞாநதீபிதே.

அபரே - வேறுசில ஞானிகள், ஸர்வாணி இந்திரிய கர்மாணி - இந்திரியங்களின் எல்லாவித கர்மங்களையும், ப்ராணகர்மாணி ச - ப்ராணன்களின் கர்மங்களையும், ஜ்ஞாநதீபிதே - ஞானத்தினால் ப்ரகாசிக்கும், ஆத்மஸம்யம யோகாக்நௌ - ஆத்மாவினிடம் மனதை நிலைநிறுத்துதலாகிய யோகமென்னும் அக்கினியில், ஜுஹ்வதி - ஹோமம் செய்கிறார்கள்.

द्रव्ययज्ञास्तपोयज्ञा योगयज्ञास्तथाऽपरे ।
स्वाध्यायज्ञानयज्ञाश्च यतयः संशितव्रताः ॥ २८ ॥

28. த்ரவ்யயஜ்ஞா: தபோயஜ்ஞா: யோகயஜ்ஞா: தথா அபரே
ஸ்வாத்யாயஜ்ஞாந யஜ்ஞா: ச யதய: ஸம்ஶிதவ்ரதா:.

அபரே - சிலர், த்ரவ்யயஜ்ஞா: - த்ரவ்யதானத்தை யஜ்ஞமாக உடையவர், தபோயஜ்ஞா: - சிலர் தபஸை யஜ்ஞமாக உடையவர், யோகயஜ்ஞா: - மற்றவர் யோகத்தை யஜ்ஞமாக உடையவர், ததா - அப்படியே, ஸ்வாத்யா யஜ்ஞா ந யஜ்ஞாஶ்ச - சிலர் வேதம் ஓதுதலையும், ஞானத்தையும் யஜ்ஞமாக உடையவர், யதய: ஸம்ஶிதவ்ரதா: - (மற்றும் சிலர்) முயற்சி யுள்ள யதிகளாய் கடுமையான வ்ரதங்களை யுடையவர்கள்.

अपाने जुह्वति प्राणं प्राणेऽपानं तथाऽपरे ।
प्राणापानगती रुद्ध्वा प्राणायामपरायणाः ॥ २९ ॥

29. அபாநே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணே அபாநம் ததா அபரே
ப்ராணாபாநகதீ ருத்த்வா ப்ராணாயாம பராயணா:.

அபரே - மற்றும் சிலர், அபாநே ப்ராணம் ஜுஹ்வதி - அபாந வாயுவில் ப்ராண வாயுவை ஹோமம் செய்கின்றனர். ததா ப்ராணே அபாநம் ஜுஹ்வதி - அப்படியே (சிலர்) ப்ராணவாயுவில் அபாந வாயுவை ஹோமம் செய்கின்றனர். ப்ராணாபாநகதீ ருத்த்வா - (இவ்விதமாய்) ப்ராண அபாந வாயுக்களின் போக்கைத் தடுத்து, ப்ராணாயாம பராயணா: - ப்ராணாயாமம் செய்வதில் கருத்துள்ளவர்களாயிருக்கிறார்கள்.

अपरे नियताहाराः प्राणान्प्राणेषु जुह्वति ।
सर्वेऽप्येते यज्ञविदो यज्ञक्षपितकल्मषाः ॥ ३० ॥

30. அபரே நியதாஹாரா: ப்ராணான் ப்ராணேஷு ஜுஹ்வதி
ஸர்வே அபி ஏதே யஜ்ஞவித: யஜ்ஞ க்ஷபித கல்மஷா:.

அபரே - பின்னும் சிலர், நியதாஹாரா: - மித போஜன முண்டு, ப்ராணான் ப்ராணேஷு ஜுஹ்வதி - பலவித ப்ராணன் களை ஒன்றுக்குள் ஒன்று அடங்கும்படி ஹோமம் செய்கிறார்கள். யஜ்ஞவித: ஏதே ஸர்வே அபி - யஜ்ஞத்தை யறிந்த இந்த எல் லோரும், யஜ்ஞக்ஷபித கல்மஷா: (இந்தப் பலவித) யஜ்ஞங்களி னால் பாபம் தேயப் பெற்றவர்கள்.

यज्ञशिष्टामृतभुजो यान्ति ब्रह्म सनातनम् ।
नायं लोकोऽस्त्ययज्ञस्य कुतोऽन्यः कुरुसत्तम ॥ ३१ ॥

31. யஜ்ஞஶிஷ்டாம்ருத புஜ: யாந்தி ப்ரஹ்ம ஸநாதநம்
ந அயம் லோக: அஸ்தி அயஜ்ஞஸ்ய குத: அந்ய: குரு ஸத்தம.

யஜ்ஞஶிஷ்ட அம்ருத புஜ: - யஜ்ஞ சேஷமான அம்ருதத் தை உண்பவர்கள் (அதாவது யஜ்ஞத்தால் ஏற்பட்ட பயனை அனு பவிப்பவர்கள்), ஸநாதநம் ப்ரஹ்ம யாந்தி - எப்போதுமுள்ள பரப்ரஹ்மத்தை அடைகிறார்கள். அயஜ்ஞஸ்ய - யஜ்ஞமில்லாத வனுக்கு, அயம் லோக: நாஸ்தி - இந்த உலக (சுகமே) கிடையாது, ஹே குரு ஸத்தம!, அந்ய: குத: - (ஸ்வர்க்கம் முதலான) மற்றது எப்படி?

एवं बहुविधा यज्ञा वितता ब्रह्मणो मुखे ।
कर्मजान्विद्धि तान्सर्वानेवं ज्ञात्वा विमोक्ष्यसे ॥ ३२ ॥

32. ஏவம் பஹுவிதா: யஜ்ஞா: விததா: ப்ரஹ்மண: முகே
கர்மஜாந் வித்தி தாந் ஸர்வாந் ஏவம் ஜ்ஞாத்வா விமோக்ஷ்யஸே.

ஏவம் பஹுவிதா: யஜ்ஞா: - இவ்விதம் பலவித யஜ்ஞங் கள், ப்ரஹ்மண: முகே - வேதங்களில், விததா: - விவரிக்கப்பட்

டிருக்கின்றன. தாந் ஸர்வாந் - அவைகள் அனைத்தையும், கர்ம ஜாந் - (மன மொழி மெய்களின் செய்கைகளாகிய) கர் மத்திலிருந்துண்டானதாக, வித்தி - அறிவாயாக. த்வம் - நீ, ஏவம் ஜ்ஞாத்வா - இவ்விதம் அறிந்து (ஞானியாகி), விமோக்ஷ்ய ஸே - கர்மக்கட்டினின்று விடுபடுவாய்.

श्रेयान्द्रव्यमयाद्यज्ञाज्ज्ञानयज्ञः परन्तप ।
सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते ॥ ३३ ॥

33. ஶ்ரேயாந் த்ரவ்யமயாத் யஜ்ஞாத் ஜ்ஞாநயஜ்ஞ: பரந்தப
ஸர்வம் கர்ம அகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே.

ஹே பரந்தப!, ஜ்ஞாநயஜ்ஞ: - ஞான மென்னும் யஜ்ஞமா னது, த்ரவ்ய மயாத் யஜ்ஞாத் - திரவியங்களின் உதவியால் செய்யும் யஜ்ஞத்தைவிட, ஶ்ரேயாந் - மேலானது. ஹே பார்த்த!, ஸர்வ கர்ம - எல்லாவித கர்மமும், அகிலம் - மீதியின்றி, ஜ்ஞாநே - ஞானத் திலேயே, பரிஸமாப்யதே - அடங்கி யிருக்கிறது.

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।
उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनस्तत्त्वदर्शिनः ॥ ३४ ॥

34. தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிந: தத்வதர்ஶிந:.

தத் - அந்த ஞானத்தை, ப்ரணிபாதேந - வணக்க நமஸ்கா ரத்தினாலும், பரிப்ரஶ்நேந - கவனமாய் கேட்பதினாலும், ஸேவயா - பணிவிடையினாலும், வித்தி - தெரிந்துகொள். தத்வதர்ஶிந: ஜ்ஞாநிந: - உண்மை யறிந்த ப்ரம்மஞானிகள், தே - உனக்கு, ஜ்ஞா நம் - (உயர்ந்த அந்த) ஞானத்தை உபதேக்ஷ்யந்தி - உபதேசிப் பார்கள்.

यज्ज्ञात्वा न पुनर्मोहमेवं यास्यसि पाण्डव ।
येन भूतान्यशेषेण द्रक्ष्यस्यात्मन्यथो मयि ॥ ३५ ॥

35. யத் ஜ்ஞாத்வா ந புந: மோஹம் ஏவம் யாஸ்யஸி பாண்டவ
யேந பூதாநி அஶேஷேண த்ரக்ஷ்யஸி ஆத்மநி அதோ மயி.

ஹே பாண்டவ!, த்வம்-நீ,-யத் ஜ்ஞாத்வா-எந்த ஞானத்தை அறிந்து, புந: ஏவம் மோஹம்-மறுபடி இந்த மயக்கத்தை, ந யாஸ்யஸி-அடைய மாட்டாயோ, யேந-எந்த ஞானத்தால், பூதாநி அஶேஷேண-சகல பிராணிகளையும், ஆத்மநி-உன்னிடத்திலும், அதோ-அப்படியே, மயி-என்னிடத்திலும், த்ரக்ஷ்யஸி-காண்பாயோ, தத்-அப்படிப்பட்ட ஞானத்தை, (உபதேக்ஷ்யந்தி-உபதேசிப்பார்கள்)

अपि चेदसि पापेभ्यः सर्वेभ्यः पापकृत्तमः ।
सर्वं ज्ञानप्लवेनैव वृजिनं सन्तरिष्यसि ॥ ३६ ॥

36. அபி சேத் அஸி பாபேப்ய: ஸர்வேப்ய: பாபக்ருத்தம:
ஸர்வம் ஜ்ஞாநப்லவேந ஏவ வ்ருஜிநம் ஸந்தரிஷ்யஸி

த்வம்-நீ, ஸர்வேப்ய: பாபேப்ய:-எல்லாபாபிகளையும்விட, பாபக்ருத்தம: அபி சேத் அஸி-அதிகபாபம் செய்தவனாயிருந்தபோதிலும், ஜ்ஞாநப்லவேநைவ-ஞானமாகிற தெப்பத்தினால், ஸர்வம் வ்ருஜிநம்-சகலபாபத்தையும் (பாபசமுத்திரம்), ஸந்தரிஷ்யஸி-கடந்துவிடுவாய்.

यथैधांसि समिद्धोऽग्निर्भस्मसात्कुरुतेऽर्जुन ।
ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा ॥ ३७ ॥

37. யதா ஏதாம்ஸி ஸமித்த: அக்நி: பஸ்மஸாத் குருதே அர்ஜுந
ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா

ஹே அர்ஜுந-ஸமித்த: அக்நி:, ஜ்வலித்தெரியும் அக்கினியானது யதா-எப்படி, ஏதாம்ஸி-விறகுகளை, பஸ்மஸாத்குருதே-எரித்துச் சாம்பலாக்குகிறதோ, ததா-அப்படியே, ஜ்ஞாநாக்நி:-ஞானமென்னும் அக்கினியானது, ஸர்வகர்மாணி-சகலகர்மங்களையும், பஸ்மஸாத் குருதே-எரித்துவிடுகிறது.

न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते ।
तत्स्वयं योगसंसिद्धः कालेनात्मनि विन्दति ॥ ३८ ॥

38. நஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரம் இஹ வித்யதே
தத் ஸ்வயம் யோகஸம்ஸித்த: காலேந ஆத்மநி விந்ததி

இஹ-இவ்வுலகில், ஜ்ஞாநேந ஸத்ருஶம்-ஞானத்துக்கு ஸமானமாய், பவித்ரம்-தூய்மையைச் செய்யக்கூடியது, நஹி வித்யதே-வேறொன்றும் கிடையாது, தத்-அந்த ஞானத்தை, யோகஸம்ஸித்த:-யோகத்தினால் பக்குவமடைந்தவன், காலேந-காலக்கிரமத்தில், ஸ்வயம் ஆத்மநி விந்ததி-தானாகவே தன்னிடத்தில் அடைகிறான்.

श्रद्धावाँल्लभते ज्ञानं तत्परः संयतेन्द्रियः ।
ज्ञानं लब्ध्वा परां शान्तिमचिरेणाधिगच्छति ॥ ३९ ॥

39. ஶ்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம், தத்பர: ஸம்யதேந்த்ரிய:
ஜ்ஞாநம் லப்த்வா பராம் ஶாந்திம் அசிரேண அதிகச்சதி.

ஶ்ரத்தாவாந்-முயற்சியுள்ளவனும், தத்பர:-ஞானத்தையடைவதில் ஊக்கமுள்ளவனும், ஸம்யதேந்திரிய:-இந்திரியங்களை நன்றாகக்கட்டுப்படுத்தினவனும் உள்ளவன், ஜ்ஞாநம் லபதே-ப்ரம்ம ஞானத்தை யடைகிறான், ஜ்ஞாநம் லப்த்வா-அந்த ஞானத்தையடைந்து, பராம் ஶாந்திம்-உயர்ந்த ஶாந்த நிலையை, அசிரேண அதிகச்சதி-அதிசீக்கிரத்திலேயே அடைகிறான்.

अज्ञश्चाश्रद्दधानश्च संशयात्मा विनश्यति ।
नायं लोकोऽस्ति न परो न सुखं संशयात्मनः ॥४०॥

40. அஜ்ஞ: ச அஶ்ரத்ததாந: ச ஸம்ஶயாத்மா விநஶ்யதி
ந அயம் லோக: அஸ்தி ந அபர: ந ஸுகம் ஸம்ஶயாத்மந:!

அஜ்ஞ:-ஞானமின்றியும், அஶ்ரத்ததாநஶ்ச-ஶ்ரத்தையின்றியும், ஸம்ஶயாத்மா ச-சந்தேகமுள்ள மனதுடனும் கூடியவன், விநஶ்யதி-அழிந்துபோகிறான். ஸம்ஶயாத்மந:-சந்தேகமுள்ள மனதையுடையவனுக்கு, அயம் லோக: நாஸ்தி-இவ்வுலகமும் இல்லை, பரஶ்ச ந-பரலோகமுமில்லை, ஸுகம் ந-ஒருவித ஸுகமும் இல்லை.

योगसंन्यस्तकर्माणं ज्ञानसञ्छिन्नसंशयम् ।
आत्मवन्तं न कर्माणि निबध्नन्ति धनञ्जय ॥ ४१ ॥

41. யோகஸந்யஸ்த கர்மாணம் ஜ்ஞாந ஸம்சிந்ந ஸம்ஶயம்
ஆத்மவந்தம் ந கர்மாணி நிபத்நந்தி தநஞ்ஜய.

ஹே தநஞ்ஜய!, யோகஸந்யஸ்த கர்மாணம் - யோகத்திஞல் கர்மங்களைத் துறந்தவனையும், ஜ்ஞாந ஸம்சிந்ந ஸம்ஶயம் - ஞானத்திஞல் ஸம்சயம் நீங்கினவனையும், ஆத்மவந்தம் - ஆத்மஞானத்தில் உறுதியுடனுமிருப்பவனை, கர்மாணி - கர்மங்கள், ந நிபத்நந்தி - கட்டுப்படுத்துவதில்லை.

तस्मादज्ञानसम्भूतं हृत्स्थं ज्ञानासिनाऽऽत्मनः ।
छित्त्वैनं संशयं योगमातिष्ठोत्तिष्ठ भारत ॥ ४२ ॥

42. தஸ்மாத் அஜ்ஞாந ஸம்பூதம் ஹ்ருத்ஸ்தம் ஜ்ஞாநாஸிநா
[ஆத்மந:
சித்வா ஏநம் ஸம்ஶயம் யோகம் ஆதிஷ்ட்ட உத்திஷ்ட பாரத.

தஸ்மாத் - ஆதலால், த்வம் - நீ அஜ்ஞாநஸம்பூதம் - அவிவேகத்தாலுண்டான, ஹ்ருத்ஸ்தம் ஆத்மானம் - அறிவில்நிலைத்துள்ள ஆத்மாவைப்பற்றிய, ஏநம்ஸம்ஶயம் - இந்த ஸந்தேகத்தை, ஜ்ஞாநாஸிநா - ஞானமாகிற கத்தியிஞல், சித்வா - வெட்டி, யோகம் ஆதிஷ்ட - யோகத்தை கைகொள்வாயாக. ஹே பாரத! உத்திஷ்ட (யுத்தத்திற்கு) எழுந்திரு.

इति श्रीमद्भगवद्गीतासूप० ज्ञानविभागयोगो नाम चतुर्थोऽध्यायः ।

அத்தியாயம் 5.

ஶ்லோகம் 29

ஸந்யாஸ யோகம்.

अर्जुन उवाच—

संन्यासं कर्मणां कृष्ण पुनर्योगं च शंससि ।
यच्छ्रेय एतयोरेकं तन्मे ब्रूहि सुनिश्चितम् ॥ १ ॥

1. ஸந்ந்யாஸம் கர்மணாம் க்ருஷ்ண புந: யோகம் ச ஶம்ஸஸி
யத் ஶ்ரேய: ஏதயோ: ஏகம் தத் மே ப்ரூஹி ஸுநிஶ்சிதம்.

அர்ஜுனன் வினு—

ஹே க்ருஷ்ண!, கர்மணாம் ஸந்நியாஸம் - கர்மங்களின் விட்டுவிடுதலையும், புந: யோகஞ் ச - மறுபடி கர்ம யோகத்தையும், ஶம்ஸஸி - உபதேசித்தீர்கள். ஏதயோ: - (ஆயின்) இவ்விரண்டில், யத் ஶ்ரேய: - எது மேலானதாக, ஸுநிஶ்சிதம் - நிச்சயிக்கப்பட்டிருக்கிறதோ, தத் ஏகம் - அவ்வொன்றையே, மே ப்ரூஹி - எனக்குச் சொல்லுவீராக.

श्रीभगवानुवाच—

संन्यासः कर्मयोगश्च निःश्रेयसकरावुभौ ।
तयोस्तु कर्मसंन्यासात्कर्मयोगो विशिष्यते ॥ २ ॥

2. ஸந்ந்யாஸ: கர்மயோகஶ்ச நிஶ்ரேயஸகரௌ உபௌ
தயோ: து கர்மஸந்ந்யாஸாத் கர்மயோக: விஶிஷ்யதே.

பகவான் விடை—

ஸந்யாஸ: - கர்மத்தையே விட்டுவிடுதலும், கர்மயோகஶ்ச - (பல அபேக்ஷையின்றி செய்யும்) கர்ம அநுஷ்டானமும், உபௌ - இவ்விரண்டுமே, நிஶ்ரேயஸகரௌ - ஶ்ரேயஸைக் கொடுப்பவைகளே, தயோஸ்து - (ஆயின்) அவைகளுள், கர்மஸந்யாஸாத் - கே

வலம் கர்மத்தையே விட்டுவிடுவதைக்காட்டிலும், கர்மயோக: விசிஷ்யதே - கர்ம யோகமே சிறந்தது.

ज्ञेयः स नित्यसंन्यासी यो न द्वेष्टि न काङ्क्षति ।
निर्द्वन्द्वो हि महाबाहो सुखं बन्धात्प्रमुच्यते ॥ ३ ॥

3. ஜ்ஞேய: ஸ: நித்யஸந்யாஸீ ய: ந த்வேஷ்டி ந காங்க்ஷதி [யதே.
நிர்த்வந்த்வ: ஹி மஹாபாஹோ ஸுகம் பந்தாத் ப்ரமுச்

ஹே மஹாபாஹோ!, ய: - எவன், ந த்வேஷ்டி ந காங்க்ஷதி - த்வேஷிக்கிறதில்லையோ, விரும்புகிறதில்லையோ, ஸ:- அவன், நித்ய ஸந்யாஸீ (இதி) ஜ்ஞேய: - நித்ய ஸந்யாஸி என்பதாக அறியத்தக்கவன். ஹி - ஏனெனில், நிர்த்வந்த்வ: - இருமைகள் அற்றவன், பந்தாத் - கர்மபந்தத்திலிருந்து, ஸுகம் ப்ரமுச்யதே - எளிதாக விடுபடுகிறான்.

सांख्ययोगौ पृथग्बालाः प्रवदन्ति न पण्डिताः ।
एकमप्यास्थितः सम्यक् उभयोर्विन्दते फलम् ॥ ४ ॥

4. ஸாங்க்யயோகௌ ப்ருதக் பாலா: ப்ரவதந்தி ந பண்டிதா:
ஏகம் அபி ஆஸ்தித: ஸம்யக் உபயோ: விந்ததே பலம்.

பாலா: - அறிவில் சிறிய அவிவேகிகள், ஸாங்க்ய யோகௌ - ஸாங்க்யமும் யோகமும், ப்ருதக் (இதி) ப்ரவதந்தி - வேறுவேறு என்று சொல்லுகிறார்கள். பண்டிதா: ந - ஞானிகள் அப்படி சொல்லார். உபயோ: ஏகமபி - இவ்விரண்டில் ஒன்றையாவது, ஸம்யக் ஆஸ்தித: - நன்றாக அனுஷ்டித்தவன், பலம் விந்ததே - (இரண்டினது பலனுமான) முக்தியை அடைகிறான்.

यत्सांख्यैः प्राप्यते स्थानं तद्योगैरपि गम्यते ।
एकं सांख्यं च योगं च यः पश्यपि स पश्यति ॥५॥

5. யத் ஸாங்க்யை: ப்ராப்யதே ஸ்தானம் தத் யோகை: அபி கம்
ஏகம் ஸாங்க்யம் ச யோகம் ச ய: பச்யதி ஸ: பச்யதி. [யதே

ஸாங்க்யை: - பரமாத்ம தத்வத்தை யறிந்த ஞானிகளால் யத் ஸ்தானம் ப்ராப்யதே - எந்தப் பதவியானது அடையப்படுகிறதோ, தத் - அதே பதவியானது, யோகைரபி கம்யதே - கர்ம யோகிகளாலும் அடையப் படுகிறது. ய: - எவன், ஸாங்க்யம் ச யோகம் ச - ஸாங்க்ய யோகத்தையும் கர்ம யோகத்தையும், ஏகம் பச்யதி - ஒரே பலனுள்ளதாகக் காண்கின்றானோ, ஸ: பச்யதி - அவனே பார்க்கிறான் (உண்மையை யறிந்தவன்).

संन्यासस्तु महाबाहो दुःखमाप्तुमयोगतः ।
योगयुक्तो मुनिर्ब्रह्म न चिरेणाधिगच्छति ॥ ६ ॥

6. ஸந்யாஸ: து மஹாபாஹோ து:கம் ஆப்தும் அயோகத:
யோகயுக்த: முனி: ப்ரஹ்ம ந சிரேண அதிகச்சதி.

ஹே மஹாபாஹோ!, ஸந்யாஸஸ்து - உண்மையான ஸந்நியாஸமோ, அயோகத: - கர்ம யோகத்தினாலன்றி, ஆப்தும் துக்கம் - அடைவதற்கு மிகவும் அரிது. யோக யுக்த: முனி: - கர்ம யோகத்துடன் கடவுளை தியானித்துக்கொண்டிருப்பவன், ப்ரஹ்ம - பரமாத்மாவை, ந சிரேண அதிகச்சதி - சீக்கிரத்தில் அடைகிறான்.

योगयुक्तो विशुद्धात्मा विजितात्मा जितेन्द्रियः ।
सर्वभूतात्मभूतात्मा कुर्वन्नपि न लिप्यते ॥ ७ ॥

7. யோகயுக்த: விசுத்தாத்மா விஜிதாத்மா ஜிதேந்த்ரிய:
ஸர்வபூதாத்ம பூதாத்மா குர்வன் அபி ந லிப்யதே.

யோகயுக்த: - கர்ம யோகத்துடன் கூடினவனாய், விசுத்தாத்மா - நிர்மலமான மனதை யுடையவனாய், விஜிதாத்மா - தேகத்தை ஜயித்தவனாய், ஜிதேந்த்ரிய: - இந்திரியங்களை ஜயித்தவனாய், ஸர்வபூதாத்மபூதாத்மா - தன் ஆத்மாவை ஸகல இதரபிராணிகளிலும் இருக்கும் ஆத்மாவாக அறிந்தவனாய் (இருப்பவன்), குர்வந் அபி - கர்மங்களைச் செய்துகொண்டிருந்தாலும், ந லிப்யதே - கர்ம பந்தத்தை அடைவதில்லை.

नैव किंचित्करोमीति युक्तो मन्येत तत्त्ववित् ।
पश्यन्शृण्वन्स्पृशञ्जिघ्रन्नश्नन्गच्छन्स्वपन्श्वसन् ॥ ८ ॥

प्रलपन्विसृजन्गृह्णन्नुन्मिषन्निमिषन्नपि ।
इन्द्रियाणीन्द्रियार्थेषु वर्तन्त इति धारयन् ॥ ९ ॥

8. ந ஏவ கிஞ்சித் கரோமி இதி யுக்தஃ மந்யேத தத்வவித் [ஸந்.
பஶ்யந் ஶ்ருண்வந் ஸ்ப்ருஶந் ஜிக்ரந் அஶ்நந் மச்சந் ஸ்வபந் ஶ்வ

9. ப்ரலபந் விஸ்ருஜந் க்ருஹ்ணந் உந்மிஷந் நிமிஷந் அபி
இந்த்ரியாணி இந்த்ரியார்த்தேஷு வர்தந்தே இதி தாரயந்.

தத்வவித் - பரமார்த்த உண்மையை யறிந்த ஞானி, பஶ்யந் அபி - பார்த்தாலும், ஶ்ருண்வந் - கேட்டாலும், ஸ்ப்ருஶந் - தொட்டாலும், ஜிக்ரந் - முகர்ந்தாலும், அஶ்நந் -புஜித்தாலும், கச்சந் -நடந்தாலும், ஸ்வபந் - தூங்கினாலும், ஶ்வஸந் -சுவாஸித்தாலும், ப்ரலபந்- பேசினாலும், விஸ்ருஜந்-(மல ஜலம்) விட்டாலும், க்ருஹ்ணந்-(கையினால்) எடுத்தாலும், உந்மிஷந் - கண்களை விழித்தாலும், நிமிஷந் - மூடினாலும், இந்திரியாணி இந்திரியார்த்தேஷு வர்தந்தே இதி தாரயந்- இந்திரியங்கள் இந்திரிய விஷயங்களில் ப்ரவ்ருத்திக்கின்றன என்று நிச்சயித்துக்கொண்டு, அஹம்கிஞ்சித் ந ஏவ கரோமி இதி - நான் ஒரு காரியத்தையும் செய்யவில்லையென்று, மந்யேத - நினைப்பான்.

ब्रह्मण्याधाय कर्माणि सङ्गं त्यक्त्वा करोति यः ।
लिप्यते न स पापेन पद्मपत्रमिवाम्भसा ॥ १० ॥

10. ப்ரஹ்மணி ஆதாய கர்மாணி ஸங்கம் த்யக்த்வா கரோதி யஃ
லிப்யதே ந ஸஃ பாபேந பத்மபத்ரம் இவ அம்பஸா.

யஃ - எவன், கர்மாணி - கர்மங்களை, ப்ரஹ்மணி ஆதாய - பரமாத்மாவிடம் அர்ப்பித்து, ஸங்கம் த்யக்த்வா - பலனில் விருப்பத்தைவிட்டு, கரோதி - கர்மம் செய்கிறானோ, ஸஃ - அவன், அம்

பஸா பத்மபத்ரம் இவ - ஜலத்தினால் தாமரையிலைபோல, பாபேந லிப்யதே - பாபத்தினால் பாதிக்கப்படுவதில்லை.

कायेन मनसा बुद्ध्या केवलैरिन्द्रियैरपि ।
योगिनः कर्म कुर्वन्ति सङ्गं त्यक्त्वाऽऽत्मशुद्धये ॥११॥

11. காயேந மநஸா புத்த்யா கேவலைஃ இந்த்ரியைஃ அபி
யோகிநஃ கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வா ஆத்மஶுத்தயே.

யோகிநஃ - கர்மயோகிகள், ஸங்கம் த்யக்த்வா - பலனில் பற்றுதலின்றி, ஆத்மஶுத்தயே - ஆத்மபரிசுத்தத்தின்பொருட்டு, கேவலைஃ காயேந மநஸாபுத்த்யா இந்திரியைரபி - கேவலம் தேகம், மனது, புத்தி, இந்திரியங்கள் இவைகளினால், கர்மகுர்வந்தி - கர்மத்தை செய்கிறார்கள்.

युक्तः कर्मफलं त्यक्त्वा शान्तिमाप्नोति नैष्ठिकीम् ।
अयुक्तः कामकारेण फले सक्तो निबध्यते ॥ १२ ॥

12. யுக்தஃ கர்மபலம்த்யக்த்வா ஶாந்திம் ஆப்நோதி நைஷ்டிகீம்
அயுக்தஃ காமகாரேண பலே ஸக்தஃ நிபத்யதே.

யுக்தஃ-கர்மயோகத்துடன் கூடிய ஒரு நிலைப்பட்டவன், கர்மபலம் த்யக்த்வா - கர்மபலனில் இச்சையை விட்டு, நைஷ்டிகீம் ஶாந்திம் - நிஷ்டையினாலுண்டாகும் மன அமைதியை, ஆப்நோதி - அடைகிறான். அயுக்தஃ - யோகத்தினால் ஒரு நிலைப்படாதவன், காமகாரேண - காமத்தினால் தூண்டப்பட்டு, பலே ஸக்தஃ - கர்மபலனில் பற்றுடன், நிபத்யதே - (கர்மத்தால்) கட்டுப்படுகிறான்.

सर्वकर्माणि मनसा संन्यस्यास्ते सुखं वशी ।
नवद्वारे पुरे देही नैव कुर्वन्न कारयन् ॥ १३ ॥

13. ஸர்வகர்மாணி மநஸா ஸந்யஸ்ய ஆஸ்தே ஸுகம் வஶீ
நவத்வாரே புரே தேஹீ ந ஏவ குர்வந் ந காரயந்.

வஶீதேஹீ - எல்லாவற்றையும் வசப்படுத்தியுள்ள ஆத்மா, ஸர்வகர்மாணி - எல்லா கர்மங்களையும், மநஸா ஸந்யஸ்ய - விவேக

மான மனதினால் விட்டுவிட்டு, நைவகுர்வந் ந காரயந் (தான் ஒன்றும்) செய்யாமலும் (பிறரை ஒன்றும்) செய்விக்காமலும், நவத்வாரே புரே - நவத்வாரமுடைய இந்த தேகமாகிய புரியில், ஸுகம் ஆஸ்தே - ஸௌக்கியமாக தங்கியிருக்கிறான்.

न कर्तृत्वं न कर्माणि लोकस्य सृजति प्रभुः ।
न कर्मफलसंयोगं स्वभावस्तु प्रवर्तते ॥ १४ ॥

14. ந கர்த்ருத்வம் ந கர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு:
ந கர்மபலஸம்யோகம் ஸ்வபாவ: து ப்ரவர்ததே.

ப்ரபு: - கடவுள், லோகஸ்ய - உலகத்துக்கு, கர்த்ருத்வம் ந ஸ்ருஜதி - கர்த்ருத்வத்தை உண்டாக்கவில்லை, கர்மாணி ந - கர்மத்தை சிருஷ்டிக்கவில்லை, கர்மபலஸம்யோகம் ந - கர்மபல அனுபவத்தையும் ஸ்ருஷ்டிக்கவில்லை, ஸ்வபாவஸ்து ப்ரவர்ததே - இயற்கை யென்பதே ப்ரவ்ருத்திக்கின்றது.

नादत्ते कस्यचित्पापं न चैव सुकृतं विभुः ।
अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः ॥ १५ ॥

15. ந ஆதத்தே கஸ்யசித் பாபம் ந ச ஏவ ஸுக்ருதம் விபு:
அஜ்ஞானேந ஆவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ:.

விபு: - எங்கும் நிறைந்துள்ள பரமாத்மா, கஸ்யசித் பாபம் - எவனுடைய பாபத்தையும், ந ஏவ ஆதத்தே - வாங்கிக்கொள்ளுகிறதே யில்லை. ஸுக்ருதம் ச ந ஏவ ஆதத்தே - புண்ணியத்தையும் வாங்கிக்கொள்ளுகிறதே யில்லை. ஜ்ஞாநம் அஜ்ஞானேந ஆவ்ருதம் - ஞானமானது அஜ்ஞானத்தினால் மூடப்பட்டிருக்கிறது. தேந - அதனால், ஜந்தவ: - ஜந்துக்கள், முஹ்யந்தி - மயக்கமடைந்திருக்கின்றன.

ज्ञानेन तु तदज्ञानं येषां नाशितमात्मनः ।
तेषामादित्यवज्ज्ञानं प्रकाशयति तत्परम् ॥ १६ ॥

16. ஜ்ஞானேந து தத் அஜ்ஞாநம் யேஷாம் நாஶிதம் ஆத்மந:
தேஷாம் ஆதித்யவத் ஜ்ஞாநம் ப்ரகாஶயதி தத் பரம்.

யேஷாம் தத் அஜ்ஞாநம் - எவர்களுடைய அந்த அஜ்ஞானமானது, ஆத்மந: ஜ்ஞானேந - பரமாத்மாவைப்பற்றிய ஞானத்தினால், நாஶிதம் - நசித்துப்போயிற்றோ, தேஷாம்து ஜ்ஞாநம் - அவர்களுடைய ஞானமேதான், ஆதித்யவத் - சூரியனைப்போல், தத்பரம் - அப் பரம் பொருளை, ப்ரகாஶயதி - பிரகாசமாய் விளங்கச் செய்கிறது.

तद्बुद्धयस्तदात्मानस्तन्निष्ठास्तत्परायणाः ।
गच्छन्त्यपुनरावृत्तिं ज्ञाननिर्धूतकल्मषाः ॥ १७ ॥

17. தத்புத்தய: ததாத்மாந: தந்நிஷ்டா: தத்பராயணா:
கச்சந்தி அபுநராவ்ருத்திம் ஜ்ஞாநநிர்தூத கல்மஷா:.

தத்புத்தய: - பரமாத்மாவினிடமே புத்தியை செலுத்தியவர்கள், தத் ஆத்மாந: - அதையே தன் ஆத்மாவாக அறிந்தவர்கள், தந்நிஷ்டா: - பரமாத்மாவினிடமே நிலைத்திருப்பவர்கள், தத்பராயணா: - பரமாத்மாவையே அடைக்கலமாகக் கொண்டவர்கள், ஜ்ஞாந நிர்தூத கல்மஷா: - ஞானத்தினால் பாபங்களை நசிக்கச்செய்தவர்கள், அபுநராவ்ருத்திம் கச்சந்தி - திரும்பிவந்து பிறவாத பதவியை (மோக்ஷத்தை) அடைகிறார்கள்.

विद्याविनयसम्पन्ने ब्राह्मणे गवि हस्तिनि ।
शुनि चैव श्वपाके च पण्डिताः समदर्शिनः ॥ १८ ॥

18. வித்யாவிநயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி
ஶுநி ச ஏவ ஶ்வபாகே ச பண்டிதா: ஸமதர்ஶிந:.

பண்டிதா: - ஞானிகள், வித்யாவிநயஸம்பந்நே - வித்தையும் விநயமுமுள்ள, ப்ராஹ்மணே - ப்ராம்மணனிடத்திலும், கவி - பசுவினிடத்திலும், ஹஸ்திநி - யானையினிடத்திலும், ஶுநி ச - நாயினிடத்திலும், ஶ்வபாகே ச - அதை சமைத்து உண்ணும் சண்டாளனிடத்திலும், ஸமதர்ஶிந: ஏவ - (கடவுளை) ஸமமாகப் பார்க்கும் தன்மை யுள்ளவர்கள்.

इहैव तैर्जितः सर्गो येषां साम्ये स्थितं मनः ।
निर्दोषं हि समं ब्रह्म तस्माद्ब्रह्मणि ते स्थिताः ॥१९॥

19. இஹ ஏவ தைஃ ஜிதஃ ஸர்கஃ யேஷாம் ஸாம்யே ஸ்தி2தம் மநஃ
நிர்தோஷம் ஹி ஸமம் ப்3ரஹ்ம தஸ்மாத் ப்3ரஹ்மணி தே
[ஸ்தி2தாஃ

யேஷாம் மநஃ - எவர்களது மனம், ஸாம்யே ஸ்திதம்-ஸமத்வ புத்தியில் (எல்லாவற்றிலும் பரம்பொருளை ஸமமாகப் பார்த்தல்) ஸ்திரமாயிருக்கிறதோ, தைஃ - அவர்களால், இஹைவ - இங்கேயே, ஸர்கஃ ஜிதஃ - பிறப்பு ஜயிக்கப்பட்டது. ஹி - ஏனெனில், ப்ரஹ்ம - பரமாத்மா, நிர்தோஷம் - குற்றமற்றது, ஸமம் - ஸமமானது, தஸ்மாத் - ஆதலால், தே - அவர்கள், ப்ரஹ்மணிஸ்திதாஃ - பரமாத்மாவினிடம் நிலைத்திருப்பவர்கள்.

न प्रहृष्येत्प्रियं प्राप्य नोद्विजेत्प्राप्य चाप्रियम् ।
स्थिरबुद्धिरसम्मूढो ब्रह्मविद्ब्रह्मणि स्थितः ॥ २० ॥

20. ந ப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய ந உத்3விஜேத் ப்ராப்ய ச அப்
[ரியம்
ஸ்தி2ரபு3த்3தி4ஃ அஸம்மூட4ஃ ப்3ரஹ்மவித் ப்3ரஹ்மணி ஸ்தி2தஃ.

ஸ்திரபுத்திஃ-பரமாத்மாவிடம் நிலைத்த புத்தியை யுடையவன், அஸம்மூடஃ - கலக்கமற்றவனும், ப்ரம்மவித்-ப்ரம்மத்தை யறிந்தவனும், ப்ரம்மணிஸ்திதஃ - ப்ரம்மத்தில் நிலைத்திருப்பவனும் உள்ளவன், ப்ரியம் ப்ராப்ய ந ப்ரஹ்ருஷ்யேத் - இஷ்டமானதை யடைந்தால் ஸந்தோஷிக்கமாட்டான், அப்ரியம் ப்ராப்ய ச ந உத்விஜேத் - இஷ்டமில்லாதது கிடைத்தால் விசனப்படவுமாட்டான்.

बाह्यस्पर्शेष्वसक्तात्मा विन्दत्यात्मनि यत्सुखम् ।
स ब्रह्मयोगयुक्तात्मा सुखमक्षय्यमश्नुते ॥ २१ ॥

21. பா3ஹ்யஸ்பர்சே2ஷு அஸக்தாத்மா விந்த3தி ஆத்மநி யத்
ஸுக2ம்
ஸஃ ப்3ரஹ்மயோக3யுக்தாத்மா ஸுக2ம் அக்ஷய்யம் அச்2நுதே.

ஸஃ - அந்த ப்ரம்மநிஷ்டன், பாஹ்யஸ்பர்சேஷு அஸக்தாத்மா - வெளிவிஷயங்களில் பற்றற்ற மனதையுடையவனாய், ஆத்மநி யத் ஸுகம் - ஆத்மஞானத்தில் எந்த ஸுகமுண்டோ, தத் ஸுகம் விந்ததி - அந்த சுகத்தை அடைகிறான். ஸஃ ப்ரம்மயோக யுக்தாத்மா - அவன் பரமாத்மாவிடம் ஐக்கியமான மனதையுடையவனாய், அக்ஷயம் ஸுகம் அச்நுதே - குறைவில்லாத ஸுகத்தை அனுபவிக்கிறான்.

ये हि संस्पर्शजा भोगा दुःखयोनय एव ते ।
आद्यन्तवन्तः कौन्तेय न तेषु रमते बुधः ॥ २२ ॥

22. யே ஹி ஸம்ஸ்பர்சஜாஃ போ4கா3ஃ து3ஃக2யோநயஃ ஏவ தே
ஆத்3யந்தவந்தஃ கௌந்தேய ந தேஷு ரமதே பு3த4ஃ.

ஹி - ஏனெனில், ஸம்ஸ்பர்சஜாஃ போகாஃ யே-இந்திரிய விஷய சம்பந்தத்தினால் உண்டாகும் அனுபவங்கள் எவைகளோ, தே - அவைகள், துக்கயோநய ஏவ - துக்கத்துக்கே காரணமானவை, ஆத்யந்தவந்தஃ - ஆதி, அந்த முள்ளவைகள், ஹே கௌந்தேய !, புதஃ - விவேகியானவன், தேஷு ந ரமதே - அவைகளில் மகிழ்வது இல்லை.

शक्नोतीहैव यः सोढुं प्राक् शरीरविमोक्षणात् ।
कामक्रोधोद्भवं वेगं स युक्तः स सुखी नरः ॥ २३ ॥

23. ச2க்நோதி இஹ ஏவ யஃ ஸோடு4ம் ப்ராக் ச2ரீரவிமோக்ஷணாத்
காமக்ரோதோ4த்3ப4வம் வேக3ம் ஸஃ யுக்தஃ ஸஃ ஸுகீ2 நரஃ.

யஃ நரஃ - எந்த மனிதன், இஹைவ - இங்கேயே, சரீரவிமோக்ஷணாத் ப்ராக் - சரீரத்தை விடுவதற்கு முன்பே, காமக்ரோதோத்பவம் வேகம்-ஆசை, கோபம், இவைகளாலுண்டாகும் விசையை, ஸோடும் - பொறுப்பதற்கு, சக்நோதி - சக்தியுடையவனோ, ஸஃ யுக்தஃ - அவனே யோகி, ஸஃ ஸுகீ - அவனே ஸுகி.

योऽन्तः सुखोऽन्तरारामस्तथाऽन्तर्ज्योतिरेव यः ।
स योगी ब्रह्मनिर्वाणं ब्रह्मभूतोऽधिगच्छति ॥ २४ ॥

24. ய: அந்தஸ்ஸுகோ அந்தராராம: தகா அந்தர்ஜ்யோதி ஏவ ய:
ஸ: யோகீ ப்ரஹ்மநிர்வாணம் ப்ரஹ்மபூத: அதிகச்சதி.

ய: - எவன், அந்தஸ்ஸுக: - தன் உள்ளேயே (ஆத்மாவினிடத்து) இன்பமுடையவனும், ததா - அப்படியே, அந்தராராம: - தன் உள்ளேயே ரமிக்கிறவனும், ததா - அவ்விதமே, அந்தர்ஜ்யோதிரேவ - தன் உள்ளேயே (ஞானமாகிய) ஒளியையுடையவனும், ய: - எவன் (இருக்கிறானோ), ஸ: யோகீ - அந்த யோகி, ப்ரம்மபூத: - தானே ப்ரம்மமாகி, ப்ரம்ம நிர்வாணம் - ப்ரம்மாநந்த பதவியை, அதி கச்சதி - அடைகிறான்.

लभन्ते ब्रह्मनिर्वाणमृषयः क्षीणकल्मषाः ।
छिन्नद्वैधा यतात्मानः सर्वभूतहिते रताः ॥ २५ ॥

25. லபந்தே ப்ரஹ்மநிர்வாணம் ருஷய: க்ஷீணகல்மஷா:
சிந்நத்வைதா: யதாத்மாந: ஸர்வபூதஹிதே ரதா:.

க்ஷீணகல்மஷா: - பாபத்தைப்போக்கிக் கொண்டவர்களாயும் சிந்நத்வைதா: - ஸம்சயம் நீங்கினவர்களாயும், யதாத்மாந: - இந்திரியங்களை வசப்படுத்தினவர்களாயும், ஸர்வபூதஹிதே ரதா: - சகல ப்ராணிகளுக்கும் ஹிதத்தையே கோருகிறவர்களாயுமுள்ள, ரிஷய: - ரிஷிகள், ப்ரஹ்மநிர்வாணம் லபந்தே - ப்ரம்மாநந்த பதவியை அடைகிறார்கள்.

कामक्रोधवियुक्तानां यतीनां यतचेतसाम् ।
अभितो ब्रह्मनिर्वाणं वर्तते विदितात्मनाम् ॥ २६ ॥

26. காமக்ரோத வியுக்தாநாம் யதீநாம் யதசேதஸாம்
அபித: ப்ரஹ்மநிர்வாணம் வர்ததே விதிதாத்மநாம்.

காமக்ரோத வியுக்தாநாம் - ஆசை, கோபம் இவைகள் நீங்கப் பெற்றவராயும், யதசேதஸாம் - மனதை யடக்கினவராயும், விதித ஆத்மநாம் - ஆத்மாவை அறிந்தவர்களாயும் உள்ள, யதீநாம் - ப்ரம்மஞானிகளுக்கு, ப்ரம்மநிர்வாணம் ப்ரம்மாநந்த மோக்ஷ பதவி, அபித: வர்ததே - இகத்திலும் பரத்திலும் உண்டாகிறது.

स्पर्शान्कृत्वा बहिर्बाह्यांश्चक्षुश्चैवान्तरे भ्रुवोः ।
प्राणापानौ समौ कृत्वा नासाभ्यन्तरचारिणौ ॥ २७ ॥
यतेन्द्रियमनोबुद्धिर्मुनिर्मोक्षपरायणः ।
विगतेच्छाभयक्रोधो यः सदा मुक्त एव सः ॥ २८ ॥

[ப்ருவோ:

27. ஸ்பர்ஸாந் க்ருத்வா பஹி: பாஹ்யாந் சக்ஷு: ச ஏவ அந்தரே
ப்ராணாபாநௌ ஸமௌ க்ருத்வா நாஸாப்யந்தரசாரிணௌ.

28. யதேந்த்ரிய மநோ புத்தி: முநி: மோக்ஷ பராயண:
விகத இச்சா பயக்ரோத: ய: ஸதா முக்த: ஏவ ஸ:.

பாஹ்யாந் ஸ்பர்ஸாந் - வெளி சப்தாதி இந்திரிய விஷயங்களை, பஹி: க்ருத்வா - வெளியிலேயே நிறுத்தி, ப்ருவோ: அந்தர ஏவ - புருவங்களின் மத்தியில், சக்ஷு: க்ருத்வா - பார்வையை நிறுத்தி, நாஸாப்யந்தரசாரிணௌ - நாசியின் வழியாய் போய்வரும், ப்ராணாபாநௌ - ப்ராண அபாந வாயுக்களை, ஸமௌ ச க்ருத்வா - ஸமமாகச் செய்து, யதேந்த்ரிய மநோ புத்தி: - இந்திரியம், மனது, புத்தி, இவைகளை வசப்படுத்தி அடக்கி, விகத இச்சா பய க்ரோத: - ஆசை, பயம், கோபம், இவைகளை நீக்கி, மோக்ஷ பராயண: - மோக்ஷத்தையே மேலான புகலிடமாகக் கருதியுள்ள, முநி: ய: - பகவத் தியானம் செய்துகொண்டிருக்கும் ஞானி எவனோ, ஸ: - அவன், ஸதா முக்த ஏவ - எப்போதும் பந்தத்திலிருந்து விடுபட்டவனே.

भोक्तारं यज्ञतपसां सर्वलोकमहेश्वरम् ।
सुहृदं सर्वभूतानां ज्ञात्वा मां शान्तिमृच्छति ॥ २९ ॥

29. போக்தாரம் யஜ்ஞ தபஸாம் ஸர்வ லோக மஹேஶ்வரம் [சதி.
ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வா மாம் ஶாந்திம் ருச்

யஜ்ஞ தபஸாம் போக்தாரம்- யஜ்ஞம், தபஸ், இவைகளை அனுபவிக்கிறவனையும், ஸர்வலோக மஹேஶ்வரம் - சகல லோகபிரபஞ்சத்துக்கும் தலைவரான ஈஶ்வரனும், ஸர்வபூதாநாம் ஸுஹ்ருதம் - சகல ப்ராணிகளுக்கும் நன்மையைக் கோருகிறவனும் ஆன, மாம் - என்னை, ஜ்ஞாத்வா- அறிந்தவனையு மிருப்பவன், ஶாந்திம் ருச்சதி- சாந்த பதவியை அடைகிறான்.

इति श्रीमद्भगवद्गीता सूप० संन्यासयोगो नाम पञ्चमोऽध्यायः ।

அத்தியாயம் 6. ஶ்லோகம் 47.

தியான யோகம்.

श्रीभगवानुवाच—

अनाश्रितः कर्मफलं कार्यं कर्म करोति यः ।
स संन्यासी च योगी च न निरग्निर्न चाक्रियः ॥१॥

1. அநாஶ்ரித: கர்மபலம் கார்யம் கர்ம கரோதி ய:
ஸ: ஸந்யாஸீ ச யோகீ ச ந நிரக்நி: ந ச அக்ரிய:.

கிருஷ்ணபகவான் வாக்கியம்—

ய: - எவன், கர்ம பலம் அநாஶ்ரித: - கர்ம பலனை விரும்பாமல், கார்யம் கர்ம கரோதி - செய்யவேண்டிய தொழிலைச் செய்கிறானோ, ஸ: - அவன், ஸந்யாஸீ ச யோகீ ச - ஸந்நியாஸியும் யோகியும் (ஆவான்). நிரக்நி ந அக்ரியஶ்ச ந - அக்கினியில்லாதவனும் கர்மமில்லாதவனும் (ஸந்யாஸியும் யோகியும்) ஆகமாட்டான்.

यं संन्यासमिति प्राहुर्योगं तं विद्धि पाण्डव ।
न ह्यसंन्यस्तसङ्कल्पो योगी भवति कश्चन ॥ २ ॥

2. யம் ஸந்யாஸம் இதி ப்ராஹு: யோகம் தம் வித்தி பாண்டவ
ந ஹி அஸந்யஸ்த ஸங்கல்ப: யோகீ பவதி கஶ்சந.

ஹே பாண்டவ!, யம் ஸந்யாஸம் இதி ப்ராஹு: - எதை சந்யாஸமென்று சொல்லுகிறார்களோ, தம் யோகம் வித்தி - அதை யோகம் என்று அறிவாயாக. ஹி - ஏனெனில், அஸந்யஸ்த ஸங்கல்ப: கஶ்சந - எண்ணங்களை விட்டொழிக்காத எவனும், யோகீ ந பவதி - யோகியாக ஆகமுடியாது.

आरुरुक्षोर्मुनेर्योगं कर्म कारणमुच्यते ।
योगारूढस्य तस्यैव शमः कारणमुच्यते ॥ ३ ॥

3. ஆருருக்ஷோ: முனே: யோகம் கர்ம காரணம் உச்யதே
யோகாரூடஸ்ய தஸ்ய ஏவ ஶம: காரணம் உச்யதே.

யோகம் ஆருருக்ஷோ: முனே: - யோகத்தை யடைய விருப்பமுடை யமுனிவனுக்கு, கர்ம காரணம் உச்யதே - கர்மமே சாதனமாகச் சொல்லப்படுகிறது. யோகாரூடஸ்ய தஸ்ய ஏவ - யோகத்தைக்கூடிய அவனுக்கே, ஶம: காரணம் உச்யதே - (உலகவிஷயங்களில் பற்றின்மை) ஒழிவு சாதனமாகச் சொல்லப்படுகிறது.

यदा हि नेन्द्रियार्थेषु न कर्मस्वनुषज्जते ।
सर्वसङ्कल्पसंन्यासी योगारूढस्तदोच्यते ॥ ४ ॥

4. யதா ஹி ந இந்த்ரியார்தேஷு ந கர்மஸு அநுஷஜ்ஜதே
ஸர்வ ஸங்கல்ப ஸந்ந்யாஸீ யோகாரூட: ததா உச்யதே.

யதா - எப்போது, இந்திரியார்தேஷு ந அநுஷஜ்ஜதே - இந்திரிய விஷயங்களில் பற்றுக்கொள்வதில்லையோ, கர்மஸு ந-கர்மம் செய்வதில் இச்சையில்லையோ, ஸர்வ ஸங்கல்ப ஸந்யாஸீ - சகலவித எண்ணங்களையும் விட்டுவிடுகிறானோ, ததா ஹி - அப்போதேதான் யோகாரூட: உச்யதே - யோகத்தை யடைந்தவனென்று சொல்லப்படுகிறான்.

उद्धरेदात्मनाऽऽत्मानं नात्मानमवसादयेत् ।
आत्मैव ह्यात्मनो बन्धुरात्मैव रिपुरात्मनः ॥ ५ ॥

5. உத்தரேத் ஆத்மனா ஆத்மானம் ந ஆத்மானம் அவஸாதயேத்
ஆத்மா ஏவ ஹி ஆத்மன: பந்து: ஆத்மா ஏவ ரிபு: ஆத்மன:.

ஆத்மானம் ஆத்மனா உத்தரேத் - தன்னைத் தன்னாலேயே (தன் சொந்த முயற்சியால் ஸம்ஸாரஸாகரத்திலிருந்து) கரையேற்றிக் கொள்ளவேண்டியது. ஆத்மானம் ந அவஸாதயேத் - தன்னை கெடுத்துக் கொள்ளக்கூடாது. ஹி - ஏனெனில், ஆத்மன: ஆத்ம ஏவ பந்து: - தனக்குத்தானே நண்பன், ஆத்மன: ஆத்ம ஏவ ரிபு: - தனக்குத்தானே பகைவன்.

बन्धुरात्माऽऽत्मनस्तस्य येनात्मैवात्मना जितः ।
अनात्मनस्तु शत्रुत्वे वर्तेतात्मैव शत्रुवत् ॥ ६ ॥

6. பந்து: ஆத்மா ஆத்மன: தஸ்ய யேன ஆத்மா ஏவ ஆத்மனா [ஜித:
அநாத்மன: து ஶத்ருத்வே வர்தேத ஆத்மா ஏவ ஶத்ருவத்.

யேன ஆத்மனா - எந்த ஆத்மாவினாலே, ஆத்மனாஜித: - ஆத்மா (உலகப்பற்றினின்றும்) ஜயிக்கப்பட்டிருக்கிறதோ, தஸ்ய ஆத்மன: - அந்த ஆத்மாவுக்கு, ஆத்ம ஏவ பந்து:-ஆத்மாவே மித்திரன், அநாத்மனஸ்து - ஆத்மாவை ஜயிக்காதவனுக்கோ, ஆத்மைவ ஶத்ருவத்- ஆத்மாவே சத்துருவைப்போல், ஶத்ருத்வே வர்தேத - சத்துருத் தன்மையிலிருக்கும்.

जितात्मनः प्रशान्तस्य परमात्मा समाहितः ।
शीतोष्णसुखदुःखेषु तथा मानापमानयोः ॥ ७ ॥

ज्ञानविज्ञानतृप्तात्मा कूटस्थो विजितेन्द्रियः ।
युक्त इत्युच्यते योगी समलोष्टाश्मकाञ्चनः ॥ ८ ॥

7. ஜ்ஞான விஜ்ஞான த்ருப்தாத்மா கூடஸ்த: விஜிதேந்த்ரிய:
யுக்த: இதி உச்யதே யோகீ ஸம லோஷ்டாஶ்ம காஞ்சன:.

8. ஜிதாத்மன: ப்ரஶாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித:
ஶீதோஷ்ண ஸுகது:கேஷு ததா மானாபமானயோ:.

ஜ்ஞானவிஜ்ஞான த்ருப்தாத்மா - நூலறிவு அனுபவ அறிவு இவைகளினால் திருப்தி யடைந்த மனதை யுடையவனும், கூடஸ்த: - எதற்கும் சலிக்காதவனும், விஜிதேந்திரிய: - இந்திரியங்களை நன்றாய் வசப்படுத்தி ஜயித்தவனும், ஸமலோஷ்டாஶ்மகாஞ்சன: - களி, கல், பொன், இவற்றை சமமாகக் கருதுகிறவனும் உள்ள, யோகீ-யோகியானவன், யுக்த இதி உச்யதே-ஒரு நிலைப்பட்டவன் எனப்படுகிறான்.

ஜிதாத்மந: - இந்திரியாதிகளை ஜயித்தவனையும், ப்ரஶாந்தஸ்ய - தெளிந்த சாந்த மனதுடையவனுக்கு, ஶீதோஷ்ண சுக துக்கேஷு - சீத, உஷ்ண, சுக துக்கங்களிலும், ததா - அப்படியே, மாநாப மாநயோ: - மான அவமானங்களிலும், பரமாத்மா ஸமாஹித: - பரமாத்மா அவனுடைய ஹ்ருதயத்தில் ஒரேவிதமாய் ப்ரகாசிக்கிறார் (அவன் ஒரேவிதமாய் இருப்பான்).

सुहृन्मित्रार्युदासीनमध्यस्थद्वेष्यबन्धुषु ।
साधुष्वपि च पापेषु समबुद्धिर्विशिष्यते ॥ ९ ॥

9. ஸுஹ்ருத் மித்ரம் அரி: உதாஸீந: மத்யஸ்த: த்வேஷ்ய: பந்துஷு
ஸாதுஷு அபி ச பாபேஷு ஸமபுத்தி: விஶிஷ்யதே. [ஷு

ஸுஹ்ருந்மித்ரார்யுதாஸீந மத்யஸ்தத் த்வேஷ்ய பந்துஷு - நன்மையைக்கோருபவன், நண்பன், பகைவன், உதாஸீநன், மத்தியஸ்தன், த்வேஷிப்பவன், உறவினன் இவர்களிடத்தும், ஸாதுஷ்வபி - ஸாதுக்களிடத்தும், பாபேஷு ச - பாபிகளிடத்தும், ஸமபுத்தி: - சமமான புத்தியுள்ளவன், விஶிஷ்யதே - உத்தமமானவன்.

योगी युञ्जीत सततमात्मानं रहसि स्थितः ।
एकाकी यतचित्तात्मा निराशीरपरिग्रहः ॥ १० ॥

10. யோகீ யுஞ்ஜீத ஸததம் ஆத்மாநம் ரஹஸி ஸ்தித:
ஏகாகீ யதசித்தாத்மா நிராஶீ: அபரிக்ரஹ:.

யோகீ - யோகியானவன், ரஹஸி ஏகாகீ ஸ்தித: - தனிமையான இடத்தில் ஏகாந்தமாக இருந்துகொண்டு, யதசித்தாத்மா - தேகாதிகளை வசப்படுத்தி, நிராஶீ: - ஆசைகளை விட்டவனாய், அபரிக்ரஹ: - தனது என்பது ஏதுமிலனாய், ஆத்மானம் - மனதை, ஸததம் - எப்போதும், யுஞ்ஜீத - ஸமாதியில் (ஒரே நோக்கத்தில்) நிறுத்தவேண்டும்.

शुचौ देशे प्रतिष्ठाप्य स्थिरमासनमात्मनः ।
नात्युच्छ्रितं नातिनीचं चैलाजिनकुशोत्तरं ॥ ११ ॥

तत्रैकाग्रं मनः कृत्वा यतचित्तेन्द्रियक्रियः ।
उपविश्यासने युंज्याद्योगमात्मविशुद्धये ॥ १२ ॥

11. ஶுசௌ தேஶே ப்ரதிஷ்டாப்ய ஸ்திரம் ஆஸநம் ஆத்மந:
ந அத்யுச்ச்ரிதம் ந அதிநீசம் சைலாஜிநகுஶோத்தரம்.

12. தத்ர ஏகாக்ரம் மந: க்ருத்வா யதசித்தேந்த்ரியக்ரிய:
உபவிஶ்ய ஆஸநே யுஞ்ஜ்யாத் யோகம் ஆத்மவிஶுத்தயே.

யோகியானவன், நாத்யுச்ச்ரிதம் நாதிநீசம் - அதிக உயரமும் அதிக தாழ்வு மின்றி, சைலாஜிந குஶோத்தரம் - வஸ்த்ரம், மான் தோல், தர்ப்பை இவற்றை மேலே யுடைய, ஸ்திரம் ஆஸநம் - ஸ்திரமான ஆஸனத்தை, ஶுசௌ தேஶே - பரிசுத்தமான இடத்தில், ஆத்மந: ப்ரதிஷ்டாப்ய - தன்பொருட்டு ஏற்படுத்திக்கொண்டு, தத்ர ஆஸநே உபவிஶ்ய - அவ்வாஸனத்திலுட்கார்ந்து, மந: ஏகாக்ரம் க்ருத்வா - மனதை ஒருநிலைப்படுத்தி, யதசித்தஇந்திரியக்ரிய: - சித்தம் இந்திரியாதிகளின் செய்கைகளை யடக்கி, ஆத்மவிஶுத்தயே - சித்த பரிசுத்தத்தின்பொருட்டு, யோகம் யுஞ்ஜ்யாத் - யோகத்தைச் செய்யவேண்டியது.

समं कायशिरोग्रीवं धारयन्नचलं स्थिरः ।
संप्रेक्ष्य नासिकाग्रं स्वं दिशश्चानवलोकयन् ॥ १३ ॥
प्रशान्तात्मा विगतभीर्ब्रह्मचारिव्रते स्थितः ।
मनः संयम्य मच्चित्तो युक्त आसीत मत्परः ॥ १४ ॥

13. ஸமம் காயஶிரோக்ரீவம் தாரயந் அசலம் ஸ்திரம்
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திஶ: ச அநவலோகயந்.

14. ப்ரஶாந்தாத்மா விகதபீ: ப்ரஹ்மசாரிவ்ரதே ஸ்தித:
மந: ஸம்யம்ய மச்சித்த: யுக்த: ஆஸீத மத்பர:.

யோகியானவன், காய ஶிரோக்ரீவம் - தேகம், கழுத்து, தலை இவைகளை, ஸமம் - நேராகவும், அசலம் - அசையாமலும், தாரயந் - வைத்துக்கொண்டும், ஸ்திர: - ஸ்திரமாயிருந்துகொண்டும், ஸ்வம்

நாஸிகாக்ரம் ஸம்ப்ரேக்ஷ்ய - தனது மூக்கு நுனியைப் பார்த்துக் கொண்டு, திசஸ்ச அநவலோகயந் - பலதிசைகளில் பார்வையைச் செலுத்தாமலும், ப்ரசாந்தாத்மா - சாந்தமான அமைதியான மனதுடன், விகதபீ:-பயம் நீங்கினவனாய், ப்ரஹ்மசாரிவ்ரதே ஸ்தித: - ப்ரம்மசர்ய வ்ரதத்தில் இருப்பவனாய், மந: ஸம்யம்ய - மனதை அடக்கினவனாய், மச்சித்த: மத்பர: - சித்தத்தை என்னிடம் வைத்து என்னையே அடையத்தகுந்த மேலான பொருளாகக் கருதி, யுக்த: ஆஸீத - யோகயுக்தனாயிருக்கவேண்டும்.

युञ्जन्नेवं सदाऽऽत्मानं योगी नियतमानसः ।
शान्तिं निर्वाणपरमां मत्संस्थामधिगच्छति ॥ १५ ॥

15. யுஞ்ஜந் ஏவம் ஸதா ஆத்மாநம் யோகீ நியதமாநஸ:
சாந்திம் நிர்வாணபரமாம் மத்ஸம்ஸ்தாம் அதிகச்சதி.

ஏவம் - இவ்விதமாய், ஆத்மாநம் ஸதாயுஞ்ஜன் - மனதை எப்போதும் தியானத்தில் நிறுத்தினவனாய், நியதமாநஸ: - மனதை அடக்கின, யோகீ - யோகியானவன், மத் ஸம்ஸ்தாம் நிர்வாண பரமாம் - என்னிடத்திலுள்ள முக்திநிலையாகிய, சாந்திம் - சாந்தமான ஒழிவை, அதிகச்சதி - அடைகிறான்.

नात्यश्नतस्तु योगोऽस्ति न चैकान्तमनश्नतः ।
न चातिस्वप्नशीलस्य जाग्रतो नैव चार्जुन ॥ १६ ॥

16. ந அத்யச்நத: து யோக: அஸ்தி ந ச ஏகாந்தம் அநச்நத:
ந ச அதிஸ்வப்நசீலஸ்ய ஜாக்ரத: ந ஏவ ச அர்ஜுந.

ஹே அர்ஜுந!, யோக: - இந்த தியானயோகமானது, அத்யச்நத: - அதிகமா யுண்பவனுக்கு, ந து அஸ்தி - இல்லவேயில்லை. ஏகாந்தம் அநச்நத: - சிறிதளவேனும் புசிக்காதவனுக்கும், ந - இல்லை. அதிஸ்வப்நசீலஸ்ய ந-அதிக தூக்கமுள்ளவனுக்கு இல்லை. அதி ஜாக்ரத: ந ஏவ - அதிகம் விழித்திருப்பவனுக்கும் இல்லை.

युक्ताहारविहारस्य युक्तचेष्टस्य कर्मसु ।
युक्तस्वप्नावबोधस्य योगो भवति दुःखहा ॥ १७ ॥

17. யுக்தாஹார விஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு
யுக்தஸ்வப்நாவ போதஸ்ய யோக: பவதி து:கஹா.

யுக்தாஹாரவிஹாரஸ்ய-மிதமான ஆகாராதிகளை யுடையவனும், கர்மஸு யுக்தசேஷ்டஸ்ய - கர்மங்களில் சரியானபடி பிரவிருத்திக்கிறவனும், யுக்தஸ்வப்நாவ போதஸ்ய - மிதமான நித்திரையும் விழிப்புமுடையவனுக்கும் (உள்ளவனுக்கு), யோக: - யோகமானது, துக்கஹா பவதி - துக்கத்தைப் போக்குவதாக ஆகிறது.

यदा विनियतं चित्तमात्मन्येवावतिष्ठते ।
निःस्पृहः सर्वकामेभ्यो युक्त इत्युच्यते तदा ॥ १८॥

18. யதா விநியதம் சித்தம் ஆத்மநி ஏவ அவதிஷ்டதே
நிஸ்ப்ருஹ:ஸர்வ காமேப்ய: யுக்த: இதி உச்யதே ததா.

யதா - எப்போது, சித்தம் விநியதம் - மனது நன்றாய் அடக்கப்பட்டு, ஆத்மந்யேவ அவதிஷ்டதே - ஆத்மாவினிடத்தில் நிலைத்திருக்கிறதோ, ததா - அப்போது, ஸர்வ காமேப்ய: நிஸ்ப்ருஹ: - எல்லா போகவிஷயங்களிலும் ஆசை நீங்கினவனாய், யுக்த இதி - ஒரு நிலைப்பட்ட ஸமாதியை யடைந்தவனென்று, உச்யதே - சொல்லப்படுகிறான்.

यथा दीपो निवातस्थो नेङ्गते सोपमा स्मृता ।
योगिनो यतचित्तस्य युञ्जतो योगमात्मनः ॥ १९ ॥

19. யதா தீப: நிவாதஸ்த: ந இங்கதே ஸா உபமா ஸ்ம்ருதா
யோகிந: யதசித்தஸ்ய யுஞ்ஜத: யோகம் ஆத்மந:.

நிவாதஸ்த: தீப: - காற்றில்லாவிடத்து விளக்கு, யதா ந இங்கதே - எப்படி அசையாமலிருக்குமோ, ஸா-அது, ஆத்மந: யோகம் யுஞ்ஜத: - ஆத்ம யோகத்தை அனுஷ்டிக்கும், யோகிந: யத சித்தஸ்ய - யோகியின் அடங்கின சித்தத்துக்கு, உபமா ஸ்ம்ருதா - உபமானமாய்க் கருதப்படுகிறது.

यत्रोपरमते चित्तं निरुद्धं योगसेवया ।
यत्र चैवाऽऽत्मनाऽऽत्मानं पश्यन्नात्मनि तुष्यति ॥२०॥

20. யத்ர உபரமதே சித்தம் நிருத்தம் யோகஸேவயா
யத்ர ச ஏவ ஆத்மநா ஆத்மாநம் பஶ்யந் ஆத்மநி துஷ்யதி.

சித்தம் - மனதானது, யோகஸேவயா-யோக அநுஷ்டானத்தினால், நிருத்தம்-வசப்படுத்தப்பட்டு, யத்ர உபரமதே - எப்போது ஒழிவை யடைகிறதோ, யத்ர - எப்போது, ஆத்மநா ஆத்மாநம் பஶ்யந் - பரிசுத்த நிர்மலமான அறிவினால் பரமாத்மாவைப்பார்த்து (அனுபவித்துக்கொண்டு), ஆத்மந்யேவ துஷ்யதி - பரமாத்மாவினிடத்திலேயே சந்துஷ்டியை யடைகின்றானோ (அப்போதே யோகத்தின் பலனை யடைகிறான்).

सुखमात्यन्तिकं यत्तद्बुद्धिग्राह्यमतीन्द्रियम् ।
वेत्ति यत्र न चैवायं स्थितश्चलति तत्त्वतः ॥ २१ ॥

21. ஸுகம் ஆத்யந்திகம் யத் தத் புத்திக்ராஹ்யம் அதீந்த்ரியம்
வேத்தி யத்ர ந ச ஏவ அயம் ஸ்தித: சலதி தத்வத:.

புத்திக்ராஹ்யம் - புத்தியினால் கிரகித்து அறியத்தக்கதும், அதீந்த்ரியம் - இந்திரியங்களுக் கெட்டாததும், ஆத்யந்திகம் - முடிவில்லாததுமான, ஸுகம் யத் - சுகம் எதுவோ, தத் - அந்த சுகத்தை, யத்ரவேத்தி - (யோகி) எப்போது அனுபவித்து உணருகிறானோ, அயம் - இவன், ஸ்தித:-பரமாத்மாவில் நிலைத்து, தத்வத: அந்த உண்மை நிலையிலிருந்து, ந ஏவ சலதி - சலிப்பதே யில்லையோ (அப்போது யோகத்தின் பயனை அடைகிறான்).

यं लब्ध्वा चापरं लाभं मन्यते नाधिकं ततः ।
यस्मिन्स्थितो न दुःखेन गुरुणाऽपि विचाल्यते ॥२२॥

22. யம் லப்த்வா ச அபரம் லாபம் மந்யதே ந அதிகம் தத:
யஸ்மிந்ஸ்தித: ந து:கேந குருணா அபி விசால்யதே.

யம் ச லப்த்வா - எதை அடைந்து, தத: - அதைக்காட்டிலும், அபரம் லாபம் - வேறு லாபத்தை, அதிகம் ந மந்யதே - மேலானதாக எண்ணுவதில்லையோ, யஸ்மின் ஸ்தித:-எதில் நிலைத்திருந்து, குருணா துக்கேநாபி - மிகப் பெரிய துக்கத்தினாலும், ந விசால்யதே - சலிக்கப்படுவதில்லையோ (அதுவே யோகம்).

तं विद्याद् दुःखसंयोगवियोगं योगसञ्ज्ञितम् ।
स निश्चयेन योक्तव्यो योगोऽनिर्विण्णचेतसा ॥२३॥

23. தம் வித்யாத் து:கஸம்யோகவியோகம் யோகஸஞ்ஜ்ஞிதம்
ஸ: நிஶ்சயேந யோக்தவ்ய: யோக: அநிர்விண்ணசேதஸா.

துக்க ஸம்யோக வியோகம் தம்-துக்கச் சேர்க்கையிலிருந்து விடுபடுதலாகிய அது, யோகஸம்ஜ்ஞிதம் வித்யாத் - யோகம் என்னும் பெயருடையதாக அறியவேண்டியது. ஸ: யோக: - அந்த யோகம், நிஶ்சயேந - மன திடம் அல்லது உறுதியி[...], அநிர்விண்ண சேதஸா - கலங்கி வருந்துதலில்லாத மன[...] யோக்தவ்ய: - அடையவேண்டியது.

सङ्कल्पप्रभवान्कामांस्त्यक्त्वा सर्वानशेषतः ।
मनसैवेन्द्रियग्रामं विनियम्य समन्ततः ॥ २४ ॥
शनैःशनैरुपरमेद् बुद्ध्या धृतिगृहीतया ।
आत्मसंस्थं मनः कृत्वा न किञ्चिदपि चिन्तयेत् ॥२५॥

24. ஸங்கல்ப ப்ரபவாந் காமாந் த்யக்த்வா ஸர்வாந் அஶேஷத:
மநஸா ஏவ இந்த்ரியக்ராமம் விநியம்ய ஸமந்தத:.
25. ஶநை: ஶநை: உபரமேத் புத்த்யா த்ருதிக்ருஹீதயா
ஆத்மஸம்ஸ்தம் மந: க்ருத்வா ந கிஞ்சித் அபி சிந்தயேத்.

ஸங்கல்ப ப்ரபவாந் - எண்ணங்களை பிறப்பிடமாய்க்கொண்ட, ஸர்வாந் காமாந் - எல்லா ஆசைகளையும், அஶேஷத: த்யக்த்வா - முழுவதும் விட்டுவிட்டு, மநஸைவ - மனதினாலேயே, இந்திரியக்ராமம் - இந்திரியக்கூட்டத்தை, ஸமந்தத: விநியம்ய - எல்லாப்பக்

58232
R65,6
N28

கங்களிலிருந்தும் அடக்கி, த்ருதிக்ருஹீதயா புத்யா - தைரியத்
துடன்கூடின புத்தியினால், ஶனை: ஶனை: - சிறிதுசிறிதாய், உபர
மேத் - ஒழிவை யடையவேண்டும். மந: - மனதை, ஆத்மஸம்ஸ்
தம் க்ருத்வா - பரமாத்மாவினிடம் நிலைத்திருக்கச்செய்து, கிஞ்
சிதபி ந சிந்தயேத் - (வேறு) ஒன்றையும் சிந்திக்கக்கூடாது.

यतो यतो निश्चरति मनश्चञ्चलमस्थिरम् ।
ततस्ततो नियम्यैतदात्मन्येव वशं नयेत् ॥ २६ ॥

26. யத: யத: நிஶ்சரதி மந: சஞ்சலம் அஸ்திரம்
தத: தத: நியம்ய ஏதத் ஆத்மநி ஏவ வஶம் நயேத்.

சஞ்சலம் - மிகவும் சஞ்சலமானதும், அஸ்திரம் - ஸ்திரமற்
றதுமான, மந: - மனதானது, யதோயத: - எதெதின் நிமித்தம்,
நிஶ்சரதி - அலைகின்றதோ, ததஸ்தத: - அததினின்றும், ஏதத் நியம்ய -
இந்த மனதை அடக்கி, ஆத்மந்யேவ வஶம் - பரமாத்மாவினிடத்
தில் வசமாக, நயேத் - செய்யவேண்டும்.

प्रशान्तमनसं ह्येनं योगिनं सुखमुत्तमम् ।
उपैति शान्तरजसं ब्रह्मभूतमकल्मषम् ॥ २७ ॥

27. ப்ரஶாந்தமநஸம் ஹி ஏநம் யோகிநம் ஸுகம் உத்தமம்
உபைதி ஶாந்தரஜஸம் ப்ரஹ்மபூதம் அகல்மஷம்.

ப்ரஶாந்தமநஸம் - அமைதி யடைந்த மனதை யுடையவனையும்,
ஶாந்தரஜஸம் - ரஜோகுணம் அடங்கினவனையும், அகல்மஷம் - கல்
மஷமற்றவனையும், ப்ரஹ்மபூதம் - விதேகமுக்தனாயிருக்கும், ஏநம்
யோகிநம் ஹி - இப்படிப்பட்ட யோகியைத்தான், உத்தமம் ஸுகம்
உபைதி - உத்தமமான பேரின்பசுகம் வந்தடைகின்றது.

युञ्जन्नेवं सदाऽऽत्मानं योगी विगतकल्मषः ।
सुखेन ब्रह्मसंस्पर्शमत्यन्तं सुखमश्नुते ॥ २८ ॥

28. யுஞ்ஜந் ஏவம் ஸதா ஆத்மாநம் யோகீ விகதகல்மஷ:
ஸுகேந ப்ரஹ்மஸம்ஸ்பர்ஶம் அத்யந்தம் ஸுகம் அஶ்நுதே.

ஏவம் - இவ்விதமாய், விகதகல்மஷ: யோகீ - பாபம் நீங்கிய
யோகி, ஸதா ஆத்மாநம் யுஞ்ஜந் எப்போதும் தன் ஆத்மாவை
பரமாத்மாவிடம் லயப்படுத்தி, ப்ரம்ம ஸம்ஸ்பர்ஶம் - ப்ரம்ம சம்
பந்தமான, அத்யந்தம் ஸுகம் - எல்லையில்லா சுகத்தை, ஸுகேந
அஶ்நுதே - எளிதில் அனுபவிக்கிறான்.

सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि ।
ईक्षते योगयुक्तात्मा सर्वत्र समदर्शनः ॥ २९ ॥

29. ஸர்வபூதஸ்தம் ஆத்மாநம் ஸர்வபூதாநி ச ஆத்மநி
ஈக்ஷதே யோகயுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்ஶந:.

யோகயுக்தாத்மா - யோகத்துடன்கூடின மனதையுடையவ
னாய், ஸர்வத்ரஸமதர்ஶந: - ஸகலத்திலும் ஸமமான பார்வையை
யுடையவனாய், ஆத்மாநம் ஸர்வபூதஸ்தம் - தன் ஆத்மாவை சர்வ
பூதங்களிலுமிருப்பதாயும், ஸர்வபூதாநி ஆத்மநி ச - சர்வபூதங்
களும் பரமாத்மாவிடத்திலிருப்பதாயும், ஈக்ஷதே - பார்க்கிறான்.

यो मां पश्यति सर्वत्र सर्वं च मयि पश्यति ।
तस्याहं न प्रणश्यामि स च मे न प्रणश्यति ॥ ३० ॥

30. ய: மாம் பஶ்யதி ஸர்வத்ர ஸர்வம் ச மயி பஶ்யதி
தஸ்ய அஹம் ந ப்ரணஶ்யாமி ஸ: ச மே ந ப்ரணஶ்யதி.

ய: - எவன், ஸர்வத்ரமாம்பஶ்யதி - எல்லாவற்றிலும் என்னை
பார்க்கிறானோ, ஸர்வம் மயி ச பஶ்யதி - சர்வத்தையும் என்னிடத்
திலும் பார்க்கிறானோ, தஸ்ய - அவனுக்கு, அஹம் - நான், ந ப்
ரணஶ்யாமி - காணப்படாமலிருப்பதில்லை. ஸ-ச அவனும், மே-
எனக்கு, ந ப்ரணஶ்யதி - காணப்படாமலிருப்பதில்லை.

सर्वभूतस्थितं यो मां भजत्येकत्वमास्थितः ।
सर्वथा वर्तमानोऽपि स योगी मयि वर्तते ॥ ३१ ॥

31. ஸர்வபூதஸ்திதம் ய: மாம் பஜதி ஏகத்வம் ஆஸ்தித:
ஸர்வதா வர்தமாந: அபி ஸ: யோகீ மயி வர்ததே.

யः - எவன், ஏகத்வம் ஆஸ்திதः - ஆத்மா ஒன்றே என்பதை உறுதியாகக்கொண்டு, மாம் - என்னை, ஸர்வபூதஸ்திதம் - எல்லாவற்றிலு மிருப்பதாக, பஜதி - பூஜிக்கின்றானோ, ஸः யோகீ - அந்த யோகி, ஸர்வதா வர்தமாநோபி - எந்த மார்க்கத்திலிருந்தபோதிலும், மயிவர்ததே - என்னிடத்திலிருக்கிறான்.

आत्मौपम्येन सर्वत्र समं पश्यति योऽर्जुन ।
सुखं वा यदि वा दुःखं स योगी परमो मतः ॥३२॥

32. ஆத்மௌபம்யேந ஸர்வத்ர ஸமம் பஶ்யதி யः அர்ஜுந
ஸுகம் வா யதி வா து:கம் ஸः யோகீ பரமः மதः.

ஹே அர்ஜுந!, யः - எவன், ஆத்மௌபம்யேந - தன்னை உபமானமாகக்கொண்டு (பிறர் சுகதுக்கங்களை தனதுபோல் கருதுவதில்), ஸர்வத்ர - எல்லா ப்ராணிகளிடத்தும், ஸுகம் வா யதி வா துக்கம் - சுகத்தையும் அல்லது துக்கத்தையும், ஸமம் பஶ்யதி - ஸமமாகப் பார்க்கிறானோ, ஸः யோகீ - அந்த யோகியானவன், பரமः மதः - உத்தமனாகக் கருதப்படுகிறான்.

अर्जुन उवाच—

योऽयं योगस्त्वया प्रोक्तः साम्येन मधुसूदन ।
एतस्याहं न पश्यामि चञ्चलत्वात्स्थितिं स्थिराम् ॥ ३३ ॥

33. யः அயம் யோகः த்வயா ப்ரோக்தः ஸாம்யேந மதுஸூதந
ஏதஸ்ய அஹம் ந பஶ்யாமி சஞ்சலத்வாத் ஸ்திதிம் ஸ்திராம்.

அர்ஜுனன் வாக்கியம்—

ஹே மதுஸூதந!, ஸாம்யேந - யः அயம்யோகः - சமமாகப் பார்த்தல் என்னும் யாதொரு இந்த யோகமானது, த்வயா ப்ரோக்தः - தம்மால் உபதேசிக்கப்பட்டதோ, ஏதஸ்ய ஸ்திராம் ஸ்திதிம் - அதன் நிலையான இருப்பை, சஞ்சலத்வாத் - என் சஞ்சலத்தினால், அஹம் ந பஶ்யாமி - நான் அறிந்துகொள்ள முடியவில்லை.

चञ्चलं हि मनः कृष्ण प्रमाथि बलवद्दृढम् ।
तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम् ॥ ३४ ॥

34. சஞ்சலம் ஹி மநः க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம்
தஸ்ய அஹம் நிக்ரஹம் மந்யே வாயோः இவ ஸுதுஷ்கரம்.

ஹே க்ருஷ்ண!, மநः - மனதானது, சஞ்சலம் - சலனமுடையது, ப்ரமாதி - கலங்கச்செய்வது, பலவத் - பலமுடையது, த்ருடம் ஹி - த்ருடமும் ஆனது; தஸ்யநிக்ரஹம் - அதனை அடக்குதல், வாயோரிவ - காற்றை (அடக்குவதைப்) போல், ஸுதுஷ்கரம் - மிகவும் கஷ்டமானது (என்று), அஹம் மந்யே - நான் நினைக்கிறேன்.

श्रीभगवानुवाच—

असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम् ।
अभ्यासेन तु कौन्तेय वैराग्येण च गृह्यते ॥ ३५ ॥

35. அஸம்ஶயம் மஹாபாஹோ மநः துர்நிக்ரஹம் சலம்
அப்யாஸேந து கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே.

பகவான் விடை—

ஹே மஹாபாஹோ!, மநः-மனதானது, துர்நிக்ரஹம்-அடக்குவதற்கு கஷ்டமானது, சலம் - சஞ்சலமுடையது (என்பதில்). அஸம்ஶயம்-ஸந்தேகமில்லை. ஹே கௌந்தேய!, அப்யாஸேந து- ஆனால் பழக்கத்தினாலும், வைராக்யேன ச - பற்றின்மையாலும், க்ருஹ்யதே - அடக்கப்படுகிறது.

असंयतात्मना योगो दुष्प्राप इति मे मतिः ।
वश्यात्मना तु यतता शक्योऽवाप्तुमुपायतः ॥ ३६ ॥

36. அஸம்யதாத்மநா யோகः துஷ்ப்ராப இதி மே மதிः
வஶ்யாத்மநா து யததா ஶக்யः அவாப்தும் உபாயதः.

அஸம்யதாத்மநா - அடக்கப்படாத மனதை யுடையவனால், யோகः - யோகமானது, துஷ்ப்ராப இதி - அடைய முடியாது என்பது, மே மதிः - எனது அபிப்பிராயம். து - ஆனால், வஶ்யாத்மநா யததா - மனதை வசப்படுத்தி முயற்சி செய்பவனால், உபாயதः -

(அப்பியாச வைராக்கிய) உபாயத்தினுல், அவாப்தும் ஶக்ய:-அடைவதற்கு முடியுமானது.

अर्जुन उवाच—

अयतिः श्रद्धयोपेतो योगाच्चलितमानसः ।
अप्राप्य योगसंसिद्धिं कां गतिं कृष्ण गच्छति ॥३७॥

37. அயதி: ஶ்ரத்தயா உபேத: யோகாத் சலிதமாநஸ:
அப்ராப்ய யோகஸம்ஸித்திம் காம் கதிம் க்ருஷ்ண கச்சதி.

அர்ஜுனன் வினு—

ஹே க்ருஷ்ண !, ஶ்ரத்தயா உபேத: - சிரத்தையுடன் கூடினவனுய், அயதி: - சிறிதளவே முயற்சியுள்ளவனுய், யோகாத் சலிதமாநஸ: - (மரணகாலத்தில்) யோகத்திலிருந்த நழுவின மனதை யுடையவன், யோகஸம்ஸித்திம் அப்ராப்ய - யோகத்தின் பலனுகிய ஆத்மஞானத்தை யடையாமல், காம் கதிம் கச்சதி - என்ன கதியை யடைகிறுன் ?

कच्चिन्नोभयविभ्रष्टश्छिन्नाभ्रमिव नश्यति ।
अप्रतिष्ठो महाबाहो विमूढो ब्रह्मणः पथि ॥ ३८ ॥

38. கச்சித் ந உபயவிப்ரஷ்ட: சிந்நாப்ரம் இவ நஶ்யதி
அப்ரதிஷ்ட: மஹாபாஹோ விமூட: ப்ரஹ்மண: பதி.

ஹே க்ருஷ்ண !, உபயவிப்ரஷ்ட:- (கர்ம வழி, யோக வழி) இவ்விரண்டினின்றும் தவறி, அப்ரதிஷ்ட: - தங்கும் நிலையின்றி, ப்ரஹ்மண: பதி விமூட:- ப்ரம்மத்தை யடையும் மார்க்கத்தில் (இடையில்) மயக்கமுற்றவன், சிந்நாப்ரமிவ - சிதறுண்ட மேகம் போல், ந நஶ்யதி கச்சித் - அழிந்துபோவதில்லையா ?

एतन्मे संशयं कृष्ण छेत्तुमर्हस्यशेषतः ।
त्वदन्यः संशयस्यास्य छेत्ता नह्युपपद्यते ॥ ३९ ॥

39. ஏதத் மே ஸம்ஶயம் க்ருஷ்ண சேத்தும் அர்ஹஸி அஶேஷத:
த்வத் அந்ய: ஸம்ஶயஸ்ய அஸ்ய சேத்தா ந ஹி உபபத்யதே.

ஹே க்ருஷ்ண !, ஏதத் மே ஸம்ஶயம் - இந்த எனது ஐயத்தை, அஶேஷத: சேத்தும் - மிச்சமில்லாமல் நீக்குவதற்கு, அர்ஹஸி - (தாங்களே) தகுந்தவர். ஹி - ஏனெனில், த்வத் அந்ய : தம்மையன்றி வேறொருவன், அஸ்ய ஸம்ஶயஸ்ய - இந்த சந்தேகத்தை, சேத்தா - நீக்குகிறவனுய், ந உபபத்யதே - இல்லை.

श्रीभगवानुवाच—

पार्थ नैवेह नामुत्र विनाशस्तस्य विद्यते ।
न हि कल्याणकृत्कश्चिद्दुर्गतिं तात गच्छति ॥ ४० ॥

40. பார்த ந ஏவ இஹ ந அமுத்ர விநாஶ: தஸ்ய வித்யதே
ந ஹி கல்யாணக்ருத் கஶ்சித் துர்கதிம் தாத கச்சதி.

கிருஷ்ண பகவான் விடை—

ஹே பார்த்த!, தஸ்ய - அவனுக்கு, இஹ - இம்மையில், விநாஶ: நைவ வித்யதே - கேடு உண்டாகிறதில்லை. அமுத்ர ந - மறுமையிலும் (கேடு) இல்லை. ஹி-ஏனெனில், தாத-அப்பா!, கல்யாணக்ருத் கஶ்சித் - சத்கர்மம் செய்த எவனும், துர்கதிம் ந கச்சதி - இழிவான நிலைமையை யடையமாட்டான்.

प्राप्य पुण्यकृतांल्लोकानुषित्वा शाश्वतीः समाः ।
शुचीनां श्रीमतां गेहे योगभ्रष्टोऽभिजायते ॥ ४१ ॥

41. ப்ராப்ய புண்யக்ருதாம் லோகாந் உஷித்வா ஶாஶ்வதீ: ஸமா:
ஶுசீநாம் ஶ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்ட: அபிஜாயதே.

யோகப்ரஷ்ட: - யோகத்திலிருந்து தவறினவன், புண்யக்ருதாம் லோகாந் ப்ராப்ய - நல்வினை செய்தவர்களது உலகங்களை யடைந்து, ஸமா: ஶாஶ்வதீ:-அநேக வருஷங்கள், உஷித்வா-வசித்து (பிறகு), ஶுசீநாம் ஶ்ரீமதாம் கேஹே - பரிசுத்தர்களான செல்வவான்களது வீட்டில், அபிஜாயதே - பிறக்கிறுன்.

अथवा योगिनामेव कुले भवति धीमताम् ।
एतद्धि दुर्लभतरं लोके जन्म यदीदृशम् ॥ ४२ ॥

42. அத²வா யோகி³நாம் ஏவ குலே ப⁴வதி தீ⁴மதாம்
ஏதத் ஹி து³ர்லப⁴தரம் லோகே ஜந்ம யத் ஈத்³ருஶம்.

அதவா - அல்லது, தீமதாம் யோகிநாம் ஏவ - விவேகிகளான யோகிகளாகவே யுள்ளவர்களது, குலேபவதி - குலத்தில் பிறக்கிறான், ஈத்ருஶம் ஜந்ம யத் - இப்படிப்பட்ட பிறவி எதுவோ, ஏதத் ஹி - அதுதான், லோகே - இவ்வுலகில், துர்லபதரம் - கிடைப்பதற்கு அரிதானது.

तत्र तं बुद्धिसंयोगं लभते पौर्वदेहिकम् ।
यतते च ततो भूयः संसिद्धौ कुरुनन्दन ॥ ४३ ॥

43. தத்ர தம் பு³த்³தி⁴ ஸம்யோக³ம் லப⁴தே பௌர்வதே³ஹிகம்
யததே ச தத꞉ பூ⁴ய꞉ ஸம்ஸித்³தௌ⁴ குருநந்த³ந.

ஹே குருநந்தந!, தத்ர - அதில் (அப்பிறவியில்), பௌர்வதைஹிகம் - பூர்வசரீரத்திலுண்டான, தம் புத்திஸம்யோகம் - அந்த பரமாத்ம விஷயமான அறிவின் சம்பந்தத்தை, லபதே - அடைகிறான். ஸம்ஸித்தௌ ச - மோக்ஷவிஷயத்திலும், தத꞉ - முன் ஜன்மத்தை விட, பூய꞉ - அதிகமாய், யததே - முயற்சி செய்கிறான்.

पूर्वाभ्यासेन तेनैव ह्रियते ह्यवशोऽपि सः ।
जिज्ञासुरपि योगस्य शब्दब्रह्मातिवर्तते ॥ ४४ ॥

44. பூர்வாப்⁴யாஸேந தேந ஏவ; ஹ்ரியதே ஹி அவஶ꞉ அபி ஸ꞉
ஜிஜ்ஞாஸு꞉ அபி யோக³ஸ்ய ஶப்³த³ப்³ரஹ்ம அதிவர்ததே.

ஹி - ஏனெனில், ஸ꞉ - அவன், அவஶோபி - யோகத்தை யடைய இஷ்டமில்லாமலிருந்தாலும், பூர்வாப்யாஸேந தேந ஏவ ஹ்ரியதே - பூர்வஜன்ம அப்பியாஸத்தினாலேயே கவரப்படுகிறான். யோகஸ்ய ஜிஜ்ஞாஸுரபி - யோகத்தை அறியவிரும்புபவன்கூட,

ஶப்தப்ரம்ம அதிவர்ததே - கர்மானுஷ்டான பலனை கடந்து விடுகிறான்.

प्रयत्नाद्यतमानस्तु योगी संशुद्धकिल्बिषः ।
अनेकजन्मसंसिद्धस्ततो याति परां गतिम् ॥ ४५ ॥

45. ப்ரயத்நாத் யதமாந꞉ து யோகீ³ ஸம்ஶுத்³த⁴கில்பி³ஷ꞉
அநேகஜந்மஸம்ஸித்³த⁴꞉ தத꞉ யாதி பராம் க³திம்.

ப்ரயத்நாத் யதமாந꞉ யோகீ து - மிகுந்த ஊக்கத்துடன் முயற்சி செய்யும் யோகியோ, ஸம்ஶுத்தகில்பிஷ꞉ - பாபங்களினின்றும் புனிதனாகி, அநேகஜந்மஸம்ஸித்த꞉ - பல ஜன்மங்களிலும் அறிவு பரிபக்குவமடைந்து, தத꞉ - பிறகு, பராம் கதிம் யாதி - உயர்ந்த நிலையை யடைகிறான்.

तपस्विभ्योऽधिको योगी ज्ञानिभ्योऽपि मतोऽधिकः ।
कर्मिभ्यश्चाधिको योगी तस्माद्योगी भवार्जुन ॥ ४६ ॥

46. தபஸ்விப்⁴ய꞉ அதி⁴க꞉ யோகீ³ ஜ்ஞாநிப்⁴ய꞉ அபி மத꞉ அதி⁴க꞉
கர்மிப்⁴ய꞉ ச அதி⁴க꞉ யோகீ³ தஸ்மாத் யோகீ³ ப⁴வ அர்ஜுந.

யோகீ - யோகியானவன், தபஸ்விப்ய꞉ அதிக꞉ - தபஸியைவிட மேலானவன், ஜ்ஞாநிப்யோ அபி அதிக꞉ மத꞉ - ஞானியைக்காட்டிலுங்கூட மேலானவனென்று கருதப்படுகிறான், யோகீ - (மேலும்) யோகியானவன், கர்மிப்யஶ்ச அதிக꞉ - கர்மமுடையவர்களைக் காட்டிலும் மேலானவன். ஹே அர்ஜுந!, தஸ்மாத் - ஆதலின் (த்வம்), யோகீபவ - (நீ) (த்யான) யோகியாக ஆகக்கடவாய்.

योगिनामपि सर्वेषां मद्गतेनान्तरात्मना ।
श्रद्धावान्भजते यो मां स मे युक्ततमो मतः ॥ ४७ ॥

47. யோகி³நாம் அபி ஸர்வேஷாம் மத்³க³தேந அந்தராத்மநா
ஶ்ரத்³தா⁴வாந் ப⁴ஜதே ய꞉ மாம் ஸ꞉ மே யுக்ததம꞉ மத꞉.

ஸர்வேஷாமபி யோகிநாம் - பலவித யோகிகளுள், ய: - எவன், ஶ்ரத்தாவான் - ஶ்ரத்தையுடன், மத்கதேந அந்தராத்மநா - என்னிடம் ஈடுபட்ட அந்தக்கரணத்துடன், மாம் பஜதே - என்னை ஆராதிக்கின்றானோ, ஸ: - அவன், யுக்ததம: - சிறந்த யோகியென்பது, மே மத: - எனது அபிப்பிராயம்.

इति श्रीमद्भगवद्गीता० अध्यात्मयोगो नाम षष्ठोऽध्यायः ।

அத்தியாயம் 7.

ஶ்லோகம் 30

விஜ்ஞாந யோகம்.

श्रीभगवानुवाच—

मय्यासक्तमनाः पार्थ योगं युञ्जन्मदाश्रयः ।
असंशयं समग्रं मां यथा ज्ञास्यासि तच्छृणु ॥ १ ॥

1. மயி ஆஸக்தமநா: பார்த யோகம் யுஞ்ஜந் மத் ஆஶ்ரய:
அஸம்ஶயம் ஸமக்ரம் மாம் யதா ஜ்ஞாஸ்யஸி தத் ஶ்ருணு.

பகவான் சொல்—

ஹே பார்த்த!, த்வம் - நீ, மயி ஆஸக்த மநா: - என்னிடத்தில் பற்றுள்ள மனதுடன், மத் ஆஶ்ரய: - என்னையே அடைக்கலமாகக் கொண்டு, யோகம் யுஞ்ஜந் - யோகத்தைக்கூடி, ஸமக்ரம் மாம் - பரிபூர்ணமான என்னை, யதா அஸம்ஶயம் ஜ்ஞாஸ்யஸி - எவ்விதம் ஐயமின்றி அறிவாயோ, தத் ஶ்ருணு - அதைக் கேட்பாயாக.

ज्ञानं तेऽहं सविज्ञानमिदं वक्ष्याम्यशेषतः ।
यज्ज्ञात्वा नेह भूयोऽन्यज्ज्ञातव्यमवशिष्यते ॥ २ ॥

2. ஜ்ஞாநம் தே அஹம் ஸவிஜ்ஞாநம் இதம் வக்ஷ்யாமி அஶேஷத:
யத் ஜ்ஞாத்வா ந இஹ பூய: அந்யத் ஜ்ஞாதவ்யம் அவஶிஷ்
[யதே.

யத் ஜ்ஞாத்வா - எதை அறிந்து, இஹ - இங்கு, பூய: - மறுபடி, ஜ்ஞாதவ்யம் அந்யத் ந அவஶிஷ்யதே - அறியவேண்டியது வேறு ஒன்றுமில்லையோ, ஸவிஜ்ஞாநம் இதம் ஜ்ஞாநம் - அநுபவ அறிவுடன்கூடிய இப்படிப்பட்ட ஞாநத்தை, அஶேஷத: - முழுவதும், தே - உனக்கு, அஹம் வக்ஷ்யாமி - நான் சொல்லுகிறேன்.

मनुष्याणां सहस्रेषु कश्चियतति सिद्धये ।
यततामपि सिद्धानां कश्चिन्मां वेत्ति तत्त्वतः ॥ ३ ॥

3. மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சித் யததி ஸித்தயே
யததாம் அபி ஸித்தாநாம் கஶ்சித் மாம் வேத்தி தத்வத:.

ஸஹஸ்ரேஷு மநுஷ்யாணாம் கஶ்சித் - மனிதர்களது அநேகம் ஆயிரத்தில் ஒருவன், ஸித்தயே யததி - ஞானசித்திக்காக முயற்சி செய்கிறான். யததாமபி ஸித்தாநாம் - அப்படி முயற்சிசெய்யும் சித்தர்களுக்குள், கஶ்சித் - (எவனோ) ஒருவன், மாம் தத்வத: வேத்தி - என்னை உள்ளபடி அறிகிறான்.

भूमिरापोऽनलो वायुः खं मनो बुद्धिरेव च ।
अहङ्कार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा ॥ ४ ॥

4. பூமி: ஆப: அநல: வாயு: கம் மந: புத்தி: ஏவ ச
அஹங்கார: இதி இயம் மே பிந்நா ப்ரக்ருதி: அஷ்டதா.

இதம் மே ப்ரக்ருதிரேவ ச - இந்த எனது மாயையேதான், பூமி: - பூமி, ஆப: - ஜலம், அநல: - அக்கினி, வாயு: - காற்று, கம் - ஆகாயம், மந: - மனது, புத்தி: - புத்தி, அஹங்கார: - அகங்காரம், இதி அஷ்டதாபிந்நா - இப்படி 8 விதமாய்ப் பிரிந்திருக்கிறது.

अपरेयमितस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम् ।
जीवभूतां महाबाहो ययेदं धार्यते जगत् ॥ ५ ॥

5. அபரா இயம் இத: து அந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்
ஜீவ பூதாம் மஹாபாஹோ யயா இதம் தார்யதே ஜகத்.

ஹே மஹாபாஹோ!, இயம் அபரா - இவ்வெட்டுப் பிரிவுடன் கூடிய மாயை நிக்ருஷ்டமானது, இதம்ஜகத் - இந்தஜகத்தானது, யயாது தார்யதே - மற்று எதனால் தாங்கப்படுகிறதோ, தாம் - அதை, இத: அந்யாம் - இதைககாட்டிலும் வேறானதாயும், பராம் மே ப்ரக்ருதிம் - மேலான எனது ப்ரக்ருதி யென்பதாயும், ஜீவபூதாம் - ஜீவஸ்வரூபமானதாயும், வித்தி - அறிவாயாக.

एतद्योनीनि भूतानि सर्वाणीत्युपधारय ।
अहं कृत्स्नस्य जगतः प्रभवः प्रलयस्तथा ॥ ६ ॥

6. ஏதத் யோநீநி பூதாநி ஸர்வாணி இதி உபதாரய
அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளய: ததா.

ஸர்வாணி பூதாநி - ஸகல பூதங்களும், ஏதத் யோநீநி இதி உபதாரய - இவற்றை பிறப்பிடமாக உடையவை என்று அறிவாயாக. அஹம் - நான், க்ருத்ஸ்நஸ்ய ஜகத: - எல்லா ஜகத்துக்கும், ப்ரபவ:-உற்பத்திக்குக் காரணம், ததா ப்ரளய: - அப்படியே முடிவுக்கும் காரணம்.

मत्तः परतरं नान्यत्किञ्चिदस्ति धनञ्जय ।
मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव ॥ ७ ॥

7. மத்த: பரதரம் ந அந்யத் கிஞ்சித் அஸ்தி தநஞ்ஜய
மயி ஸர்வம் இதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா: இவ.

ஹே தநஞ்ஜய!, மத்த: பரதரம் - என்னைவிட மேலானது, அந்யத் கிஞ்சித் ந அஸ்தி - வேறு ஒன்றும் இல்லை. இதம் ஸர்வம் - இந்த ஜகத்தெல்லாம், ஸூத்ரே மணிகணா இவ - நூலில் மணிகள் கோர்க்கப்பட்டிருப்பது போல், மயி ப்ரோதம் - என்னிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கிறது.

रसोऽहमप्सु कौन्तेय प्रभाऽस्मि शशिसूर्ययोः ।
प्रणवः सर्ववेदेषु शब्दः खे पौरुषं नृषु ॥ ८ ॥

8. ரஸ: அஹம் அப்ஸு கௌந்தேய ப்ரபா அஸ்மி ஶஶிஸூர்ய
[யோ:
ப்ரணவ: ஸர்வவேதேஷு ஶப்த: கே பௌருஷம் ந்ருஷு.

ஹே கௌந்தேய!, அஹம் - நான், அப்ஸு ரஸ: - நீரினில் சுவையும், ஶஶிஸூர்யயோ: ப்ரபா - சந்திர சூரியர்களிடம் பிரகாசமும், ஸர்வவேதேஷு ப்ரணவ: - சகலவேதங்களின் ஓங்காரமா

யும், கே ஶப்த: - ஆகாயத்தின் சப்தமாயும், ந்ருஷு பௌருஷம் - மனிதர்களின் மானிடத்தன்மையாயும், அஸ்மி - இருக்கிறேன்.

पुण्यो गन्धः पृथिव्यां च तेजश्चास्मि विभावसौ ।
जीवनं सर्वभूतेषु तपश्चास्मि तपस्विषु ॥ ९ ॥

9. புண்ய: கந்த: ப்ருதிவ்யாம் ச தேஜ: ச அஸ்மி விபாவஸௌ
ஜீவநம் ஸர்வபூதேஷு தப: ச அஸ்மி தபஸ்விஷு.

அஹம்-நான், ப்ருதிவ்யாம் புண்ய: கந்தஶ்ச - நிலத்தின் உயர்ந்த மணமாயும், விபாவஸௌ தேஜஶ்ச-அக்கினியின் ஒளியும், அஸ்மி - இருக்கிறேன். அஹம் - நான், ஸர்வபூதேஷு ஜீவநம் - எல்லா பிராணிகளின் ஜீவனமாயும், தபஸ்விஷு தபஶ்ச அஸ்மி - தபஸிகளது தபஸாயும் இருக்கிறேன்.

बीजं मां सर्वभूतानां विद्धि पार्थ सनातनम् ।
बुद्धिर्बुद्धिमतामस्मि तेजस्तेजस्विनामहम् ॥ १० ॥

10. பீஜம் மாம் ஸர்வபூதாநாம் வித்தி பார்த ஸநாதநம்
புத்தி: புத்திமதாம் அஸ்மி தேஜ: தேஜஸ்விநாம் அஹம்.

ஹே பார்த்த !, ஸர்வபூதாநாம் - சகலப்ராணிகளின், ஸநாதநம் பீஜம்-சாச்வதமான வித்தாக, மாம் வித்தி-என்னைத் தெரிந்து கொள். அஹம்-நான், புத்திமதாம் புத்தி: - புத்திமான்களின் அறிவாயும், தேஜஸ்விநாம் தேஜ:-தேஜஸ்விகளின் தேஜஸாயும், அஸ்மி-இருக்கிறேன்.

बलं बलवतां चाहं कामरागविवर्जितम् ।
धर्माविरुद्धो भूतेषु कामोऽस्मि भरतर्षभ ॥ ११ ॥

11. பலம் பலவதாம் ச அஹம் காமராகவிவர்ஜிதம்
தர்மா விருத்த: பூதேஷு காம: அஸ்மி பரதர்ஷப.

ஹே பரதர்ஷப !, அஹம் - நான், பலவதாம் - பலவான்களின், காமராகவிவர்ஜிதம் - அவாவும் பற்றுமற்ற, பலம் - பலமாயும்,

பூதேஷு - ப்ராணிகளின், தர்மாவிருத்த: - தர்மவிரோதமில்லாத, காம: ச அஸ்மி - ஆசையாகவு மிருக்கிறேன்.

ये चैव सात्त्विका भावा राजसास्तामसाश्चये ।
मत्त एवेति तान्विद्धि नत्त्वहं तेषु ते मयि ॥ १२ ॥

12. யே ச ஏவ ஸாத்விகா: பாவா: ராஜஸா: தாமஸா: ச யே
மத்த: ஏவ இதி தாந்வித்தி ந து அஹம் தேஷு தே மயி.

ஸாத்விகா: ஏவ பாவா: யே - சத்துவகுணத்தினுலுண்டான பொருள்கள் எவைகளோ, ராஜஸாஶ்ச தாமஸாஶ்ச யே - ரஜோகுண தமோகுணங்களினுலுண்டானவைகள் எவைகளோ, தாந் - அவைகளை, மத்த ஏவ இதி வித்தி - என்னிடத்திலிருந்தே தோன்றினதாக அறி, அஹம் தேஷு ச - நான் அவைகளில் இல்லை. து - மற்று, தே மயி - அவை என்னிடமிருக்கின்றன.

त्रिभिर्गुणमयैर्भावैरेभिः सर्वमिदं जगत् ।
मोहितं नाभिजानाति मामेभ्यः परमव्ययम् ॥ १३ ॥

13. த்ரிபி: குணமயை: பாவை: ஏபி: ஸர்வம் இதம் ஜகத்
மோஹிதம் ந அபிஜாநாதி மாம் ஏப்ய: பரம் அவ்யயம்.

ஸர்வம் இதம் ஜகத்-இந்த எல்லா பிரபஞ்சமும், த்ரிபி: குணமயை:-மூன்றுவித குண சம்பந்தத்தாலுண்டான, ஏபி: பாவை:-இந்த வஸ்துக்களினுலே, மோஹிதம்-மயக்கப்பட்டு, மாம்-என்னை, ஏப்ய: - இவைகளினின்றும், பரம் - வேறானவனையும், அவ்யயம் - மாறுபாடில்லாதவனையும், ந அபிஜாநாதி - நன்றாய் தெரிந்துகொள்வதில்லை.

दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया ।
मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्तिते ॥ १४ ॥

14. தைவீ ஹி ஏஷா குணமயீ மம மாயா துரத்யயா
மாம் ஏவ யே ப்ரபத்யந்தே மாயாம் ஏதாம் தரந்தி தே.

குணமயீ - குணங்களாலான, ஏஷா மம தைவீ மாயா - இந்த எனது தெய்வ மாயையானது, துரத்யயா ஹி - தாண்டுவது கஷ்டம் ஆதலால், யே - எவர்கள், மாமேவ ப்ரபத்யந்தே - என்னையே சரணமடைகிறார்களோ, தே - அவர்கள், ஏதாம் மாயாம் தரந்தி - இம்மாயையைக் கடந்துவிடுகிறார்கள்.

न मां दुष्कृतिनो मूढाः प्रपद्यन्ते नराधमाः ।
माययाऽपहृतज्ञाना आसुरं भावमाश्रिताः ॥ १५ ॥

15. ந மாம் துஷ்க்ருதிந: மூடா: ப்ரபத்யந்தே நராதமா:
மாயயா அபஹ்ருதஜ்ஞாநா: ஆஸுரம் பாவம் ஆஶ்ரிதா:.

மாயயா அபஹ்ருதஜ்ஞாநா: - மாயையால் அபஹரிக்கப்பட்ட ஞாநமுடையவர்களாயும் (பரமாத்ம ஞான மில்லாதவர்), ஆஸுரம் பாவம் ஆஶ்ரிதா: - அஸுரத்தன்மையை பின்பற்றுகிறவர்களாயும், நர அதமா: - மனிதருள் கீழானவர்களாயும், துஷ்க்ருதிந: - தீவினைகளைச் செய்பவர்களுமான, மூடா: - மூடர்கள், மாம் ப்ரபத்யந்தே - என்னை அடைவதில்லை.

चतुर्विधा भजन्ते मां जनाः सुकृतिनोऽर्जुन ।
आर्तो जिज्ञासुरर्थार्थी ज्ञानी च भरतर्षभ ॥ १६ ॥

16. சதுர்விதா: பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிந: அர்ஜுந
ஆர்த: ஜிஜ்ஞாஸு: அர்தார்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப.

ஹே பரதர்ஷப!, ஹே அர்ஜுந!, ஆர்த:-நோயினால் வருந்துபவன், ஜிஜ்ஞாஸு: - பரமாத்ம ஞானமடைய விரும்புகிறவன், அர்த்தார்த்தீ-பொருள் அவாவுள்ளவன், ஜ்ஞாநீ ச-ஞாநி (என்று), சதுர்விதா: - நால்வகையான, ஸுக்ருதிந: ஜநா: - புண்ணியம் செய்த ஜநங்கள், மாம் பஜந்தே - என்னை ஆராதிக்கின்றனர்.

तेषां ज्ञानी नित्ययुक्त एकभक्तिर्विशिष्यते ।
प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहं स च मम प्रियः ॥ १७ ॥

17. தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த: ஏகபக்தி: விஶிஷ்யதே
ப்ரிய: ஹி ஜ்ஞாநிந: அத்யர்தம் அஹம் ஸ: ச மம ப்ரிய:.

தேஷாம் - அவர்களுக்குள், ஏகபக்தி: - ஒரேநிலையுடன் பக்தி செய்து, நித்யயுக்த: - எப்போதும் யோகத்துடன் கூடிய, ஜ்ஞாநீ விஶிஷ்யதே-ஞானியே உத்தமமானவன், ஹி-ஏனெனில், அஹம் - நான், ஜ்ஞாநிந: - ஞானிக்கு, அத்யர்த்தம் ப்ரிய: - மிகவும் பிரியமானவன், ஸ ச மமப்ரிய: - அவனும் எனக்கு பிரியமானவன்.

उदाराः सर्व एवैते ज्ञानी त्वात्मैव मे मतम् ।
आस्थितः स हि युक्तात्मा मामेवानुत्तमां गतिम् ॥१८॥

18. உதாரா: ஸர்வே ஏவ ஏதே ஜ்ஞாநீ து ஆத்மா ஏவ மே மதம்
ஆஸ்தித: ஸ: ஹி யுக்தாத்மா மாம் ஏவ அநுத்தமாம் கதிம்.

ஏதே ஸர்வே - இவ்வெல்லோரும், உதாரா: ஏவ - உத்தமமானவர்களே. ஜ்ஞாநி து-ஞானியோ, ஆத்மைவ (இதி)-ஆத்மஸ்வரூபமே (என்பது), மே மதம்-எனது கொள்கை. ஹி-ஏனெனில், யுக்தாத்மா ஸ: - மனம் ஒரு நிலைப்பட்ட அவன், மாமேவ - என்னையே, அநுத்தமாம் கதிம் - மிகவும் மேலான அடைக்கலமாக, ஆஸ்த்தித: - நாடியிருக்கிறான்.

बहूनां जन्मनामन्ते ज्ञानवान्मां प्रपद्यते ।
वासुदेवः सर्वमिति स महात्मा सुदुर्लभः ॥ १९ ॥

19. பஹூநாம் ஜந்மநாம் அந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே
வாஸுதேவ: ஸர்வம் இதி ஸ: மஹாத்மா ஸுதுர்லப:.

பஹூநாம் ஜந்மநாம் அந்தே - பல பிறவிகளின் முடிவில், ஜ்ஞாநவான் - ஞானியானவன், ஸர்வம் வாஸுதேவ இதி - எல்லாம் பரமாத்ம ஸ்வரூபமென்று (உண்மையை உணரும் பரிபக்குவமடைந்து), மாம் ப்ரபத்யதே - என்னை அடைகிறான். ஸ மஹாத்மா ஸுதுர்லப: - அப்படிப்பட்ட மஹாத்மா கிடைப்பதரிது.

कामैस्तैस्तैर्हृतज्ञानाः प्रपद्यन्तेऽन्यदेवताः ।
तं तं नियममास्थाय प्रकृत्या नियताः स्वया ॥ २० ॥

20. காமை: தை: தை: ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்யந்தே அந்யதேவதா:
தம்தம் நியமம் ஆஸ்தாய ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா.

தை ஸ்தை: காமை:-அந்தந்த ஆசைகளினல், ஹ்ருதஜ்ஞாநா- அறிவு அபகரிக்கப்பட்டவர்கள், தம்தம் நியமம் - அந்தந்த நியமத்தை, ஆஸ்த்தாய - கைக்கொண்டு, ஸ்வயாப்ரக்ருத்யா நியதா: - தங்கள் ஸ்வபாவத்தினல் தூண்டப்பட்டவர்களாய், அந்ய தேவதா: ப்ரபத்யந்தே- வேறு தெய்வங்களை அடைகின்றார்கள்.

यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।
तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहम् ॥ २१ ॥

21. ய: ய: யாம் யாம் தநும் பக்த: ச்ரத்தயா அர்சிதும் இச்சதி
தஸ்ய தஸ்ய அசலாம் ச்ரத்தாம் தாம் ஏவ விதயாமி அஹம்.

ய: ய: - எவனெவன், யாம் யாம் தநூம் - எந்த எந்த தேவதாரூபத்தை, பக்த: ச்ரத்தயா - பக்தி ச்ரத்தையுடன், அர்சிதும் இச்சதி - பூஜிக்க இஷ்டப்படுகிறானே, தஸ்ய தஸ்ய - அவனவனது, தாமேவ ச்ரத்தாம்-அதிலுள்ள நம்பிக்கையை, அஹம்-நான், அசலாம் விததாமி - உறுதியாக்குகிறேன்.

स तया श्रद्धया युक्तस्तस्याराधनमीहते ।
लभते च ततः कामान्मयैव विहितान्हितान् ॥ २२ ॥

22. ஸ: தயா ச்ரத்தயா யுக்த: தஸ்யாராதநம் ஈஹதே
லபதே ச தத: காமாந் மயா ஏவ விஹிதாந் ஹி தாந்.

ஸ: - அவன், தயா ச்ரத்தயா யுக்த: - அந்த நம்பிக்கையுடன் கூடினவனுப், தஸ்ய ஆராதநம்-அந்த மூர்த்தியின் பூஜையை, ஈஹதே - செய்கிறான். மயைவ விஹிதாந் - என்னாலேயே அமைக்கப்பட்ட, தாந் காமாந் ஹி - அந்த இஷ்டமான பலனையே, தத: - பிறகு, லபதே - பெறுகிறான்.

अन्तवत्तु फलं तेषां तद्भवत्यल्पमेधसाम् ।
देवान्देवयजो यान्ति मद्भक्ता यान्ति मामपि ॥ २३ ॥

23. அந்தவத் து பலம் தேஷாம் தத் பவதி அல்பமேதஸாம்
தேவாந் தேவயஜ: யாந்தி மத்பக்தா: யாந்தி மாம் அபி.

அல்பமேதஸாம் தேஷாம்-அற்பபுத்தியுள்ள அவர்களது, தத் பலம்-அந்த (பூஜையினலுண்டான) பலன், அந்தவத்து பவதி - முடிவை யுடையதாகவே யிருக்கிறது, (நீடித்ததல்ல). தேவயஜ: தேவாந் யாந்தி - தேவதைகளை ஆராதிப்பவர்கள் தேவதைகளை யடைகிறார்கள், மத்பக்தா: மாம் அபி யாந்தி - என் பக்தர்கள் என்னையே யடைகிறார்கள்.

अव्यक्तं व्यक्तिमापन्नं मन्यन्ते मामबुद्धयः ।
परं भावमजानन्तो ममाव्ययमनुत्तमम् ॥ २४ ॥

24. அவ்யக்தம் வ்யக்திம் ஆபந்நம் மந்யந்தே மாம் அபுத்தய:
பரம் பாவம் அஜாநந்த: மம அவ்யயம் அநுத்தமம்.

மம - எனது, அவ்யயம் அநுத்தமம் பரம் பாவம் - நாசமற்ற உத்கிருஷ்டமான மேலான நிலையை, அஜாநந்த: அபுத்தய: - அறியாத அவிவேகிகள், அவ்யக்தம் மாம் - இந்திரியங்களுக்குப் புலப்படாத என்னை, வ்யக்திம் ஆபந்நம் மந்யந்தே - அவைகளுக்குப் புலப்படக்கூடிய தன்மையை யடைந்தவனாக எண்ணுகின்றனர்.

नाहं प्रकाशः सर्वस्य योगमायासमावृतः ।
मूढोऽयं नाभिजानाति लोको मामजमव्ययम् ॥ २५ ॥

25. ந அஹம் ப்ரகாச: ஸர்வஸ்ய யோகமாயா ஸமாவ்ருத:
மூட: அயம் ந அபிஜாநாதி லோக: மாம் அஜம் அவ்யயம்.

யோகமாயா ஸமாவ்ருத: அஹம் - யோகமாயையால் நன்றாய் மூடப்பட்டுள்ள நான், ஸர்வஸ்ய ப்ரகாச: ந - எல்லோருக்கும் புலப்படுவதில்லை (ஆதலால்), மூட: அயம்லோக: - விவேகமற்ற

இவ்வுலகமானது, மாம் - என்னை, அஜம் அவ்யயம் - பிறப்பற்ற வன் அழிவற்றவன் (என்பதை), ந அபிஜாநாதி - அறிகிறதில்லை.

वेदाहं समतीतानि वर्तमानानि चार्जुन ।
भविष्याणि च भूतानि मां तु वेद न कश्चन ॥ २६ ॥

26. வேத அஹம் ஸமதீதாநி வர்தமாநாநி ச அர்ஜுந
பவிஷ்யாணி ச பூதாநி மாம் து வேத ந கஶ்சந.

ஹே அர்ஜுந!, ஸமதீதாநி - சென்றுபோனதும், வர்தமாநாநி ச - இப்போது நிகழ்கிறதும், பவிஷ்யாணி ச - இனி வரப் போகிறதும் (ஆன), பூதாநி - பொருள்களை, அஹம் வேத - நான் அறிவேன். மாம் து கஶ்சந ந வேத - என்னையோ ஒருவனும் அறியான்.

इच्छाद्वेषसमुत्थेन द्वन्द्वमोहेन भारत ।
सर्वभूतानि संमोहं सर्गे यान्ति परन्तप ॥ २७ ॥

27. இச்சாத்வேஷ ஸமுத்தேந த்வந்த்வ மோஹேந பாரத
ஸர்வபூதாநி ஸம்மோஹம் ஸர்கே யாந்தி பரந்தப.

ஹே பாரத!, பரந்தப!, ஸர்கே - பிறக்கும்போதே, ஸர்வ பூதாநி - எல்லா ப்ராணிகளும், இச்சாத்வேஷ ஸமுத்தேந - விருப்பு வெறுப்பினலுண்டாகும், த்வந்த்வ மோஹேந - இருமை மயக் கத்தால், ஸம்மோஹம் யாந்தி - மிகுந்த மோகத்தை அடைகின் றன.

येषां त्वन्तगतं पापं जनानां पुण्यकर्मणाम् ।
ते द्वन्द्वमोहनिर्मुक्ता भजन्ते मां दृढव्रताः ॥ २८ ॥

28. யேஷாம் து அந்தகதம் பாபம் ஜநாநாம் புண்யகர்மணாம்
தே த்வந்த்வ மோஹநிர்முக்தா: பஜந்தே மாம் த்ருடவ்ருதா:.

து - ஆயின், புண்யகர்மணாம் யேஷாம் ஜநாநாம் - புண்யகர் மத்தையுடைய எந்த மனிதர்களுக்கு, பாபம் அந்தகதம் - பாபம் முடிவடைந்துள்ளதோ, தே - அவர்கள், த்வந்த்வ மோஹ நிர்

முக்தா:- இருமை மயக்கத்திலிருந்து விடுபட்டவர்களாய், த்ருடவ் ருதா:- உறுதியான வ்ருதத்தை யுடையவர்களாய், மாம் பஜந்தே- என்னை வணங்குகிறார்கள்.

जरामरणमोक्षाय मामाश्रित्य यतन्ति ये ।
ते ब्रह्म तद्विदुः कृत्स्नमध्यात्मं कर्म चाखिलम् ॥२९॥

29. ஜராமரணமோக்ஷாய மாம் ஆஶ்ரித்ய யதந்தி யே
தே ப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்நம் அத்யாத்ம கர்ம ச அகிலம்.

யே - எவர்கள், ஜராமரண மோக்ஷாய - மூப்புமரணத்திலி ருந்து விடுபடும்பொருட்டு, மாம் ஆஶ்ரித்ய யதந்தி - என்னை ஆஶ்ரயித்து முயற்சி செய்கிறார்களோ, தே - அவர்கள், தத் ப்ர ஹ்ம - அந்த ப்ரம்மத்தையும், க்ருத்ஸ்நம் அத்யாத்ம - எல்லா அத்யாத்மத்தையும், அகிலம் கர்ம ச - சகல கர்மத்தையும், விது:- அறிகிறார்கள்.

साधिभूताधिदैवं मां साधियज्ञं च ये विदुः ।
प्रयाणकालेऽपि च मां ते विदुर्युक्तचेतसः ॥ ३० ॥

30. ஸாதிபூதாதிதைவம் மாம் ஸாதியஜ்ஞம் ச யே விது:
ப்ரயாணகாலே அபி ச மாம் தே விது: யுக்தசேதஸ:.

யே - எவர்கள், மாம் - என்னை, ஸ அதிபூதம் - அதிதைவம், ஸ அதியஜ்ஞம் ச - அதிபூத அதிதைவ அதியஜ்ஞத்துடன் கூடி னவனாய், விது: - அறிகிறார்களோ, தே - அவர்கள், ப்ரயாணகாலே அபி ச - மரணகாலத்திலும், யுக்த சேதஸ: - ஒரு நிலைப்பட்ட மன தினராய், மாம் விது: - என்னை அறிகிறார்கள்.

इति श्रीमद्भगवद्गीता० ज्ञानयोगो नाम सप्तमोऽध्यायः ।

அத்தியாயம் 8. ஶ்லோகம் 28

அப்பாஸ யோகம்.

अर्जुन उवाच—

किं तद्ब्रह्म किमध्यात्मं किं कर्म पुरुषोत्तम ।
अधिभूतं च किं प्रोक्तमधिदैवं किमुच्यते ॥ १ ॥

1. *கிம் தத்ப்ரஹ்ம கிம் அத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம*
அதிபூதம் ச கிம் ப்ரோக்தம் அதிதைவம் கிம் உச்யதே.

அர்ஜுனன் வினா—

ஹே புருஷோத்தம!, ப்ரோக்தம் தத் ப்ரஹ்ம கிம்-முன் சொல்லப்பட்ட அந்த ப்ரம்மமென்பது யாது?, அத்யாத்மம் கிம் - அத்தியாத்மம் என்பது என்ன?, கர்ம கிம் - கர்மம் என்பது என்ன?, அதிபூதம் கிம் - அதிபூதம் என்பது என்ன?, அதிதைவம் ச கிம்உச்யதே - அதிதைவமென்று எது சொல்லப்படுகிறது?

अधियज्ञः कथं कोऽत्र देहेऽस्मिन्मधुसूदन ।
प्रयाणकाले च कथं ज्ञेयोऽसि नियतात्मभिः ॥ २ ॥

2. *அதியஜ்ஞ: கதம் க: அத்ர தேஹே அஸ்மின் மதுஸூதந*
ப்ரயாணகாலே ச கதம் ஜ்ஞேய: அஸி நியதாத்மபி:.

ஹே மதுஸூதந!, அதியஜ்ஞ: அத்ர தேஹே க:-அதியஜ்ஞும் என்பது இந்த தேகத்தில் எது?, அஸ்மின் - இந்த தேகத்தில், கதம் - எவ்வாறு? (அதியஜ்ஞன் சிந்திக்கக் கூடியவன்). ப்ரயாண காலே ச - மரணகாலத்திலும், நியத ஆத்மபி: - மனதை அடக்கின வர்களால், கதம் ஜ்ஞேய: அஸி - எவ்விதம் அறியத்தகுந்தவராய் ஆகின்றீர்?.

श्रीभगवानुवाच—

अक्षरं ब्रह्म परमं स्वभावोऽध्यात्ममुच्यते ।
भूतभावोद्भवकरो विसर्गः कर्मसंज्ञितः ॥ ३ ॥

3. *அக்ஷரம் ப்ரஹ்ம பரமம் ஸ்வபாவ: அத்யாத்மம் உச்யதே*
பூதபாவோத்பவகர: விஸர்க: கர்மஸம்ஜ்ஞித:.

பகவான் விடை—

पुरुषः प्रकृतिस्थो हि भुंक्ते प्रकृतिजान्गुणान् ।
कारणं गुणसङ्गोऽस्य सदसद्योनिजन्मसु ॥ २२ ॥

22. புருஷ: ப்ரக்ருதிஸ்த: ஹி புங்க்தே ப்ரக்ருதிஜாந் குணாந்
காரணம் குணஸங்க: அஸ்ய ஸத் அஸத் யோநி ஜந்மஸு.

ஹி புருஷ: - எந்தக் காரணத்தால் ஆத்மாவானது, ப்ரக்ருதிஸ்த:-ப்ரக்ருதியில் தங்கி யிருக்கின்றானோ (அந்தக் காரணத்தால்), ப்ரக்ருதி ஜாந் குணாந் - ப்ரக்ருதியிலிருந்து தோன்றிய குணங்களை, புங்க்தே- அனுபவிக்கிறான். அஸ்ய- இவனுக்கு, குணஸங்க:-

குணங்களிலுள்ள பற்று, ஸத் அஸத் யோநி ஜந்மஸு - நல்லதும் கெட்டதுமான பிறவிகளில் பிறப்பதற்கு, காரணம் - காரணமாயிருக்கிறது.

उपद्रष्टानुमन्ता च भर्ता भोक्ता महेश्वरः ।
परमात्मेति चाप्युक्तो देहेऽस्मिन्पुरुषः परः ॥ २३ ॥

23. உபத்ரஷ்டா அநுமந்தா ச பர்தா போக்தா மஹேஶ்வர:
பரமாத்மா இதி ச அபி உக்த: தேஹே அஸ்மிந் புருஷ: பர:.

அஸ்மிந் தேஹே பர: புருஷ: - இந்த தேகத்திலுள்ள மேலான புருஷன், உபத்ரஷ்டா - சமீபத்திலிருந்து பார்க்கிறவன், அநுமந்தா ச - அநுகூலமாய் ஆலோசனை சொல்பவன், பர்தா - தாங்குபவன், போக்தா - அனுபவிப்பவன், மஹேஶ்வர: அபி - மேலான ஈஶ்வரனும் ஆனவன், பரமாத்மா இதி உக்த: - பரமாத்மா என்றும் கூறப்பட்டவன்.

य एवं वेत्ति पुरुषं प्रकृतिं च गुणैः सह ।
सर्वथा वर्तमानोऽपि न स भूयोऽभिजायते ॥ २४ ॥

24. ய: ஏவம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிம் ச குணை: ஸஹ
ஸர்வதா வர்தமாந: அபி ந ஸ: பூய: அபிஜாயதே.

ய: - எவன், ஏவம் - இவ்விதமாய், புருஷம் ப்ரக்ருதிம் ச குணை ஸஹ வேத்தி - புருஷனையும் ப்ரக்ருதியையும் குணங்களுடன் கூட அறிகிறானோ, ஸ: - அவன், ஸர்வதா - எல்லா விதத்திலும், பூய: - மறுபடி, ந அபிஜாயதே - பிறப்பை யடைவதில்லை.

ध्यानेनात्मनि पश्यन्ति केचिदात्मानमात्मना ।
अन्ये सांख्येन योगेन कर्मयोगेन चापरे ॥ २५ ॥

25 த்யாநேந ஆத்மநி பஶ்யந்தி கேசித் ஆத்மாநம் ஆத்மநா
அந்யே ஸாங்க்யேந யோகேந கர்மயோகேந ச அபரே.

கேசித் - சிலர், த்யாநேந - தியானயோகத்தினால், ஆத்மாநம் ஆத்மநி ஆத்மநா பஶ்யந்தி - ஆத்மாவை (தன்) புத்தியினுள் அந்தக்காரணத்தினால் காண்கின்றார்கள். அந்யே - மற்றும் சிலர், ஸாங்க்யேந யோகேந - ஸாங்கிய யோகத்தினாலும், அபரே ச - இன்னும் சிலர், கர்மயோகேந - கர்மயோகத்தினாலும், பஶ்யந்தி - பார்க்கின்றனர்.

अन्येत्वेवमजानन्तः श्रुत्वाऽन्येभ्य उपासते ।
तेऽपि चातितरन्त्येव मृत्युं श्रुतिपरायणाः ॥ २६ ॥

26. அந்யே து ஏவம் அஜாநந்த: ஶ்ருத்வா அந்யேப்ய: உபாஸதே
தே அபி ச அதிதரந்தி ஏவ ம்ருத்யும் ஶ்ருதிபராயணா:.

அந்யே து - மற்று சிலரோ, ஏவம் - இவ்விதமாய், அஜாநந்த: - அறியாதவர்களாய், அந்யேப்ய: ஶ்ருத்வா உபாஸதே - பிறரிடம் கேட்டுத் (தெரிந்துகொண்டு) உபாஸிக்கின்றார்கள். ஶ்ருதி பராயணா: தே அபி ச - கேட்டதை மேலாகக் கொண்டு செல்லும் அவர்களுங்கூட, ம்ருத்யும் அதிதரந்தி ஏவ - மரணத்தைக் கடந்தே விடுகிறார்கள்.

यावत्सञ्जायते किञ्चित्सत्त्वं स्थावरजङ्गमम् ।
क्षेत्रक्षेत्रज्ञसंयोगात्तद्विद्धि भरतर्षभ ॥ २७ ॥

27. யாவத் ஸம்ஜாயதே கிஞ்சித் ஸத்வம் ஸ்தாவர ஜங்கமம்
க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ ஸம் யோகாத் தத்வித்தி பரதர்ஷப.

ஹே பரதர்ஷப!, ஸ்தாவர ஜங்கமம் - ஸ்தாவர ஜங்கமமாகிய, யாவத் கிஞ்சித் ஸத்வம் - யாதாமொரு பொருளானது, ஸம்ஜாயதே தத் - உண்டாகின்றதோ அது எல்லாம், க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ ஸம் யோகாத் - க்ஷேத்ரம் க்ஷேத்ரக்ஞன் இவர்களது ஸம்பந்தத்தால் (உண்டானதாக), வித்தி - அறிவாயாக.

समं सर्वेषु भूतेषु तिष्ठन्तं परमेश्वरम् ।
विनश्यत्स्वविनश्यन्तं यः पश्यति स पश्यति ॥ २८ ॥

28. ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேஶ்வரம்
விநஶ்யத்ஸு அவிநஶ்யந்தம் ய: பஶ்யதி ஸ: பஶ்யதி.

ஸர்வேஷு பூதேஷு - எல்லாப் பொருள்களுக்குள்ளும், ஸமம் திஷ்டந்தம் - ஸமமாக இருக்கிறவனும், விநஶ்யத்ஸு அவிநஶ்யந்தம் - நசிக்கும் வஸ்துக்களுள் நசிக்காதவனும் (ஆன), பரமேஶ்வரம் - பரமேஶ்வரனை, யஃ பஶ்யதி - எவன் காண்கின்றானோ, ஸஃ பஶ்யதி - அவன் (உண்மையை) காண்கிறான்.

समं पश्यन्हि सर्वत्र समवस्थितमीश्वरम् ।
न हिनस्त्यात्मनाऽऽत्मानं ततो याति परां गतिम् ॥ २९॥

29. ஸமம் பஶ்யந் ஹி ஸர்வத்ர ஸமவஸ்திதம் ஈஶ்வரம்
ந ஹிநஸ்தி ஆத்மநா ஆத்மாநம் ததஃ யாதி பராம் கதிம்.

ஹி - ஏனெனில், ஸர்வத்ர ஸமவஸ்திதம் ஈஶ்வரம் - எல்லாவற்றிலும் சமமாக இருக்கும் ஈஶ்வரனை, ஸமம் பஶ்யந் - ஸமமாகப் பார்க்கிறவன், ஆத்மநா ஆத்மாநம் - தன்னாலே தன்னை, ந ஹிநஸ்தி - வருத்துவதில்லை, ததஃ - அதனால், பராம் கதிம் யாதி - மேலான நிலைமையை அடைகிறான்.

प्रकृत्यैव च कर्माणि क्रियमाणानि सर्वशः ।
यः पश्यति तथाऽऽत्मानमकर्त्तारं स पश्यति ॥ ३० ॥

30. ப்ரக்ருத்யா ஏவ ச கர்மாணி க்ரியமாணாநி ஸர்வஶஃ
யஃ பஶ்யதி ததா ஆத்மாநம் அகர்தாரம் ஸஃ பஶ்யதி.

யஃ - எவன், கர்மாணி - கர்மங்களை, ஸர்வஶஃ - எவ்விதத்திலும், ப்ரக்ருத்யா ஏவ ச - ப்ரக்ருதியினாலேயே, க்ரியமாணாநி - செய்யப்படுவதாக, பஶ்யதி - பார்க்கின்றானோ, ததா - அவ்விதமே, ஆத்மாநம் அகர்தாரம் - ஆத்மா, கர்த்தா அல்ல என்பதாக (பார்க்கிறானோ), ஸஃ பஶ்யதி - அவன் (உண்மையை) காண்கின்றான்.

यदा भूतपृथग्भावमेकस्थमनुपश्यति ।
तत एव च विस्तारं ब्रह्म सम्पद्यते तदा ॥ ३१ ॥

31. யதா பூதப்ருதக்பாவம் ஏகஸ்தம் அநுபஶ்யதி
ததஃ ஏவ ச விஸ்தாரம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா.

யதா - எப்போது, பூதப்ருதக்பாவம் - பூதங்களின் தனித்தனியான தன்மையை, ஏகஸ்தம் - ஒன்றாகிய பரப்ரம்மத்தினிடத்திலிருப்பதாக, அநுபஶ்யதி - காண்கின்றானோ, தத ஏவ விஸ்தாரஞ்ச அநுபஶ்யதி - அந்த ஒன்றிலிருந்து ப்ரவ்ருத்திப்பதாகவும் காண்கின்றானோ, ததா - அப்போது, ப்ரஹ்ம ஸம்பத்யதே - ப்ரம்மமாகவே ஆகின்றான்.

अनादित्वान्निर्गुणत्वात्परमात्माऽयमव्ययः ।
शरीरस्थोऽपि कौन्तेय न करोति न लिप्यते ॥ ३२ ॥

32. அநாதித்வாத் நிர்குணத்வாத் பரமாத்மா அயம் அவ்யயஃ
ஶரீரஸ்தஃ அபி கௌந்தேய ந கரோதி ந லிப்யதே.

ஹே கௌந்தேய !, அயம் பரமாத்மா - இப்பரமாத்மா, அநாதித்வாத் - ஆதியற்றவரானதாலும், நிர்குணத்வாத் - குணரகிதரானதாலும், அவ்யயஃ - அழிவற்றவர், ஶரீரஸ்தஃ அபி - சரீரத்திலிருந்தபோதிலும், ந கரோதி ந லிப்யதே - கர்மம் ஒன்றும் செய்வதில்லை, (கர்ம பலனினால்) பந்திக்கப்படுவதில்லை.

यथा सर्वगतं सौक्ष्म्यादाकाशं नोपलिप्यते ।
सर्वत्रावस्थितो देहे तथात्मा नोपलिप्यते ॥ ३३ ॥

33. யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யாத் ஆகாஶம் ந உபலிப்யதே
ஸர்வத்ர அவஸ்திதஃ தேஹே ததா ஆத்மா ந உபலிப்யதே.

யதா - எப்படி, ஸர்வகதம் ஆகாஶம் - எங்கிலுமுள்ள ஆகாயம், ஸௌக்ஷ்ம்யாத் - சூக்ஷ்மமாயிருப்பதால், ந உபலிப்யதே - ஒன்றினாலும் ஒட்டப்படுவதில்லையோ, ததா - அப்படியே, ஸர்வத்ர தேஹே அவஸ்திதஃ ஆத்மா - எல்லா தேகங்களிலும் இருக்கின்ற ஆத்மா, ந உபலிப்யதே - ஒன்றினாலும் பந்திக்கப்படுவதில்லை.

यथा प्रकाशयत्येकः कृत्स्नं लोकमिमं रविः ।
क्षेत्रं क्षेत्री तथा कृत्स्नं प्रकाशयति भारत ॥ ३४ ॥

34. யதா² ப்ரகாஶயதி ஏக: க்ருத்ஸ்நம் லோகம் இமம் ரவி:
க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா² க்ருத்ஸ்நம் ப்ரகாஶயதி பா⁴ரத.

ஹே பாரத!, ஏக: ரவி:- ஒரு சூரியன், இமம் க்ருத்ஸ்நம் லோகம் - இந்த எல்லா உலகத்தையும், யதா - எவ்விதமாய், ப்ரகாஶயதி - விளங்கச் செய்கின்றதோ, ததா - அப்படியே, க்ஷேத்ரீ-க்ஷேத்ரஜ்ஞன், க்ருத்ஸ்நம் க்ஷேத்ரம் ப்ரகாஶயதி - எல்லா சரீரத்தையும் விளங்கச் செய்கின்றான்.

क्षेत्रक्षेत्रज्ञयोरेवमन्तरं ज्ञानचक्षुषा ।
भूतप्रकृतिमोक्षं च ये विदुर्यान्ति ते परम् ॥ ३५ ॥

35. க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞயோ: ஏவம் அந்தரம் ஜ்ஞானசக்ஷுஷா
பூ⁴தப்ரக்ருதிமோக்ஷம் ச யே விது³: யாந்தி தே பரம்.

க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞயோ: அந்தரம் - க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞன் இவற்றின் வேற்றுமையையும், பூதப்ரக்ருதிமோக்ஷம் ச - ப்ராணிகள் ப்ரக்ருதியினின்றும் விடுபடுதலையும், ஜ்ஞானசக்ஷுஷா - ஞானக் கண்களினால், யே ஏவம் விது: - எவர்கள் இவ்விதம் அறிகின்றார்களோ, தே பரம் யாந்தி - அவர்கள் பரம்பொருளை அடைகின்றனர்.

इति श्रीमद्भगवद्गीता० क्षेत्रक्षेत्रज्ञविभागयोगो नाम त्रयोदशोऽध्यायः ।

அத்தியாயம் 14. ச்லோகம் 27.

குணத்ரய விபாக யோகம்.

भगवानुवाच—

परं भूयः प्रवक्ष्यामि ज्ञानानां ज्ञानमुत्तमम् ।
यज्ज्ञात्वा मुनयः सर्वे परां सिद्धिमितो गताः ॥ १ ॥

1. பரம் பூ⁴ய: ப்ரவக்ஷ்யாமி ஜ்ஞாநாநாம் ஜ்ஞாநம் உத்தமம்
யத் ஜ்ஞாத்வா முநய: ஸர்வே பராம் ஸித்³தி⁴ம் இத: க³தா:.

பகவான் வசனம்—

யத் ஜ்ஞாத்வா - எதையறிந்து, முநய: ஸர்வே - முனிவர்கள் யாவரும், இத: பராம் ஸித்திம் கதா:-இதிலிருந்து மேலான ஸித்தியை அடைந்துள்ளார்களோ, ஜ்ஞாநாநாம் பரம் உத்தமம் ஜ்ஞாநம்-ஞானங்களுக்குள் மேலான உத்தமமான (அந்த) ஞானத்தை, பூய: - மீண்டும், ப்ரவக்ஷ்யாமி - சொல்லுகிறேன்.

इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः ।
सर्गेऽपि नोपजायन्ते प्रलये न व्यथन्ति च ॥ २ ॥

2. இத³ம் ஜ்ஞாநம் உபாஶ்ரித்ய மம ஸாத⁴ர்ம்யம் ஆக³தா:
ஸர்கே³ அபி ந உபஜாயந்தே ப்ரளயே ந வ்யத²ந்தி ச.

இதம் ஜ்ஞாநம் உபாஶ்ரித்ய - இந்த ஞானத்தையடைந்து, மம ஸாதர்ம்யம் ஆகதா: - என் ஸ்வரூபத்தன்மையை யடைந்தவர்கள், ஸர்கே ந உபஜாயந்தே - சிருஷ்டிகாலத்தில் பிறப்பதில்லை. ப்ரளயே அபி ச ந வ்யந்தி - பிரளயத்திலும் கலங்குவதில்லை.

मम योनिर्महद्ब्रह्म तस्मिन् गर्भं दधाम्यहम् ।
सम्भवः सर्वभूतानां ततो भवति भारत ॥ ३ ॥

3. மம யோநிः மஹத் ப்ரஹ்ம தஸ்மிந் கர்ப்பம் ததாமி அஹம்
ஸம்பவः ஸர்வபூதாநாம் ததः பவதி பாரத.

ஹே பாரத!, மம யோநிः மஹத்ப்ரஹ்ம - எனது கருப்பை மஹத்தான ப்ரக்ருதி, தஸ்மிந் - அதில், அஹம் கர்ப்பம் ததாமி - நான் கர்பத்தை கொடுக்கிறேன். ததः - அதிலிருந்து ஸர்வபூதாநாம் ஸம்பவः - சகல பிராணிகளின் உற்பத்தியானது, பவதி - உண்டாகிறது.

सर्वयोनिषु कौन्तेय मूर्तयः सम्भवन्ति याः ।
तासां ब्रह्म महद्योनिरहं बीजप्रदः पिता ॥ ४ ॥

4. ஸர்வயோநிஷு கௌந்தேய மூர்தயः ஸம்பவந்தி யாः
தாஸாம் ப்ரஹ்ம மஹத்யோநி: அஹம் பீஜப்ரதः பிதா.

ஹே கௌந்தேய!, ஸர்வயோநிஷு - எல்லாக்கருப்பைகளி லும், யா மூர்தயः ஸம்பவந்தி - எந்த உருவங்கள் உண்டாகின்ற னவோ, தாஸாம் - அவைகளுக்கு, மஹத்ப்ரஹ்ம - பெரிய ப்ரக்ருதி யானது, யோநிः - கருப்பையாகும், அஹம் பீஜப்ரதः பிதா - நான் விதையைக்கொடுக்கும் தந்தையாகிறேன்.

सत्त्वं रजस्तम इति गुणाः प्रकृतिसम्भवाः ।
निबध्नन्ति महाबाहो देहे देहिनमव्ययम् ॥ ५ ॥

5. ஸத்வம் ரஜः தம: இதி குணाः ப்ரக்ருதிஸம்பவா:
நிபத்நந்தி மஹாபாஹோ தேஹே தேஹிநம் அவ்யயம்.

ஹே மஹாபாஹோ, ஸத்வம் ரஜஸ்தம இதி குணா: - ஸத்துவம், ராஜஸம், தாமஸம் என்னும் குணங்கள், ப்ரக்ருதிஸம்பவாः - பிரகிருதியிலிருந்து உண்டானவை, அவ்யயம் தேஹிநம்-அழிவற்ற ஆத்மாவை, தேஹே - தேகத்தில் நிபத்நந்தி - பிணித்துக்கட்டு கின்றன.

तत्र सत्त्वं निर्मलत्वात्प्रकाशकमनामयम् ।
सुखसंगेन बध्नाति ज्ञानसंगेन चानघ ॥ ६ ॥

6. தத்ர ஸத்வம் நிர்மலத்வாத் ப்ரகாசகம் அநாமயம்
ஸுகஸங்கேந பத்நாதி ஜ்ஞாநஸங்கேந ச அநக.

ஹே அநக - பாபமற்றவனே, தத்ர - அவைகளுள், ஸத்வம் - ஸத்வகுணமானது, நிர்மலத்வாத் - பரிசுத்தமாயிருப்பதால், ப்ரகாசகம் - பிரகாசமானது, அநாமயம் - துன்பத்தையுண்டாக் காதது, ஸுகஸங்கேந ஜ்ஞாந ஸங்கேந ச - இன்பம், அறிவு இவற் றின் சம்பந்தத்தால், பத்நாதி - (ஆத்மாவை) கட்டுகிறது.

रजो रागात्मकं विद्धि तृष्णासङ्गसमुद्भवम् ।
तन्निबध्नाति कौन्तेय कर्मसंगेन देहिनम् ॥ ७ ॥

7. ரஜः ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணாஸங்க ஸமுத்பவம்
தத் நிபத்நாதி கௌந்தேய கர்மஸங்கேந தேஹிநம்.

ஹே கௌந்தேய!, ரஜः ராகாத்மகம் - ரஜோகுணம் ராகஸ் வரூபமானதாயும், த்ருஷ்ணா ஸங்கஸமுத்பவம் - ஆசைக்கும் பற் றுக்கும் பிறப்பிடமானதாயும், வித்தி - அறிவாயாக. தத் - அந்த ரஜோகுணம், கர்மஸங்கேந - கர்மப்பற்றினால், தேஹிநம் - ஆத் மாவை, நிபத்நாதி - கட்டுகிறது.

तमस्त्वज्ञानजं विद्धि मोहनं सर्वदेहिनाम् ।
प्रमादालस्यनिद्राभिस्तन्निबध्नाति भारत ॥ ८ ॥

8. தமः து அஜ்ஞாநஜம் வித்தி மோஹநம் ஸர்வதேஹிநாம்
ப்ரமாதாலஸ்ய நித்ராபிः தத் நிபத்நாதி பாரத.

ஹே பாரத!, தமஸ்து - தமோகுணமோ, அஜ்ஞாநஜம் - அஜ்ஞானத்திலிருந்து உண்டாகி, ஸர்வ தேஹிநாம் - எல்லா தேஹி களையும் மோஹநம் வித்தி - மோஹிக்கச்செய்வதாகத் தெரிந்து கொள்; தத் - அந்தத் தமோகுணமானது, ப்ரமாத ஆலஸ்ய நித் ராபிः - அஜாக்கிரதை, சோம்பல், தூக்கம் இவைகளால், நிபத் நாதி - கட்டுகிறது.

सत्त्वं सुखे सञ्जयति रजः कर्मणि भारत ।
ज्ञानमावृत्य तु तमः प्रमादे सञ्जयत्युत ॥ ९ ॥

9. ஸத்வம் ஸுகே ஸஞ்ஜயதி ரஜ: கர்மாணி பாரத
ஜ்ஞானம் ஆவ்ருத்ய து தம: ப்ரமாதே ஸஞ்ஜயதி உத.

ஹே பாரத!, ஸத்வம்ஸுகே - ஸத்வகுணம் இன்பத்திலும், ரஜ: கர்மாணி - ரஜோகுணம் கர்மத்திலும், ஸஞ்ஜயதி - சேர்க்கின்றது (ஆத்மாவை), தமஸ்து - தமோகுணமோ, ஜ்ஞானம் ஆவ்ருத்ய - அறிவை மறைத்து, ப்ரமாதே உத ஸஞ்ஜயதே - அஜாக்கிரதையிலும் பற்றச்செய்கிறது.

रजस्तमश्चाभिभूय सत्त्वं भवति भारत ।
रजः सत्त्वं तमश्चैव तमः सत्त्वं रजस्तथा ॥ १० ॥

10. ரஜ: தம: ச அபிபூய ஸத்வம் பவதி பாரத
ரஜ: ஸத்வம் தம: ச ஏவ தம: ஸத்வம் ரஜ: ததா.

ஹே பாரத!, ஸத்வம் - ஸத்வகுணமானது, ரஜ: தமஸ்ச அபிபூய பவதி - ரஜோகுண தமோகுணங்களை அடக்கி (தான்) விருத்தியடைகிறது. ரஜ: - ரஜோகுணமானது, ஸத்வம் தமஸ்ச - ஸத்வ தமோகுணங்களை (அடக்கி மேலோங்கி நிற்கிறது), ததா - அப்படியே, தம: - தமோகுணமானது ஸத்வம் ரஜஸ்சைவ - ஸத்வ ரஜோகுணங்களை (அடக்கித்தான் விருத்தியடைகிறது).

सर्वद्वारेषु देहेऽस्मिन्प्रकाश उपजायते ।
ज्ञानं यदा तदा विद्याद्विवृद्धं सत्त्वमित्युत ॥ ११ ॥

11. ஸர்வத்வாரேஷு தேஹே அஸ்மிந் ப்ரகாஶ: உபஜாயதே
ஜ்ஞானம் யதா ததா வித்யாத் விவ்ருத்தம் ஸத்வம் இதி உத.

அஸ்மிந் தேஹே - இத்தேகத்தில், ஸர்வத்வாரேஷு - எல்லா இடங்களிலும், ஜ்ஞானம் ப்ரகாஶ: உத - ஞானமாகிய பிரகாசமும் இன்பமும், யதா உபஜாயதே - எப்போது உண்டாகின்றதோ, ததா - அப்போது, ஸத்வம் விவ்ருத்தமிதி வித்யாத் - ஸத்வகுணம் விருத்தி யடைந்திருக்கிறதென்று அறியவேண்டும்.

लोभः प्रवृत्तिरारम्भः कर्मणामशमः स्पृहा ।
रजस्येतानि जायन्ते विवृद्धे भरतर्षभ ॥ १२ ॥

12. லோப: ப்ரவ்ருத்தி: ஆரம்ப: கர்மணாம் அஶம: ஸ்ப்ருஹா
ரஜஸி ஏதானி ஜாயந்தே விவ்ருத்தே பரதர்ஷப.

ஹே பரதர்ஷப!, ரஜஸி விவ்ருத்தே - ரஜோகுணம் மேலிட்டிருந்தால், லோப: - உலோபம், ப்ரவ்ருத்தி: - தொழில்முயற்சி, கர்மணாம் ஆரம்ப: - கர்மங்களைத் தொடங்குதல், அஶம: - சமாதானமின்மை, ஸ்ப்ருஹா - ஆசை, ஏதானி ஜாயந்தே - இவைகள் உண்டாகின்றன.

अप्रकाशोऽप्रवृत्तिश्च प्रमादो मोह एव च ।
तमस्येतानि जायन्ते विवृद्धे कुरुनन्दन ॥ १३ ॥

13. அப்ரகாஶ: அப்ரவ்ருத்தி: ச ப்ரமாத: மோஹ: ஏவ ச
தமஸி ஏதானி ஜாயந்தே விவ்ருத்தே குருநந்தந.

ஹே குருநந்தந!, தமஸி ப்ரவ்ருத்தே - தமோகுணம் மேலோங்கியிருக்கும்போது, அப்ரகாஶ: - அவிவேகம், அப்ரவ்ருத்திஶ்ச - முயற்சியின்மை, ப்ரமாத:- அஜாக்கிரதை, மோஹ ஏவ ச ஏதானி - மோஹம் முதலான இவைகள், ஜாயந்தே - உண்டாகின்றன.

यदा सत्वे प्रवृद्धे तु प्रलयं याति देहभृत् ।
तदोत्तमविदां लोकानमलान्प्रतिपद्यते ॥ १४ ॥

14. யதா ஸத்வே ப்ரவ்ருத்தே து ப்ரளயம் யாதி தேஹப்ருத்
ததா உத்தமவிதாம் லோகாந் அமலாந் ப்ரதிபத்யதே.

யதா - எப்போது, ஸத்வம் ப்ரவ்ருத்தே து - சத்துவகுணம் மிகுந்திருக்கும்போதே, தேஹப்ருத் - தேஹத்தைத் தரித்துள்ள ஜீவன், ப்ரளயம் யாதி - மரணத்தை யடைகிறானோ, ததா - அப்போது, உத்தமவிதாம் அமலாந் லோகாந் - உத்தம ஞானிகளது பரிசுத்தமான உலகங்களை, ப்ரதிபத்யதே - அடைகிறான்.

रजसि प्रलयं गत्वा कर्मसङ्गिषु जायते ।
तथा प्रलीनस्तमसि मूढयोनिषु जायते ॥ १५ ॥

15. ரஜஸி ப்ரளயம் கத்வா கர்மஸங்கிஷு ஜாயதே
ததா ப்ரலீந: தமஸி மூடயோநிஷு ஜாயதே.

ரஜஸி - ரஜோகுணம் (மிகுந்திருக்கும்போது), ப்ரளயம் கத்வா - மரணத்தை யடைந்து, கர்மஸங்கிஷு ஜாயதே - கர்மப் பற்றுள்ள மனிதவர்க்கத்தில் பிறக்கிறான், ததா - அப்படியே, தமஸி ப்ரலீந: - தமோகுணப்ரவிருத்தியில் இறந்தவன், மூடயோநிஷு ஜாயதே - மூடர்களது வர்க்கத்தில் பிறக்கிறான்.

कर्मणः सुकृतस्याहुः सात्त्विकं निर्मलं फलम् ।
रजसस्तु फलं दुःखमज्ञानं तमसः फलम् ॥ १६ ॥

16. கர்மண: ஸுக்ருதஸ்ய ஆஹு: ஸாத்விகம் நிர்மலம் பலம்
ரஜஸஸ்து பலம் து:கம் அஜ்ஞாநம் தமஸ: பலம்.

ஸுக்ருதஸ்ய கர்மண: - சாத்துவிக கர்மங்களுக்கு, ஸாத்விகம் நிர்மலம் பலம் - ஸாத்துவிகமான பரிசுத்தமான சுகம் பலனாகும். ரஜஸஸ்து - ரஜோகுண கர்மத்துக்கு, துக்கம் பலம் - துக்கம் பலனாகும். தமஸ: - தமோகுண கர்மத்துக்கு, அஜ்ஞாநம் பலம் - மூடத்தன்மை பலன் என்று, ஆஹு: - சொல்லுகிறார்கள்.

सत्त्वात्सञ्जायते ज्ञानं रजसो लोभ एव च ।
प्रमादमोहौ तमसो भवतोऽज्ञानमेव च ॥ १७ ॥

17. ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம் ரஜஸ: லோப: ஏவ ச
ப்ரமாத மோஹௌ தமஸ: பவத: அஜ்ஞாநம் ஏவ ச.

ஸத்வாத் ஜ்ஞாநம் ஸஞ்ஜாயதே - சத்துவகுணத்திலிருந்து ஞானம் உண்டாகிறது. ரஜஸ: லோப ஏவ ச - ரஜோகுணத்திலிருந்து பேராசை உண்டாகிறது. தமஸ: - தமோ குணத்திலிருந்து, ப்ரமாத மோஹௌ அஜ்ஞானமேவ ச, அஜாக்கிரதை, விபரீத ஞானம், அஜ்ஞானம் (இவைகள் எல்லாமே), பவதி-உண்டாகிறது.

ऊर्ध्वं गच्छंति सत्त्वस्था मध्ये तिष्ठन्ति राजसाः ।
जघन्यगुणवृत्तिस्था अधो गच्छन्ति तामसाः ॥ १८ ॥

18. ஊர்த்வம் கச்சந்தி ஸத்வஸ்தா: மத்யே திஷ்டந்தி ராஜஸா:
ஜகந்யகுணவ்ருத்திஸ்தா: அத: கச்சந்தி தாமஸா:.

ஸத்வஸ்தா: - சத்துவகுணத்தில் நிலைத்திருப்பவர், ஊர்த்வம் கச்சந்தி - (மோக்ஷமடைந்து) மேலே செல்லுகிறார்கள், ராஜஸா: - ரஜோகுணத்தவர், மத்யே திஷ்டந்தி - இடையில் நிற்கிறார்கள் (மனித உலகம்), ஜகந்ய குணவ்ருத்திஸ்தா: தாமஸா:-கீழ்மையான நடத்தையையும் குணத்தையும் உடைய தாமதகுணத்தவர், அத: கச்சந்தி - கீழேபோகின்றார்கள் (நரகம்).

नान्यं गुणेभ्यः कर्तारं यदा द्रष्टाऽनुपश्यति ।
गुणेभ्यश्च परं वेत्ति मद्भावं सोऽधिगच्छति ॥ १९ ॥

19. ந அந்யம் குணேப்ய: கர்தாரம் யதா த்ரஷ்டா அநுபஶ்யதி
குணேப்ய: ச பரம் வேத்தி மத்பாவம் ஸ: அதிகச்சதி.

யதா - எப்போது, த்ரஷ்டா - விவேகத்துடன் (ஒருவன்), குணேப்ய: அந்யம் கர்த்தாரம் - குணங்களைத்தவிர வேறொரு கர்த்தாவை, ந அநுபஶ்யதி - பார்க்கிறதில்லையோ (அதாவது குணங்களே கர்த்தா, ஆத்மா கர்த்தா அல்ல என்று அறிகிறானோ); குணேப்யஶ்ச - (மேலும்) குணங்களைக்காட்டிலும், பரம் வேத்தி - (ஆத்மா) அந்நியமானது (என்று) அறிகிறானோ, ததா-அப்போது, ஸ: - அந்த விவேகி, மத்பாவம் அதிகச்சதி - என் நிலையைப்பெறுகிறான்.

गुणानेतानतीत्य त्रीन्देही देहसमुद्भवान् ।
जन्ममृत्युजरादुःखैर्विमुक्तोऽमृतमश्नुते ॥ २० ॥

20. குணாந் ஏதாந் அதீத்ய த்ரீந் தேஹீ தேஹஸமுத்பவாந்
ஜந்மம்ருத்யுஜராது:கை: விமுக்த: அம்ருதம் அஶ்நுதே.

தேஹீ - தேகத்தையுடைய ஆத்மா, தேஹஸமுத்பவாந் - சரீரத்துக்குக் காரணமான, ஏதாந் த்ரீந்குணாந் - இந்த முக்குணங்

களை (யும்), அதீத்ய - கடந்து, ஜந்மம்ருத்யுஜராதுக்கை: - ஜனன மரண மூப்பு துக்கங்களால், விமுக்த: - விடுபட்டு, அம்ருதம் அச்நுதே - மரணமின்மையை அடைகிறான்.

अर्जुन उवाच—

कैर्लिङ्गैस्त्रीन्गुणानेतानतीतो भवति प्रभो ।
किमाचारः कथं चैतांस्त्रीन्गुणानतिवर्तते ॥ २१ ॥

21. கை: லிங்கை: த்ரீந் குணாந் ஏதாந் அதீத: பவதி ப்ரபோ
கிமாசார: கதம் ச ஏதாந் த்ரீந் குணாந் அதிவர்ததே.

அர்ஜுனன் வினா—

ஹே ப்ரபோ!, ஏதாந் த்ரீந் குணாந் அதீத: - இம் முக்குணங்களை அதிக்கிரமித்தவன், கை: லிங்கை: - எந்த லக்ஷணம் அல்லது அடையாளங்களுடன் (கூடினவனாய்), பவதி - ஆகிறான்? கிம் ஆசார: - எவ்வித ஒழுக்கமுடையவன்? கதம் ச ஏதாந் த்ரீந் குணாந் அதிவர்ததே - எவ்வாறு இம்முக்குணங்களை அதிக்கிரமிக்கிறான்.

श्रीभगवानुवाच—

प्रकाशं च प्रवृत्तिं च मोहमेव च पाण्डव ।
न द्वेष्टि सम्प्रवृत्तानि न निवृत्तानि काङ्क्षति ॥ २२ ॥
उदासीनवदासीनो गुणैर्यो न विचाल्यते ।
गुणा वर्तन्त इत्येव योऽवतिष्ठति नेङ्गते ॥ २३ ॥
समदुःखसुखः स्वस्थः समलोष्टाश्मकाञ्चनः ।
तुल्यप्रियाप्रियो धीरस्तुल्यनिन्दात्मसंस्तुतिः ॥ २४ ॥
मानापमानयोस्तुल्यस्तुल्यो मित्रारिपक्षयोः ।
सर्वारम्भपरित्यागी गुणातीतः स उच्यते ॥ २५ ॥

22. ப்ரகாசம் ச ப்ரவ்ருத்திம் ச மோஹம் ஏவ ச பாண்டவ
ந த்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தாநி ந நிவ்ருத்தாநி காங்க்ஷதி.

23. உதாஸீநவத் ஆஸீந: குணை: ய: ந விசால்யதே
குணா: வர்தந்தே இதி ஏவ ய: அவதிஷ்டதி ந இங்கதே.
24. ஸமது:கஸுக: ஸ்வஸ்த: ஸமலோஷ்டாச்மகாஞ்சந:
துல்ய ப்ரியாப்ரிய: தீர: துல்யநிந்தாத்ம ஸம்ஸ்துதி:.
25. மாநாபமாநயோ: துல்ய: துல்ய மித்ராரிபக்ஷயோ:
ஸர்வாரம்பபரித்யாகீ குணாதீத: ஸ: உச்யதே.

பகவான் விடை—

ஹே பாண்டவ!, (ய: - எவன்), ஸம்ப்ரவ்ருத்தாநி - இயற்கையாய் (ஸ்வபாவமாய்) உண்டான, ப்ரகாசம் ச ப்ரவ்ருத்திம் ச மோஹம் ஏவ ச - பிரகாசத்தையும் பிரவிருத்தியையும் மோஹத்தையும், ந த்வேஷ்டி - வெறுக்கின்றதில்லையோ, நிவ்ருத்தாநி ந காங்க்ஷதி - (ஸ்வபாவமாய்) நீங்கிப்போன அவைகளை (மறுபடி) விரும்புகிறதில்லையோ; ய: - எவன், உதாஸீநவத் ஆஸீந: - உதாஸீநமாய் (பக்ஷபாதமில்லாமல்) இருந்துகொண்டு, குணை: ந விசால்யதே - குணங்களினால் (குணத்தினாலுண்டாகும் சுகதுக்காதிகள்) அசைக்கப்படுவதில்லையோ; குணா ஏவ வர்தந்தே இதி அவதிஷ்டதி - குணங்களே (விஷயாதிகளில்) பிரவிருத்தித்து இருக்கின்றன என்று (அறிந்து) இருக்கின்றானோ; ந இங்கதே - (பகவத் தியானத்திலிருந்து) சலிப்பதில்லையோ; ய: - எவன், ஸமதுக்க ஸுக: - இன்பதுன்பங்களை ஸமமாயும், ஸ்வஸ்த: - மன அமைதியுடனும், ஸமலோஷ்ட அச்மகாஞ்சந:-மண், கல், பொன் இவற்றை ஸமமாயும், துல்ய ப்ரிய அப்ரிய: - இஷ்டம் இஷ்டமில்லாதது இரண்டிலும் ஸமமாயும், தீர: - மனதிடமுள்ளவனாயும், துல்ய நிந்தாத்ம ஸம்ஸ்துதி: - தன்னை இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும் (அவற்றில்) சமமாயும், மாநாபமாநயோ: துல்ய: - மானம் அவமானங்களில் ஸமமாயும்; மித்ர அரிபக்ஷயோ: துல்ய: - நண்பன் பகைவன் பக்ஷங்களில் சமமாயும்; ஸர்வாரம்ப பரித்யாகீ - எல்லா முயற்சிகளையும் விட்டவனாயும் (இருக்கிறானோ), ஸ:- அவன், குண அதீத: உச்யதே - குணங்களைக்கடந்தவனாகச் சொல்லப்படுகிறான்.

मां च योऽव्यभिचारेण भक्तियोगेन सेवते ।
स गुणान्समतीत्यैतान् ब्रह्मभूयाय कल्पते ॥ २६ ॥

26. மாம் ச ய: அவ்யபிசாரேண பக்தியோகேந ஸேவதே
ஸ: குணாந் ஸம் அதீத்ய ஏதாந் ப்ரஹ்மபூயாய கல்பதே.

ய: - எவன், அவ்யபிசாரேண பக்தியோகேந - சலிக்காத (உறுதியான) பக்தியோகத்தினால், மாம் ச ஸேவதே - என்னையே ஸேவிக்கின்றானோ, ஸ: - அவன், ஏதாந் குணாந் ஸமதீத்ய - இக்குணங்களைச் செவ்வனே கடந்து, ப்ரம்மபூயாய கல்பதே - ப்ரம்மமே ஆவதற்குத் தகுதியாகிறான்.

ब्रह्मणो हि प्रतिष्ठाऽहममृतस्याव्ययस्य च ।
शाश्वतस्य च धर्मस्य सुखस्यैकान्तिकस्य च ॥ २७ ॥

27. ப்ரஹ்மண: ஹி ப்ரதிஷ்டா அஹம் அம்ருதஸ்ய அவ்யயஸ்ய ச
ஶாஶ்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்ய ஐகாந்திகஸ்ய ச.

ஹி - ஏனென்றால், அஹம் - நான், அம்ருதஸ்ய - அழிவற்றதாய், அவ்யயஸ்ய - வேறுபாடு இல்லாததாய், ஶாஶ்வதஸ்ய - சாச்வதமான, தர்மஸ்ய ச - தர்மத்துக்கும், ஐகாந்திகஸ்ய - தவறாத இன்பத்துக்கும், ஸுகஸ்ய - சுகத்துக்கும், ப்ரம்மண:-பரப்பிரம்மத்துக்கும், ப்ரதிஷ்டா - இருப்பிடம்.

इति श्रीमद्भगवद्गीता॰ गुणत्रयविभागयोगो नाम चतुर्दशोऽध्यायः ।

அத்தியாயம் 15. ஶ்லோகம் 20.

புருஷோத்தம ப்ராப்தி யோகம்.

श्रीभगवानुवाच—

ऊर्ध्वमूलमधः शाखमश्वत्थं प्राहुरव्ययम् ।
छन्दांसि यस्य पर्णानि यस्तं वेद स वेदवित् ॥ १ ॥

1. ஊர்த்வமூலம் அத:ஶாகம் அஶ்வத்தம் ப்ராஹு: அவ்யயம்
சந்தாம்ஸி யஸ்ய பர்ணாநி ய: தம் வேத ஸ: வேதவித்.

பகவான் வசனம்—

ஊர்த்வமூலம் - பரம்பொருளாகிய கடவுளை மூலமாயும், அத:ஶாகம் - கீழே கிளைகளையுடையதுமான, அஶ்வத்தம் - ஸ்திரமில்லாத ஸம்ஸாரவிருக்ஷத்தை, அவ்யயம் - அழிவற்றதாக, ப்ராஹு: - சொல்லுகின்றார்கள். சந்தாம்ஸி - வேதங்கள், யஸ்ய - எந்த சம்சாரவிருக்ஷத்துக்கு, பர்ணாநி - இலைகளோ, தம் - அந்த விருக்ஷத்தை, ய: வேத - எவன் அறிகிறானோ, ஸ: வேதவித் - அவன் வேதத்தின் கருத்தை அறிந்தவன்.

अधश्चोर्ध्वं प्रसृतास्तस्य शाखा
गुणप्रवृद्धा विषयप्रवालाः ।
अधश्च मूलान्यनुसन्ततानि
कर्मानुबन्धीनि मनुष्यलोके ॥ २ ॥

2. அத: ச ஊர்த்வம் ச ப்ரஸ்ருதா: தஸ்ய ஶாகா:
குணப்ரவ்ருத்தா: விஷயப்ரவாளா:
அத: ச மூலாநி அநுஸந்ததாநி
கர்மாநுபந்தீநி மநுஷ்யலோகே.

தஸ்ய ஶாகா: - அதன் கிளைகள், அத: ஊர்த்வம் ச - கீழ் மேலுலகங்களிலும், ப்ரஸ்ருதா: - பரவியிருக்கின்றன. குணப்ரவ்

ரூடாஃ - குணங்களினால் (ஸத்வ, ரஜ, தமஸ்) நன்றாய் வளர்ந்திருக்கின்றன. விஷயப்ரவாளாஃ - சப்தாதி விஷயங்களைத் துளிர்களாக உடையன, மனுஷ்யலோகே - இம்மானிட உலகத்தில், கர்மானுபந்தீநி-கர்மத்தை உண்டாக்கிக்கொண்டு, அநுஸந்ததாநி-தொடர்ச்சியாய் விரிந்திருக்கின்றன.

न रूपमस्येह तथोपलभ्यते
नान्तो न चादिर्न च सम्प्रतिष्ठा ।
अश्वत्थमेनं सुविरूढमूल-
मसङ्गशस्त्रेण दृढेन छित्त्वा ॥ ३ ॥

ततः पदं तत्परिमार्गितव्यम्
यस्मिन्गता न निवर्तन्ति भूयः ।
तमेव चाद्यं पुरुषं प्रपद्ये
यतः प्रवृत्तिः प्रसृता पुराणी ॥ ४ ॥

3. ந ரூபம் அஸ்ய இஹ ததா உபலப்யதே
ந அந்தஃ ந ச ஆதிஃ ந ச ஸம்ப்ரதிஷ்டா
அஶ்வத்தம் ஏநம் ஸுவிரூடமூலம்
அஸங்க ஶஸ்த்ரேண த்ருடேந சித்வா.

4. ததஃ பதம் தத் பரிமார்கிதவ்யம்
யஸ்மிந் கதாஃ ந நிவர்தந்தி பூயஃ
தம் ஏவ ச ஆத்யம் புருஷம் ப்ரபத்யே
யதஃ ப்ரவ்ருத்திஃ ப்ரஸ்ருதா புராணீ.

அஸ்ய - இந்த ஸம்ஸாரவிருக்ஷத்தின், ததாரூபம் - மேற்சொன்ன உருவமானது, இஹ - இங்கே, ந உபலப்யதே - காணப்படவில்லை, அந்தஃ ந, ஆதிஃ ச ந - முடிவும் ஆதியும் காணப்படவில்லை. ஸம்ப்ரதிஷ்டா ச ந-நிலையான இருப்பும் காணப்படவில்லை. ஸுவிரூடமூலம் ஏநம் அஶ்வத்தம் - நன்கு வேரூன்றிய இந்த அஶ்வத்த விருக்ஷத்தை, த்ருடேந அஸங்க ஶஸ்த்ரேண - திடமான பற்றின்மை யென்னும் கோடரியால், சித்வா - வெட்டி, ததஃ -

பிறகு, யஸ்மிந்கதாஃ - எந்த நிலையைப் போயடைந்தவர்கள், பூயஃ ந நிவர்தந்தி - மீண்டும் திரும்பி வருவதில்லையோ, தத் பதம்-அந்த மோக்ஷ நிலையானது, பரிமார்கிதவ்யம் - தேடியடைவதற்கு அவசியமானது, புராணீ ப்ரவ்ருத்திஃ - அநேககாலமாய் பரிணமித்துக்கொண்டு வரும் (இந்த விருக்ஷம்), யதஃ ப்ரஸ்ருதா-எவரிடமிருந்து தோன்றிற்றோ, தம் ஆத்யம் புருஷம் - அந்த ஆதிபுருஷராகிய கடவுளை, ப்ரபத்யே - அடைக்கலமாக அடைகிறேன் (என்று நாடியடையவேண்டும்).

निर्मानमोहा जितसङ्गदोषा
अध्यात्मनित्या विनिवृत्तकामाः ।
द्वन्द्वैर्विमुक्ताः सुखदुःखसंज्ञै-
र्गच्छन्त्यमूढाः पदमव्ययं तत् ॥ ५ ॥

5. நிர்மாநமோஹாஃ ஜிதஸங்கதோஷாஃ
அத்யாத்மநித்யாஃ விநிவ்ருத்தகாமாஃ
த்வந்த்வைஃ விமுக்தாஃ ஸுகது:க ஸம்ஜ்ஞைஃ
கச்சந்தி அமூடாஃ பதம் அவ்யயம் தத்.

நிர்மாநமோஹாஃ-நான் என்னும் செருக்கும், மயக்கமும் நீங்கினவர்களாய், ஜிதஸங்கதோஷாஃ-பற்று என்னும் தீங்கை வென்றவர்களாய், அத்யாத்மநித்யாஃ-பரமாத்மாவிடம் எப்போதும் இருப்பவர்களாய், விநிவ்ருத்தகாமாஃ - காமம் முற்றும் நீங்கப்பெற்றவர்களாய், ஸுகதுக்கஸம்ஜ்ஞைஃ த்வந்த்வைஃ - இன்பதுன்பமென்னும் பெயருள்ள இருமைகளிலிருந்து, விமுக்தாஃ - விடப்பெற்றவராயுள்ள, அமூடாஃ - மூடத்தன்மையற்ற ஞானிகள், தத் அவ்யயம் பதம் - அந்த அழிவற்ற பதவியை, கச்சந்தி - அடைகிறார்கள்.

न तद्भासयते सूर्यो न शशाङ्को न पावकः ।
यद्गत्वा न निवर्तन्ते तद्धाम परमं मम ॥ ६ ॥

6. ந தத் பாஸயதே ஸூர்யஃ ந ஶஶாங்கஃ ந பாவகஃ
யத் கத்வா ந நிவர்தந்தே தத் தாம பரமம் மம.

தத் - அந்த உயர்ந்த ஸ்தானத்தை, ஸூர்ய: ந பாஸயதே - ஸூர்யன் பிரகாசிக்கச் செய்வது இல்லை, ஶஶாங்க: ந பாவக: ந - சந்திரனும் அக்கினியும் பிரகாசிக்கச் செய்வது இல்லை, யத் கத்வா-எதை அடைந்து, ந நிவர்தந்தே - திரும்பி வருவதில்லையோ (பிறவியை யடைவதில்லையோ), தத் - அந்த மோக்ஷபதமே, மம பரமம் தாம - என்னுடைய மேலான ஸ்வரூபம்.

ममैवांशो जीवलोके जीवभूतःसनातनः ।
मन षष्ठानीन्द्रियाणि प्रकृतिस्थानि कर्षति ॥ ७ ॥

7. மம ஏவ அம்ஶ: ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந:
மநஷ்ஷஷ்டாநி இந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தாநி கர்ஷதி.

மம ஏவ அம்ஶ: - என்னுடையதேயான அம்சமானது, ஜீவலோகே - மனித உலகத்தில், ஜீவபூத: - ஜீவாத்மாவாய், ஸநாதந: - எப்போதும் உள்ளது, மநஷ்ஷஷ்டாநி - மனதை ஆறாவதாயுடையதாய், ப்ரக்ருதிஸ்தாநி - ப்ரக்ருதியில் தங்கி யிருக்கின்ற, இந்திரியாணி - இந்திரியங்களை, கர்ஷதி - (அந்த ஜீவாத்மா) இழுக்கின்றான்.

शरीरं यदवाप्नोति यच्चाप्युत्क्रामतीश्वरः ।
गृहीत्वैतानि संयाति वायुर्गन्धानिवाशयात् ॥ ८ ॥

8. ஶரீரம் யத் அவாப்நோதி யத் ச அபி உத்க்ராமதி ஈஶ்வர:
க்ருஹீத்வா ஏதாநி ஸம்யாதி வாயு: கந்தாந் இவ ஆஶயாத்.

ஈஶ்வர: - ஈஶ்வர அம்ஶமான ஜீவாத்மா, யத் ஶரீரம் அவாப்நோதி - எந்த தேகத்தை அடைகிறானோ, யச்சாபி உத்க்ராமதி - எந்த தேகத்திலிருந்து வெளிப்படுகிறானோ (அப்போது அந்த சரீரத்திலிருந்து), ஆஶயாத் வாயு: கந்தாந் இவ - புஷ்பத்திலிருந்து காற்றானது வாசனையை (எடுத்துக்கொண்டு போவது) போல, ஏதாநி - மேற்சொன்ன இந்திரியங்களை, கிரஹீத்வா ஸம்யாதி - கிரகித்துக்கொண்டு போகிறான்.

श्रोत्रं चक्षुः स्पर्शनं च रसनं घ्राणमेव च ।
अधिष्ठाय मनश्चायं विषयानुपसेवते ॥ ९ ॥

9. ஶ்ரோத்ரம் சக்ஷு: - ஸ்பர்ஶநம் ச ரஸநம் க்ராணம் ஏவ ச
அதிஷ்டாய மந: ச அயம் விஷயாந் உபஸேவதே.

அயம் - இந்த ஜீவாத்மா, ஶ்ரோத்ரம்-செவியையும், சக்ஷு: கண்ணையும், ஸ்பர்ஶநம் ச - மெய்யையும், ரஸநம் - நாக்கையும், க்ராணமேவ ச - மூக்கையும், மநஶ்ச - மனதையும், அதிஷ்டாய ஏவ - ஆஶ்ரயித்தே, விஷயாந் - விஷயங்களை, உபஸேவதே- (தான்) அனுபவிக்கின்றான்.

उत्क्रामन्तं स्थितं वापि भुञ्जानं वा गुणान्वितम् ।
विमूढा नानुपश्यन्ति पश्यन्ति ज्ञानचक्षुषः ॥ १० ॥

10. உத்க்ராமந்தம் ஸ்திதம் வா அபி புஞ்ஜாநம் வா குணாந்விதம்
விமூடா: ந அநுபஶ்யந்தி பஶ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷ:.

உத்க்ராமந்தம் - சரீரத்திலிருந்து வெளிச் செல்பவனும், ஸ்திதம் வாபி - சரீரத்திலேயே தங்கியிருப்பவனும், புஞ்ஜாநம்வா - விஷயங்களை அனுபவிக்கிறவனும், குணாந்விதம் - குணங்களுடன் கூடினவனுமான (ஜீவாத்மாவை), விமூடா: - மூடத்தன்மையுள்ளவர்கள், ந அநுபஶ்யந்தி - காண்பதில்லை. ஜ்ஞாந சக்ஷுஷ: பஶ்யந்தி - ஞானக்கண்ணை யுடையவர்கள் பார்க்கின்றார்கள்.

यतन्तो योगिनश्चैनं पश्यन्त्यात्मन्यवस्थितम् ।
यतन्तोऽप्यकृतात्मानो नैनं पश्यन्त्यचेतसः ॥ ११ ॥

11. யதந்த: யோகிந: ச ஏநம் பஶ்யந்தி ஆத்மநி அவஸ்திதம்
யதந்த: அபி அக்ருதாத்மாந: ந ஏநம் பஶ்யந்தி அசேதஸ:.

யதந்த: யோகிந:-முபற்சியுடைய யோகிகள், ஆத்மநி அவஸ்திதம் - தன் புத்தியிலேயே யுள்ள, ஏநம் - இந்த ஜீவாத்மாவை, பஶ்யந்தி - பார்க்கின்றார்கள். அக்ருதாத்மாந: அசேதஸ: - மனது பரிசுத்தமில்லாத அற்பஞானிகள், யதந்தோபி ச - முயற்சி செய்

தாலுங்கூட, ஏநம் ந பஶ்யந்தி - இந்த ஜீவாத்மாவைக் காண்பதில்லை.

यदादित्यगतं तेजो जगद्भासयतेऽखिलम् ।
यच्चन्द्रमसि यच्चाग्नौ तत्तेजो विद्धि मामकम् ॥ १२ ॥

12. யத் ஆதித்யகதம் தேஜ: ஜகத் பாஸயதே அகிலம்
யத் சந்த்ரமஸி யத் ச அக்நௌ தத் தேஜ: வித்தி மாமகம்.

யத் தேஜ: - எந்தக் காந்தியானது, ஆதித்யகதம் - சூரியனிலிருந்துகொண்டு, அகிலம் ஜகத் பாஸயதே - எல்லா உலகத்தையும் பிரகாசிக்கச் செய்கின்றதோ, யத் சந்த்ரமஸி - எந்தக் காந்தியானது சந்திரனிலிருக்கின்றதோ, யத் அக்நௌ ச-எது அக்கினியிலிருக்கின்றதோ, தத் தேஜ:-அந்தக் காந்தியை, மாமகம் வித்தி-என்னுடையதாகவே அறிவாயாக.

गामाविश्य च भूतानि धारयाम्यहमोजसा ।
पुष्णामि चौषधीः सर्वाः सोमो भूत्वा रसात्मकः ॥ १३ ॥

13. காம் ஆவிஶ்ய ச பூதாநி தாரயாமி அஹம் ஓஜஸா
புஷ்ணாமி ச ஓஷதீ: ஸர்வா: ஸோம: பூத்வா ரஸாத்மக:.

அஹம் - நான், காம் ஆவிஶ்ய - பூமியில் பிரவேசித்து, ஓஜஸா - (என்) சக்தியினால், பூதாநி தாரயாமி ச - பூதங்களை தாங்கிக்கொண்டிருக்கிறேன். ச - மேலும், ரஸாத்மக: ஸோம: பூத்வா - சுவை வடிவமான சந்திரனாயிருந்துகொண்டு, ஸர்வா: ஓஷதீ: - சகலமான பயிர்களையும், புஷ்ணாமி - போஷித்து வளர்க்கின்றேன்.

अहं वैश्वानरो भूत्वा प्राणिनां देहमाश्रितः ।
प्राणापानसमायुक्तः पचाम्यन्नं चतुर्विधम् ॥ १४ ॥

14. அஹம் வைஶ்வாநர: பூத்வா ப்ராணிநாம் தேஹம் ஆஶ்ரித:
ப்ராணாபாநஸமாயுக்த: பசாமி அந்நம் சதுர்விதம்.

அஹம் வைஶ்வாநர: பூத்வா - நான் வைஶ்வாநர அக்கினியாக இருந்துகொண்டு, ப்ராணிநாம் தேஹம் ஆஶ்ரித: - பிராணிகளின்

தேகத்தைச்சார்ந்து (ஆஶ்ரயித்துக்கொண்டு), பிராணாபாநஸமாயுக்த: (அக்கினியை யெரியச்செய்யும்) பிராண அபாந வாயுக்களுடன்கூடி, சதுர்விதம் அந்நம் - நான்குவிதமான உணவுகளை, பசாமி - ஜீரணமாகும்படி செய்கிறேன்.

सर्वस्य चाहं हृदि सन्निविष्टो मत्तः स्मृतिर्ज्ञानमपोहनं च ।
वेदैश्च सर्वैरहमेव वेद्यो वेदान्तकृद्वेदविदेव चाहम् ॥ १५ ॥

15. ஸர்வஸ்ய ச அஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட:
மத்த: ஸ்ம்ருதி: ஜ்ஞாநம் அபோஹநம் ச
வேதை: ச ஸர்வை: அஹம் ஏவ வேத்ய:
வேதாந்தக்ருத் வேதவித் ஏவ ச அஹம்.

அஹம் - நான், ஸர்வஸ்ய ச ஹ்ருதி - எல்லாப் பிராணிகளுடைய ஹ்ருதயத்திலும், ஸந்நிவிஷ்ட: - அந்தர்யாமியாய் தங்கியிருக்கிறேன். மத்த: - என்னிடமிருந்தே, ஸ்ம்ருதி:-நினைவும், ஜ்ஞாநம் - ஞாநமும், அபோஹநம் ச - அவற்றின் கேடும் (உண்டாகின்றன). ஸர்வை: வேதைஶ்ச - சகலவேதங்களினாலேயும், வேத்ய: - அறியத் தகுந்தவன், அஹமேவ - நானே ; வேதாந்தக்ருத்-வேதாந்தத்தைச் செய்தவனும், வேதவித் ச - வேதத்தின் பொருளை அறிந்தவனும், அஹமேவ - நானே.

द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च ।
क्षरः सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते ॥ १६ ॥

16. த்வௌ இமௌ புருஷௌ லோகே க்ஷர: ச அக்ஷர: ஏவ ச
க்ஷர: ஸர்வாணி பூதாநி கூடஸ்த: அக்ஷர: உச்யதே.

லோகே - உலகத்தில், க்ஷரஶ்ச அக்ஷர ஏவ ச - க்ஷரனென்றும் (ப்ரக்ருதிசம்பந்தமாய் அழியக்கூடியது), அக்ஷரன் என்றும் (பகவத் சம்பந்தமாய் அழியாதவைகள்), இமௌ த்வௌ புருஷௌ - இவ்விருவிதப் புருஷர்கள் (இருக்கிறார்கள்). ஸர்வாணி பூதாநி க்ஷர: - எல்லா (ப்ரக்ருதி சம்பந்தமான) பொருள்களும் க்ஷரமென்று சொல்லப்படும். கூடஸ்த: அக்ஷர: - (எப்போதும் அழி

வின்றி நிலையாய் இருக்கும் பகவத் சம்பந்தமான ஜீவாத்மாவாகிய) கூடஸ்தன் அக்ஷரன் என்று, உச்யதே - சொல்லப்படுகிறான்.

उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः ।
यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः ॥ १७ ॥

17 உத்தம: புருஷ: து அந்ய: பரமாத்மா இதி உதாஹ்ருத:
ய: லோகத்ரயம் ஆவிஶ்ய பிபர்தி அவ்யய: ஈஶ்வர:.

து ய: அவ்யய: ஈஶ்வர: - மற்று எந்த நிர்விகாரியான ஈஶ்வரன், லோகத்ரயம் ஆவிஶ்ய-மூன்றுலகங்களையும் பிரவேசித்து, பிபர்தி - தாங்குகின்றானோ, (ஸ: - அந்த ஈஶ்வரன்), அந்ய: - (மேற்சொன்ன க்ஷர அக்ஷரத்திலிருந்து) அன்னியன், உத்தம: புருஷ: - மேலான புருஷன், பரமாத்மா இதி - பரமாத்மா என்றும், உதாஹ்ருத: - சொல்லப்படுகின்றான்.

यस्मात्क्षरमतीतोऽहमक्षरादपि चोत्तमः ।
अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तम ॥ १८ ॥

18. யஸ்மாத் க்ஷரம் அதீத: அஹம் அக்ஷராத் அபி ச உத்தம:
அத: அஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம:.

அஹம் - நான், யஸ்மாத் - எந்தக்காரணத்தினால், க்ஷரம் அதீத: - க்ஷரத்துக்கு மேலானவனோ, அக்ஷராத் அபி உத்தமஶ்ச - அக்ஷரத்தைக்காட்டிலும் உத்தமனோ, அத: - அந்தக்காரணத்தினாலேயே, லோகே வேதே ச - உலகத்திலும் வேதத்திலும், புருஷோத்தம: - புருஷோத்தமன் என்று, ப்ரதித: அஸ்மி - பிரசித்தனாயிருக்கிறேன்.

यो मामेवमसम्मूढो जानाति पुरुषोत्तमम् ।
स सर्वविद्भजति मां सर्वभावेन भारत ॥ १९ ॥

19. ய: மாம் ஏவம் அஸம்மூட: ஜாநாதி புருஷோத்தமம்
ஸ: ஸர்வவித் பஜதி மாம் ஸர்வபாவேந பாரத.

ஹே பாரத!, ய: - எவன், அஸம்மூட: - மயக்கமின்றி, புருஷோத்தமம் மாம் - புருஷோத்தமனான என்னை, ஏவம் ஜாநாதி - இவ்விதமாய் அறிகின்றானோ, ஸ: - அவன், ஸர்வவித்-யாவற்றையு மறிந்தவனாய், ஸர்வபாவேந - (முழு மனதுடன்) எல்லாவிதத்திலும், மாம் பஜதி - என்னை ஆராதிக்கின்றான்.

इति गुह्यतमं शास्त्रमिदमुक्तं मयाऽनघ ।
एतद्बुध्वा बुद्धिमान्स्यात्कृतकृत्यश्च भारत ॥ २० ॥

20. இதி குஹ்யதமம் ஶாஸ்த்ரம் இதம் உக்தம் மயா அநக
ஏதத் புத்த்வா புத்திமாந் ஸ்யாத் க்ருதக்ருத்ய: ச பாரத

ஹே அநக - பாபமற்றவனே, இதி - இவ்விதமாய், குஹ்யதமம் இதம் ஶாஸ்த்ரம்-அதி ரஹஸ்யமான இந்த சாஸ்திரமானது, மயா உக்தம்-என்னால் கூறப்பட்டது. ஹே பாரத!, ஏதத் புத்வா - இந்த சாஸ்திரத்தை யறிந்து (ஒருவன்), புத்திமாந்-ஞானமுடையவனாகி, க்ருதக்ருத்யஶ்ச - எல்லாவற்றையும் (செய்யவேண்டிய) செய்தவனாக, ஸ்யாத் - ஆவான்.

इति श्रीमद्भगवद्गीता पुरुषोत्तमयोगो नाम पंच दशोऽध्यायः ॥

அத்தியாயம் 16. ஶ்லோகம் 24.

ஸம்பத் விபாக யோகம்.

श्रीभगवानुवाच—

अभयं सत्त्वसंशुद्धिर्ज्ञानयोगव्यवस्थितिः ।
दानं दमश्च यज्ञश्च स्वाध्यायस्तपआर्जवम् ॥ १ ॥
अहिंसा सत्यमक्रोधस्त्यागः शान्तिरपैशुनम् ।
दयाभूतेष्वलोलुप्त्वं मार्दवं ह्रीरचापलम् ॥ २ ॥
तेजः क्षमा धृतिः शौचमद्रोहो नातिमानिता ।
भवन्ति सम्पदं दैवीमभिजातस्यभारत ॥ ३ ॥

1. அபயம் ஸத்வஸம்ஶுத்தி: ஜ்ஞாநயோகவ்யவஸ்திதி:
   தாநம் தம: ச யஜ்ஞ: ச ஸ்வாத்யாய: தப: ஆர்ஜவம்.
2. அஹிம்ஸா ஸத்யம் அக்ரோத: த்யாக: ஶாந்தி: அபைஶுநம்
   தயா பூதேஷு அலோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீ: அசாபலம்.
3. தேஜ: க்ஷமா த்ருதி: ஶௌசம் அத்ரோஹ: ந அதிமாநிதா
   பவந்தி ஸம்பதம் தைவீம் அபிஜாதஸ்ய பாரத.

ஸ்ரீ பகவான் வாக்கியம்—

அபயம் - பயமின்மை, ஸத்வஸம்ஶுத்தி: - மனத்தூய்மை, ஜ்ஞாநயோக வ்யவஸ்திதி: - ஜ்ஞாநம், யோகம் இவற்றில் உறுதியுடன் இருத்தல், தாநம் - தானஞ்செய்தல், தமஶ்ச - வெளி இந்திரியங்களை யடக்குதல், யஜ்ஞஶ்ச யக்ஞம் செய்தல், ஸ்வாத்யாய: - வேத மோதுதல், தப: - தபஸ் செய்தல், ஆர்ஜவம் - நேர்மை, அஹிம்ஸா - ஹிம்ஸை செய்யாமை, ஸத்யம் - உண்மை பேசுதல், அக்ரோத: - கோபமின்மை, த்யாக: - பரித்தியாகம் செய்தல் (துறவு), ஶாந்தி: - மன அமைதி (ஒழிவு), அபைஶுநம் - புறங்கூறுமை, பூதேஷு தயா-பிராணிகளிடத்தில் கருணை, அலோலுப்த்வம் - அவாவின்மை, மார்தவம்-குரூரமின்மை, ஹ்ரீ:-நாணம் அசாபலம்-சபலமின்மை, தேஜ:-பெருந்தன்மை, க்ஷமா-பொருமை, த்ருதி: - தைரியம், ஶௌசம் - பரிசுத்தம், அத்ரோஹ: - துரோகம் செய்யாமை, ந அதி மாநிதா - அதிக கர்வமில்லாமை, (இவைகள் எல்லாம்) ஹே பாரத!, தைவீம் ஸம்பதம் - தெய்வத்தன்மையை, அபிஜாதஸ்ய - அடையும் யோக்கியதையுடன் பிறந்தவனுக்கு, பவந்தி - உண்டாகின்றன.

दम्भो दर्पोऽतिमानश्च क्रोधः पारुष्यमेव च ।
अज्ञानं चाभिजातस्य पार्थ सम्पदमासुरीं ॥ ४ ॥

4. தம்ப: தர்ப: அதிமாந: ச க்ரோத: பாருஷ்யம் ஏவ ச
   அஜ்ஞாநம் ச அபிஜாதஸ்ய பார்த ஸம்பதம் ஆஸுரீம்.

ஹே பார்த்த!, தம்ப: - டம்பமும், தர்ப: - செறுக்கும், அதிமாநஶ்ச - தன்னை மிகவும் மதித்தலும், க்ரோத: - கோபமும், பாருஷ்யம் - துடுக்கும், அஜ்ஞாநமேவ ச - ஜ்ஞாநமின்மையுமே, ஆஸுரீம் ஸம்பதம் - அஸுரஸம்பத்துடன் பிறந்தவனுக்கு, (பவந்தி-உண்டாகின்றன).

दैवी सम्पद्विमोक्षाय निबन्धायासुरी मता ।
मा शुचः संपदं दैवीमभिजातोऽसि पाण्डव ॥ ५ ॥

5. தைவீ ஸம்பத்விமோக்ஷாய நிபந்தாய ஆஸுரீ மதா
   மாஶுச, ஸம்பதம் தைவீம் அபிஜாத: அஸி பாண்டவ.

தைவீ ஸம்பத் - தைவ ஸம்பத்தானது, விமோக்ஷாய - ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபடுவதற்கும், ஆஸுரீ-அஸுரஸம்பத்தானது; நிபந்தாய-ஸம்ஸாரத்தில் பந்தப்படுத்துவதற்கும் (என்று), மதா-கருதப்பட்டிருக்கின்றன. ஹே பாண்டவ!, மாஶுச: - வருந்தாதே, தைவீம் ஸம்பதம் - தெய்வத்தன்மையை, அபிஜாத: அஸி - அடையப் பிறந்தவனாகவே யிருக்கிறாய்.

द्वौ भूतसर्गौ लोकेऽस्मिन्दैव आसुरएव च ।
दैवो विस्तरशः प्रोक्त आसुरं पार्थ मे शृणु ॥ ६ ॥

6, த்³வௌ பூ⁴தஸர்கௌ³ லோகே அஸ்மிந் தை³வ: ஆஸுர: ஏவச
தை³வ: விஸ்தரஶ: ப்ரோக்த: ஆஸுரம் பார்த² மே ஶ்ருணு.

அஸ்மிந்லோகே-இவ்வுலகத்தில், பூ⁴தஸர்கௌ³-மனித சிருஷ்டிகள், தை³வ: ஆஸுர: ஏவ ச தைவமென்றும் ஆஸுரமென்றும், த்³வௌ- இரண்டுவகைப்படும் தை³வ: விஸ்தரஶ: ப்ரோக்த: - தைவசிருஷ்டியானது விரிவாகச் சொல்லப்பட்டது. ஹே பார்த்த, ஆஸுரம் மே ஶ்ருணு - ஆஸுரசிருஷ்டியை என்னிடமிருந்து கேட்பாயாக.

प्रवृत्तिं च निवृत्तिं च जना न विदुरासुराः ।
न शौचं नापि चाचारो न सत्यं तेषु विद्यते ॥ ७ ॥

7. ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச ஜநா: ந விது³: ஆஸுரா:
ந ஶௌசம் ந அபி ச ஆசார: ந ஸத்யம் தேஷு வித்³யதே.

ஆஸுரா: ஜநா:-அஸுரத்தன்மையையுடைய ஜனங்கள், ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச - (தர்மத்தில்) ப்ரவேசிப்பதையும், (அதர்மத்தினின்று) நீங்குதலையும், ந விது³: - அறியமாட்டார்கள். தேஷு - அவர்களிடத்தில், ஶௌசம் ந வித்³யதே - சுத்தம் என்பது கிடையாது. ஆசார: அபி ந - ஆசாரமும் கிடையாது. ஸத்யம் ச ந - உண்மை யென்பதும் கிடையாது.

असत्यमप्रतिष्ठं ते जगदाहुरनीश्वरम् ।
अपरस्परसम्भूतं किमन्यत्कामहैतुकम् ॥ ८ ॥

8. அஸத்யம் அப்ரதிஷ்டம் தே ஜக³த் ஆஹு: அநீஶ்வரம்
அபரஸ்பர ஸம்பூ⁴தம் கிம் அந்யத் காமஹைதுகம்,

ஜகத் - இவ்வுலகமானது, அஸத்யம்-கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது அல்ல என்றும், அப்ரதிஷ்டம் - கடவுளிடத்தில் நிலைவிருக்கவில்லை யென்றும், அநீஶ்வரம் - தன்னையாளும் கடவுளை

யுடையதல்ல என்றும் அதாவது ஈஶ்வரனேயில்லை யென்றும், அபரஸ்பரஸம்பூதம் - ஸ்திரீ புருஷ ஸம்பந்தத்தினலுண்டானது என்றும், காமஹைதுகம்-காமத்தையே காரணமாக உடையதென்றும், அந்யத் கிம் - வேறு என்ன காரணமிருக்கிறதென்றும், தே - அவர்கள், ஆஹு: - சொல்லுகின்றார்கள்.

एतां दृष्टिमवष्टभ्य नष्टात्मानोऽल्पबुद्धयः ।
प्रभवन्त्युग्रकर्माणः क्षयाय जगतोऽहिताः ॥ ९ ॥

9. ஏதாம் த்³ருஷ்டிம் அவஷ்டப்⁴ய நஷ்டாத்மாந: அல்பபு³த்³த⁴ய:
ப்ரப⁴வந்தி உக்³ரகர்மாண: க்ஷயாய ஜக³த: அஹிதா:.

ஏதாம் த்ருஷ்டிம் அவஷ்டப்ய - இந்தக் கொள்கையைப் பின்பற்றி, நஷ்டாத்மாந: அல்பபுத்தய:-கெட்டுப்போன ஆத்மாக்களை அற்பபுத்தியுள்ளவர்கள், உக்ரகர்மாண: அஹிதா:-கொடுந்தொழில்களையுடைய சத்துருக்களாய், ஜகத: க்ஷயாய - உலகத்தைக் கெடுப்பதற்கு, ப்ரபவந்தி - உண்டாகிறார்கள்.

काममाश्रित्य दुष्पूरं दम्भमानमदान्विताः ।
मोहाद्गृहीत्वाऽसद्ग्राहान्प्रवर्तन्तेऽशुचिव्रताः ॥ १० ॥

10. காமம் ஆஶ்ரித்ய து³ஷ்பூரம் த³ம்ப⁴மாநமதா³ந்விதா:
மோஹாத் க்³ருஹீத்வா அஸத்³க்³ராஹாந் ப்ரவர்த்தந்தே அஶு-
[சிவ்ரதா:

தே - அவர்கள், துஷ்பூரம் காமம் ஆஶ்ரித்ய - நிரம்பமுடியாத (திருப்தி செய்ய முடியாத) அவாவினை ஆஶ்ரயித்து, தம்பமாநமதாந்விதா: - டம்பம், கர்வம், மதம் இவற்றுடன் கூடினவர்களாய், மோஹாத் - அஜ்ஞாந மயக்கத்தினல், அஸத்க்ராஹாந் க்ரஹீத்வா - கெட்ட கொள்கைகளைப் பின்பற்றி அனுஸரித்துக்கொண்டு, அஶுசிவ்ரதா: - அசுத்தமான விருதங்களை அனுஷ்டித்துக்கொண்டு, ப்ரவர்த்தந்தே - உலகில் தலைப்படுகின்றார்கள்.

चिन्तामपरिमेयां च प्रलयान्तामुपाश्रिताः ।
कामोपभोगपरमा एतावदिति निश्चिताः ॥ ११ ॥

आशापाशशतैर्बद्धाः कामक्रोधपरायणाः ।
ईहन्ते कामभोगार्थमन्यायेनार्थसंचयान् ॥ १२ ॥

11. சிந்தாம் அபரிமேயாம் ச ப்ரளயாந்தாம் உபாச்ரிதா:
காமோப போகபரமா: ஏதாவத் இதி நிச்சிதா:.

12. ஆசாபாச சதைர்பத்தா: காமக்ரோதபராயணா:
ஈஹந்தே காம போகார்த்தம் அந்யாயேந அர்த்தஸஞ்சயாந்.

தே - அவர்கள், அபரிமேயாம் - அளவிடக்கூடாததும், ப்ரள யாந்தாம் - மரணத்தையே முடிவாக உடையதுமான, சிந்தாம் உபாச்ரிதா: - கவலையை அடைந்தவர்களாயும்; காமோபபோக பரமா: - உலக இன்பங்களை அனுபவிப்பதையே மேலான செல்வ மாகக் கொண்டவராயும், ஏதாவத் இதி நிச்சிதா: ச - இவ்வளவு தான் என்று நிச்சயித்தவர்களாயும் (உலக சுகத்துக்குமேல் வேறு சுகமில்லை என்பவர்) ஆசாபாசசதை:பத்தா: - ஆசையாகிய பலகயிறுகளால் கட்டப்பட்டவர்களாயும், காமக்ரோதபராயணா:- ஆசை, கோபம் இவற்றையே அடைக்கலமாகக் கொண்டு, காம போகார்த்தம் - இன்பத்தை அனுபவிப்பதற்காக வேண்டி, அந்யா யேந - அநியாயத்தினால், அர்த்த ஸஞ்சயாந் - திரவியத் தொகு தியை, ஈஹந்தே - தேடுகின்றார்கள்.

इदमद्य मया लब्धमिमं प्राप्स्ये मनोरथम् ।
इदमस्तीदमपि मे भविष्यति पुनर्धनम् ॥ १३ ॥
असौ मया हतः शत्रुर्हनिष्ये चापरानपि ।
ईश्वरोऽहमहं भोगी सिद्धोऽहं बलवान्सुखी ॥ १४ ॥
आढ्योऽभिजनवानस्मि कोऽन्योऽस्ति सदृशो मया ।
यक्ष्ये दास्यामि मोदिष्य इत्यज्ञानविमोहिताः ॥ १५ ॥
अनेकचित्तविभ्रान्ता मोहजालसमावृताः ।
प्रसक्ताः कामभोगेषु पतन्ति नरकेऽशुचौ ॥ १६ ॥

13. இதம் அத்ய மயா லப்தம் இமம் ப்ராப்ஸ்யே மநோரதம்
இதம் அஸ்தி இதம் அபி மே பவிஷ்யதி புந: தநம்.

14. அஸௌ மயா ஹத: சத்ரு ஹநிஷ்யே ச அபராந் அபி
ஈச்வர: அஹம் அஹம் போகீ ஸித்த: அஹம் பலவாந் ஸுகீ.

15. ஆட்ய: அபிஜநவாந் அஸ்மி க: அந்ய: அஸ்தி ஸத்ருச: மயா
யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்யே இதி அஜ்ஞாந விமோஹிதா:.

16. அநேக சித்த விப்ராந்தா: மோஹஜால ஸமாவ்ருதா:
ப்ரஸக்தா: காம போகேஷு பதந்தி நரகே அசுசௌ.

இதம் அத்ய மயா லப்தம் - இந்தப்பொருள் இப்போது என்னாலேயே அடையப்பட்டது, இமம் மநோரதம் ப்ராப்ஸ்யே - இந்த என் மனவிருப்பத்தை அடைவேன், இதம் அஸ்தி - இது இருக்கிறது (பொருள்), இதம் தநம் அபி மே புந: பவிஷ்யதி - இந்தப் பொருளும் எனக்கு மேன்மேலும் உண்டாகும்; அஸௌ சத்ரு: மயா ஹத: - இந்தச் சத்துரு என்னாலே கொல்லப்பட்டான், அப ராந் அபி ஹநிஷ்யே ச - மற்ற விரோதிகளையும் (நான்) கொல்லு வேன், அஹம் ஈச்வர: - நான் (ஆளும்) ஈச்வரன், அஹம் போகீ - நான் சுகம் அனுபவிக்கின்றேன், அஹம் ஸித்த: - நான் எல்லாம் அமையப்பெற்று, பலாந் ஸுகீ ஆட்ய: அபிஜநவாந் அஸ்மி - பல வானையும் சுகமுள்ளவனையும் செல்வமுள்ளவனையும் உயர்குலத்தோ னையும் இருக்கிறேன்; மயா ஸத்ருச: அந்ய: க: அஸ்தி - எனக்கு ஒப்பாய் வேறு எவன் இருக்கிறான், யக்ஷ்யே - (நான்) யாகம் செய்வேன், தாஸ்யாமி - தானம் செய்வேன், மோதிஷ்யே - சந் தோஷமாயிருப்பேன், இதி - என்று இவ்விதமாய், அஜ்ஞாநவிமோ ஹிதா:-ஞானமின்றி மயக்கத்தை யடைந்தவர்களாய், அநேக சித்த விப்ராந்தா: - பலவித எண்ணங்களால் மோகத்தை யடைந்து, மோஹ ஜால ஸம் ஆவ்ருதா: - மோகவலையினால் நன்றாக மூடப் பட்டு, காமபோகேஷு ப்ரஸக்தா: - உலக இன்பங்களில் அழுந்தி யிருக்கின்ற, தே - அவர்கள், அசுசௌ நரகே பதந்தி - வெறுக் கத் தகுந்த நரகத்தில் விழுகின்றனர்.

आत्मसम्भाविताः स्तब्धा धनमानमदान्विताः ।
यजन्ते नामयज्ञैस्ते दम्भेनाविधिपूर्वकम् ॥ १७ ॥

17. ஆத்மஸம்பாவிதா: ஸ்தப்தா: தநமாந மதாந்விதா:
யஜந்தே நாமயஜ்ஞை: தே தம்பேந அவிதிபூர்வகம்.

ஆத்மஸம்பாவிதா: - (மேற் சொன்ன அவர்கள்) தம்மைத் தாமே மதிக்கின்றவர்களாய் (புகழ்ந்துகொண்டு), ஸ்தப்தா: - வணக்கமின்றி, தநமாந மதாந்விதா: - பொருளினாலுண்டாகும் கர்வம், மதம் இவற்றுடன், தம்பேந - டம்பத்துடன், அவிதி பூர்வகம் நாமயஜ்ஞை: - விதிப்படியின்றி பெயருக்கு மாத்திரமான யஜ்ஞங்களினால், யஜந்தே - யாகம் செய்கிறார்கள்.

अहङ्कारं बलं दर्पं कामं क्रोधं च संश्रिताः ।
मामात्मपरदेहेषु प्रद्विषन्तोऽभ्यसूयकाः ॥ १८ ॥
तानहं द्विषतः क्रूरान्संसारेषुनराधमान् ।
क्षिपाम्यजस्रमशुभानासुरीष्वेव योनिषु ॥ १९ ॥

18. அஹங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் ச ஸம்ச்ரிதா:
மாம் ஆத்மபரதேஹேஷு ப்ரத்விஷந்த: அப்யஸூயகா:.

19. தாந் அஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்
க்ஷிபாமி அஜஸ்ரம் அசுபாந் ஆஸுரீஷு ஏவ யோநிஷு.

அஹங்காரம் - (அவர்கள்) அகங்காரத்தையும், பலம் - வலிமையையும், தர்பம் - இறுமாப்பையும், காமம் - ஆசையையும், க்ரோதஞ்ச - கோபத்தையும், ஸம்ச்ரிதா: - ஆசிரயித்தவர்கள்; ஆத்ம பரதேஹேஷு மாம் - தம்முடையவும் பிறருடையவும் தேகங்களிலுள்ள என்னை, ப்ரத்விஷந்த: பகைக்கின்றவர்கள், அப்யஸூயகா: - அவதூறு சொல்லுகின்றவர், த்விஷத: - துவேஷமுடையவர்கள், க்ரூராந் அசுபாந் நராதமாந் தாந் - குரூரபுத்தியும், அசுத்தமும் உள்ள மனிதரில் கடையோருமான அவர்களை, ஸம்ஸாரேஷு - ஸம்ஸாரங்களில், ஆஸுரீஷு யோநிஷு ஏவ - அஸுரயோநிகளிலேயே, அஜஸ்ரம் - எப்போதும், அஹம் க்ஷிபாமி - நான் எறிகின்றேன்.

आसुरीं योनिमापन्ना मूढा जन्मनि जन्मनि ।
मामप्राप्यैव कौन्तेय ततो यान्त्यधमां गतिम् ॥ २० ॥

20. ஆஸுரீம் யோநிம் ஆபந்நா: மூடா: ஜந்மநி ஜந்மநி
மாம் அப்ராப்யைவ கௌந்தேய தத: யாந்தி அதமாம் கதிம்.

ஹே கௌந்தேய, ஆஸுரீம் யோநிம் ஆபந்நா: - அசுரப் பிறவியை அடைந்தவர்கள், ஜந்மநி ஜந்மநி மூடா:-ஜன்மந்தோறும் மூடர்களாய், மாம் அப்ராப்ய ஏவ - என்னை அடையாமலே, தத: அதமாம் கதிம் - அதைக்காட்டிலும் கீழான கதியை, யாந்தி - அடைகிறார்கள்.

त्रिविधं नरकस्येदं द्वारं नाशनमात्मनः ।
कामः क्रोधस्तथा लोभस्तस्मादेतत्त्रयं त्यजेत् ॥२१॥

21. த்ரிவிதம் நரகஸ்ய இதம் த்வாரம் நாசநம் ஆத்மந:
காம: க்ரோத: ததா லோப: தஸ்மாத் ஏதத் த்ரயம் த்யஜேத்.

காம: க்ரோத: ததா லோப: - ஆசை, கோபம் அப்படியே லோபம் (பொருளில் மேன்மேலும் இச்சை), த்ரிவிதம் இதம் நரகஸ்ய த்வாரம் - மூன்றுவிதமான இவை நரகத்துக்கு வாயில், ஆத்மந: நாசநம் - ஆத்மாவைக் கெடுத்துவிடுகிறது. தஸ்மாத் - ஆதலின், ஏதத் த்ரயம் த்யஜேத் - இம்மூன்றையும் விட்டுவிட வேண்டும்.

एतैर्विमुक्तः कौन्तेय तमोद्वारैस्त्रिभिर्नरः ।
आचरत्यात्मनः श्रेयस्ततो याति परां गतिम् ॥ २२ ॥

22. ஏதை: விமுக்த: கௌந்தேய தமோத்வாரை: த்ரிபி: நர:
ஆசரதி ஆத்மந: ச்ரேய: தத: யாதி பராம் கதிம்.

ஹே கௌந்தேய!, தமோத்வாரை: ஏதை: த்ரிபி: - நரகவாயில்களான இம்மூன்றிலிருந்தும், விமுக்த: நர: - விடுபட்ட மனிதன், ஆத்மந: ச்ரேய: ஆசரதி - தனக்கு நன்மையைச் செய்துகொள்ளுகிறான். தத: பராம் கதிம் யாதி-அதனால் உயர்ந்த கதியை அடைகிறான்.

य: शास्त्रविधिमुत्सृज्य वर्तते कामकारतः ।
न स सिद्धिमवाप्नोति न सुखं न परां गतिम् ॥ २३ ॥

23. ய: ஶாஸ்த்ரவிதிம் உத்ஸ்ருஜ்ய வர்ததே காமகாரத:
ந ஸ: ஸித்திம் அவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம்.

ய: - எவன், ஶாஸ்த்ரவிதிம் உத்ஸ்ருஜ்ய - வேதத்தில் சொல்லப்பட்ட ஒழுங்கை விட்டு, காமகாரத: - ஆசையினால் தூண்டப்பட்டு, வர்ததே - நடக்கின்றானோ, ஸ: - அவன், ஸித்திம் ந அவாப்நோதி - ஸித்தியை அடைகிறதில்லை, ஸுகம் ந - இன்பத்தைப் பெறுவதில்லை, பராம் கதிம் ந - மேலான மோக்ஷகதியை அடைகிறதில்லை.

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।
ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥ २४ ॥

24. தஸ்மாத் ஶாஸ்த்ரம் ப்ரமாணம் தே
கார்யா கார்ய வ்யவஸ்திதௌ
ஜ்ஞாத்வா ஶாஸ்த்ரவிதாநோக்தம்
கர்மகர்தும் இஹ அர்ஹஸி.

தஸ்மாத் - ஆகலால், கார்ய அகார்ய வ்யவஸ்திதௌ - செய்யத்தகுந்தது செய்யத்தகாதது இவ்விரண்டையும் நிர்ணயிப்பதில், தே - உனக்கு, ஶாஸ்த்ரம் ப்ரமாணம் - சாஸ்திரமே பிரமாணமாயிருக்கின்றது. ஶாஸ்த்ரவிதாநோக்தம் கர்ம - சாஸ்திரவிதியினால் சொல்லப்பட்ட கர்மத்தை, ஜ்ஞாத்வா - அறிந்து, இஹ - இவ்வுலகில், கர்தும் அர்ஹஸி - செய்வதற்கு அருகனாகின்றாய்.

इति श्रीमद्भगवद्गीता० दैवासुरसम्पद्विभागयोगो नाम षोडशोऽध्यायः

அத்தியாயம் 17. ஶ்லோகம் 28.

ஶ்ரத்தாத்ரய விபாகயோகம்.

अर्जुन उवाच—

ये शास्त्रविधिमुत्सृज्य यजन्ते श्रद्धयाऽन्विताः ।
तेषां निष्ठा तु का कृष्ण सत्त्वमाहो रजस्तमः ॥१॥

1. யே ஶாஸ்த்ரவிதிம் உத்ஸ்ருஜ்ய யஜந்தே ஶ்ரத்தயா அந்விதா:
தேஷாம் நிஷ்டா து கா க்ருஷ்ண ஸத்வம் ஆஹோ ரஜ: தம:.

அர்ஜுனன் வினா—

ஹே கிருஷ்ண !, யே-எவர்கள், ஶாஸ்த்ரவிதிம் உத்ஸ்ருஜ்ய - சாஸ்திரவிதியைவிட்டு, ஶ்ரத்தயா அந்விதா:- நம்பிக்கையுடன் கூடினவர்களாய், யஜந்தே - (ஈஶ்வரனை) பூஜிக்கின்றார்களோ, தேஷாம் நிஷ்டா து கா ? - அவர்களது நிலைமை என்ன ?, ஸத்வம் ஆஹோ ரஜ: தம: - ஸத்வமா அல்லது ரஜஸா (அல்லது) தமஸா ?

श्रीभगवानुवाच—

त्रिविधा भवति श्रद्धा देहिनां सा स्वभावजा ।
सात्त्विकी राजसी चैव तामसी चेति तां शृणु ॥ २ ॥

2. த்ரிவிதா பவதி ஶ்ரத்தா தேஹிநாம் ஸா ஸ்வபாவஜா
ஸாத்விகீ ராஜஸீ ச ஏவ தாமஸீ ச இதி தாம் ஶ்ருணு.

பகவான் விடை—

தேஹிநாம் - உடம்புடன் கூடினவர்களுக்கு, ஸ்வபாவஜா - இயல்பினால் உண்டான, ஸா ஶ்ரத்தா - அந்த ஶ்ரத்தையானது, ஸாத்விகீ ராஜஸி ச ஏவ தாமஸீ ச இதி - ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்று, த்ரிவிதா பவதி - மூன்று வகையாக இருக்கிறது. தாம் ஶ்ருணு - அவற்றைக்கேள்.

सत्त्वानुरूपा सर्वस्य श्रद्धा भवति भारत ।
श्रद्धामयोऽयं पुरुषो यो यच्छ्रद्धः स एव सः ॥ ३ ॥

3. ஸத்வாநுரூபா ஸர்வஸ்ய ஶ்ரத்தா பவதி பாரத
ஶ்ரத்தாமய: அயம் புருஷ: ய: யச்ச்ரத்த: ஸ: ஏவ ஸ:.

ஹே பாரத!, ஶ்ரத்தா - சிரத்தையானது, ஸர்வஸ்ய ஸத்வாநுரூபா பவதி - எல்லாப்பிராணிகளின் அவரவரது இயற்கைக்கு ஏற்றபடி இருக்கிறது, அயம் புருஷ: ஶ்ரத்தா மய: - இந்தப்புருஷனானவன் மிகுந்த ஶ்ரத்தையுடையவன். ய: யச்ச்ரத்தய:-எவன் எந்த சிரத்தையுடன் கூடினவனோ, ஸ: ஸ: ஏவ - அவன் அதற்கு ஏற்றவனே.

यजन्ते सात्त्विका देवान्यक्षरक्षांसि राजसाः ।
प्रेतान्भूतगणांश्चान्ये यजन्ते तामसा जनाः ॥ ४ ॥

4. யஜந்தே ஸாத்விகா: தேவாந் யக்ஷரக்ஷாம்ஸி ராஜஸா:
ப்ரேதாந் பூதகணாந் ச அந்யே யஜந்தே தாமஸா: ஜநா:.

ஸாத்விகா: தேவாந் - ஸத்வகுணமுடையவர்கள் தேவதைகளையும், ராஜஸா: யக்ஷரக்ஷாம்ஸி - ரஜோ குணமுடையோர் யக்ஷர்களையும் ராக்ஷஸர்களையும், யஜந்த - பூஜிக்கின்றார்கள். அந்யே தாமஸா: ஜநா: - தமோ குணத்தையுடைய மற்ற ஜனங்கள், ப்ரேதாந் பூதகணாம்ஶ்ச - பிரேதங்களையும் பூதகணங்களையும், யஜந்தே - பூஜிக்கின்றார்கள்.

अशास्त्रविहितं घोरं तप्यन्ते ये तपो जनाः ।
दम्भाहङ्कारसंयुक्ताः कामरागबलान्विताः॥ ५ ॥

5. அஶாஸ்த்ரவிஹிதம் கோரம் தப்யந்தே யே தப: ஜநா:
தம்பாஹங்கார ஸம்யுக்தா: காமராக பலாந்விதா:.

யே ஜநா: - எந்த ஜனங்கள், அஶாஸ்த்ரவிஹிதம் - சாஸ்திரங்களில் விதிக்கப்படாத, கோரம் தப: - கொடிய தவத்தை, தப்யந்தே - செய்கிறார்களோ, தே - அவர்கள், தம்பாஹங்கார ஸம்யுக்தா: - டம்பம், அகங்காரம் இவைகளுடன் கூடினவர்கள், காமராக பலாந்விதா: - காமம், ராகம் இந்தபலத்துடன் கூடினவர்கள்.

कर्शयन्तः शरीरस्थं भूतग्राममचेतसः ।
मां चैवान्तः शरीरस्थं तान्विद्ध्यासुरनिश्चयान् ॥ ६ ॥

6. கர்ஶயந்த: ஶரீரஸ்தம் பூதக்ராமம் அசேதஸ:
மாம் ச ஏவ அந்த: ஶரீரஸ்தம் தாந் வித்தி ஆஸுரநிஶ்சயாந்.

அசேதஸ: - (மேற்சொன்ன அவர்கள்). அவிவேகிகள், ஶரீரஸ்தம் பூதக்ராமம் - சரீரத்திலுள்ள எல்லா பூதக்கூட்டங்களையும், அந்த: ஶரீரஸ்தம் மாம் ச ஏவ - சரீரத்தினுள்ளேயே இருக்கும் என்னையும்கூட, கர்ஶயந்த: - மெலிந்துபோகச் செய்கின்றவர்கள், தாந்-அவர்களை, ஆஸுரநிஶ்சயாந் வித்தி - ஆசுர நிச்சயம் அல்லது உறுதியை யுடையவர்களாக அறிவாயாக.

आहारस्त्वपि सर्वस्य त्रिविधो भवति प्रियः ।
यज्ञस्तपस्तथा दानं तेषां भेदमिमं शृणु ॥ ७ ॥

7. ஆஹார: து அபி ஸர்வஸ்ய த்ரிவித: பவதி ப்ரிய:
யஜ்ஞ: தப: ததா தாநம் தேஷாம் பேதம் இமம் ஶ்ருணு.

ஸர்வஸ்ய து ப்ரிய: ஆஹார: அபி - எல்லோருக்கும் பிரியமான உணவும், த்ரிவித: பவதி - மூன்றுவிதமாயிருக்கிறது. யஜ்ஞ: தப: தாநம் ததா - யஜ்ஞமும் தபஸும் தானமும் அப்படியே (மும்மூன்றுவிதமானது). தேஷாம் - அவைகளின், இமம் பேதம் - இந்த வேற்றுமையை, ஶ்ருணு - கேட்பாயாக.

आयुः सत्त्वबलारोग्यसुखप्रीतिविवर्धनाः ।
रस्याः स्निग्धाः स्थिरा हृद्या आहाराः सात्त्विकप्रियाः॥८॥

8. ஆயு: ஸத்வ பல ஆரோக்ய ஸுக ப்ரீதி விவர்தநா:
ரஸ்யா: ஸ்நிக்தா: ஸ்திரா: ஹ்ருத்யா: ஆஹாரா: ஸாத்விகப்ரியா:.

ஆயுஸ்ஸத்வ பலாரோக்ய ஸுகப்ரீதி விவர்தநா: - ஆயுள், ஊக்கம், பலம், ஆரோக்கியம், இன்பம், சந்தோஷம் இவற்றை

விருத்தி செய்கிறவர்களாயும், ரஸ்யா: - ரசமுள்ளவைகளாயும், ஸ்நிக்தா: - பசையுள்ளவையாயும், ஸ்திரா: - தேகத்துக்கு ஸ்திரமான சத்தைக் கொடுப்பவையாயும், ஹ்ருத்யா:-மனதுக்கு இன்பமானவையாயும் உள்ள, ஆஹாரா: - உணவுகள், ஸாத்விகப்ரியா: - சத்வகுணமுள்ளவர்களுக்குப் பிரியமானவைகள்.

कट्वाम्ललवणात्युष्णतीक्ष्णरूक्षविदाहिनः ।
आहारा राजसस्येष्टा दुःखशोकामयप्रदाः ॥ ९ ॥

9. கட்வ ஆம்ல லவண அத்யுஷ்ண தீக்ஷ்ண ரூக்ஷ விதாஹிந:
ஆஹாரா: ராஜஸஸ்ய இஷ்டா: து:க்க சோகா மயப்ரதா:.

கட்வாம்ல லவணாத்யுஷ்ண தீக்ஷ்ண ரூக்ஷ விதாஹிந: - அதிக கசப்பு, புளிப்பு, உப்பு, சூடு, காரம், பசியின்மை (வறக்ஷி), தாபம் இவைகளை உண்டு பண்ணுவனவும், துக்க சோகா மயப்ரதா: - வருத்தம், கவலை, வியாதி இவற்றைத் தருவனவும் ஆன, ஆஹாரா:, உணவுகள், ராஜ ஸஸ்ய: இஷ்டா: - ரஜோகுணத்துடன் கூடினவர்களுக்கு இஷ்டமானவை.

यातयामं गतरसं पूति पर्युषितं च यत् ।
उच्छिष्टमपि चामेध्यं भोजनं तामसप्रियम् ॥ १० ॥

10. யாத யாமம் கதரஸம் பூதி பர்யுஷிதம் ச யத்
உச்சிஷ்டம் அபி ச அமேத்யம் போஜநம் தாமஸ ப்ரியம்.

யாத யாமம் - பாதி பக்குவமானதும், கதரஸம் - சாரமற்றுப் போனதும், பூதி - துர்நாற்றமுள்ளதும், பர்யுஷிதம் ச - பழையதாய்ப் போனதும் (அதிக நேரம் வைத்திருந்ததும்), உச்சிஷ்ட மபி - சாப்பிட்டு மீதியானதும், அமேத்யம் ச - அசுத்தமானது மாகிய, போஜனம் யத் - உணவு எதுவோ (அது), தாமஸப்ரியம் - தமோகுணமுள்ளவர்களுக்கு இஷ்டமானது.

अफलाकाङ्क्षिभिर्यज्ञो विधिदृष्टो य इज्यते ।
यष्टव्यमेवेति मनः समाधाय स सात्त्विकः ॥ ११ ॥

11. அபலா காம்க்ஷிபி: யஜ்ஞ: விதித்ருஷ்ட: ய: இஜ்யதே
யஷ்டவ்யம் ஏவ இதி மந: ஸமாதாய ஸ: ஸாத்விக:.

அபலா காம்க்ஷிபி: - பலனை விரும்பாமல், விதித்ரஷ்ட: - சாஸ்திரப்படி அறியப்பட்ட, ய: யஜ்ஞ: - எந்த யஜ்ஞமானது, யஷ்டவ்யம் ஏவ இதி - "யாகத்தைச் செய்ய வேண்டும்" என்று, மந: ஸமாதாய - மனதை உறுதி செய்து கொண்டு, இஜ்யதே - அனுஷ்டிக்கப்படுகிறதோ, ஸ: ஸாத்விக: - அந்த யஜ்ஞம் சாத்விகமானது.

अभिसन्धाय तु फलं दम्भार्थमपि चैव यत् ।
इज्यते भरतश्रेष्ठ तं यज्ञं विद्धि राजसम् ॥ १२ ॥

12. அபிஸந்தாய து பலம் தம்பார்தம் அபி ச ஏவ யத்
இஜ்யதே பரதச்ரேஷ்ட தம் யஜ்ஞம் வித்தி ராஜஸம்.

ஹே பரத ச்ரேஷ்ட!, பலம் அபி ஸந்தாயது - பலனை இச்சித்தாவது, தம்பார்த மபி ச ஏவ - டம்பத்திற்காகவாவது, யத் இஜ்யதே - எந்த யஜ்ஞம் செய்யப்படுகிறதோ, தம் யஜ்ஞம்- அந்த யஜ்ஞத்தை, ராஜஸம் வித்தி - ராஜஸம் என்று அறி.

विधिहीनमसृष्टान्नं मन्त्रहीनमदक्षिणम् ।
श्रद्धाविरहितं यज्ञं तामसं परिचक्षते ॥ १३ ॥

13. விதி ஹீநம் அஸ்ருஷ்டாந்நம் மந்த்ரஹீநம் அதக்ஷிணம்
ச்ரத்தா விரஹிதம் யஜ்ஞம் தாமஸம் பரிசக்ஷதே.

விதிஹீநம் - சாஸ்திர விதிப்படி யல்லாமலும், அஸ்ருஷ்டாந்நம் - அன்னதான மில்லாமலும், மந்த்ரஹீநம் - மந்திர மில்லாமலும், அதக்ஷிணம் - தக்ஷிணை யின்றியும், ச்ரத்தாவிரஹிதம்- ச்ரத்தை யில்லாமலும் (உள்ள), யஜ்ஞம் - யஜ்ஞத்தை, தாமஸம் பரிசக்ஷதே - தாமஸம் என்று சொல்லுகிறார்கள்.

देवद्विजगुरुप्राज्ञपूजनं शौचमार्जवम् ।
ब्रह्मचर्यमहिंसा च शारीरं तप उच्यते ॥ १४ ॥

14. தேவத்விஜ குரு ப்ராஜ்ஞ பூஜநம் ஶௌசம் ஆர்ஜவம்
ப்ரஹ்மசர்யம் அஹிம்ஸா ச ஶாரீரம் தப: உச்யதே.

தேவத்விஜ குரு ப்ராஜ்ஞ பூஜநம் - தேவர், ப்ராம்மணர், குரு, ஞானிகள் இவர்களைப் பூஜிப்பதும், ஶௌசம் - சரீர மனோ பரிசுத்தமும், ஆர்ஜவம் - நேர்மையும், ப்ரம்மசர்யம் - ப்ரம்மசர்ய விரதமும், அஹிம்ஸா ச - பிறருக்கு ஹிம்சை செய்யாமையும், சாரீரம் தப: உச்யதே - சரீரத்தினால் செய்யக்கூடிய தபசென்று சொல்லப்படுகிறது.

अनुद्वेगकरं वाक्यं सत्यं प्रियहितं च यत् ।
स्वाध्यायाभ्यसनं चैव वाङ्मयं तप उच्यते ॥ १५ ॥

15. அநுத்வேககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதம் ச யத்
ஸ்வாத்யாயாப்யஸநம் ச ஏவ வாங்மயம் தப: உச்யதே.

அநுத்வேக கரம் - பிறருக்கு மனக் கொதிப்பைச் செய்யாததும், ஸத்யம் - உண்மையானதும், ப்ரியஹிதம் ச - இனியதும் இதமுமான, வாக்யம் யத் - வார்த்தை எதுவோ (அதுவும்), ஸ்வாத்யாய அப்யஸநம் ச ஏவ - வேதம் ஓதுதலை அப்பியசித்தலும், வாங்மயம் தப: உச்யதே - வாக்கினால் செய்யக்கூடிய தபசென்று சொல்லப்படுகிறது.

मनः प्रसादः सौम्यत्वं मौनमात्मविनिग्रहः ।
भावसंशुद्धिरित्येतत्तपो मानसमुच्यते ॥ १६ ॥

16. மந: ப்ரஸாத: ஸௌம்யத்வம் மௌநம் ஆத்ம விநிக்ரஹ:
பாவ ஸம்ஶுத்தி: இதி ஏதத் தப: மாநஸம் உச்யதே.

மந: ப்ரஸாத: - மன அமைதி, ஸௌம்யத்வம் - (பிறருக்கு நன்மையே செய்யும்) நல்ல மனது, மௌநம் - ஈஶ்வரத்தியானம் செய்து கொண்டிருப்பது, ஆத்ம விநிக்ரஹ: - தன்னை அடக்கி பகவானிடத்தில் மனதை நிறுத்துதல், பாவஸம்ஶுத்தி: - (கவலையின்றி) ஹிருதயம் பரிசுத்தமாயிருப்பது, இதி ஏதத் - என்னும் இவைகள், மாநஸம் தப: உச்யதே - மனதினால் செய்யும் தபசென்று சொல்லப்படுகிறது.

श्रद्धया परया तप्तं तपस्तत्त्रिविधं नरैः ।
अफलाकाङ्क्षिभिर्युक्तैः सात्त्विकं परिचक्षते ॥ १७ ॥

17. ஶ்ரத்தயா பரயா தப்தம் தப: தத் த்ரிவிதம் நரை:
அபலாகாங்க்ஷிபி: யுக்தை: ஸாத்விகம் பரிசக்ஷதே.

அபலாகாங்க்ஷிபி: - பலனை வேண்டாமல், யுக்தை: நரை: - மனது ஒரு நிலைப்பட்ட மனிதர்களால், பரயா ஶ்ரத்தயா தப்தம் - மேலான நம்பிக்கையுடன் செய்யப்பட்ட, தத் த்ரிவிதம் தப: - அந்த (மேற் சொன்ன) மூன்றுவிதமான தபசை, ஸாத்விகம் பரிசக்ஷதே - சாத்துவிக மானதென்று சொல்லுகிறார்கள்.

सत्कारमानपूजार्थं तपो दम्भेन चैव यत् ।
क्रियते तदिह प्रोक्तं राजसं चलमध्रुवम् ॥ १८ ॥

18. ஸத்காரமாநபூஜார்த்தம் தப: தம்பேந ச ஏவ யத்
க்ரியதே தத் இஹ ப்ரோக்தம் ராஜஸம் சலம் அத்ருவம்.

ஸத்காரமாநபூஜார்தம் - (பிறருடைய) உபசாரம் மதிப்பு பூஜைக்காகவும், தம்பேந ச ஏவ - டம்பத்தினாலுமே, யத் தப: க்ரியதே - எந்த தபசானது செய்யப்படுகிறதோ, தத் ராஜஸம் ப்ரோக்தம் - அது ராஜஸமென்று சொல்லப்படுகிறது; சலம் - (அது) சஞ்சலமானது, அத்ருவம் - ஸ்திரமில்லாதது, இஹ - இவ்வுலகத்தில் பந்தப்பட்டிருப்பவர்களுக்குத் தகுந்தது.

मूढग्राहेणात्मनो यत्पीडया क्रियते तपः ।
परस्योत्सादनार्थं वा तत्तामसमुदाहृतम् ॥ १९ ॥

19. மூடக்ராஹேண ஆத்மந: யத் பீடயா க்ரியதே தப:
பரஸ்ய உத்ஸாதநார்த்தம் வா தத் தாமஸம் உதாஹ்ருதம்.

மூடக்ராஹேண - ஞானமில்லாத உறுதியுடனும் (முறட்டுப பிடிவாதம்), ஆத்மந: பீடயா - தன்னை ஹிம்ஸித்துக்கொண்டும், யத் தப: க்ரியதே - எந்த தபசானது செய்யப்படுகிறதோ, வா - அல்லது, பரஸ்ய உத்ஸாதநார்தம் - வேறு ஒருவனுடைய நாசத்தின்

பொருட்டு (செய்யப்படுகிறதோ), தத் - அந்த தபசானது, தாமஸம் உதாஹ்ருதம் - தாமஸமென்று சொல்லப்படுகிறது.

दातव्यमिति यद्दानं दीयतेऽनुपकारिणे ।
देशे काले च पात्रे च तद्दानं सात्त्विकं स्मृतम् ॥ २०॥

20. தாதவ்யம் இதி யத் தாநம் தீயதே அநுபகாரிணே
தேஶே காலே ச பாத்ரே ச தத் தாநம் ஸாத்விகம் ஸ்ம்ருதம்.

தாதவ்யம் இதி - கொடுக்கவேண்டும் என்னும் எண்ணத்துடன், தேஶே ச - புண்ணிய ஸ்தலத்தில், காலே ச - புண்ணியகாலத்தில், அநுபகாரிணே பாத்ரே - பிரதியுபகாரம் செய்வதற்கு சக்தியில்லாத யோக்கியதையுடன் கூடினவனுக்கு, யத் தாநம் தீயதே - எந்த தாநம் கொடுக்கப்படுகிறதோ, தத் தாநம் ஸாத்விகம் ஸ்ம்ருதம் - அந்த தானமானது ஸாத்துவிகமென்று நினைக்கப்படுகிறது.

यत्तु प्रत्युपकारार्थं फलमुद्दिश्य वा पुनः ।
दीयते च परिक्लिष्टं तद्दानं राजसं स्मृतम् ॥ २१ ॥

21. யத் து ப்ரத்யுபகாரார்த்தம் ஃபலம் உத்திஶ்ய வா புந:
தீயதே ச பரிக்லிஷ்டம் தத் ராஜஸம் உதாஹ்ருதம்.

ப்ரத்யுபகாரார்தம் - பிரதி உபகாரத்தை எதிர்பார்த்தும், பலம் உத்திஶ்ய வா - அல்லது பலனை உத்தேசித்தும், புந: பரிக்லிஷ்டம் ச - மேலும் மனவருத்தத்துடனும், யத் து தீயதே - மற்று எந்த தாநமானது கொடுக்கப்படுகிறதோ, தத் ராஜஸம் உதாஹ்ருதம் - அது ராஜஸம் என்று சொல்லப்படுகிறது.

अदेशकाले यद्दानमपात्रेभ्यश्च दीयते ।
असत्कृतमवज्ञातं तत्तामसमुदाहृतम् ॥ २२ ॥

22. அதேஶகாலே யத் தாநம் அபாத்ரேப்யஶ் ச தீயதே
அஸத்க்ருதம் அவஜ்ஞாதம் தத் தாமஸம் உதாஹ்ருதம்.

அதேஶகாலே - அசுத்தமான இடத்திலும் அகாலத்திலும், அபாத்ரேப்ய: - அயோக்கியர்களின் பொருட்டு, அஸத்க்ருதம் - பூஜை முதலிய உபசாரம் இல்லாமலும், அவஜ்ஞாதம் ச - அவமரியாதையுடனும், யத் தாநம் தீயதே - எந்த தானம் கொடுக்கப்படுகிறதோ, தத் தாமஸம் உதாஹ்ருதம் - அது தாமசமென்று சொல்லப்படுகிறது.

ॐ तत्सदिति निर्देशो ब्रह्मणस्त्रिविधः स्मृतः ।
ब्राह्मणास्तेन वेदाश्च यज्ञाश्च विहिताः पुरा ॥ २३ ॥

23. ஓம் தத் ஸத் இதி நிர்தேஶ: ப்ரஹ்மண: த்ரிவித: ஸ்ம்ருத:
ப்ராஹ்மணா: தேந வேதா: ச யஜ்ஞா: ச விஹிதா: புரா.

ஓம் தத் ஸத் இதி - "ஓம் தத் ஸத்" என்பது, ப்ரஹ்மண: - பரப்பிரம்மத்தின், த்ரிவித: நிர்தேஶ: - மூன்றுவிதமான பெயராக, ஸ்ம்ருத: - சொல்லப்பட்டிருக்கிறது. தேந - அந்தப் பெயர்களினால், ப்ராஹ்மணா: வேதா: ச யஜ்ஞா: ச - ப்ராம்மணர்களும், வேதங்களும், யஜ்ஞங்களும், புரா விஹிதா: - ஆதியில் சிருஷ்டிக்கப்பட்டார்கள்.

तस्मादोमित्युदाहृत्य यज्ञदानतपःक्रियाः ।
प्रवर्तन्ते विधानोक्ताः सततं ब्रह्मवादिनाम् ॥ २४ ॥

24. தஸ்மாத் ஓம் இதி உதாஹ்ருத்ய யஜ்ஞ தாந தப: க்ரியா:
ப்ரவர்தந்தே விதாநோக்தா: ஸததம் ப்ரஹ்மவாதிநாம்.

தஸ்மாத் - ("ஓம் தத் ஸத்" இம்மூன்றும் பரப்பிரம்மத்தின் பெயர்கள்) ஆதலால், ப்ரஹ்மவாதிநாம் - ப்ரம்மத்தை யறிந்தவர்களது, விதாநோக்தா: யஜ்ஞதாந தப:க்ரியா: - சாஸ்திரத்தில் சொல்லப்பட்டவிதமாய் செய்யப்படும் யஜ்ஞம் தானம் தபசு என்னும் கிரியைகள், ஓமிதி உதாஹ்ருத்ய - "ஓம்" என்று சொல்லி, ஸததம் ப்ரவர்த்தந்தே - எப்போதும் தொடங்கப்படுகின்றன.

तदित्यनभिसन्धाय फलं यज्ञतपःक्रियाः ।
दानक्रियाश्च विविधाः क्रियन्ते मोक्षकाङ्क्षिभिः ॥२५॥

25. தத் இதி அநபிஸந்தாய பலம் யஜ்ஞதப: கிரியா:
தாநக்ரியா: ச விவிதா: க்ரியந்தே மோக்ஷகாங்க்ஷிபி:.

மோக்ஷகாங்க்ஷிபி: - முக்தியைத் தேடுவோர்களால், பலம் அநபிஸந்தாய - பயனை எதிர்நோக்காமல், யஜ்ஞ தப:க்ரியா: - யக்ஞம் தபஸ் (முதலான) கர்மங்களும், விவிதா: தாநக்ரியா: ச - பலவிதமான கர்மங்களும், தத் இதி க்ரியந்தே - "தத்" என்று உச்சரித்து செய்யப்படுகின்றன.

सद्भावे साधुभावे च सदित्येतत्प्रयुज्यते ।
प्रशस्ते कर्मणि तथा सच्छब्दः पार्थ युज्यते ॥ २६ ॥

26 ஸத்பாவே ஸாதுபாவே ச ஸத் இதி ஏதத் ப்ரயுஜ்யதே
ப்ரஶஸ்தே கர்மணி ததா ஸச்சப்த: பார்த யுஜ்யதே.

ஹே பார்த்த!, ஸத் இதி ஏதத் - ஸத் என்னும் இந்தப்பதமானது, ஸத்பாவே - (அழிவின்றி எப்போதும்) உள்ளது என்னும் கருத்திலும், ஸாது பாவே ச - நல்லதன்மை என்னும் கருத்திலும், ப்ரயுஜ்யதே - உபயோகிக்கப்படுகின்றது ; ததா - அப்படியே, ப்ரஶஸ்தே கர்மணி - மங்களகரமான காரியங்களிலும், ஸத் ஶப்த: - "ஸத்" என்னும் சப்தமானது, யுஜ்யதே - பிரயோகிக்கப்படுகிறது.

यज्ञे तपसि दाने च स्थितिः सदिति चोच्यते ।
कर्म चैव तदर्थीयं सदित्येवाभिधीयते ॥ २७ ॥

27. யஜ்ஞே தபஸி தாநே ச ஸ்திதி: ஸத் இதி ச உச்யதே
கர்ம ச ஏவ ததர்தீயம் ஸத் இதி ஏவ அபிதீயதே.

யஜ்ஞே - யஜ்ஞத்திலும், தபஸி - தபஸிலும், தாநே ச - தாநத்திலும், ஸ்திதி: - நிலைத்திருப்பது, ஸத் இதி உச்யதே - "ஸத்" என்று சொல்லப்படுகிறது. ததர்தீயம் கர்ம ச ஏவ - யக்ஞ தாந தபசுகளுக்கும் அனுகூலமான கர்மங்களும்கூட (கோவில்கட்டுதல், நந்தவனம் வைத்தல் முதலியன), ஸத் இதி ஏவ அபிதீயதே - "ஸத்" என்றே சொல்லப்படுகிறது.

अश्रद्धया हुतं दत्तं तपस्तप्तं कृतं च यत् ।
असदित्युच्यते पार्थ न च तत्प्रेत्य नो इह ॥ २८ ॥

28. அஶ்ரத்தயா ஹுதம் தத்தம் தப: தப்தம் க்ருதம் ச யத்
அஸத் இதி உச்யதே பார்த ந ச தத் ப்ரேத்ய நோ இஹ.

ஹே பார்த்த!, அஶ்ரத்தயா ஹுதம் - சிரத்தையில்லாமல் செய்த ஹோமமும், தத்தம் - தானமும், தப்தம் தப: - செய்யப்பட்ட தபசும், க்ருதம் - (மற்ற) கர்மமும், யத் - எதுவோ (அதுவும்) அஸத் இதி உச்யதே - அஸத்தென்று சொல்லப்படுகிறது. தத் - அது, ப்ரேத்ய ந - மறுமைக்கும் ஸாதனமில்லை, இஹ ச ந- இம்மைக்கும் இல்லை.

इति श्रीमद्भगवद्गीता० श्रद्धात्रयविभागयोगो नाम सप्तदशोऽध्यायः ।

ஸந்யாஸ யோகம்.

अर्जुन उवाच—

संन्यासस्य महाबाहो तत्त्वमिच्छामि वेदितुम् ।
त्यागस्य च हृषीकेश पृथक्केशिनिषूदन ॥ १ ॥

1. ஸந்யாஸஸ்ய மஹாபாஹோ தத்வம் இச்சாமி வேதிதும்
த்யாகஸ்ய ச ஹ்ருஷீகேஶ ப்ருதக் கேஶிநிஷூதந.

அர்ஜுனன் வினா—

ஹே மஹாபாஹோ !, ஹே ஹ்ருஷீகேஶ !, ஹே கேஶிநிஷூதந !, ஸந்யாஸஸ்ய-சந்நியாஸத்தினுடையவும், த்யாகஸ்ய ச - தியாகத்தினுடையவும், தத்வம் - உண்மையை, ப்ருதக் வேதிதும் - தனித்தனியாய் (விவரமாய்) தெரிந்துகொள்ள, இச்சாமி - இச்சிக்கின்றேன்.

श्रीभगवानुवाच—

काम्यानां कर्मणां न्यासं संन्यासं कवयो विदुः ।
सर्वकर्मफलत्यागं प्राहुस्त्यागं विचक्षणाः ॥ २ ॥

2 காம்யாநாம் கர்மணாம் ந்யாஸம் ஸந்யாஸம் கவய: விது:
ஸர்வகர்மபலத்யாகம் ப்ராஹு: த்யாகம் விசக்ஷணா:.

பகவான் விடை—

கவய: - பண்டிதர்கள், காம்யாநாம் கர்மணாம் ந்யாஸம் - காம்ய கர்மங்களை விட்டுவிடுதலை, ஸந்யாஸம் - ஸந்நியாஸமென்று, விது: - அறிகிறார்கள். விசக்ஷணா: - வித்வான்கள், ஸர்வகர்மபலத்யாகம் - எல்லாக் கர்மங்களின் பலனை விட்டுவிடுவதை, த்யாகம் - தியாகமென்று, ப்ராஹு: - சொல்லுகிறார்கள்.

त्याज्यं दोषवदित्येके कर्म प्राहुर्मनीषिणः ।
यज्ञदानतपःकर्म न त्याज्यमिति चापरे ॥ ३ ॥

3: த்யாஜ்யம் தோஷவத் இதி ஏகே கர்ம ப்ராஹு: மநீஷிண:
யஜ்ஞதாநதப:கர்ம ந த்யாஜ்யம் இதி ச அபரே.

கர்ம தோஷவத்-கர்மமே கெடுதலைச் செய்யக்கூடியது, த்யாஜ்யம் (ஆகலால் கர்மம்) விடத்தகுந்தது, இதி ஏகே மநீஷிண: - என்று ஒரு சாரார் அறிவுடையோர்களும், அபரே - மற்றொரு சாரார், யஜ்ஞதாநதப:கர்ம - யஜ்ஞம், தாநம், தபஸ் முதலான கர்மங்கள், ந த்யாஜ்யம் இதி ச - விடத்தக்கதல்ல என்றும், ப்ராஹு: - சொல்லுகின்றார்கள்.

निश्चयं शृणु मे तत्र त्यागे भरतसत्तम ।
त्यागो हि पुरुषव्याघ्र त्रिविधः सम्प्रकीर्तितः ॥ ४ ॥

4. நிஶ்சயம் ஶ்ருணு மே தத்ர த்யாகே பரதஸத்தம
த்யாக: ஹி புருஷவ்யாக்ர த்ரிவித: ஸம்ப்ரகீர்த்தித:.

ஹே பரதஸத்தம !, தத்ர த்யாகே - அந்த தியாகத்தைப் பற்றி, மே நிஶ்சயம் ஶ்ருணு - என்னுடைய நிச்சயத்தைக் கேட்பாயாக. ஹே புருஷவ்யாக்ர!, த்யாக: - தியாகமானது, த்ரிவித: ஹி - மூன்று விதமாகவே, ஸம்ப்ரகீர்த்தித: - சொல்லப்பட்டிருக்கிறது.

यज्ञदानतपःकर्म न त्याज्यं कार्यमेव तत् ।
यज्ञो दानं तपश्चैव पावनानि मनीषिणाम् ॥ ५ ॥

5. யஜ்ஞதாநதப: கர்ம ந த்யாஜ்யம் கார்யம் ஏவ தத்
யஜ்ஞ: தாநம் தப: ச ஏவ பாவநாநி மநீஷிணாம்.

யஜ்ஞதாநதப: கர்ம - யக்ஞம், தாநம், தபம் முதலான கர்மங்கள், ந த்யாஜ்யம் - விடத்தகுந்ததல்ல. தத் கார்யமேவ - அவற்றைச் செய்யவே வேண்டும். யஜ்ஞ தாந தபஶ்சைவ - யஜ்ஞம், தானம், தபஸ் இவைகளே, மநீஷிணாம் - விவேகிகளுக்கு, பாவநாநி - மனத்தூய்மையை யுண்டாக்குகின்றன.

एतान्यपि तु कर्माणि सङ्गं त्यक्त्वा फलानि च ।
कर्तव्यानीति मे पार्थ निश्चितं मतमुत्तमम् ॥ ६ ॥

6. ஏதாநி அபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா ப²லாநி ச
கர்தவ்யாநி இதி மே பார்த² நிஶ்சிதம் மதம் உத்தமம்.

ஹே பார்த்த, து-ஆனால், ஏதாநி அபி கர்மாணி - இந்தக் கர்மங்களும்கூட (யஜ்ஞம், தாநம், தபம்), ஸங்கம் பலாநி ச த்யக்த்வா - (நாம் செய்கிறோம் என்னும்) பற்றையும் பலன்களையும் (பலாபேக்ஷையையும்) விட்டு, கர்தவ்யாநி - செய்யவேண்டும், இதி மே நிஶ்சிதம் உத்தமம் மதம் - என்பது எனது நிச்சயமான உயர்ந்த கொள்கை.

नियतस्य तु संन्यासः कर्मणो नोपपद्यते ।
मोहात्तस्य परित्यागस्तामसः परिकीर्तितः ॥ ७ ॥

7. நியதஸ்ய து ஸந்யாஸ: கர்மண: ந உபபத்யதே
மோஹாத் தஸ்ய பரித்யாக: தாமஸ: பரிகீர்த்தித:.

து - ஆனால், நியதஸ்ய கர்மண: ஸந்யாஸ:-நித்திய கர்மத்தை விடுதல், ந உபபத்யதே - உசிதமல்ல. மோஹாத் தஸ்ய பரித்யாக:- மோஹத்தினால் (அவிவேகம்) அதை விட்டுவிடுதல், தாமஸ: பரிகீர்த்தித: - தாமஸ தியாகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

दुःखमित्येव यत्कर्म कायक्लेशभयात्त्यजेत् ।
स कृत्वा राजसं त्यागं नैव त्यागफलं लभेत् ॥ ८ ॥

8. து:க²ம் இதி ஏவ யத்கர்ம காயக்லேஶபயாத்த்யஜேத்
ஸ: க்ருத்வா ராஜஸம் த்யாகம் ந ஏவ த்யாகபலம் லபேத்

துக்கமித்யேவ - துன்பமென்று கருதி, காயக்லேஶபயாத் - சரீரப்பிரயாசை பயத்தினால், கர்மத்யஜேத் யத்-நித்திய கர்மத்தை விடுதல் என்பது எதுவோ (அந்த த்யாகம்), ராஜஸ: - ராஜஸ த்யாகம். ஸ: ராஜஸம் த்யாகம் க்ருத்வா - அந்த ராஜஸ த்யாகத்தைச் செய்து, த்யாக பலம் ந ஏவ லபேத் - துறவின் பலனை அடைகிறதேயில்லை.

कार्यमित्येव यत्कर्म नियतं क्रियतेऽर्जुन ।
सङ्गं त्यक्त्वा फलं चैव स त्यागः सात्त्विको मतः ॥ ९ ॥

9. கார்யம் இதி ஏவ யத்கர்ம நியதம் க்ரியதே அர்ஜுன
ஸங்கம் த்யக்த்வா ப²லம் ச ஏவ ஸ: த்யாக: ஸாத்விக: மத:.

ஹே அர்ஜுன!, ஸங்கம் பலம் ச ஏவ த்யக்த்வா - (கர்மத்தில்) பற்றையும், பலனில் இச்சையையும் விட்டு, கார்யமிதி ஏவ - (இது) செய்யப்படவேண்டியதே என்னும் (எண்ணத்துடன்), நியதம் கர்மம் க்ரியதே யத் - கடமையாக (ஒருவனுக்கு ஏற்பட்டுள்ள) கர்மமானது செய்யப்படுகிறது என்பது எதுவோ, ஸ: - அது, ஸாத்விக: த்யாக: மத: - சாத்துவிக தியாகமாக எண்ணப்படுகிறது.

न द्वेष्ट्यकुशलं कर्म कुशले नानुषज्जते ।
त्यागी सत्त्वसमाविष्टो मेधावी छिन्नसंशयः ॥ १० ॥

10. ந த்வேஷ்டி அகுஶலம் கர்ம குஶலே ந அநுஷஜ்ஜதே
த்யாகீ ஸத்வஸமாவிஷ்ட: மேதாவீ சி²ந்நஸம்ஶய:.

த்யாகீ - தியாகியாய் (கர்ம பலனைவிட்டு தான் செய்யும் தொழிலையே ஈஶ்வர அர்ப்பணமாகச் செய்பவன்), ஸத்வ ஸமாவிஷ்ட: - சத்துவ குணம் நிறைந்தவனாய், மேதாவீ - ஸ்திர புத்தியுடன் (ப்ரம்ம ஞானத்தில்) கூடினவனாய், சிந்நஸம்ஶய:-சந்தேகமற்றவனாயுமிருப்பவன், அகுஶலம் கர்ம நத்வேஷ்டி - துக்கமும் கஷ்டமுமான கர்மத்தை வெறுப்பதில்லை, குஶலே ந அநுஷஜ்ஜதே - நலமான கர்மத்தில் பற்றுக்கொள்வதுமில்லை.

न हि देहभृता शक्यं त्यक्तुं कर्माण्यशेषतः ।
यस्तु कर्मफलत्यागी स त्यागीत्यभिधीयते ॥ ११ ॥

11. ந ஹி தேஹப்⁴ருதா ஶக்யம் த்யக்தும் கர்மாணி அஶேஷத:
ய: து கர்மப²லத்யாகீ ஸ: த்யாகீ இதி அபி⁴தீ⁴யதே.

தேஹப்ருதா - தேகத்தைத் தரித்திருக்கும் ஆத்மாவுக்கு (அதாவது ஆத்மா தேகத்துடன் சேர்ந்து கட்டுப்பட்டிருக்கும்

வரைக்கும்), கர்மாணி - கர்மங்களை, அசேஷத: த்யக்தும் - மீதி யின்றி முழுவதும் விட்டுவிடுவதற்கு, ந ஹி சக்யம் - முடியவே மாட்டாது. து - ஆனால், ய: - எவன், கர்மபலத்யாகீ - கர்ம பலனில் இஷ்டத்தை விடுகிறானோ, ஸ: - அவன், „த்யாகீ இதி அபிதீயதே - தியாகி என்று சொல்லப்படுகிறான்.

अनिष्टमिष्टं मिश्रं च त्रिविधं कर्मणः फलम् ।
भवत्यत्यागिनां प्रेत्य न तु संन्यासिनां क्वचित् ॥ १२ ॥

12. அநிஷ்டம் இஷ்டம் மிச்ரம் ச த்ரிவிதம் கர்மண: பலம்
பவதி அத்யாகிநாம் ப்ரேத்ய ந து ஸந்யாஸிநாம் க்வசித்.

அநிஷ்டம் இஷ்டம் மிச்ரம் ச-துக்ககரமானது சுககரமானது இவ்விரண்டும் கலந்தது என்று, த்ரிவிதம் கர்மண: பலம் - மூன்று விதமான கர்மபலன், அத்யாகிநாம் - தியாகி யல்லாதவருக்கு (அதாவது கர்மபலனை அபேக்ஷித்து தொழில் செய்பவருக்கு), ப்ரேத்ய - சரீரம் நீங்கினபிறகு, பவதி-உண்டாகிறது. ஸந்நியாஸிநாம் து - ஆனால் பலாபேக்ஷையின்றி கர்மம் செய்யும் ஸந்நியாஸிகளுக்கு, க்வசித் ந - ஒருகாலத்திலும் (கர்மபலன்கள்) ஏற்படுவதில்லை.

पञ्चैतानि महाबाहो कारणानि निबोध मे ।
सांख्ये कृतान्ते प्रोक्तानि सिद्धये सर्वकर्मणाम् ॥ १३ ॥

13. பஞ்ச ஏதாநி மஹாபாஹோ காரணாநி நிபோத மே
ஸாங்க்யே க்ருதாந்தே ப்ரோக்தாநி ஸித்தயே ஸர்வகர்மணாம்.

ஹே மஹாபாஹோ !, க்ருதாந்தே ஸாங்க்யே ப்ரோக்தாநி-கர்மம் முடியப்பெறுவதான (கர்மம் நசிக்கச்செய்யும்) ஸாங்கியத்தில் (ப்ரம்மத்தின் உண்மையை விளக்கும் வேதாந்த சாஸ்திரத்தில்) கூறப்பட்டவையாய், ஸர்வகர்மணாம் ஸித்தயே-எல்லாத் தொழில்களும் நிறைவேறுவதற்கு ஆன, ஏதாநி பஞ்சகாரணாநி - இந்த 5 காரணங்களை, மே - என்னிடமிருந்து, நிபோத-தெரிந்துகொள்.

अधिष्ठानं तथा कर्ता करणं च पृथग्विधम् ।
विविधाश्च पृथक्चेष्टा दैवं चैवात्र पञ्चमम् ॥ १४ ॥

14. அதிஷ்டாநம் ததா கர்தா கரணம் ச ப்ருதக்விதம்
விவிதா: ச ப்ருதக்சேஷ்டா: தைவம் ச ஏவ அத்ர பஞ்சமம்.

அதிஷ்டாநம் - சரீரம், ததா கர்தா - அப்படியே ஜீவாத்மா, ப்ருதக்விதம் கரணம் ச - வெவ்வேறுவிதமான கண்வாய் முதலிய இந்திரியங்கள், ப்ருதக் விவிதா: சேஷ்டா: ச-வெவ்வேறான (அவைகளின்) பலவித செய்கைகள், அத்ர - இப்பொழுது சொன்ன இந்த எல்லாவற்றிலும் உள்ள, தைவம் ச ஏவ - (அந்தர்யாமியாயுள்ள) கடவுளே, பஞ்சமம் - ஐந்தாவது (காரணம்). (5 காரணம் - சரீரம், சரீரத்திலுள்ள ஜீவாத்மா, இந்திரியங்கள் 12, இவைகளின் செய்கைகள், இவற்றுக்கெல்லாம் தலைவரான கடவுள்).

शरीरवाङ्मनोभिर्यत्कर्म प्रारभते नरः ।
न्याय्यं वा विपरीतं वा पञ्चैते तस्य हेतवः ॥ १५ ॥

15. சரீரவாங்மனோபி: யத் கர்ம ப்ராரபதே நர:
ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்ச ஏதே தஸ்ய ஹேதவ:.

நர: - மனிதன், நியாயம் வா விபரீதம் வா - நியாயமானதும் அல்லது நியாயமல்லாததுமான (தர்மம் அல்லது அதர்மமான), யத் கர்ம - எந்தத்தொழிலை, சரீரவாங்மனோபி: ப்ராரபதே - மெய் மொழி மனதினால் ஆரம்பிக்கின்றானோ, தஸ்ய - அந்தத் தொழிலுக்கு, ஏதே பஞ்ச ஹேதவ: - (மேற்சொன்ன) இந்த ஐந்தும் காரணங்கள்.

तत्रैवं सति कर्तारमात्मानं केवलं तु यः ।
पश्यत्यकृतबुद्धित्वान्न स पश्यति दुर्मतिः ॥ १६ ॥

16. தத்ர ஏவம் ஸதி கர்தாரம் ஆத்மாநம் கேவலம் து ய:
பச்யதி அக்ருதபுத்தித்வாத் ந ஸ: பச்யதி துர்மதி:.

தத்ர ஏவம் ஸதி - அவை (கர்மவிஷயம்) இவ்வாறு இருக்க, து ய: - மற்று எவன், கேவலம் ஆத்மாநம்-பற்றற்ற பரிசுத்த ஆத்

மாவை, அக்ருத புத்தித்வாத் - அறிவு பரிபக்குவம் அடையாமையால், கர்தாரம் பஶ்யதி - கர்த்தாவாக பார்க்கின்றானோ (நினைக்கின்றானோ), ஸ: துர்மதி: - அந்த துர்புத்தியுள்ளவன், ந பஶ்யதி - உண்மையை அறியவில்லை.

यस्य नाहंकृतो भावो बुद्धिर्यस्य न लिप्यते ।
हत्वाऽपि स इमाँल्लोकान्न हन्ति न निबध्यते ॥ १७ ॥

17. யஸ்ய ந அஹங்க்ருத: பாவ: புத்தி: யஸ்ய ந லிப்யதே
ஹத்வா அபி ஸ: இமாந் லோகாந் ந ஹந்தி ந நிபத்யதே.

யஸ்ய அஹங்க்ருத: பாவ: ந - எவனுக்கு கர்த்தா நான் என்றும் அகங்கார எண்ணம் இல்லையோ, யஸ்ய புத்தி: ந லிப்யதே - எவனுடைய புத்தியானது விஷயங்களில் பற்றுக்கொள்வதில்லையோ, ஸ: - அவன், இமாந் லோகாந் ஹத்வாபி - இவ்வுலகத்திலுள்ள பிராணிகளைக் கொன்றபோதிலும், ந ஹந்தி - கொன்றவனல்ல, ந நிபத்யதே - (அவன் அதனால்) கட்டுப்படுவதுமில்லை.

ज्ञानं ज्ञेयं परिज्ञाता त्रिविधा कर्मचोदना ।
करणं कर्म कर्तेति त्रिविधः कर्मसंग्रहः ॥ १८ ॥

18. ஜ்ஞாநம் ஜ்ஞேயம் பரிஜ்ஞாதா த்ரிவிதா கர்மசோதநா
கரணம் கர்ம கர்தா இதி த்ரிவித: கர்மஸங்க்ரஹ:.

ஜ்ஞாநம் - அறிவு, ஜ்ஞேயம் - அறியப்படும்பொருள், பரிஜ்ஞாதா - அறிபவன் (என்று), கர்மசோதநா - கர்மத்தைச் செய்யும்படி தூண்டும் பொருள், த்ரிவிதா-மூவகைத்தானது. கரணம்- இந்திரியங்கள், கர்ம - செய்யப்படும் தொழில், கர்த்தா - செய்பவன், இதி - என்று, கர்மஸங்க்ரஹ: - கர்மத்தின் சுருக்கமானது, த்ரிவித: - மூன்றுவிதமானது.

ज्ञानं कर्म च कर्ता च त्रिधैव गुणभेदतः ।
प्रोच्यते गुणसंख्याने यथावच्छृणु तान्यपि ॥ १९ ॥

19. ஜ்ஞாநம் கர்ம ச கர்தா ச த்ரிதா ஏவ குணபேதத:
ப்ரோச்யதே குணஸங்க்யாநே யதாவத் ஶ்ருணு தாநி அபி.

ஜ்ஞாநம் கர்ம கர்தா ச - அறிவும் செயலும் செய்பவனும், குணஸங்க்யாநே-குணங்களின் பாகுபாட்டைக்கூறும் சாஸ்திரத்தில், குணபேதத: - சத்துவ ரஜோ தமோகுண பேதத்திற்கேற்ப, த்ரிதா ஏவ - மூன்றுவிதமாகவே, ப்ரோச்யதே - சொல்லப்பட்டிருக்கிறது. தாந்யபி-அவைகளையும், யதாவத்-உள்ளவாறு, ஶ்ருணு - கேட்பாயாக.

सर्वभूतेषु येनैकं भावमव्ययमीक्षते ।
अविभक्तं विभक्तेषु तज्ज्ञानं विद्धि सात्त्विकम् ॥ २० ॥

20. ஸர்வபூதேஷு யேந ஏகம் பாவம் அவ்யயம் ஈக்ஷதே
அவிபக்தம் விபக்தேஷு தத் ஜ்ஞாநம் வித்தி ஸாத்விகம்.

யேந - எந்த அறிவினால், பாவம் - ஆத்ம வஸ்துவை, ஸர்வபூதேஷு - எல்லாவஸ்துக்களிலும், ஏகம் - ஒன்றாயும், அவ்யயம் - குறைப்பில்லாததாயும், விபக்தேஷு அவிபக்தம் - வெவ்வேறாகக் காணப்படும் வஸ்துக்களில் இடைவிடாமல் தொடர்ந்திருப்பதாயும் (ஸூத்ரே மணிகணா இவ - ஒரு மணி மாலையில் பல மணிகளில் ஒன்றாகத் தொடர்ந்திருக்கும் நூல்போல்), ஈக்ஷதே - (கடவுளை) காண்கின்றானோ, தத் ஜ்ஞாநம்-அந்த ஞானத்தை, ஸாத்விகம் வித்தி - ஸாத்துவிக ஞானமென்று அறிவாயாக.

पृथक्त्वेन तु यज्ज्ञानं नानाभावान्पृथग्विधान् ।
वेत्ति सर्वेषु भूतेषु तज्ज्ञानं विद्धि राजसम् । २१ ॥

21. ப்ருதக்த்வேந து யத் ஜ்ஞாநம் நாநாபாவாந் ப்ருதக்விதாந்
வேத்தி ஸர்வேஷு பூதேஷு தத் ஜ்ஞாநம் வித்தி ராஜஸம்.

து யத் ஜ்ஞாநம் - மற்று எந்த அறிவானது, ஸர்வேஷு பூதேஷு - எல்லாவஸ்துக்களிலும், ப்ருதக்விதாந் - வெவ்வேறுவிதமாயுள்ள, நாநாபாவாந் - பல ஆத்மாக்களை, ப்ருதக்த்வேந- (கடவுளுடைய பல அம்சங்களாகிய ஒரே ரூபமென்பதை யறியாமல்) தனித்தனியாய் வேற்றுமையானவை யென்று, வேத்தி - அறிகிறதோ, தத் ஜ்ஞாநம் - அந்த ஞானத்தை, ராஜஸம் வித்தி - ராஜஸ ஞானம் என்பதாக அறிவாயாக.

यत्तु कृत्स्नवदेकस्मिन्कार्ये सक्तमहैतुकम् ।
अतत्त्वार्थवदल्पं च तत्तामसमुदाहृतम् ॥ २२ ॥

22. யத் து கருத்ஸ்நவத் ஏகஸ்மிந் கார்யே ஸக்தம் அஹைதுகம்
அதத்வார்த்தவத் அல்பம் ச தத் தாமஸம் உதாஹ்ருதம்.

யத் து-மற்று எந்த ஞானமானது, ஏகஸ்மிந் கார்யே - ஒரே காரியத்தின்மேல், க்ருத்ஸ்நவத் ஸக்தம் - அதுதான் முழுவதும் என்னும் எண்ணத்துடன்கூடினதாய் (எல்லாம் கடவுள் மயம் என்னும் விவேகமின்றி தனது குறுகிய எண்ணத்துக்கும் அறிவுக்கும் எது நம்பிக்கையா யிருக்கிறதோ அதுவேதான் சகலமும் என்னும் புத்தி), அஹைதுகம் - யுக்தியற்றதாய், அதத்வார்த்தவத் - பொய்யான விஷயத்தை யுடையதாயும், அல்பம் ச - அற்பமாயு முள்ளதோ, தத் - அந்த (ஞானம்), தாமஸம் உதாஹ்ருதம் - தாமஸ ஞானமென்று சொல்லப்படும்.

नियतं सङ्गरहितमरागद्वेषतः कृतम् ।
अफलप्रेप्सुना कर्म यत्तत्सात्विकमुच्यते ॥ २३ ॥

23. நியதம் ஸங்கரஹிதம் அராகத்வேஷதஃ க்ருதம்
அஃபலப்ரேப்ஸுநா கர்ம யத் தத் ஸாத்விகம் உச்யதே.

யத்கர்ம- எந்தக் கருமமானது, அபலப்ரேப்ஸுநா - பலனில் விருப்பமில்லாத ஒருவனால், ஸங்கரஹிதம் - பற்றின்றி, அராகத்வேஷதஃ - விருப்பு வெறுப்பின்றி, க்ருதம் நியதம் தத் - செய்யப்பட்ட நித்திய கர்மமோ அது, ஸாத்விகம் உச்யதே - ஸாத்விக (கர்மம்) என்று சொல்லப்படுகிறது.

यत्तु कामेप्सुना कर्म साहङ्कारेण वा पुनः ।
क्रियते बहुलायासं तद्राजसमुदाहृतम् ॥ २४ ॥

24. யத் து காமேப்ஸுநா கர்ம ஸ அஹங்காரேண வா புநஃ
க்ரியதே பஹுளாயாஸம் தத் ராஜஸம் உதாஹ்ருதம்.

காமேப்ஸுநா - பலனில் இச்சையுடையவனாலாவது, புநஃ ஸ அஹங்காரேணவா - மற்று தான் கருத்தாவென்னும் அஹங்கா

ரம் உடையவனாலாவது, பஹுளாயாஸம் - மிகுந்த சிரமத்துடன், யத் து கர்ம க்ரியதே - மற்று எந்தக் கர்மம் செய்யப்படுகிறதோ, தத் ராஜஸம் உதாஹ்ருதம் - அது ராஜஸ கர்மமென்று சொல்லப்படுகிறது.

अनुबन्धं क्षयं हिंसामनपेक्ष्य च पौरुषम् ।
मोहादारभ्यते कर्म यत्तत्तामसमुच्यते ॥ २५ ॥

25. அநுபந்தம் க்ஷயம் ஹிம்ஸாம் அநபேக்ஷ்ய ச பௌருஷம்
மோஹாத் ஆரப்யதே கர்ம யத் தத் தாமஸம் உச்யதே.

அநுபந்தம் - கர்மத்தினால் இனி ஏற்படும் நன்மை தீமையையும், க்ஷயம் - பொருள் நஷ்டத்தையும், ஹிம்ஸாம் - பிறருக்கு ஏற்படக்கூடிய துன்பத்தையும், பௌருஷம் ச-(கர்மத்தைச் செய்வதற்கு வேண்டிய) தனது சக்தியையும், அநபேக்ஷ்ய - ஆலோசித்துப் பார்க்காமல், மோஹாத் - அறிவுக்குறைவினால், யத் கர்ம ஆரப்யதே - எந்தக் கருமம் ஆரம்பிக்கப்படுகிறதோ, தத் தாமஸம் உச்யதே - அது தாமஸகர்மமென்று சொல்லப்படுகிறது.

मुक्तसङ्गोऽनहंवादी धृत्युत्साहसमन्वितः ।
सिद्ध्यसिद्ध्योर्निर्विकारः कर्ता सात्त्विक उच्यते ॥२६॥

26. முக்தஸங்கஃ அநஹம் வாதீ த்ருத்யுத்ஸாஹ ஸமந்விதஃ
ஸித்த்யஸித்த்யோஃ நிர்விகாரஃ கர்தா ஸாத்விகஃ உச்யதே.

முக்தஸங்கஃ - பலனில் இச்சையை விட்டவனாய், அநஹம் வாதீ - "நான்" என்று சொல்லாதவனாய், த்ருதி உத்ஸாஹ ஸமந்விதஃ - உறுதியும் ஊக்கமும் உடையவனாய், ஸித்த்யஸித்த்யோஃ-(தான் செய்யும் காரியத்தில்) ஸித்தி பெற்றாலும் பெறாவிட்டாலும், நிர்விகாரஃ - விகாரமற்றவனாய் (சந்தோஷம் விசனமின்றி) இருக்கும், கர்தா - கர்தாவானவன், ஸாத்விகஃ உச்யதே - ஸாத்துவிக கர்தா எனப்படுகிறான்.

रागी कर्मफलप्रेप्सुर्लुब्धो हिंसात्मकोऽशुचिः ।
हर्षशोकान्वितः कर्ता राजसः परिकीर्तितः ॥ २७ ॥

27. ராகீ கர்மபலப்ரேப்ஸு: லுப்த: ஹிம்ஸாத்மக: அசுசி:
ஹர்ஷசோகாந்வித: கர்தா ராஜஸ: பரிகீர்தித:.

ராகீ - பற்றுஉடையவனும், கர்மபலப்ரேப்ஸு: - கர்மத்தின் பலனை யடைய இச்சையுடையவனும், லுப்த: - பிறர் ஸம்பத்தி லிச்சையுடையவனும், ஹிம்ஸாத்மக: - பிறரை இம்சை செய்ப வனும், அசுசி: - பரிசுத்தமற்றவனும், ஹர்ஷசோக அந்வித: - (காரியம் பலித்தால்) சந்தோஷமும் (தவறினால்) வருத்தமும் அடையக்கூடியவன் ஆன, கர்தா - கர்தாவானவன், ராஜஸ: பரி கீர்தித: - ராஜஸ கர்தா எனப்படுகிறான்.

अयुक्तः प्राकृतः स्तब्धः शठो नैष्कृतिकोऽलसः ।
विषादी दीर्घसूत्री च कर्ता तामस उच्यते ॥ २८ ॥

28. அயுக்த: ப்ராக்ருத: ஸ்தப்த: சட: நைக்ருதிக: அலஸ:
விஷாதீ தீர்கஸூத்ரீ ச கர்தா தாமஸ: உச்யதே.

அயுக்த: - மனது ஒரு நிலைப்படாதவனும், ப்ராக்ருத: - விவேகமற்ற கசடனும், ஸ்தப்த:-வணக்கமில்லாதவனும், சட:- மோசக்காரனும், நைக்ருதிக:-பிறரிடம் சிநேகத்தன்மை யில் லாதவனும், அலஸ: - சோம்பலுள்ளவனும், விஷாதீ - வக்க முள்ளவனும், தீர்கஸூத்ரீ ச-காலதாமதம் செய்பவனுமுள்ள, கர்தா - கருத்தாவானவன், தாமஸ: உச்யதே - தாமஸ கருத்தா வெனப்படுகிறான்.

बुद्धेर्भेदं धृतेश्चैव गुणतस्त्रिविधं शृणु ।
प्रोच्यमानमशेषेण पृथक्त्वेन धनञ्जय ॥ २९ ॥

29. புத்தே: பேதம் த்ருதே: ச ஏவ குணத: த்ரிவிதம் ச்ருணு
ப்ரோச்யமானம் அசேஷேண ப்ருதக்த்வேந தநஞ்ஜய.

ஹே தநஞ்ஜய !, குணத: த்ரிவிதம் - குணங்களுக்கு ஏற்ப மூன்றுவிதமானதும், அசேஷேண - குறைவில்லாமல், ப்ருதக்த் வேந - தனித்தனியாய், ப்ரோச்யமானம் - சொல்லப்படுவதுமான, புத்தே: - புத்தியினுடையவும், த்ருதேச்சைவ - தைரியத்தினு டையவும், பேதம் ச்ருணு - பேதத்தைக் கேட்பாயாக.

प्रवृत्तिं च निवृत्तिं च कार्याकार्ये भयाभये ।
बन्धं मोक्षं च या वेत्ति बुद्धिः सा पार्थ सात्त्विकी ॥

30. ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச கார்யாகார்யே பயாபயே
பந்தம் மோக்ஷம் ச யா வேத்தி புத்தி: ஸா பார்த ஸாத்விகீ.

ஹே பார்த்த !, ப்ரவ்ருத்திம் ச நிவிருத்திம் ச - ப்ரபஞ்சத்தின் தோற்றம் ஒடுக்கத்தையும், கார்யாகார்யே - செய்யத்தகுந்த செய் யத்தகாத கார்யத்தையும், பயாபயே - எதற்கு பயப்படவேண் டும் எதற்கு பயப்படவேண்டாம் என்பதையும், பந்தம் மோக்ஷம் ச - உலக பந்தத்தையும் அதிலிருந்து விடுபடுதலையும், யா புத்தி வேத்தி - எந்த புத்தியானது அறிகிறதோ, ஸா ஸாத்விகீ - அது ஸாத்துவிக புத்தி.

यया धर्ममधर्मं च कार्यं चाकार्यमेव च ।
अयथावत्प्रजानाति बुद्धिः सा पार्थ राजसी ॥ ३१ ॥

31. யயா தர்மம் அதர்மம் ச கார்யம் ச அகார்யம் ஏவ ச
அயதாவத்ப்ரஜாநாதி புத்தி: ஸா பார்த ராஜஸீ.

ஹே பார்தத !, யயா - எந்த புத்தியினால், தர்மம் அதர்மம் ச - தர்மம் அதர்மத்தையும், கார்யம் ச அகார்யமேவ ச - செய்யத் தகுந்தது செய்யத்தகாததையும், அயதாவத்ப்ரஜாநாதி - நிச்சய மாகத் தெரிந்துகொள்ளாமல் சந்தேகத்துடன் அறிகிறானோ, ஸா புத்தி: ராஜஸீ - அந்த புத்தியானது ராஜஸமெனப்படும.

अधर्मं धर्ममिति या मन्यते तमसावृता ।
सर्वार्थान्विपरीतांश्च बुद्धिः सा पार्थ तामसी ॥ ३२ ॥

32. அதர்மம் தர்மம் இதி யா மந்யதே தமஸா ஆவ்ருதா
ஸர்வார்தாந்விபரீதாம் ச புத்தி: ஸா பார்த தாமஸீ.

ஹே பார்த்த!, யா - எந்த புத்தியானது, தமஸா ஆவ்ருதா - அஜ்ஞானத்தினால் மூடப்பட்டு, அதர்மம் தர்மமிதி - அதர்மத்தை தருமமென்றும், ஸர்வார்த்தாந் விபரீதாம்ச்ச - சகல வஸ்துக்களை

யும் (உள்ளபடியன்றி) விபரீதமாக, மந்யதே - நினைக்கிறதோ, ஸா புத்தி: தாமஸீ - அந்த புத்தியானது தாமஸமாகும்.

धृत्या यया धारयते मनः प्राणेन्द्रियक्रियाः ।
योगेनाव्यभिचारिण्या धृतिः सा पार्थ सात्त्विकी ॥

33. த்ருத்யா யயா தாரயதே மந: ப்ராணேந்த்ரியக்ரியா:
யோகேந அவ்யபிசாரிண்யா த்ருதி: ஸா பார்த ஸாத்விகீ.

ஹே பார்த்த!, யோகேந அவ்யபிசாரிண்யா - மனதை ஒரே நிலையில் நிறுத்தி யோகத்தினால் சலிக்காமலிருக்கின்ற, யயா த்ருத்யா - எந்த மனோதைரியத்தினால், மந: ப்ராணேந்திரியக்ரியா: - மனது பிராணன் இந்திரியங்கள் இவைகளின் கிரியைகளை, தாரயதே - நிறுத்துகின்றானோ, ஸா த்ருதி: ஸாத்விகீ - அந்த தைரியம் சாத்துவிகமானது.

यया तु धर्मकामार्थान् धृत्या धारयतेऽर्जुन ।
प्रसङ्गेन फलाकांक्षी धृतिः सा पार्थ राजसी ॥ ३४ ॥

34. யயா து தர்ம காமார்தாந் த்ருத்யா தாரயதே அர்ஜுந
ப்ரஸங்கேந பலாகாங்க்ஷீ த்ருதி: ஸா பார்த ராஜஸீ.

ஹே அர்ஜுந!, து யயா த்ருத்யா - மற்று எந்த தைரியத்தினால், ப்ரஸங்கேந - மிகுந்த பற்றுதலுடன், பலா காங்க்ஷீ-பலனை விரும்புகின்றவனாய், தர்மகாமார்தாந் - அறம் இன்பம் பொருள் (இவைகளை அடைவதற்கு வேண்டிய கர்மங்களை), தாரயதே - அனுகூலஞ் செய்துகொள்ளுகிறானோ, ஸா த்ருதி: ராஜஸீ - அந்த தைரியம் ராஜஸமாகும்.

यया स्वप्नं भयं शोकं विषादं मदमेव च ।
न विमुञ्चति दुर्मेधा धृतिः सा पार्थ तामसी ॥ ३५ ॥

35. யயா ஸ்வப்நம் பயம் ஶோகம் விஷாதம் மதம் ஏவ ச
ந விமுஞ்சதி துர்மேதா: த்ருதி: ஸா பார்த தாமஸீ.

ஹே பார்த்த!, துர்மேதா:-துர்புத்தியையுடைய ஒரு மூடன், யயா - எந்த தைரியத்தினால், ஸ்வப்நம் பயம் ஶோகம் விஷாதம்

மதமேவ ச - நித்திரை பயம் விசனம் சோர்வு மதம் இவற்றை யெல்லாம், ந விமுஞ்சதி - விடுகிறதில்லையோ, ஸா த்ருதி: தாமஸீ- அந்த தைரியம் தாமஸம்.

सुखं त्विदानीं त्रिविधं शृणु मे भरतर्षभ ।
अभ्यासाद्रमते यत्र दुःखान्तं च निगच्छति ॥ ३६ ॥

36. ஸுகம் து இதாநீம் த்ரிவிதம் ஶ்ருணு மே பரதர்ஷப
அப்யாஸாத் ரமதே யத்ர து:காந்தம் ச நிகச்சதி.

ஹே பரதர்ஷப!, யத்ர - எதில், அப்யாஸாத்-பழக்கத்தினால், ரமதே - சந்துஷ்டியை யடைவானோ, துக்காந்தம் ச நிகச்சதி - துக்கத்தின் நிவர்த்தியையும் நிச்சயமாய் அடைகிறானோ (அது), ஸுகம்-ஸுகம் என்பது. த்ரிவிதம்-மூன்று விதமான (அந்த சுகத்தை), இதாநீம் - இப்போது, மே ஶ்ருணு-என்னிடமிருந்து கேள்.

यत्तदग्रे विषमिव परिणामेऽमृतोपमम् ।
तत्सुखं सात्त्विकं प्रोक्तमात्मबुद्धिप्रसादजम् ॥ ३७ ॥

37. யத் தத் அக்ரே விஷமிவ பரிணாமே அம்ருதம் உபமம்
தத் ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்தம் ஆத்மபுத்திப்ரஸாதஜம்.

யத் - எது, அக்ரே விஷமிவ - முதலில் விஷம் போன்றும் (துக்கத்தைக் கொடுப்பதாய்), பரிணாமே அம்ருதோபமம் - முடிவில் அம்ருதம்போலு மிருக்கிறதோ, தத் ஸாத்விகம் ப்ரோக்தம் - அது ஸாத்துவிக சுகமெனப்படும்; தத் ஆத்மபுத்தி ப்ரஸாதஜம் - அது புத்தி தெளிவாயிருப்பதிலிருந்து உண்டாவது.

विषयेन्द्रियसंयोगाद्यत्तदग्रेऽमृतोपमम् ।
परिणामे विषमिव तत्सुखं राजसं स्मृतम् ॥ ३८ ॥

38. விஷயேந்த்ரிய ஸம்யோகாத் யத் தத் அக்ரே அம்ருதோபமம்
பரிணாமே விஷம் இவ தத் ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம்.

யத் - எது, விஷய இந்த்ரிய ஸம்யோகாத் - வெளிவிஷயங்களும் இந்திரியங்களும் சம்பந்தப்படுவதால் (உண்டாகிறதோ),

தத்-அது, அக்ரே அம்ருதோபமம் - முதலில் அம்ருதம்போலும், பரிணாமே விஷமிவ - முடிவில் விஷத்தைப்போலு மிருக்கிறது. தத் ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம் - அந்த ஸுகம் ராஜஸமென்று நினைக்கப்படுகிறது.

यदग्रे चानुबन्धे च सुखं मोहनमात्मनः ।
निद्रालस्यप्रमादोत्थं तत्तामसमुदाहृतम् ॥ ३९ ॥

39. யத் அக்ரே ச அநுபந்தே ச ஸுகம் மோஹநம் ஆத்மந:
நித்ராலஸ்ய ப்ரமாதோத்தம் தத் தாமஸம் உதாஹ்ருதம்.

யத் சுகம்-எந்த சுகமானது, அக்ரே ச அநுபந்தே ச-முதலிலும் முடிவிலும், ஆத்மந: மோஹநம் - தன்னை மயக்குவதாய், நித்ராலஸ்ய ப்ரமாதோத்தம் - தூக்கம் சோம்பல் அசட்டை இவற்றினால் உண்டாவதோ, தத் - அது, தாமஸம் உதாஹ்ருதம் - தாமதமென்று சொல்லப்படுகிறது.

न तदस्ति पृथिव्यां वा दिवि देवेषु वा पुनः ।
सत्त्वं प्रकृतिजैर्मुक्तं यदेभिः स्यात्त्रिभिर्गुणैः ॥ ४० ॥

40. ந தத் அஸ்தி ப்ருதிவ்யாம் வா திவி தேவேஷு வா புந:
ஸத்வம் ப்ரக்ருதிஜை: முக்தம் யத் ஏபி: ஸ்யாத் த்ரிபி:
[குணை:.

ப்ரக்ருதிஜை: ஏபி: த்ரிபி: குணை: - பிரக்ருதியிலிருந்துண்டான இம்முக்குணங்களால், முக்தம் யத் ஸ்யாத்-விடப்பட்டதாக எது உண்டோ, தத் ஸத்வம் - அப்படிப்பட்ட பொருள், ப்ருதிவ்யாம் வா - பூலோக மனிதரிடமாவது, புந: திவி தேவேஷு வா - மற்று சுவர்க்கத்தில் தேவரிடமாவது, நாஸ்தி - இல்லை (அதாவது முக்குணங்களிலிருந்து விடப்பட்ட வஸ்து எதுவுமேயில்லை).

ब्राह्मणक्षत्रियविशां शूद्राणां च परन्तप ।
कर्माणि प्रविभक्तानि स्वभावप्रभवैर्गुणैः ॥ ४१ ॥

41. ப்ராஹ்மண க்ஷத்ரிய விஶாம் ஶூத்ராணாம் ச பரந்தப
கர்மாணி ப்ரவிபக்தாநி ஸ்வபாவ ப்ரபவை: குணை:.

ஹே பரந்தப!, ப்ராஹ்மண க்ஷத்ரிய விஶாம் ஶூத்ராணாம் ச-பிராம்மணர் க்ஷத்ரியர் வைஶியர் ஶூத்ரர் எல்லாருக்கும், ஸ்வபாவ ப்ரபவை:-ஸ்வபாவம் அல்லது இயற்கையாகவே யுண்டான, குணை: - குணங்களுக்கு ஏற்ப, கர்மாணி ப்ரவிபக்தாநி - கர்மங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

शमो दमस्तपः शौचं क्षान्तिरार्जवमेव च ।
ज्ञानं विज्ञानमास्तिक्यं ब्राह्मकर्मस्वभावजम् ॥ ४२ ॥

42. ஶம: தம: தப: ஶௌசம் க்ஷாந்தி: ஆர்ஜவம் ஏவ ச [ஜம்.
ஜ்ஞாநம் விஜ்ஞாநம் ஆஸ்திக்யம் ப்ராஹ்மம் கர்ம ஸ்வபாவ

ஶம: - உள் இந்திரியங்களையும் மனதையும் அடக்குதலும், தம: - வெளி இந்திரியங்களை யடக்குதலும், தப: - மனோவாக்குக் காயங்களால் செய்யப்படும் தபசும், ஶௌசம்-சரீரம் மனது இவற்றின் பரிசுத்தமும், க்ஷாந்தி: - பொருமையும், ஆர்ஜவ மேவ ச - நேர்மையும், ஜ்ஞாநம் - சாஸ்திர அறிவும், விஜ்ஞாநம் - அனுபவ அறிவும், ஆஸ்திக்யம் - கடவுள் ஒருவர் உண்டு என்னும் நம்பிக்கையும் (ஆகிய இவைகள்), ஸ்வபாவஜம் ப்ராஹ்மம் கர்ம - இயற்கையிலேற்பட்ட பிராம்மணனின் கர்மம்.

शौर्यं तेजो धृतिर्दाक्ष्यं युद्धे चाप्यपलायनम् ।
दानमीश्वरभावश्च क्षात्रं कर्म स्वभावजम् ॥ ४३ ॥

43. ஶௌர்யம் தேஜ: த்ருதி: தாக்ஷ்யம் யுத்தே ச அபி அபலாயநம்
தாநம் ஈஶ்வரபாவ: ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்.

ஶௌர்யம் - சூரத்தனம் அல்லது பராக்கிரமமும், தேஜ: - ப்ரதாபம் அல்லது கீர்த்தியும், த்ருதி:-தைரியமும், தாக்ஷ்யம் - புத்திக்கூர்மையும், யுத்தே அபலாயநமபி ச - யுத்தத்தில் புறங்கொடாமையும், தாநம் - கொடையும், ஈஶ்வரபாவஶ்ச - பிறரை ஆளும் சக்தியும் (ஈஶ்வரத்தன்மை), ஸ்வபாவஜம் - ஸ்வபாவத்தினுண்டான, க்ஷாத்ரம் கர்ம - க்ஷத்திரிய கர்மம்.

कृषिगौरक्ष्यवाणिज्यं वैश्यकर्म स्वभावजम् ।
परिचर्यात्मकं कर्म शूद्रस्यापि स्वभावजम् ॥ ४४ ॥

44. க்ருஷி கௌரக்ஷ்யவாணிஜ்யம் வைஶ்யகர்ம ஸ்வபாவஜம்
பரிசர்யாத்மகம் கர்ம ஶூத்ரஸ்ய அபி ஸ்வபாவஜம்.

க்ருஷி கௌரக்ஷ்யவாணிஜ்யம் - வேளாண்மை மாடுகளை ரக்ஷித்தல், வியாபாரம் செய்தல் இவை. ஸ்வபாவஜம் வைஶ்யம் கர்ம - ஸ்வபாவத்தினுலுண்டான வைஶ்யகர்மம், பரிசர்யாத்மகம்- ஊழியம் செய்வது, ஶூத்ரஸ்ய அபி - ஶூத்திரனுக்கு; ஸ்வபாவஜம் கர்ம - இயற்கையாயுண்டான கர்மம்.

स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः ।
स्वकर्मनिरतः सिद्धिं यथा विन्दति तच्छृणु ॥ ४५ ॥

45. ஸ்வே ஸ்வே கர்மணி அபிரத: ஸம்ஸித்திம் லபதே நர:
ஸ்வகர்மநிரத: ஸித்திம் யதா விந்ததி தத் ஶ்ருணு.

ஸ்வே ஸ்வே கர்மணி அபிரத: நர:-அவனவனுக்கு விதித்துள்ள கர்மத்தில் சிரத்தையையுடைய மனிதன், ஸம்ஸித்திம் லபதே - ஞான யோக்கியதையை யடைகிறுன். ஸ்வகர்ம நிரத: - தன் கர்மத்தில் அமர்ந்துள்ளவன், யதா - எவ்விதமாய், ஸித்திம் விந்ததி - ஞானசித்தியை யடைவானே, தத் ஶ்ருணு - அதைக் கேட்பாயாக.

यतः प्रवृत्तिर्भूतानां येन सर्वमिदं ततम् ।
स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः ॥ ४६ ॥

46. யத: ப்ரவ்ருத்தி: பூதாநாம் யேந ஸர்வம் இதம் ததம்
ஸ்வகர்மணா தம் அப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:.

யத: - எந்த அந்தர்யாமியான கடவுளிடமிருந்து, பூதாநாம் - பிராணிகளுக்கு, ப்ரவிருத்தி: - தோற்றம் உண்டாகிறதோ, யேந- எந்தக் கடவுளால், இதம் ஸர்வம் ததம் - இந்த எல்லா ப்ரபஞ்சமும் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ, தம்-அந்தக் கடவுளை, மாநவ:- மனிதன், ஸ்வகர்மணா - தனக்குரிய கர்மத்தினுல், அப்யர்ச்ய - ஆராதித்து, ஸித்திம் விந்ததி - ஞானசித்தியை யடைகிறுன்.

श्रेयान् स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वभावनियतं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ॥ ४७ ॥

47. ஶ்ரேயாந் ஸ்வதர்ம: விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத்
ஸ்வபாவநியதம் கர்ம குர்வந் ஆப்நோதி கில்பிஷம்.

ஸ்வதர்ம: - தன் சொந்த தர்மமானது, விகுண: - குணமற்றதானுலும், ஸ்வநுஷ்டிதாத் பரதர்மாத் - நன்ருக அனுஷ்டிக்கப்பட்ட பிறருடைய தர்மத்தைக்காட்டிலும், ஶ்ரேயாந் - அதிக ஶ்ரேஷ்டமானது, ஸ்வபாவ நியதம் கர்ம குர்வந் - ஸ்வபாவத்தினுல்மைந்த கருமத்தைச் செய்பவன், கில்பிஷம் ந ஆப்நோதி - பாபத்தை அடையமாட்டான்.

सहजं कर्म कौन्तेय सदोषमपि न त्यजेत् ।
सर्वारम्भा हि दोषेण धूमेनाग्निरिवावृताः ॥ ४८ ॥

48. ஸஹஜம் கர்ம கௌந்தேய ஸதோஷம் அபி ந த்யஜேத்
ஸர்வாரம்பா: ஹி தோஷேண தூமேந அக்நி: இவ ஆவ்ருதா:.

ஹே கௌந்தேய!, ஸதோஷமபி - தோஷத்துடன் கூடினதானுலும், ஸஹஜம் கர்ம - உடன்பிறந்த கர்மத்தை, ந த்யஜேத் - விடக்கூடாது, ஹி-ஏனெனில், தூமேந அக்நிரிவ - (கூடப்பிறந்த) புகையினுல் (சூழப்பட்ட) அக்கினிபோல், ஸர்வாரம்பா: - சகல கருமங்களும், தோஷேண ஆவ்ருதா: - தோஷத்தினுல் மூடப்பட்டிருக்கிறது.

असक्तबुद्धिः सर्वत्र जितात्मा विगतस्पृहः ।
नैष्कर्म्यसिद्धिं परमां संन्यासेनाधिगच्छति ॥ ४९ ॥

49. அஸக்தபுத்தி: ஸர்வத்ர ஜிதாத்மா விகதஸ்ப்ருஹ:
நைஷ்கர்ம்யஸித்திம் பரமாம் ஸந்யாஸேந - அதிகச்சதி.

ஸர்வத்ர அஸக்த புத்தி: - எல்லாவற்றிலும் பற்றில்லாத புத்தியுடையவனுய், ஜிதாத்மா - மனதை ஜயித்தவனுய், விகதஸ்ப்ருஹ: - பல அபேக்ஷையில்லாதவனுய், அல்லது ஆசையற்றவனுயிருப்பவன், பரமாம் நைஷ்கர்ம்ய ஸித்திம் - மேலான கர்மம் செய்யவேண்டாத சித்தியை, ஸந்நியாஸேந - ஸந்நியாஸத்தினுல், அதிகச்சதி - அடைகிறுன்.

सिद्धिं प्राप्तो यथा ब्रह्म तथाप्नोति निबोध मे ।
समासेनैव कौन्तेय निष्ठा ज्ञानस्य या परा ॥ ५० ॥

50. ஸித்திம் ப்ராப்த: யதா ப்ரஹ்ம ததா ஆப்நோதி நிபோத மே
ஸமாஸேந ஏவ கௌந்தேய நிஷ்டா ஜ்ஞாநஸ்ய யா பரா.

ஹே கௌந்தேய !, ஜ்ஞாநஸ்ய பராநிஷ்டா - ப்ரம்ம ஞானத்தின் மேலான முடிவு, யா - எதுவோ, ஸித்திம் ப்ராப்த: - ஸித்தியை அடைந்தவன், யதா ப்ரஹ்ம ஆப்நோதி - எவ்விதம் ப்ரம்மத்தை அடைகிறானோ, ததா - அந்தவிதத்தை, ஸமாஸேந ஏவ - சுருக்கமாகவே, மே நிபோத - என்னிடமிருந்து அறிவாயாக.

बुद्ध्या विशुद्धया युक्तो धृत्यात्मानं नियम्य च ।
शब्दादीन्विषयांस्त्यक्त्वा रागद्वेषौ व्युदस्य च ॥५१॥
विविक्तसेवी लघ्वाशी यतवाक्कायमानसः ।
ध्यानयोगपरो नित्यं वैराग्यं समुपाश्रितः ॥ ५२ ॥
अहङ्कारं बलं दर्पं कामं क्रोधं परिग्रहम् ।
विमुच्य निर्ममः शान्तो ब्रह्मभूयाय कल्पते ॥ ५३ ॥

51. புத்த்யா விஶுத்தயா யுக்த: த்ருத்யா ஆத்மாநம் நியம்ய ச
ஶப்தாதீந் விஷயாந் த்யக்த்வா ராகத்வேஷௌ வ்யுதஸ்ய ச.
52 விவிக்தஸேவீ லக்வாஶீ யதவாக்காயமாநஸ:
த்யாநயோகபர: நித்யம் வைராக்யம் ஸமுபாஶ்ரித:.
53. அஹங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் பரிக்ரஹம்
விமுச்ய நிர்மம: ஶாந்த: ப்ரஹ்ம பூயாய கல்பதே.

விஶுத்தயா புத்த்யா - (சந்தேக விபரீதமில்லாத) தெளிந்த அறிவுடன்கூடிய புத்தியுடன், யுக்த: - கூடினவனும், த்ருத்யா ஆத்மாநம் நியம்ய ச - மன உறுதியினால் அந்தக்காணத்தை அடக்கினவனும், ஶப்தாதீந் விஷயாந் த்யக்த்வா - ஓசை முதலான விஷயங்களை விட்டவனும், ராகத்வேஷௌ வ்யுதஸ்ய ச - விருப்பு வெறுப்புக்களை அகற்றினவனும், விவிக்த ஸேவீ - தனிமையை

விரும்புகிறவனும், லக்வாஶீ - மிதமான ஆகாரம் செய்பவனும், யதவாக்காய மாநஸ: - வாக்கு சரீரம் மனதை யடக்கினவனும், நித்யம் த்யானயோகபர: - எப்போதும் ப்ரம்மத்தியானத்தில் இஷ்டமுள்ளவனும், வைராக்யம் ஸமுபாஶ்ரித: - உலகவிஷயங்களில் ஆசையின்மையை அடைந்தவனும், அஹங்காரம் - 'நான்' என்னும் அஹங்கார எண்ணத்தையும், பலம் - காமராகத்துடன் கூடின பிடிவாதம், தர்பம் - மதம், காமம் - ஆசை, க்ரோதம் - கோபம், பரிக்ரஹம் - அபிமானம் (இவற்றையெல்லாம்), விமுச்ய - விட்டவனும், நிர்மம: - எனது என்னும் மமதையற்றவனும், ஶாந்த: - ஒழிவை யடைந்தவனும் இருக்கிறவன், ப்ரம்மபூயாய கல்பதே - ப்ரம்மமே யாவதற்குத் தகுதியாகின்றான்.

ब्रह्मभूतः प्रसन्नात्मा न शोचति न काङ्क्षति ।
समः सर्वेषु भूतेषु मद्भक्तिं लभते पराम् ॥ ५४ ॥

54. ப்ரஹ்மபூத: ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி
ஸம: ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம்.

ப்ரம்மபூத: - ப்ரம்மத்தை யடைந்து ஜீவன்முக்தனாய், ப்ரஸந்நாத்மா - தெளிவடைந்த அமைதியும் சாந்தமுமான மனதுடையவன், ந ஶோசதி - வருந்துவதில்லை, ந காங்க்ஷதி - விரும்புகிறதில்லை, ஸர்வேஷு பூதேஷு ஸம: - எல்லா ப்ராணிகளிடத்திலும் ஸமமாய், பராம் மத்பக்திம் லபதே - மேலான எனது பக்தியை யடைகிறான்.

भक्त्या मामभिजानाति यावान्यश्चास्मि तत्त्वतः ।
ततो मां तत्त्वतो ज्ञात्वा विशते तदनन्तरम् ॥ ५५ ॥

55. பக்த்யா மாம் அபிஜாநாதி யாவான் ய: ச அஸ்மி தத்வத:
தத: மாம் தத்வத: ஜ்ஞாத்வா விஶதே ததநந்தரம்.

யாவான் யஶ்ச அஸ்மி - (நான்) எவ்விதமாய் சகுணமாயும் நிர்குணமாயும் இருக்கின்றேனோ, தம் மாம் - அவ்விதமாக என்னை, பக்த்யா தத்வத: அபிஜாநாதி - (அவன்) பக்தியினால் உள்ளபடி அறிகிறான். தத:-பிறகு, மாம் தத்வத: ஜ்ஞாத்வா-

என்னை உண்மையானபடி அறிந்து, ததநந்தரம் விஶதே - அதன் பிறகு (உடனேயே) என்னை யடைகின்றான் (என் ஸ்வரூபத்தை யடைகின்றான்).

सर्वकर्माण्यपि सदा कुर्वाणो मद्व्यपाश्रयः ।
मत्प्रसादादवाप्नोति शाश्वतं पदमव्ययम् ॥ ५६ ॥

56. ஸர்வகர்மாணி அபி ஸதா குர்வாண: மத்வ்யபாஶ்ரய:
மத்ப்ரஸாதாத் அவாப்நோதி ஶாஶ்வதம் பதம் அவ்யயம்.

மத்வ்யபாஶ்ரய: - என்னையே அடைக்கலமாயடைந்தவன், ஸதா ஸர்வகர்மாணி குர்வாண: அபி - எப்போதும் எல்லாக்கர்மங்களையும் செய்துகொண்டிருந்தபோதிலும், மத்ப்ரஸாதாத் - எனது அருளினால், ஶாஶ்வதம் அவ்யயம் பதம் - நிலையான நாசமற்ற பதவியை, அவாப்நோதி - அடைகிறான்.

चेतसा सर्वकर्माणि मयि संन्यस्य मत्परः ।
बुद्धियोगमुपाश्रित्य मच्चित्तः सततं भव ॥ ५७ ॥

57. சேதஸா ஸர்வகர்மாணி மயி ஸந்யஸ்ய மத்பர:
புத்தியோகம் உபாஶ்ரித்ய மச்சித்த: ஸததம் பவ.

சேதஸா - அறிவினால் ஸர்வகர்மாணி - எல்லாக்கர்மங்களையும், மயி ஸந்யஸ்ய - என்னிடம் அர்ப்பித்து, மத்பர: - என்னையே அடையவேண்டிய மேலான பொருளாகக்கொண்டு, புத்தியோகம் உபாஶ்ரித்ய - நிச்சய புத்தியை (கடவுளிடத்திலேயே புத்தி ஸ்திரமாயிருக்கும் அறிவு) அடைந்து, ஸததம் மச்சித்த: - எப்போதும் என்னிடத்திலேயே சித்தத்தை வைத்தவனாக, பவ - ஆகக்கடவாய்.

मच्चित्तः सर्वदुर्गाणि मत्प्रसादात्तरिष्यसि ।
अथ चेत्त्वमहङ्कारान्न श्रोष्यसि विनङ्क्ष्यसि ॥ ५८ ॥

58. மச்சித்த: ஸர்வதுர்காணி மத்ப்ரஸாதாத் தரிஷ்யஸி
அத சேத் த்வம் அஹங்காராத் ந ஶ்ரோஷ்யஸி விநங்க்ஷ்யஸி.

மச்சித்த: - எப்போதும் என்னிடத்திலேயே மனதை நிலைநிறுத்தி, மத்ப்ரஸாதாத் - என் அனுக்கிரகத்தினால், ஸர்வ துர்காணி தரிஷ்யஸி - எல்லா கஷ்டதுக்கங்களையும் கடந்து விடுவாய். அத - பிறகு, த்வம் - நீ, அஹங்காராத் - அஹங்காரத்தினால், ந ஶ்ரோஷ்யஸி (சேத்) - (நான் சொல்வதைக்) கேளாமல்போனால், விநங்க்ஷ்யஸி - கெட்டுப்போவாய்.

यद्यहङ्कारमाश्रित्य न योत्स्य इति मन्यसे ।
मिथ्यैष व्यवसायस्ते प्रकृतिस्त्वां नियोक्ष्यति ॥५९॥

59. யதி அஹங்காரம் ஆஶ்ரித்ய ந யோத்ஸ்யே இதி மந்யஸே
மித்யா ஏஷ: வ்யவஸாய: தே ப்ரக்ருதி: த்வாம் நியோக்ஷ்யதி.

அஹங்காரம் ஆஶ்ரித்ய - அகங்காரத்தை யடைந்து, ந யோத்ஸ்ய இதி - யுத்தஞ் செய்யமாட்டேனென்று, மந்யஸே யதி - தீர்மானம் செய்துகொள்ளுவாயானால், ஏஷ: தே வ்யவஸாய: - இந்த உனது தீர்மானமானது, மித்யா - வீணானது. ப்ரக்ருதி: - மாயா ஸ்வபாவமானது, த்வாம் - உன்னை, நியோக்ஷ்யதி - (யுத்தத்தில்) பிரவிருத்திக்கும்படி செய்யும்.

स्वभावजेन कौन्तेय निबद्धः स्वेन कर्मणा ।
कर्तुं नेच्छसि यन्मोहात्करिष्यस्यवशोऽपि तत् ॥ ६० ॥

60. ஸ்வபாவஜேந கௌந்தேய நிபத்த: ஸ்வேந கர்மணா
கர்தும் ந இச்சஸி யத் மோஹாத் கரிஷ்யஸி அவஶ: அபி தத்.

ஹே கௌந்தேய!, ஸ்வபாவஜேந - இயல்பு அல்லது உனது பூர்வ கருமங்களினாலுண்டான, ஸ்வேந கர்மணா - உன் சொந்த கர்மத்தினால், நிபத்த: - பந்தப்படுத்தப்பட்ட நீ, மோஹாத் - மயக்கத்தினால், யத் கர்தும் ந இச்சஸி - எந்த யுத்தத்தைச் செய்ய இஷ்டப்படவில்லையோ, தத் அபி - அதையே, அவஶ: கரிஷ்யஸி - உன் வசமின்றிச் செய்யப்போகிறாய்.

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन्सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥ ६१ ॥

61. ஈஶ்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶே அர்ஜுந திஷ்டதி
ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா.

ஹே அர்ஜுந !, ஈஶ்வர: - கடவுள், ஸர்வபூதாநி-சகலப் பிராணிகளையும், யந்த்ராரூடாநி (இவ) - யந்திரத்திலுள்ளவற்றைப்போல், மாயயா - தனது மாயா சக்தியால், ப்ராமயந் - ஆட்டுவித்துக் கொண்டு, ஸர்வ பூதாநாம் - சகல பிராணிகளினுடைய, ஹ்ருத்தேஶே திஷ்டதி - ஹிருதயத்திலு மிருக்கிறார்.

तमेव शरणं गच्छ सर्वभावेन भारत ।
तत्प्रसादात्परां शांतिं स्थानं प्राप्स्यसि शाश्वतम् ॥६२॥

62. தம் ஏவ ஶரணம் கச்ச ஸர்வபாவேந பாரத [தம்.
தத்ப்ரஸாதாத் பராம் ஶாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி ஶாஶ்வ

ஹே பாரத !, ஸர்வ பாவேந - எல்லா விதத்திலும் தமேவ - அந்தக் கடவுளையே, ஶரணம் கச்ச - சரணமடைவாயாக. தத்ப்ரஸாதாத்-அந்த பகவதனுக்கிரகத்தினுல், பராம் ஶாந்திம் - உத்தமமான மன அமைதியையும், ஶாஶ்வதம் ஸ்தாநம் - நித்தியமான மோக்ஷ பதவியையும், ப்ராப்ஸ்யஸி - அடைவாய்.

इति ते ज्ञानमाख्यातं गुह्याद्गुह्यतरं मया ।
विमृश्यैतदशेषेण यथेच्छसि तथा कुरु ॥ ६३ ॥

63 இதி தே ஜ்ஞாநம் ஆக்யாதம் குஹ்யாத் குஹ்யதரம் மயா
விம்ருஶ்ய ஏதத் அஶேஷேண யதா இச்சஸி ததா குரு.

இதி - இவ்விதமாய், குஹ்யாத் குஹ்யதரம் ஜ்ஞாநம் - ரகஸ்யங்களுக்கெல்லாம் அதிரகஸ்யமான ஞானம், மயா தே ஆக்யாதம்-என்னுல் உனக்குச் சொல்லப்பட்டது, ஏதத் - இந்த கீதா ஶாஸ்திரத்தை, அஶேஷேண விம்ருஶ்ய - முற்றிலும் (மீதியின்றி) ஆராய்ந்து (பிறகு), யதா இச்சஸி - எப்படி இஷ்டப்படுகிருயோ, ததா குரு - அப்படியே செய்வாயாக.

सर्वगुह्यतमं भूयः शृणु मे परमं वचः ।
इष्टोऽसि मे दृढमिति ततो वक्ष्यामि ते हितम् ॥६४॥

64. ஸர்வகுஹ்யதமம் பூய: ஶ்ருணு மே பரமம் வச:
இஷ்ட: அஸி மே த்ருடம் இதி தத: வக்ஷ்யாமி தே ஹிதம்.

ஸர்வகுஹ்யதமம் - எல்லாவற்றிலும் மிகவும் ரகஸியமான, மே பரமம் வச:-எனது உத்தமமான வார்த்தையை, பூய: ஶ்ருணு-மறுபடியும் கேட்பாயாக. மே த்ருடம் இஷ்ட: அஸி-(நீ) எனக்கு மிகவும் இஷ்டமானவனுய் இருக்கிருய். இதி தத:-இவ்வித மிருப்பதால், தே ஹிதம் வக்ஷ்யாமி - உனக்கு நலமானதைச் சொல்லப் போகிறேன்.

मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु ।
मामेवैष्यासि सत्यं ते प्रतिजाने प्रियोऽसि मे ॥ ६५ ॥

65. மந்மநா: பவ மத்பக்த: மத்யாஜீ மாம் நமஸ்குரு
மாம் ஏவ ஏஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரிய: அஸி மே.

மந்மநா: - என்னிடத்திலேயே மனம் பற்றினவனுயும், மத்பக்த: - என்னிடத்திலேயே பக்தியுள்ளவனுயும், மத்யாஜீ - என்னையே ஆராதிக்கின்றவனுயும், பவ - ஆகக்கடவாய். மாமேவ நமஸ்குரு - என்னையே நமஸ்கரித்து வணங்குவாயாக. மாம் ஏஷ்யஸி - என்னை (யே) அடைவாய். தே ஸத்யம் ப்ரதிஜாநே - உனக்கு உண்மையாக உறுதி சொல்லுகிறேன். மே ப்ரிய: அஸி - (ஏனெனில்) எனக்கு பிரியனுக இருக்கிருய்.

सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वां सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ॥ ६६ ॥

66. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்ய: மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:.

ஸர்வதர்மாந்பரித்யஜ்ய - சகல தர்மங்களையும் விட்டு (என்னிடம் அர்பித்து), மாம் ஏகம் - என்னை யொருவனையே, ஶரணம் வ்ரஜ - சரணமடைவாயாக. அஹம் - நான், த்வா - உன்னை, ஸர்வ பாபேப்ய: - எல்லா பாபங்களிலிருந்தும், மோக்ஷயிஷ்யாமி - விடுவிப்பேன். மா ஶுச: - வருந்தாதே.

इदं ते नातपस्काय नाभक्ताय कदाचन ।
न चाशुश्रूषवे वाच्यं न च मां योऽभ्यसूयति ॥ ६७ ॥

67. இதம் தே ந அதபஸ்காய ந அபக்தாய கதாசந
ந ச அஶுஶ்ரூஷவே வாச்யம் ந ச மாம் ய: அப்யஸூயதி.

தே - உனக்கு (உபதேசிக்கப்பட்ட), இதம் - இந்த கீதா சாஸ்திரமானது, அதபஸ்காய - தவமில்லாதவனுக்கு, கதாசந ந வாச்யம் - ஒருபோதும் சொல்லத்தகுந்ததல்ல. அபக்தாய ந - பக்தியில்லாதவனுக்கு ஒருபோதும் அல்ல; அஶுஶ்ரூஷவே ச ந - ஈஶ்வர பக்தி (சிசுருஷை) செய்யாதவனுக்கு (சொல்லத்தகுந்தது) இல்லை; ய: - எவன், மாம் - என்னை, அப்யஸூயதி ச - தூஷிக்கின்றானோ (அவனுக்கும்), ந - சொல்லத்தகுந்ததில்லை.

य इमं परमं गुह्यं मद्भक्तेष्वभिधास्यति ।
भक्तिं मयि परां कृत्वा मामेवैष्यत्यसंशयः ॥ ६८ ॥

68. ய: இமம் பரமம் குஹ்யம் மத்பக்தேஷு அபிதாஸ்யதி
பக்திம் மயி பராம் க்ருத்வா மாமேவ ஏஷ்யதி அஸம்ஶய:.

ய: - எவன், பரமம் குஹ்யம் இமம் - பரம ரகசியமான இந்த கீதையை, மயி பராம் பக்திம் க்ருத்வா - என்னிடம் உத்தமமான பக்தியை செய்துகொண்டு, மத்பக்தேஷு அபிதாஸ்யதி - எனது பக்தர்களிடத்தில் உபதேசிப்பானோ (அப்படிப்பட்டவன்), மாம் ஏவ ஏஷ்யதி - என்னையே வந்து அடைகிறான். அஸம்ஶய:-இதில் சந்தேகமே யில்லை.

न च तस्मान्मनुष्येषु कश्चिन्मे प्रियकृत्तमः ।
भविता न च मे तस्मादन्यः प्रियतरो भुवि ॥ ६९ ॥

69. ந ச தஸ்மாத் மநுஷ்யேஷு கஶ்சித் மே ப்ரியக்ருத்தம:
பவிதா ந ச மே தஸ்மாத் அந்ய: ப்ரியதர: புவி.

மநுஷ்யேஷு - மனிதர்களுள், தஸ்மாத் - அவனைக்காட்டிலும் (கீதையை உபதேசிக்கிறவன்), மே ப்ரிய க்ருத்தம: - எனக்குப் பிரியமானதைச் செய்கிறவன், கஶ்சித் ந ச - ஒருவனும் கிடையாது. ச தஸ்மாத்-மற்று அவனைக் காட்டிலும், மே ப்ரியதர: அந்ய: எனக்கு மிகவும் பிரியமான வேறு ஒருவன், புவி-பூமியில், பவிதா ந ச - இருக்கப்போகிறது மில்லை.

अध्येष्यते च य इमं धर्म्यं संवादमावयोः ।
ज्ञानयज्ञेन तेनाहमिष्टः स्यामिति मे मतिः ॥ ७० ॥

70. அத்யேஷ்யதே ச ய: இமம் தர்ம்யம் ஸம்வாதம் ஆவயோ:
ஜ்ஞாநயஜ்ஞேந தேந அஹம் இஷ்ட: ஸ்யாம் இதி மே மதி:.

தர்ம்யம் - தர்மத்திலிருந்து தவறாததான, ஆவயோ: இமம் ஸம்வாதம் - நம்மிருவருடைய இந்த சம்பாஷணையை, யஶ்ச அத்யேஷ்யதே - எவன் படிப்பானோ, தேந - அவனால், அஹம் - நான், ஜ்ஞாந யஜ்ஞேந - ஞானமாகிய யஜ்ஞத்தினால், இஷ்ட: ஸ்யாம் இதி - ஆராதிக்கப்பட்டவன் ஆவேன் என்பது, மே மதி:- எனது நிச்சயம்.

श्रद्धावाननसूयश्च शृणुयादपि यो नरः ।
सोऽपि मुक्तः शुभाँल्लोकान्प्राप्नुयात्पुण्यकर्मणाम् ॥ ७१ ॥

71. ஶ்ரத்தாவாந் அநஸூய: ச ஶ்ருணுயாத் அபி ய: நர: [மணாம்.
ஸ: அபி முக்த: ஶுபாந் லோகாந் ப்ராப்நுயாத் புண்யகர்

ய: நர: - எந்த மனிதன், ஶ்ரத்தாவாந்-சிரத்தையுடையவனும், அநஸூயஶ்ச - அசூயையற்றவனும், ஶ்ருணுயாத் அபி - (இந்த கீதையை) கேட்கின்றானோ, ஸோபி-அவனுங்கூட, முக்த:- (சகல பாபங்களிலிருந்து) விடுபட்டவனாய், புண்யகர்மணாம் ஶுபான் லோகாந் - புண்ணியம் செய்தவர்களது நல்ல உலகங்களை, ப்ராப்நுயாத் - அடைவான்.

कच्चिदेतच्छ्रुतं पार्थ त्वयैकाग्रेण चेतसा ।
कच्चिदज्ञानसम्मोहः प्रणष्टस्ते धनञ्जय ॥ ७२ ॥

72. கச்சித் ஏதத் ஶ்ருதம் பார்த த்வயா ஏகாக்ரேண சேதஸா
கச்சித் அஜ்ஞாநஸம்மோஹ: ப்ரணஷ்ட: தே தநஞ்ஜய.

ஹே பார்த்த !, ஏதத் - இது (வரையில் நான் சொன்னது), த்வயா - உன்னால், ஏகாக்ரேண சேதஸா - ஒரே மனதுடன், ஶ்ருதம் கச்சித்-கேட்கப்பட்டதா ? ஹே தநஞ்ஜய !, தே அஜ்ஞாந ஸம்மோஹ: - உன் ஞானக் குறைவினால் உண்டான அஜ்ஞான மானது, ப்ரணஷ்ட: கச்சித் - போய்விட்டதா ?

अर्जुन उवाच—

नष्टो मोहः स्मृतिर्लब्धा त्वत्प्रसादान्मयाऽच्युत ।
स्थितोऽस्मि गतसन्देहः करिष्ये वचनं तव ॥ ७३ ॥

73. நஷ்ட: மோஹ: ஸ்ம்ருதி: லப்தா த்வத் ப்ரஸாதாத் மயா அச்யுத
ஸ்தித: அஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ.

அர்ஜுனன் வாக்கியம்—

ஹே அச்யுத !, மோஹ: நஷ்ட: - அஜ்ஞாந மோஹமானது போய்விட்டது. த்வத் ப்ரஸாதாத்-தங்களது அனுக்கிரகத்தினால், மயா ஸ்ம்ருதி: லப்தா - என்னால் கடவுளைப்பற்றிய நினைவு அடையப்பட்டது. கதஸந்தேஹ: - சந்தேகமெல்லாம் தீர்ந்து, ஸ்தித: அஸ்மி - மனது ஒருநிலைப்பட்டவனாய் இருக்கிறேன். தவ வசனம் கரிஷ்யே - தங்களது வசனப்படி செய்வேன்.

सञ्जय उवाच—

इत्यहं वासुदेवस्य पार्थस्य च महात्मनः ।
संवादमिममश्रौषमद्भुतं रोमहर्षणम् ॥ ७४ ॥

74. இதி அஹம் வாஸுதேவஸ்ய பார்தஸ்ய ச மஹாத்மந:
ஸம்வாதம் இமம் அஶ்ரௌஷம் அத்புதம் ரோமஹர்ஷணம்

ஸஞ்ஜயன் வசனம்—

இதி - இவ்விதமாய், அஹம் - நான், வாஸுதேவஸ்ய - கிருஷ்ணபகவானுடையவும், மஹாத்மந: பார்தஸ்ய ச - மகாத்மாவான அர்ஜுனனுடையவும், இமம் - இந்த, அத்புதம் ரோமஹர்ஷணம் ஸம்வாதம் - அத்புதமானதும் மயிர்ச்சிலிர்ப்பு உண்டா

வதுமான, ஸம்வாதம் - ஸம்வாதத்தை, அஶ்ரௌஷம் - கேட்டேன்.

व्यासप्रसादाच्छ्रुतवानेतद्गुह्यमहं परम् ।
योगं योगेश्वरात्कृष्णात्साक्षात्कथयतः स्वयम् ॥ ७५ ॥

75. வ்யாஸப்ரஸாதாத் ஶ்ருதவாந் ஏதத் குஹ்யம் அஹம் பரம்
யோகம் யோகேஶ்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத் கதயத: ஸ்வயம்.

குஹ்யம் பரம் ஏதத் யோகம் - இரகசியமானதும் சிரேஷ்டமானதும் ஆன இந்த யோகத்தை, ஸ்வயம் - தானாகவே, கதயத: - (அர்ஜுனனுக்கு) சொன்ன, யோகேஶ்வராத் க்ருஷ்ணாத் - யோகங்களுக்கெல்லாம் தலைவனான கிருஷ்ணபகவானிடமிருந்து, வ்யாஸப்ரஸாதாத் - வியாஸமகரிஷியின் அனுக்கிரகத்தினால், அஹம்-நான், ஸாக்ஷாத் ஶ்ருதவாந் - நேரில் கேட்டேன்.

राजन्संस्मृत्य संस्मृत्य संवादमिममद्भुतम् ।
केशवार्जुनयोः पुण्यं हृष्यामि च मुहुर्मुहुः ॥ ७६ ॥

76. ராஜந் ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ஸம்வாதம் இமம் அத்புதம்
கேஶவார்ஜுநயோ: புண்யம் ஹ்ருஷ்யாமி ச முஹு: முஹு:.

ராஜந் - ஹே த்ருதராஷ்ட்ர மகாராஜ, அத்புதம் - ஆச்சரியமானதும், புண்யம் - புண்ணியமானதும் ஆன, கேஶவார்ஜுநயோ: இமம் ஸம்வாதம்-கேஶவனுக்கும் அர்ஜுனனுக்கும் நடந்த இந்த சம்வாதத்தை, ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய - நினைத்து நினைத்து, முஹு:முஹு:-மீண்டும் மீண்டும், ஹ்ருஷ்யாமி ச - சந்தோஷத்தை யடைகின்றேன்.

तच्च संस्मृत्य संस्मृत्य रूपमत्यद्भुतं हरेः ।
विस्मयो मे महान् राजन् हृष्यामि च पुनः पुनः ॥

77. தத் ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபம் அத்யத்புதம் ஹரே:,
விஸ்மய: மே மஹாந் ராஜந் ஹ்ருஷ்யாமி ச புந: புந:.

ஹே ராஜந் !, ஹரே:-ஹரியினுடைய, அத்யத்புதம் தத் ரூபம் ச - அதி ஆச்சர்யமான அந்த விஶ்வரூபத்தையும், ஸம்ஸ்ம்ருத்ய

ஸம்ஸ்ம்ருத்ய - நினைந்து நினைந்து, மே - எனக்கு, விஸ்மய: மஹாந் - வியப்பு அதிகமாயிருக்கிறது. புந: புந: ஹ்ருஷ்யாமி ச - மேன்மேலும் மகிழ்ச்சியை யடைகிறேன்.

यत्र योगेश्वरः कृष्णो यत्र पार्थो धनुर्धरः ।
तत्र श्रीर्विजयो भूतिर्ध्रुवा नीतिर्मतिर्मम ॥ ७८ ॥

78. யத்ர யோகேஶ்வர: க்ருஷ்ண: யத்ர பார்த: தனுர்தர:
 தத்ர ஸ்ரீ: விஜய: பூதி: த்ருவா நீதி: மதி: மம.

யத்ர யோகேஶ்வர: க்ருஷ்ண: - எந்தப் பக்கத்தில் யோகங்களுக்குத் தலைவரான கிருஷ்ணபரமாத்மா (இருக்கின்றாரோ), யத்ர தனுர்தர: பார்த: - எந்தப் பக்கத்தில் வில்லை யேந்திய அர்ஜுனன் இருக்கின்றானோ, தத்ர - அந்தப் பக்கத்தில், ஸ்ரீ:-ராஜ்ய லக்ஷ்மியும், விஜய: - வெற்றியும், பூதி: - அபிவிருத்தியும், நீதி: - நியாயமும், த்ருவா இதி - நிச்சயமாயிருக்கிறது என்பது, மம மதி: - என்னுடைய எண்ணம்.

58732
R65,6
N28

This book can be had at the following places:—

1. V. S. V. Ammal,
 101, Big Street,
 Triplicane, Madras.

2. R. Subramania Vadhyar,
 Book Sellers & Publishers,
 Kalpathi, Palghat.

3. E. M. Gopalakrishna Kone,
 Book Sellers & Publishers.
 Pudumandapam, Madura.

4. Hindi Prachar Sabha,
 Triplicane, Madras.